www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்

## தொகுதி 3

## முல்லைத்தீவு முஸ்லிம்கள்



கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்

தொகுதி 3

## முல்லைத்தீவு முஸ்லிம்கள்

கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லா

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ETHNIC CONFLICT IN SRI LANKA AND THE FORCIBLY EVICTED MUSLIMS OF THE NORTHERN PROVINCE**

**Vol. 3 : Mullaitivu Muslims**

**By S.H. Hasbullah, M.A. Ph.D**
**Department of Geography,**
**University of Peradeniya,**
**Sri Lanka.**

**Copyright © Author.**

**First Edition , 1997**

**Published by**
**The Northern Muslims' Rights Organization**
**15A, Rohini Road, Colombo - 6, Sri Lanka.**

**Printed by**
**Unie Arts**
**48B, Bloemendhal Road.**
**Colombo-13**

**Price: Rs. 150 /=**

**ISBN 955-9445-03-0**



# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| அட்டவணைகள் | v |
| படங்கள் | vi |
| என்னுரை | vii |
| அணிந்துரை | x |
| நன்றி உரை | xiv |
| 1. அறிமுகம் | 1 |
| 2. முல்லைத்தீவு: புவியியலும் குடிசனமும் | 21 |
| 3. வரலாறும், கலை, கலாசாரமும் | 27 |
| 3.1 வரலாறு | 27 |
| 3.2 கலையும் கலாசாரமும் | 40 |
| 3.3 அரசியல் | 55 |
| 4. பொருளாதார அடிப்படைகள் | 58 |
| 4.1 விவசாய அடிப்படைகள் | 58 |
| 4.2 மீன்பிடி | 66 |
| 4.3 வர்த்தகம் | 67 |
| 5 முஸ்லிம் குடியிருப்புக்கள் | 74 |
| 5.1 முல்லைத்தீவு முஸ்லிம்களின் "மூன்று கிராமங்கள்" | 74 |
| 5.2 முல்லைத்தீவு நகர முஸ்லிம்களின் குடியிருப்பு | 84 |
| 5.3 விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் | 88 |
| 6 இனப்பிரச்சினையும் முல்லைத்தீவு முஸ்லிம்களும் | 91 |
| 6.1 முஸ்லிம் - தமிழ் உறவு | 91 |
| 6.2 இனப்பிரச்சினையும் முஸ்லிம்களும் | 93 |
| 63 இரண்டாவது ஈழ யுத்தமும் முல்லைத்தீவு முஸ்லிம்களும் | 96 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7 முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் 98
7.1 பலவந்த வெளியேற்றம் 98
7.2 பலவந்த வெளியேற்றமும், பொருளாதார இழப்பும் 103
8. முல்லைத்தீவைவிட்டு முஸ்லிம்கள் வெளியேற்றம் 114
8.1 ஜுலை அகதிகள் 114
8.2 ஒக்டோபர் அகதிகள் 121
9. அகதி வாழ்க்கை 125
9.1 பரம்பல் 125
9.2 ஆலங்குடா முல்லைத்தீவு அகதி முகாம் 127
9.3 ஏனைய பிரதேசங்கள் 134
9.4 அகதிகளின் அனுபவங்கள் சில 135
9.5 நிவாரண அமைப்புக்கள் 136
9.6 நிவாரண உதவிகளின் தாக்கம் 138
10. கால மாற்றத்தில் அகதிகள் 142
10.1 முகாம் வாழ்க்கைக்கு மாற்று வழி 142
10.2 அண்மைக்கால மாற்றங்கள் 148
10.3 எதிர்காலம் 166
விபரம் தந்தவர்கள் 175
உசாத்துணை நூல்கள் 178
பின்னிணைப்பு
1. இனப்பிரச்சினையால் உயிரிழந்த முல்லைத்தீவு முஸ்லிம்கள், 1987-90. 183



## அட்டவணைகள்

அட்டவணை 1: 1921ஆம் ஆண்டிலும், 1971ம் ஆண்டிலும் முல்லைத்தீவில் முஸ்லிம்கள். 29
அட்டவணை 2: 1990ஆம் ஆண்டில் முல்லைத்தீவு முஸ்லிம் கல்வியாளர்களும், சமூகத் சேவையாளர்கள். 48
அட்டவணை 3: 1990ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்த விவசாயக் காணிகள். 64
அட்டவணை 4: 1990ஆம் ஆண்டு "மூன்று கிராமப் பிரதேசத்தில்" முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள். 70
அட்டவணை 5: 1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள். 72
அட்டவணை 6: குடும்ப அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் இழப்பு விபரம் பற்றிய சுருக்க அட்டவணை. 108
அட்டவணை 7: 1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகதிகளாக வாழ்ந்த இடங்கள். 159



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## படங்கள்


| | | |
|---|---|---|
| படம் 1: | வடமாகாணமும் அதன் நிர்வாக மாவட்டங்களும். | 22 |
| படம் 2: | முல்லைத்தீவில் முஸ்லீம்கள் செறிவாக வாழ்ந்த குடியிருப்புகள், 1990. | 25 |
| படம் 3: | லெப்பை குடும்பப் பாரம்பரியம். | 38 |
| படம் 4: | முல்லைத்தீவில் முஸ்லிம்களால் பயன் படுத்தப்படுத்தப்பட்ட சமய, கல்வி நிலையங்கள், 1990. | 51 |
| படம் 5: | முல்லைத்தீவு முஸ்லிம்களின் தொழில் அமைப்பு, 1990. | 59 |
| படம் 6: | முல்லைத்தீவு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்ட விவசாய நிலங்கள், 1990. | 65 |
| படம் 7: | முல்லைத்தீவு முஸ்லிம்களின் "மூன்று கிராமங்கள்". | 78 |
| படம் 8: | "மூன்று கிராமங்களின்" விவசாயப் பொருளாதார அடிப்படைகள். | 80 |
| படம் 9: | "மூன்று கிராமங்களின்" வீதிகளும் பொதுக் கட்டிடங்களும். | 83 |
| படம் 10: | முல்லைத்தீவுப் பட்டினத்தில் முஸ்லிம்கள். | 86 |
| படம் 11: | மூன்று கிராம முஸ்லிம்களின் வர்த்தக கைத்தொழில் நிலையங்கள், 1990. | 111 |
| படம் 12: | முல்லைத்தீவு முஸ்லிம்களின் வெளியேற்றப் பாதை, 1990. | 120 |
| படம் 13: | "முல்லைத்தீவு முஸ்லிம்" அகதிகள் வாழும் முகாம்களின் பரம்பல், 1995. | 126 |
| படம் 14: | ஆலங்குடா அகதி முகாம். | 131 |




## என்னுரை

முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய இந்நூல், இம்மக்களின் வாழ்க்கை, வரலாற்றினைச் சித்தரிக்கின்றது. காலத்தின் சோதனையால் வாழ்விடம் இழந்து அதனால் பாதிக்கப்பட்ட இம்மக்களின் நடைமுறை வரலாறு பற்றி இன்னும் காலம் தாழ்த்தாது எழுதப்படவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

அதாவது பரம்பரை பரம்பரையாக முல்லைத்தீவில் முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், முறிப்பு, முத்தையன்கட்டு போன்ற குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் துரதிஷ்டவசமாக, அப்பிரதேசங்களில் இப்போது இல்லை.

சந்தர்ப்ப சூழ்நிலையால், தவறான மதிப்பீட்டால் இம்மக்கள் தமது பாரம்பரியப் பிரசேங்களிலிருந்து வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். கடந்த ஆறு வருடங்களாக அவர்கள் அகதிகளாக புத்தளம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வகதி வாழ்க்கை தமக்கு நிரந்தரமாகி விடுமோ என்ற அச்சம் இம்மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் இம்மக்களின் வரலாறு, கலை, கலாசார, பாரம்பரியங்கள் பூர்வீக இடங்களில் இம்மக்களின் பொருளாதார அடிப்படைகள், தற்போதைய அகதி வாழ்க்கையின் இன்னல்கள் என்பவற்றை எழுத்துருவில் கொண்டு வரும் பணியை இந்நூல் மூலம் மேற்கொண்டிருக்கின்றேன்.

யாரையும் குறைகூறும் நோக்கிலோ, வேறு யாருக்கும் நன்மை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலோ, அல்லது குறுகிய அரசியல் பிரபல்யத்துக்காகவோ இந்நூல் எழுதப்படவில்லை. நிச்சயமாக, இந்நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களினதும், அதே நேரத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களினதும், நியாயமான உரிமைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்யும் நோக்கத்துடனும் இது எழுதப்படவில்லை. மாறாக தவிர்க்கப் பட்டிருக்க வேண்டிய ஒரு வரலாற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்வால் வாழ்விடம் இழந்து, சொத்திழந்து, பொருள் இழந்து, சுய கௌரவம் இழந்து இரண்டாம் தரப் பிரஜைகளைப் போல் அல்லலுற்று வாழ்ந்து வருகின்ற முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் உரிமைக்காகவும், அவர்களின் எதிர்கால மீட்சிக்காகவும் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

ஒரு கண்ணோட்டத்தில் இந்நூல் ஒரு சமாதானச் செய்தியைத் தாங்கி நிற்கின்றது. அதாவது, இனங்களுக்கிடையில் குறிப்பாக தமிழ்–முஸ்லிம்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தி இவ்விரு இனங்களும் ஐக்கியத்தோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் நோக்கில் எழுதப்பட்டிருக்கின்றது. மறு கண்ணோட்டத்தில் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வாழ்விடம் இழந்த முல்லைத்தீவு முஸ்லிம் மக்களின் உரிமைக் குரலைப் பிரதிபலிப்பதாகவும், அதே நேரத்தில் இம்மக்கள் தமது வாழ்வுரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான ஆதாரங்களை கொடுக்கும் நோக்கத்திலும் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், தனித்துவமான மக்கள் குழுக்களின் கௌரவம் மதிக்கப்பட்ட அடிப்படையிலான சமாதானமே நீடித்து நிலைத்திருக்கக் கூடியது.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் கடந்தகால, நிகழ்கால அநுபவங்களை மிகக் கவனமாக பரிசீலித்து இம்மக்களின் எதிர்காலம் பற்றி இந்நூல் விளக்குகின்றது. குறிப்பாக முல்லைத்தீவு முஸ்லிம்களைப் பொறுத்தவரை சொந்த இடங்களுக்கு அவர்கள் மீளச் செல்வதைத் தவிர அவர்களுக்கு நீண்ட காலத்தில் நன்மை தரக்கூடிய வேறு பொருத்தமான தீர்வு நடைமுறை சாத்தியமில்லை என்பதை இந்நூல் மிக ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகின்றது.

இம்மக்கள் தமது வாழ்வுரிமையை மீளப் பெற்று தன்மானத்துடனும், சுய கௌரவத்துடனும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று இன ஐக்கியத்தோடு வாழ வேண்டும் என்ற மனப்பூர்வமான விருப்பத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

உண்மையில், முல்லைத்தீவு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது சொந்தப் பூமியில் இன ஐக்கியத்தோடு மீண்டும் வாழ்வதற்குரிய சாத்தியங்கள் உண்டு. கடந்தகால தமிழ்–முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை



அடிப்படையாகக் கொண்டு இவ்வம்சத்தை இந்நூல் வலியுறுத்துகின்றது. அப்பாவிகளான முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் நியாயமான உரிமைகளை தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக போராடி வருகின்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் மதித்து இத்துர்ப்பாக்கியமான மக்களின் மீட்சிக்கு உதவுவார்கள் என்ற அசையாத நம்பிக்கையின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலில் சொந்த இடத்திலிருந்தான பலவந்த வெளியேற்றம், சொந்த இடம் அல்லாத இடத்திலான மீள்குடியேற்றம் போன்ற வரலாற்று நிகழ்வுகள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்க்கையோடு பாதகமாகச் சம்பந்தப்படும் போது அவை நேரடியாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாவிகளான முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்க்கையில் தாக்கமுள்ள விளைவுகளை ஏற்படுத்திய மேற்குறித்த நிகழ்வுகள் தொட்டத் தெளிவாக எல்லோராலும் அறியப்பட வேண்டும் என்பதற்காகவும், அதனால் இம்மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளின் தாக்கத்தை சரியாக எல்லோரும் அறிந்து கொண்ட அடிப்படையில் இம்மக்களின் விமோசனத்திற்காக மாற்றுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும். தேசிய சர்வதேச சமூகங்கள் புரிந்துணர்வோடும், பொறுப்புணர்ச்சியோடும் இம்மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்பட வேண்டும். அவ்வாறான ஒரு முயற்சிக்கு தேவையான வரலாற்று, பொருளாதார மற்றும் இம்மக்கள் பற்றிய ஏனைய விபரங்கள் இந்நூலில் தரப்பட்டிருக்கின்றன. அச்சமாதானத் தீர்வுக்கான முன் நடவடிக்கைகள் இப்போதே ஆரம்பிக்கப்படாவிட்டால் இம்மக்களின் பிரச்சினை காலத்தால் மறக்கப்பட்ட ஒன்றாக மாறிவிடும். இந்நாட்டில் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் விமோசனம் கிடைத்த அடிப்படையில் சாந்தியும், சமாதானமும் நிலைக்கப் பிரார்த்திப்போம்.

***எஸ்.எச்.ஹஸ்புல்லா.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருநாளையும், ஹஜ்ஜுப் பெருநாளையும், தமிழ் மக்களின் தைப் பொங்கலையும், சித்திரை வருடத்தையும் இரு சாராரும் நட்புடன் பகிர்ந்து கொண்டாடிய மகிழ்ச்சிகரமான அந்த நாள் மீண்டும் வராதோ?" என ஏங்கிக் கொண்டிருக்கும் எம்மவரின் எண்ணங்கள் ஈடேறும் புதியதொரு பொழுதின் விடிவுக்காக காத்திருக்கின்றோம்.

"இஸ்லாமியத் தமிழர்" என்று அடை மொழியுடன் அன்புடன் அழைத்து சகோதர பாசத்துடன் வாழ்ந்த தமிழ் மக்களும் தமிழ் குழுக்களும் மீண்டும் இதே போல் வாழ விரும்புவர் என நம்புகின்றோம்.

அண்மைக்காலங்களில் முஸ்லிம்களை வெளியேற்றியோர், "முஸ்லிம்களை வெளியேற்றியது தவறு என்றும் அதற்காக மனம் வருந்துகின்றோம்" என்றும் கூறியுள்ளமை இன ஐக்கியத்துடன் மீண்டும் தாயகத்தில் வாழலாம் என்பதற்கான குறிகாட்டி எனக் கருதுகின்றோம். முல்லை முஸ்லிம்களும் அதே போல ஏனைய வட புல முஸ்லிம்களும் தமது தாயக மண்ணில் மீண்டும் குடியேறி நிலைத்து வாழ வேண்டியதற்கான சகல வழிகளையும் சகல தரப்பினரும் முனைப்புடன் முயற்சிக்க வேண்டும் என விரும்புகின்றோம். அதில் குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் முஸ்லிம்களைத் திரும்பவும் தமது பூர்வீக இடங்களுக்கு திரும்பி வரும்படி அழைக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

அத்துடன் இந்நூல் உருவாவதற்கு அறிவு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், உடல் ரீதியாகவும் உதவிகளை வழங்கிய தனிப்பட்டவர்களுக்கும், அமைப்புக்களுக்கும் எமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்

முல்லைத்தீவு பள்ளிவாயில் தர்மகர்த்தாக்கள்



அணிந்துரை வழங்கிய தர்மகர்த்தாக்களின் ஒப்பமும் பெயர் விபரமும்

1. மௌலவி. யூ.வதூாத்,
தலைவர், பெரிய பள்ளி ஜும்ஆ பள்ளிவாசல், தண்ணீரூற்று.

2. ஏ.எல். முஸ்தபா, தலைவர், மஸ்ஜிதுன் நூர்ரானியா
ஜும்ஆப் பள்ளி, நீராவிப்பிட்டி.

3. எல். டி. சாகுல் ஹமீது, தலைவர், முகைதீன்
ஜும்ஆப் பள்ளி ஹிஜ்ராபுரம்.

4. முகம்மது சரிபு அப்துல் அஸீஸ்
உபதலைவர், ஜும்ஆப் பள்ளி, முல்லைதீவு நகரம்

5. ஹமீது பைக்கீர் தலைவர் கொத்தியா கும்பம்
ஜும்ஆப் பள்ளி முறிப்பு

6. கே.எம். கௌது,
தலைவர், எள்ளுச்சேனை தக்கியாப் பள்ளிவாசல், முறிப்பு

7. முஹம்மது ஹனிபா முகம்மது இப்ராகிம்.
தலைவர் தைக்கியா நீராவிப்பிட்டி

8. ஆதம்பிள்ளை ஹாமீது (மௌலவி)
பொருளாளர் ஜும்ஆப் பள்ளிவாசல்
முத்தையன்கட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றியுரை

1991ஆம் ஆண்டு 'வட மாகாண முஸ்லிம் அகதிகள்' பற்றிய வெளிக்கள ஆய்வை மேற்கொள்வதற்கும் இன்று 'முல்லைத்தீவு முஸ்லிம்கள்' பற்றிய இந்நூலை வெளியிடுவதற்கும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் தலைவரும், அதன் அங்கத்தவர்களும் உதவி செய்தனர்.

மேலும், இந்நூலுக்கான விபரம் சேகரித்தலில் பலர் உதவினர். அந்த வகையில் முஸ்லிம் அகதிகள் பற்றிய வெளிக்கள ஆய்வில் மிக ஆர்வத்தோடு உதவிகளை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கும், ஜமாஅத்தே இஸ்லாமி உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள்.

இவ்வாய்வின் பல கட்டங்களிலும் தொடர்ச்சியாக எனக்கு உதவியாக இருந்தவர்கள் பலர். அவர்களில் கலாநிதி எம்.ஏ. லத்தீப், கலாநிதி எம்.எஸ்.எம். நவ்பல், ஜனாப் பி.அஜ்மல், திரு ஹேரத், ஜனாப் எம்.எச்.எம். நவ்பர், ஜனாப் ஆர். றிகான், ஜனாப் எஸ்.எம்.ஏ. நியாஸ், செல்விகள், எம்.ஐ. வாபிகா, பி. சாஜிதா, எம்.ஐ. முர்சிதா ஆகியோருக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய இந்நூலை எழுதி முடிப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவரும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவருமாகிய ஜனாப் எஸ்.எச்.எம். றிஸ்னி ஆகும். இந்நூலில் இடம்பெற்றுள்ள படங்கள் எனது மாணவர் ஜனாப் எம் .தௌபீக்கால் வரையப்பட்டன.

இந்நூல் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி நுரைச்சோலையில் முல்லைத்தீவு மக்கள் மத்தியில் ஒரு விரிவுரையாக சமர்ப்பிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் இந்நூலை மேலும் அபிவிருத்தி செய்ய உதவின. அதே போல இந்நூலை வாசித்து அணிந்துரை வழங்கிய முலலைத்தீவு முஸ்லிம் பிரமுகர்களும் இங்கு நினைவு கூரத்தக்கவர்கள்.

இந்நூல் எனது மனைவி சுஆதாவினதும், திருமதி கௌரி யோகநாதனினதும் உதவியுடன் கணனிப்படுத்தப்பட்டு, Unie Arts அச்சகத்தினரால் நல்ல முறையில் அச்சிடப்பட்டது.

இந்நூலை முழுமை பெறுவதற்கு உதவியளித்த ஏனைய சகலருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

***எஸ்.எச்.ஹஸ்புல்லா.***



# 1. அறிமுகம்

முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள் [1] பற்றிய இந்நூல் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றது. அதிலும் குறிப்பாக, 1990ஆம் ஆண்டை இம்மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான காலக்கட்டமாகக் கொண்டு அதற்கு முந்திய வரலாறும், அதற்குப் பிந்திய அனுபவங்களும் இந்நூலில் எழுதப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஏன் 1990ஆம் ஆண்டு இங்கு முக்கியமானது என்று அறிய வேண்டியது அவசியமாகும்.

## 1.1. முஸ்லிம் அகதிகள்:

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இம்மாவட்டத்தில் (படம்-1) வாழ்ந்த முஸ்லிம் மக்கள் இம்மாவட்டத்தை விட்டு குறுங்கால அவகாசத்தில் வெறியேறும்படி ஆயுத முனையில் வற்புறுத்தப்பட்டார்கள். இவ்வாறான உத்தரவு இட்டவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்[2] (இந்நூலில் இதன் பிறகு விடுதலைப்புலிகள் என்று குறிப்பிடப்படும்) என அழைக்கப்படும் தமிழ் ஆயுதக் குழுவினராவர். இவர்களின் ஆயுத அச்சுறுத்தலுக்கு அஞ்சி முஸ்லிம்கள் தமது பிரதேசங்களை விட்டு வெளியேறினார்கள். இவ் அச்சுறுத்தலால் வெளியேறிய முல்லைத்தீவு முஸ்லிம் மக்கள் இதுவரை தமது சொந்த இடங்களுக்கு மீளவில்லை.

யார் இந்த விடுதலைப்புலிகள்?. விடுதலைப்புலிகள் இலங்கையின் வட-கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கென தனியான ஒரு நாட்டை உருவாக்குவதற்காக ஆயுத ரீதியாக போராடி வரும் ஒரு பலம் வாய்ந்த இயக்கமாகும். இவ்வியக்கம் தமது இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை இராணுவத்துடன் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வியக்கம் வடமாகாணத்தின் மிகப்பெரும்பான்மையான நிலப் பகுதியை தமது ஆயுதக்கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேறும்படி வற்புறுத்தப்பட்ட 1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதேசங்களை இவ்வியக்கம் தனது முழுமையான ஆயுதக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. இச்சக்தி வாய்ந்த இயக்கமே முல்லைத்தீவு முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கும் காரணமாக இருந்தது[3].

முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட அதே காலத்தில் வட மாகாணத்தின் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்களும் விடுதலைப்புலிகளால் வற்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். இதன் மூலம் வடமாகாணத்தில் அக்காலத்தில் வாழ்ந்த எல்லா முஸ்லிம்களும் இப்பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்டவர்களாயினர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீள முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இம்மக்கள் அகதிகளாக கடந்த ஆறு வருடங்களாக வட மாகாணத்திற்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர்.

ஏன் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டார்கள் என்பதற்கு விடுதலைப்புலிகள் இன்றுவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கத்தை அளிக்கவில்லை. இதுவரை வட மாகாண முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் பின்னணியைப் பற்றி ஆய்வு ரீதியாக யாரும் ஆராய்ந்து விளக்கவும் இல்லை. ஆனால் முஸ்லிம்கள் ஏன், எந்த சூழ்நிலையில் வடக்கை விட்டு வெளியேற்றப்பட்டார்கள் என்று அறிய வேண்டியது இலங்கையின் இனப்பிரச்சினையின் உள்ளார்ந்த அம்சங்களை சரியாக அறிந்து கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும். அதனால் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தை அக்காலக்கட்ட நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி வெளியேற்றத்திற்கான அடிப்படைக் காரணங்களை விளக்க இந்நூல் முயற்சிக்கின்றது.

## 1.2. பின்னணி:

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் 1990ஆம் ஆண்டு ஒரு முக்கியமான காலக் கட்டமாகும். நீண்ட உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்பு 1989ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் குறுங்கால யுத்த நிறுத்தம் ஒன்று அமுலில் இருந்தது. துரதிஷ்டவசமாக இவ்யுத்த நிறுத்தம் மீறப்பட்டு[4] மீண்டும் யுத்த நடவடிக்கைகள்



இவ்விரு சாராருக்கும் இடையில் ஜூன் மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகின. திடீரென வெடித்த இவ் உள்நாட்டு யுத்தம் வட–கிழக்குப் பிரதேசம் முழுவதும் பரவலாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இவ் யுத்தத்தினால் உயிரை இழந்தனர். மேலும் பல இலட்சக் கணக்கானவர்கள் பல்வேறு வகையான பாதிப்புக்குள்ளாயினர். உதாரணமாக இவ் யுத்தம் ஆரம்பித்த 1990 ஜூன் மாதத்திலிருந்து டிசம்பர் வரையான 7 மாதங்களுக்கிடையில் வடக்கு–கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏறக்குறைய பத்து இலட்சம் அப்பாவி மக்கள் இவ்யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாயினர். இனப்பிரச்சினையால் உருவான இவ்வகதி வெள்ளத்தை அகதிகளுக்கான ஐக்கிய அமெரிக்காவின் குழு இலங்கையை ''அகதிகளின் தீவு'' என்று தனது விசேட அறிக்கையொன்றில் குறிப்பிட்டு இலங்கையின் அக்கால அகதிப் பிரச்சினையின் தாற்பரியத்தை சுட்டிக் காட்டியது (US Committee for Refugees, 1991). இப்பிரதேசத்தின் பொருட்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட அழிவுகள் மதிப்பிடப்பட முடியாதவை. சுருக்கமாக இவ்யுத்தம் வடக்கு–கிழக்கில் வாழ்ந்த குறிப்பாக தமிழ் மக்களையும் அதே நேரத்தில் முஸ்லிம், சிங்கள மக்களையும் நிலைகுலையச் செய்து நிர்க்கதியாக்கியது.

இவ்யுத்தம் மேலே குறிப்பிட்ட அழிவுகளோடு இலங்கையின் இன உறவில் மேலும் பிளவினை ஏற்படுத்தியது. குறிப்பாக தமிழ்–முஸ்லிம் உறவுகள் இக்கால கட்டத்தில் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அதாவது 1990 ஒக்டோபரில் உள்நாட்டு யுத்தத்திற்கு கிழக்கு மாகாண தமிழ்–முஸ்லிம் மக்களும் பலியாகினர். இனப்பிரச்சினை உக்கிரமடைய ஆரம்பித்த 1983ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டுவரை முஸ்லிம்–தமிழ் மக்கள் நல்லுறவோடு வாழ்ந்து வந்தனர்.[5] ஆனால், 1990ஆம் ஆண்டு ஜூன் மாத உள்நாட்டு யுத்தத்தோடு இவ்விரு இன மக்கள் மத்தியிலும் சந்தேகமும், நம்பிக்கையீனமும் எழ ஆரம்பித்தது. அதுவரையில் இனப்பிரச்சினையால் ஏற்பட்ட பாதிப்புகளை பரஸ்பரம் பங்கிட்டு நன்மையிலும், தீமையிலும் சகபாடிகளாக வாழ்ந்த இவ்விரு இன மக்களும் அரசியல் ஆயுத சக்திகளின் ஊடுருவலால் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இக்காலத்தில் தமிழ்–முஸ்லிம் முரண்பாடு குறிப்பாக கிழக்கு மாகாணத்திலேயே அதிகமாகக் காணப்பட்டது.[6] கிழக்கு மாகணத்தில் இக்காலக் கட்டத்தில் நிகழ்ந்த தொடர்புடைய பல நிகழ்வுகள் பற்றி இங்கு குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகும். ஜூன் மாத யுத்த நிறுத்த மீறலோடு, கிழக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகாணத்தில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட தமிழ் மக்களுக்கெதிரான படையெடுப்பின் போது முஸ்லிம்களின் உதவி இராணுவத்தால் பெறப்பட்டது என்ற குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. அதே நேரத்தில் இக்காலக்கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கெதிரான ஆயுத ரீதியான நடவடிக்கைகளுக்கும் படுகொலைகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கம்தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்நிகழ்வுகள் இப்பிரதேச அப்பாவி தமிழ்–முஸ்லிம் மக்களை ஒருவரை ஒருவர் மேலும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சூழ்நிலைக்கு உள்ளாக்கியது. முஸ்லிம்களை கிழக்கிலிருந்து வேரறுக்க மேற்குறித்த தமிழ் ஆயுத சக்திகள் முனைகின்றன என்ற குற்றச்சாட்டும் முஸ்லிம்களால் முன் வைக்கப்பட்டது.[7] அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கெதிரான இராணுவத்தின் அடாவடித்தனமான அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் ஊர்காவற்படையினர் உடந்தையாக இருந்தார்கள் என்று தமிழ் மக்களால் குற்றம் சாட்டப்பட்டது.[8]

இந்நிகழ்ச்சிகளின் முடிவாக, ஆயுதப் படையினதும், ஆயுதக் குழுக்களினதும் ஆயுதப் பலப் பரீட்சைக்கு கிழக்கு மாகாண தமிழ்–முஸ்லிம் உறவு பலியாகியது. கிழக்கில் புதிதாக உருவான தமிழ்–முஸ்லிம் முரண்பாடுகளால் எந்த அளவு தூரம் பிற சக்திகள் பயன் அடைந்தார்களோ தெரியவில்லை. ஆனால் பல நூற்றாண்டு காலம் ஒன்றாக ஒரு பிரதேசத்தில் அந்நியோன்யமாக வாழ்ந்த தமிழ்–முஸ்லிம் மக்களுக்கிடையில் இன முரண்பாட்டை வலுப்படுத்த இக்காலக்கட்ட நிகழ்வுகள் வெகுவாக உதவின என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கிழக்கு மாகாண இன முரண்பாடுகள் மேற்குறித்த நிலையில் காணப்பட்ட போதும், முஸ்லிம்–தமிழ் இன விரிசல்களின் எதிரொலிகள் வடக்கில் அப்போது பிரதிபலிக்கவில்லை. அவ்வாறான ஒரு தமிழ்–முஸ்லிம் இனப்பிரச்சினைச் சூழல் இக்காலத்தில் வடக்கில் காணப்படவில்லை என்பதை அக்கால பத்திரிகைச் செய்திகள், வாய்மூல ஆதாரங்கள் மிகத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. வட மாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை கிழக்கில் ஏற்பட்ட தமிழ்–முஸ்லிம் உறவு மாற்றங்கள் வடக்கில் உடனடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தாமைக்கு பல காரணங்களை குறிப்பிடலாம். முதலில் வடக்கு–கிழக்கில் முஸ்லிம் மக்களின் பரம்பல் வேறுபாடுகளைக்



குறிப்பிடலாம். இவ்விரு பிரதேச முஸ்லிம்களின் பரம்பல்களில் புவியியல் ரீதியில் தொடர்ச்சியற்ற தன்மை காணப்பட்டது. அதாவது, கிழக்கு மாகாண தமிழ்–முஸ்லிம் இன முரண்பாடுகள் வடக்கில் உடனடியாக பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவாறான புவியியல் தொடர்ச்சித் தன்மை இவ்விரு பிரதேச முஸ்லிம் மக்களின் பரம்பல் முறையில் காணப்படவில்லை. இவ்விரு பிரதேச முஸ்லிம்களும் தனித்துவமான புவியியல் பரம்பலைக் கொண்டிருந்தனர். இப்பரம்பல் வேறுபாடு தமிழ்–முஸ்லிம் இன உறவு வேறுபாட்டிலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

வட மாகாணத்தை மட்டும் குறிப்பாக நோக்கினால் இங்கு முஸ்லிம்கள் பரவலாகவும், மிக அதிகமான பிரதேசங்களில் இவர்கள் எண்ணிக்கை ரீதியாக சிறுபான்மையினராகவும் காணப்பட்டார்கள். தமிழ்–முஸ்லிம் இன ஐக்கிய கூட்டு வாழ்க்கை இரு சாராருக்கும் சாதகமாகக் காணப்பட்டது. குறிப்பாக முஸ்லிம் சிறுபான்மையினருக்கு தமிழ் பெரும்பான்மையினரின் பொருளாதார, சமூக ஒத்துழைப்பும், ஒத்தாசையும் என்றும் தேவைப்படும் சூழ்நிலை வட மாகாணத்தில் காணப்பட்டது. தமிழ் பெரும்பான்மையினரின் கண்ணோட்டத்தில் வட மாகாண முஸ்லிம் சிறுபான்மையினர் எண்ணிக்கை ரீதியாக, பிரதேச ரீதியாக, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக ஒரு சவாலாகக் காணப்படவில்லை. அதனால் நீண்ட கால தமிழ்–முஸ்லிம் இன ஐக்கியம் ஒரு பாரம்பரியமாக வடக்கில் வளர்ச்சி பெற்றிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் 1989ஆம் ஆண்டு இனப்பிரச்சினையின் மிக இக்கட்டான காலக்கட்டத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்[9] தமிழ்–முஸ்லிம் உறவில் ஏதும் பாதிப்புக்களை ஏற்படுத்தி இருக்கலாமா என்ற அம்சமும் மிகக் கவனமாகப் பரீட்சிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். 1989ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முற்றாக முடிவுறாத சூழ்நிலையில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் இத்தேர்தலை பகிஸ்கரித்தது. ஆனால் அது தமிழ் மக்களை தேர்தலைப் பகிஸ்கரிக்கும் படி கேட்கவில்லை. முன்னாள் ஆயுதக் குழுக்கள் உட்பட பல தமிழ் கட்சிகள் வட மாகாணத் தேர்தல் தொகுதிகளில் போட்டியிட்டன.[10] இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட மாகாணத்தின் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டது. வன்னித் தேர்தல் தொகுதி வட மாகாணத்தின் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளடங்கியதாக இருந்தது. இம்மூன்று நிர்வாக மாவட்டங்களும் முஸ்லிம் மக்கள் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையில் வாழ்ந்த மாவட்டங்களாகும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இலங்கையின் கட்சி அரசியலுக்குப் புதிதாகும். வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை பாராளுமன்றத்தில் தனித்துவமாகப் பிரதிபலிப்பதற்காக இக்கட்சி இத் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறியது. வன்னித் தேர்தல் தொகுதியின் முஸ்லிம்களின் பரவலான ஆதரவையும் இக்கட்சி பெற்று இத் தேர்தலில் ஒரு பாராளுமன்ற அங்கத்தவரையும் பெற்றுக் கொண்டது.

வன்னித் தேர்தல் தொகுதியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் வெற்றி ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. இத் தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தினராகக் காணப்பட்டார்கள். இத் தேர்தல் தொகுதியின் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்களின் செறிவு அதிகமாகக் காணப்பட்டது. அதாவது அம்மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் முஸ்லிம்கள் ஏறக்குறைய 30 சதவீதமாகவும், இம்மாவட்டத்தின் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மொத்த சனத் தொகையின் 66 சதவீதமாகவும் மன்னார் தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின 40 சதவீதமாகவும் காணப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தின் மேற்குறித்த இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் முஸ்லிம்களின் விகிதாசார ரீதியான செறிவு இக்காலக்கட்ட இலங்கையின் இன அரசியலிலும் பிரதிபலித்திருப்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தை உறுதிப்படுத்த இன சுயாட்சி முறையிலான அரசியல் சீர்திருத்தங்கள் முன் வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் அரசியல் கட்சிகள் பல அக்காலத்தில் முன் வைத்திருந்தன.[11] முஸ்லிம்களின் மேற்குறித்த இன சுயாட்சி கோரிக்கை முன் வைக்கப்பட்ட காலத்தில்தான் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி முறையிலான ஒரு மாகாண சபை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது.

முஸ்லிம் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட சுயாட்சிக் கோரிக்கையானது, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை இணைத்த அடிப்டையில் ஒரு பிரதேச சுயாட்சிமுறை ஒன்று அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்தில் முஸ்லிம்களுக்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்பதாகும். இவ்வாறு முஸ்லிம்களின் பிரதேச சுயாட்சிக்காக



கிழக்கு மாகாணத்தில் தெற்கே பொத்துவில்லில் இருந்து வடக்கே திருகோணமலை வரை 6 நிலத் தொடர்ச்சியற்ற முஸ்லிம் பிரதேசங்களும் அத்துடன் வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் முசலி, எருக்கலம்பிட்டி என்ற முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. மேற்குறித்த முஸ்லிம்களின் சுயாட்சிக் கருத்துக்களை முன் வைத்த அரசியல் கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தின் அரசியல் பலத்தை அடிப்படையாகக் கொண்டவைகள்[12] என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். உண்மையில் பிரதேச சுயாட்சிக்கான கோரிக்கை மன்னார் மாவட்ட முஸ்லிம்களால் அக்காலத்தில் முன்வைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

கிழக்கில் முஸ்லிம்–தமிழ் முரண்பாடுகளோடு முன்வைக்கப்கட்ட முஸ்லிம்களுக்கான பிரதேச சுயாட்சியும், அதில் வட மாகாண முஸ்லிம் செறிவுகள் உள்ளடக்கப்பட்ட அம்சமும், வட மாகாண முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புபட்டவையா? என்ற அம்சங்களும் மிகவும் கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும்.

1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் வடக்கில் முஸ்லிம்– தமிழ் உறவு வழமைபோலவே காணப்பட்டது. தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய மனோபாவத்தில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய குறிப்பான நிகழ்ச்சிகள் எதுவும் இக் காலத்தில் வடக்கில் ஏற்படவில்லை. மாறாக 1990ஆம் ஆண்டு ஜூன் யுத்த காலத்தில் வடமாகாணத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் பல தமிழ்–முஸ்லிம் உறவை மேலும் வலுப்படுத்த உதவியது. உதாரணமாக அக்கால கட்டத்தில் அரசாங்கப் படைகளின் செல் தாக்குதல்களாலும், படையெடுப்பாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கிராமம் கிராமமாக இடம்பெயர்ந்து தமது சூழலிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் தஞ்சமடைந்தனர். அப்போது முஸ்லிம் மக்களால் தமிழ் மக்கள் ஆதரிக்கப்பட்டு உணவளித்து, உறையுள் அளித்து பாதுகாக்கப்பட்டனர்.[13] அக்காலத்தில் தமிழ் மக்களின் கேடயமாக முஸ்லிம் மக்கள் இருந்தார்கள். முஸ்லிம்– தமிழ் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் இது போன்ற வேறு பல நிகழ்ச்சிகளும் மன்னார் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய ஏனைய வட மாகாண மாவட்டங்களிலும் இக்காலக் கட்டத்தில் நிகழ்ந்தன. இம் முஸ்லிம் கிராமங்களில் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் பெற்ற தற்காலிகப் பாதுகாப்பை வடக்கின் சில பிரதேசங்களில் விடுதலைப்புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுப்பினர்களும் அனுபவித்தனர் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் நிகழும் வரை முஸ்லிம் கிராமங்கள் பல தமிழ் மக்களினது சரணாலயங்களாகக் காணப்பட்டன.

## 1.3. பலவந்த வெளியேற்றம்:

இது இவ்வாறிருக்க 1990 ஒக்டோபர் மாதம் விடுதலைப்புலிகள் இயக்கம் திடீரென வடக்கு முஸ்லிம்களுக்கு எதிரான ஒருதலைப்பட்சமான நடவடிக்கையை எடுத்தது. 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதி வாரத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் எல்லோரும் 48 மணித்தியால அவகாசத்தில் அதாவது ஒக்டோபர் 24ஆம் திகதிக்கு முன்னர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறும்படி விடுதலைப்புலிகளால் வற்புறுத்தப்பட்டார்கள்.[14] விடுதலைப்புலிகளின் இவ் வெளியேற்றக் கட்டளைக்கு மாற்று வழி இல்லாத நிலையில் வடக்கு முஸ்லிம்கள் கிராமம், கிராமமாக வெறுங்கையோடு வடக்கை விட்டு வெளியேறி அகதியானார்கள்.

வடக்கு முஸ்லிம்களை இம்மக்களின் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றிய இந்த நடவடிக்கையை விடுதலைப்புலிகள் மிகவும் திட்டமிட்ட அடிப்படையிலேயே மேற்கொண்டார்கள் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக விடுதலைப்புலிகளின் வெளியேற்ற உத்தரவு யாழ்ப்பாணம் நகர் தவிர்ந்த வடமாகாணம் முழுவதும் சம காலத்தில்[15] அறிவிக்கப்பட்டது. வெளியேற்ற அறிவிப்பின்போது விடுதலைப்புலிகள் பயன்படுத்திய வார்த்தைகளும், வெளியேற்றத்திற்காகக் கூறப்பட்ட காரணங்களும் எல்லா இடங்களிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தன. வெளியேற்ற உத்தரவு ஒக்டோபர் 22ம் திகதி முஸ்லிம்கள் மத்தியில் அறிவிக்கப்படும் வரை வெளியேற்றச் செய்தி விடுதலைப்புலிகளால் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. வெளியேற்ற உத்தரவு அறிவிக்கப்படும் வரை இவ்வியக்கம் தமக்கும் (விடுதலைப்புலிகளுக்கும்) முஸ்லிம்களுக்கும் இடையில் ஏதும் முரண்பாடுகள் இருப்பதாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை. முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் ஆயுதக் குழுவில் சேர்ந்திருந்த முஸ்லிம் இளைஞர்கள் எவ்வித காரணங்களும் இன்றி ஆயுதங்களை மீளப் பெற்ற நிலையில் வீட்டுக்கு திருப்பி அனுப்பப் பட்டார்கள்.



வெளியேற்றத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் வடக்கின் சில முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம்களின் பணத்தையும் நகைகளையும் பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளும் முயற்சியிலும் இவ்வமைப்பு ஈடுபட்டது (Refugee Family Information, Vol-1-35). ஆகவே வடக்கு முஸ்லிம்களை அவர்களின் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றுவது பற்றி விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது. விடுதலைப்புலியினர் முஸ்லிம்களை வடக்கை விட்டு வெளியேற்றுவது என்ற தமது திட்டம் நூறு வீதம் வெற்றி பெறுவதில் மிகவும் கவனமாகவும் இருந்தனர் என்பதை மேற்குறித்த ஆதாரங்கள் காட்டுகின்றன.

முஸ்லிம்கள் இவ்வாயுதக் குழுக்களால் வடக்கைவிட்டு வெளியேறும்படி வற்புறுத்தப்பட்ட போது இவ் வெளியேற்றத்தை தடுத்து நிறுத்தக் கூடிய முயற்சிகள் அக்காலத்தில் எடுக்கப்படவில்லை. பலவந்தத்திற்குட்பட்ட முஸ்லிம் மக்களால் தமது வெளியேற்றத்தை தடுத்து நிறுத்தி இருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கவில்லை. காரணம் இப்பிரதேசத்தில் அநாதரவான ஒரு சிறுபான்மை சமூகமாக முஸ்லிம்கள் அப்போது காணப்பட்டார்கள். விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வெளியேற்ற உத்தரவில் மாற்றம் கொண்டு வர இம்மக்கள் எடுத்த முயற்சிகள் பயன் தரவில்லை. உண்மையில் முஸ்லிம் சிறுபான்மையினரை விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுத்த தமிழ் மக்களும், தமிழ் சமய, சமூகத் தலைவர்களும் பெரும் முயற்சி எடுத்தனர். அவை யாவும் தோல்வியடைந்தன. அதே வேளை வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் தள்ளாடி, சிலாவத்துறை போன்ற சில கேந்திர இராணுவ முகாம்களில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவமும் முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதை அறிந்தும் பாராமுகமாக இருந்தது. அதே நேரம் தேசிய, சர்வதேச சமாதான சக்திகள் வடக்கில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு நடப்பது என்ன என்பதை சரியாக அறியாததாலோ என்னவோ, இவ் வெளியேற்றத்தை தடுத்து நிறுத்த எந்த முயற்சிகளும் எடுக்காமல் இருந்தன. அப்பாவிகளான சிறுபான்மை முஸ்லிம்களுக்கு தமது பூர்வீக இடங்களை விட்டு வெளியேறுவதை விட வேறு எந்த வழிகளும் அக்காலத்தில் இருக்கவில்லை.

ஏன் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றினர் என்பது இன்று வரை ஒரு வினாவாகவே இருந்து வருகின்றது. இம்மக்களை வெளியேற்றியதன் மூலம் விடுதலைப் புலியினர் பொருளாதார, அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியாக நன்மைகளை அடைந்ததாகவும் தெரியவில்லை. எதிர் காலத்தில் அவ்வாறான நன்மையை அடைய இருக்கின்றார்கள் என்றும் கூற முடியாது. காரணம், வட மாகாணத்தின் மொத்த சனத் தொகையில் ஆக 5 சதவீதமாகக் காணப்பட்ட முஸ்லிம்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையான பிரதேச சுயாட்சியை அடைவதில் எந்த விதத்திலும் தடையாக இருந்திருக்க முடியாது. அத்துடன், வடக்கு முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக எந்தக்காலத்திலும் இருந்ததில்லை. முஸ்லிம்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ வெற்றிகளை அடைய இலங்கை இராணுவமும் முயற்சித்ததற்கான உதாரணங்களும் வடக்கில் இல்லை. இவ்வாறு எந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினாலும் வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தால் தமிழ் மக்களோ, ஆயுதக் குழுக்களோ நன்மை அடைந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கவில்லை.

அவ்வாறிருந்தும் வடக்கு முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டார்கள். 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வட மாகாணம் முஸ்லிம் மக்கள் இல்லாத மாகாணமாகியது. இலங்கையின் இன உறவு வரலாற்றில் இது மிகவும் துரதிஷ்டவசமான நிகழ்ச்சியாகும். சகோதரர்களான வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தால் தமிழ்-முஸ்லிம் உறவு கறை படிந்ததாயிற்று. இதற்குப் பிராயச்சித்தம் தேடுவது இதனுடன் சம்மந்தப்பட்டவர்களின் கடமையல்லவா?

இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் காணப்பட்ட வேறுவகையான சில அணுகு முறைகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். வடக்கில் வெளியேற்ற உத்தரவு அமுல் செய்யப்பட்ட வேளை முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டார்களே தவிர இம்சிக்கப்படவில்லை. படுகொலை முயற்சிகள் மேற்கொள்ளப்படவுமில்லை. பல இடங்களில் உள்ளூர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தையிட்டு தமது மனவருத்தத்தை மறைமுகமாகத் தெரிவித்திருந்தார்கள். முல்லைத்தீவில் ''முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காகவே நீங்கள் இங்கிருந்து வெளியேற்றப்படுகின்றீர்கள்'' என்றும் ''ஈழம் கிடைத்ததும் நீங்கள் வரவேற்கப்படுவீர்கள'' என்றும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் குறிப்பிட்டதற்கான சாட்சியங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இன்று முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றியதற்காக விடுதலைப் புலியினர் மனம் வருந்துவதாக நம்பத்தகுந்த செய்திகள் குறிப்பிடுகின்றன. வடமாகாணம் முஸ்லிம்களதும் வாழ்விடமே என்பதை இன்று இவ் ஆயுதக்குழு வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ளது.[16] விடுதலைப் புலிகளின் இந்த மனமாற்றத்தை நோக்குகின்ற போது முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் இனப்பிரச்சினையில் வட மாகாண முஸ்லிம்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் தப்பான ஒரு கணிப்பீட்டில் அல்லது எதிர்பார்ப்பில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று யூகிக்க முடிகின்றது. பலவந்த வெளியேற்றம் எவ்வாறான சூழ்நிலையில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானம் என்பதை வேறு ஆய்வுகளில் விளக்கப்பட இருப்பதனால் இந்நூலில் அவ்வம்சம் விபரிக்கப்பட வில்லை.

எது எவ்வாறிருந்தாலும் முஸ்லிம்களின் வெளியேற்றம் ஆறு வருடங்களுக்கு முன்னர் தாயகக் கோட்பாட்டை உறுதியாக நம்பும் ஒரு ஆயுதக் குழுவால் நிறைவேற்றப்பட்டது. அப்பாவிகளான வெளியேற்றப்பட்ட மக்கள் தங்களைச் சொந்த இடங்களுக்கு விடுதலைப் புலிகள் மீண்டும் வரும்படி கொள்கை ரீதியாக அழைக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்றுவரை உத்தியோக பூர்வமாக விடுதலைப் புலிகளால் இந் நேசக்கரம் நீட்டப்படவில்லை. இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் தனது மௌனத்தை கலைத்தே தீர வேண்டும். முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதற்கு இவர்கள் மனவருத்தப்படுவது உண்மையானால் தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தியே ஆகவேண்டும். அவ்வாறான ஒரு தெளிவான நிலைப்பாடு வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினையுடன் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கில் தமிழ்-முஸ்லிம்களின் எதிர்கால கூட்டு வாழ்க்கைக்கு விடுதலைப் புலிகள் தனது நல்லெண்ணத்தை வெளியிடும் ஒரு அடையாளமாகவும் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

மறு புறத்தில், பலவந்த வெளியேற்றம் முஸ்லிம் மக்களுக்கு பல பாரதூரமான பொருளாதார, கல்வி, கலாசார, உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உளவியல் ரீதியாக இவ் வெளியேற்றம் இம் மக்களுக்கு சொல்லொணாத் துயரங்களை ஏற்கனவே ஏற்படுத்தி உள்ளது. தமது வீடுகளில் இருந்து வெறுமனே உடுத்திய உடையோடு இம்மக்கள் அனுப்பப்பட்டார்கள். கடந்த ஆறு வருடங்களாக அகதிகளாக, பிறரை நம்பிய வாழ்க்கையை இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தாம் பாரம்பரியமாகக் கட்டிக் காத்து, வளர்த்து வந்த தமது கல்வி, ஒழுக்கம்,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாசாரம் போன்றன முகாம் வாழ்க்கையால் வீழ்ச்சி அடைவதைத் தடுக்க முடியாதவர்களாக இம்மக்கள் காணப்படுகின்றார்கள். இம்மக்களுக்கு வழங்கப்பட்ட பற்றாக்குறையான அகதி நிவாரணம் இம்மக்களை ஆரோக்கிய ரீதியாக மட்டுமல்ல, உளவியல் ரீதியாகவும் பலவீனமானவர்களாக்கி விட்டது. எல்லாவற்றிற்கும் பிறரை நம்பிய வாழ்க்கையின் பிரதி பலன் தமது எதிர்காலத்தைப் பற்றிய தீர்மானத்திலும் பிறரில் தங்கியிருக்க வேண்டிய சூழ் நிலைக்கு இம்மக்களை தள்ளிக் கொண்டிருக்கின்றது. இத்தனை கஷ்டங்களும், துன்பங்களும், துயரங்களும் இம்மக்களின் பலவந்தமான வெளியேற்றத்தால் இம்மக்களுக்கு ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## 1.4. நூலின் நோக்கம்:

இக்காரணங்களால், வடக்கு முஸ்லிம்கள் தமது பிறப்பால், வரலாற்றால் பாரம்பரியத்தால் வடக்கிற்கே உரியவர்கள் என்பதையும் தெட்டத் தெளிவாக நிரூபிக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. வடக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசம் இம்மக்களின் மூதாதையர் வாழ்ந்த பிரதேசம் என்பதையும் இம்மக்களுக்கு உரிமையாக இருந்த உடமைகள் இம்மக்களால் நியாயமாக உழைக்கப்பட்டவை என்பதையும் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது. அது மட்டுமன்றி வடக்கில் தமிழ் மக்களோடு ஒரு இணக்க வாழ்க்கை வாழக் கூடிய அடிப்படைக் குணாதிசயங்களை இம் முஸ்லிம்கள் கடந்த காலத்தில் கொண்டிருந்தார்கள் என்பதையும் எடுத்துக் காட்டி, எதிர்காலத்திலும் வடக்கில் தமிழ்-முஸ்லிம் இன ஐக்கிய உறவு சாத்தியம் என்று நிரூபிக்க வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. தமிழ் மக்களின் இலட்சியத்துக்கு முரண்பாடில்லாத வடக்கு முஸ்லிம்களின் அபிலாசைகளை தமிழ் மக்களுக்கும், தமிழ் இயக்கங்களுக்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்ட வேண்டிய தேவையும் இன்று காணப்படுகின்றது. இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாக இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலில் பலவந்த வெளியேற்றத்தால் இம் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புப் பற்றியும் ஆராயப்படுகின்றது. வடக்கில் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த முஸ்லிம்கள் தமக்கு பல வகையான அசையும் அசையா



சொத்துக்களை உடமையாகக் கொண்டிருந்தார்கள். இம் மக்கள் 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட போது இம்மக்களுக்கு உடமையாக இருந்த பெறுமதியான அசையும் சொத்துக்கள் இம்மக்களை வெளியேற்றியவர்களால் வட மாகாணத்தின் பல இடங்களில் பறிமுதல் செய்யப்பட்டன. அதேநேரத்தில் இம்மக்களின் வீடு, காணி, வர்த்தக, கைத்தொழில் நிலையங்களின் உரிமைகள் வெயியேற்றியவர்களால் அப்போது மறுக்கப்பட்டன. கடந்த ஆறு வருட காலம் இம்மக்கள் தமது பொருளாதார அடிப்படைகளுடன் தொடர்பு அற்றவர்களாக உள்ளனர். இம்மக்களுக்குப் பரம்பரை உரிமையாக இருந்த உடமைகள் பறிபோன நிலையில் அல்லது இம்மக்களுக்கு தற்போது பயனற்ற நிலையில் காணப்படுகின்றன. அதனால் இம்மக்களுக்கு உரிமையாக இருந்த உடமைகளையும், பொதுச் சொத்துக்களையும் அடையாளப்படுத்த வேண்டியதும், அவற்றைப் பெறுமதிப் படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

துரதிஷ்டவசமாக இம்மக்களின் பொருளாதார இழப்பு பற்றிய மதிப்பீடுகள் எதுவும் இதுவரையில் செய்யப்படவில்லை. அவ்வாறான ஒரு மதிப்பீடு மிக அவசியமானதாகும். இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வில் இம்மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பும் கவனத்தில் எடுக்கப்படுவதற்கு இம்மதிப்பீடு உதவும். அக்கடமையையும் இந்நூல் செய்கின்றது. இவ்விடயத்தில் காலம் தாழ்த்தப்பட்டால் வடக்கில் பரவலாக, அதேவேளை மிகச் சிறுபான்மையினராக வாழ்ந்த முஸ்லிம் மக்களின் பொருளாதார அடிப்படைகள் காலத்தால் மறக்கப்பட்டதொன்றாக மாறக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

இனப்பிரச்சினையின் வெளிப்பாடாகவே வடக்கு முஸ்லிம்கள் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அது போலவே இம்மக்களின் பலவந்தமான வெளியேற்றத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களும் அத்துடன் அகதி வாழ்க்கையில் ஏற்பட்ட பாதகமான தாக்கங்களும் தனித்துவமான இனப்பிரச்சினையின் பிரதிபலிப்பாக இருந்தும் கூட இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினை பற்றிய கலந்துரையாடல்களிலும், இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய சிபாரிசுகளிலும் இம்மக்களின் இப்பிரச்சினைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இம்மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் காலத்தால் மறக்கப்பட்ட ஒன்றாக மாறிவிடக் கூடாது. இம்மக்களுக்கு உரிமையாக இருந்த சொத்துக்களை மீளப் பெற்றுக் கொடுக்க வேண்டியது எல்லோருடையதும் கடமையாகும்.

இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் பொருளாதார அடிப்டைகளையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றுப் பாரம்பரியத்தையும் வெளிக்கொணரும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இது போல வட மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி பிரதேச முஸ்லிம்கள் பற்றியும் தனித்தனி தொகுதிகளாக அதாவது நூல்களாக எழுதப்பட்டிருக்கின்றன. (விபரங்களுக்கு இந்நூலின் கடைசிப்பக்கத்தைப் பார்க்க).

## 1.5. ஆய்வு ஆதாரங்கள்:

இவ்வாறான ஒரு நூலை எழுதுவதில் பல சவால்களை இந்நூல் ஆசிரியர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக இந்நூலை எழுதுவதற்கு ஆதார பூர்வமான விபரங்கள் சேகரிப்பது ஆரம்பத்தில் மிகவும் கடினமாக இருந்தது. காரணம் இம்மக்களைப் பற்றிய எழுத்துருவிலான விபரங்கள் எதுவும் அப்போது இருக்கவில்லை. பொதுவாக எழுத்துருவில் இல்லாத விடயம் பற்றிய ஒரு ஆய்வு பெருமளவு வெளிக்கள (ஆய்வுப்பிரதேசங்களுக்குச் சென்று மக்களைக் சந்தித்து விபரம் சேகரிப்பது) விபரம் சேகரித்தலில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்விடம், பொருளாதாரம், இன உறவு போன்ற அம்சங்களை சரியாக அறிய வேண்டுமானால் உண்மையில் முல்லைத்தீவு சென்று விபரம் சேகரிக்க வேண்டும். துரதிஷ்டவசமாக, இந்நூலாசிரியரால் அவ்வாறு முல்லைத்தீவு சென்று விபரம் சேகரிக்கக் கூடிய அரசியல் சூழ்நிலைகள் தற்போது அங்கில்லை. அத்துடன் யுத்த சூழ்நிலைகள் பொருத்தமாகக் காணப்படாதது மற்றும் ஒரு பிரச்சினையாகும்.

முல்லைத்தீவுக்குச் சென்று விபரம் எடுக்க முடியவில்லையே தவிர முல்லைத்தீவின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களை நேரடியாகச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு இந்நூலாசிரியருக்குக் கிடைத்தது. காரணம், இம்மக்களில் மிகப் பெரும்பான்மையினர் அகதிகளாகப் புத்தளம், குருநாகல், அநுராதபுர மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். முல்லைத்தீவு முஸ்லிம்களை நேரடியாகக் கண்டு இம் மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு, பொருளாதாரம், கலை, கலாசாரம் பற்றியும் மிகத் தெளிவான விபரங்கள் பெறக் கூடியதாக இருந்தது.

அந்த அடிப்படையில், முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகதியாக்கப்பட்ட ஆரம்ப காலங்களிலேயே இம்மக்களைப் பற்றிய விபரம் சேகரிக்கக் கூடிய



வாய்ப்பு இந்நூலாசிரியருக்கு கிடைத்தது. அதாவது 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (வெளியேற்றப்பட்டதில் இருந்து 2 மாதங்களில்) நூலாசிரியரின் தலைமையில் வட மாகாண முஸ்லிம்களின் அகதிப் பிரச்சினையை அடையாளப்படுத்துவதற்கான ஒரு வெளிக்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், மாணவர்களும் பங்கு பற்றினர். இவ்வாய்விற்கான பொருளாதார உதவி "இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி" அமைப்பால் வழங்கப்பட்டது.

இவ்வாய்வில் அன்று முஸ்லிம் அகதிகள் செறிந்து வாழ்ந்த புத்தளம், குருநாகல், அநுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் முகாம்களில் வாழ்ந்த அகதி முஸ்லிம்களிடம் இருந்து விபரங்கள் பெறப்பட்டன. அப்போது இவ்வாய்வு அகதிகளின் உடனடிப் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் அகதிகளின் பின்னணி விபரங்கள் என்ற அடிப்படையில் வடக்கின் எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களுக்கு உரிமையாக இருந்த அசையும், அசையாச் சொத்துக்கள், அச்சொத்துக்களின் இட அமைவுகள் போன்ற விபரங்கள் இவ்வெளிக்கள ஆய்வில் சேகரிக்கப்பட்டிருந்தன. ஏறக்குறைய 9000 அகதிக் குடும்பத்தினர் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட வினாக் கொத்துக்களை முழுமையாக நிரப்பித் தந்திருந்தார்கள். அதில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 821 குடும்பத்தினர் தமது விபரங்களைத் தந்திருந்தார்கள். இவர்கள் முல்லைத்தீவின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்களாகவும், பலமட்ட வருமானத்தையும், பல வகையான தொழில்களையும் கொண்டிருந்தவர்களாகவும் காணப்பட்டார்கள். வெளிக்கள ஆய்வில் கிடைக்கப் பெற்ற முல்லைத்தீவு முஸ்லிம்களைப்பற்றிய விபரங்கள் இந்நூலை எழுதுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அத்துடன் நூலாசிரியர் கடந்த ஆறு வருடங்களில் வடக்கு முஸ்லிம் அகதிகள் பற்றிய பல்வேறு பட்ட ஆய்வுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தமையும் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டத்தைப் பெற உதவியாக இருந்தது. இதில் குறிப்பாக முஸ்லிம் அகதிகள் பற்றிய விபரங்கள் கடந்த ஆறு வருடங்களில் இரு முறை அதாவது 1992ஆம் ஆண்டிலும், 1994ஆம் ஆண்டிலும் புதுப்பிக்கப்பட்டன. வடக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம் அகதிகளின் கல்விப் பிரச்சினை பற்றிய ஆய்வு ஒன்று ஆசிரியரினால் 1994ம் ஆண்டில் செய்யப்பட்டது. இவ்வாய்வுகள் வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டு வருகின்ற இட அமைவு ரீதியான, மனோபாவ ரீதியான மாற்றங்களை சரியாக மதிப்பிட உதவின. இறுதியாக 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் புத்தளம் நகரில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட "வடக்கு முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம்;" என்ற தலைப்பிலான இரு நாள் செயல் அமர்வு முஸ்லிம் அகதிகளின் எதிர்கால நிலைப்பாட்டையும், தற்போதைய நிலையையும் சரியாக அறிந்து கொள்ள மிகவும் உதவியாக இருந்தது.

அதே நேரத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியம் பற்றிய விபரங்கள் சில நூல்களிலிருந்தும், அறிக்கைகளிலிருந்தும் பெறப்பட்டன. அவற்றில் மிக முக்கியமானவை பிரித்தானியர்கால ஆண்டறிக்கைகளும், குடிசனக் கணிப்பீடுகளுமாகும். இவைகளில் இருந்து முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய குடிசன மற்றும் வரலாற்று விபரங்கள் பெறப்பட்டன. இலங்கை ஓரங்குலப் படங்கள் இம்மக்களின் குடியிருப்புக்களையும், பொருளாதார அடிப்படைகளான வயல்நிலங்கள், ஏனைய பயிர் நிலங்கள், நீர்ச் சுனைகள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் பற்றிய விபரங்களையும் பெற உதவின.

வரலாற்று ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிராத ஆனால் ஆய்வுக்கு மிகவும் அவசியமான ஏனைய விபரங்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களிடம் இருந்து பெறப்பட்டன. இம்மக்களின் வரலாறு பற்றிய விபரங்கள் விபரம் தெரிந்த முதியவர்களிடம் இருந்து பெறப்பட்டன. நில, புலன்கள் பற்றிய விபரங்கள் நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்தும், இது பற்றி அறிந்த மற்றவர்களிடம் இருந்தும் கேட்டறிந்து திரட்டப்பட்டன. கலை, நாட்டியம் பற்றிய விபரங்கள் கலைஞர்களிடம் இருந்து அறிந்து கொள்ளப்பட்டன. இது போல முல்லைத்தீவைச் சேர்ந்த கற்றவர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள் போன்றவர்களிடம் இருந்தும் அவரவர்களுக்குப் பொருத்தமான விபரங்கள் கேட்டறிந்து பெறப்பட்டன. இறுதியில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய இந்நூல் முறைப்படி தொகுக்கப்பட்டு 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ந் திகதி புத்தள மாவட்ட நுரைச்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் முகாம் ஒன்றில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில்



சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது முல்லைத்தீவு முஸ்லிம்களால் கூறப்பட்ட பயனுள்ள மேலதிக ஆலோசனைகள் இந்நூலை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவின.

இந்நூலில் இடம்பெற்றுள்ள வரலாறு, பொருளாதாரம், மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான விபரங்களைத் தந்துதவிய முல்லைத்தீவு முஸ்லிம்களின் பெயர்விபரப் பட்டியல் இந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. இதில் பெயர் குறிப்பிடப்படாத வேறு பலரும் முல்லைத்தீவு பற்றிய பயனுள்ள பல விபரங்களைத் தந்து உதவினர். துரதிஷ்டவசமாக, முல்லைத்தீவு பற்றியும், முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றியும் தமிழ் மக்களின் கருத்தையும், கண்ணோட்டத்தையும் பெற்று இந்நூலில் சேர்த்துக் கொள்ள இந்நுலாசிரியரால் முடியவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

## 1.6. நூலின் அமைப்பு:

மொத்தமாக பத்து அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலின் 1 முதல் 5 வரையான அத்தியாயங்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழக்கை வரலாற்றை, பொருளாதார அடிப்படைகளை விளக்குகின்றன. அத்தியாயம் 6 முல்லைத்தீவில் இனப்பிரச்சினைக் காலகட்டத்தில் முஸ்லிம்–தமிழ் மக்களுக்கெதிரான அரசாங்கப் படையெடுப்பில் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் சமமாக பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் இக்கஷ்ட காலத்தில் இவ்விரு இன மக்களும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக வாழ்ந்தார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. 7ம், 8ம் அத்தியாயங்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் பற்றிக் கூறுவதோடு, பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளையும் அடையாளப்படுத்திக் காட்டுகின்றன. அத்தியாயம் 9 முல்லைத்தீவு முஸ்லிம்களின் கடந்த 6 வருடகால அகதி வாழ்க்கையை விபரிக்கின்றது. இறுதி அத்தியாயம் இன்றைய சூழ்நிலையில் அப்பாவிகளான இவ்வகதிகளினதும், அவர்களின் சிறார்களினதும் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக காணப்படுகின்றது என்பதைக் கூறி நல்நோக்குக் கொண்டவர்கள் அரசியல், பொருளாதார, சமூக அடிப்படையில் இவ்வகதிகளின் விடிவிற்கு உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பதோடு, அவர்கள் எவ்வாறு இதற்கு உதவலாம் என்பதையும் குறித்துக்காட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறிப்புகள்

1 முஸ்லிம்கள் இலங்கையில் ஒரு தனித்துவமான மக்கள் குழுவாகும். இம்முஸ்லிம்கள் இந்நாட்டில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்களோடும், ஏனைய பிரதேசங்களில் சிங்கள மக்களோடும் கலந்து வாழ்கின்ற ஒரு சிறுபான்மை இனமாவர். இவர்களை தமிழ் மக்கள் "சோனகர்" என்றும் சிங்கள மக்கள் "மரக்கலயா" என்றும் அழைப்பதுண்டு. முஸ்லிம் மக்கள் இந்நாட்டின் மொத்த சனத் தொகையில் ஏறக்குறைய 8 சதவீதத்தினராகக் காணப்படுகின்றனர்.

2. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஒரு பலம் வாய்ந்த கெரில்லா இயக்கமாகும். இவ்வியக்கத்தின் தலைவரும் தளபதியுமாக வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்து வருகின்றார். இக் கெரில்லா இயக்கம் 1983ஆம் ஆண்டில் இருந்து இலங்கை அரசுக்கு எதிராக கெரில்லா யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

3. வடக்கு முஸ்லிம்களை எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவில் வெளியேற்றக்கூடிய ஆயுதரீதியான ஆற்றலை விடுதலை புலிகள் அக்காலத்தில் கொண்டிருந்தனர்.

4. இலங்கையில் அக்காலத்தில் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது. இவ் யுத்த நிறுத்தம் 14 மாதங்கள் நீடித்தது. 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் இவ்யுத்த நிறுத்தம் மீறப்பட்டது.

5. இக்காலக்கட்டத்தில் வட-கிழக்குப் பிரதேசம் யுத்த மயப்படுத்தப்பட்டு வந்த சூழ்நிலையிலும் முஸ்லிம் தமிழ் இன உறவு எப்போதும் போல் சிறப்பாக இருந்தது. உதாரணமாக Richartson (1990) இன் ஆய்வுகளின் படி இனப்பிரச்சினை தீவிரம் அடையத் தொடங்கிய 1983ம் ஆண்டில் இருந்து 1988 ஆம் ஆண்டு வரைக்கும் நூற்றுக்கணக்கான பலாத்கார நிகழ்வுகள் இனப்பிரச்சினையுடன் தொடர்புபட்ட வகையில் வட-கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றிருந்தன. இதில் ஆக நான்கு நிகழ்வுகள் மாத்திரமே தமிழ் ஆயுத குழுக்களால் வடமாகாண முஸ்லிம்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றன. அவையாவன 1985 ஏப்ரல் 9ஆம் திகதி மன்னாரில் மூன்று முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக்குழுக்களால் கொல்லப்பட்டனர். இதே வருடம் செப்டம்பர் 6ஆம் திகதி யாழ்ப்பாண மூர் வீதியைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர் ஒருவர் கடத்தப்பட்டார். 1986 ம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டு முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டனர். 1988ஆம் ஆண்டு மன்னார் அரசாங்க அதிபராக இருந்த ஒரு முஸ்லிம் ஆயுதக்குழுக்களால் கொல்லப்பட்டார்.



6. இதற்குச் சில உதாரணங்களைக் குறிப்பிடலாம். 1990 ஆண்டு ஜூன் 11ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் படையில் இருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அதே வருடம் ஜூலை 14 ஒன்தாச்சிமடத்தில் 60 முஸ்லிம்கள், ஒகஸ்ட் 3இல் காத்தான் குடியில் 167 முஸ்லிம்கள், ஒகஸ்ட் 12 இல் ஏறாவூரில் 173 முஸ்லிம்களும் தமிழ் ஆயுதக்குழுக்களால் கொல்லப்பட்டனர்.

7. இக்காலத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகளின் பாராளுமன்ற பேச்சுக்கள், பத்திரிகை அறிக்கைகள் இவ்வுண்மைத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.

8. "முஸ்லிம்கள் இலங்கை இராணுவத்துடன் ஒத்துழைக்கின்றார்கள் என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்டது". The Island (1990)

9 இப் பொதுத் தேர்தல் 1989ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்காலத்தில் இலங்கையில் தெற்குப் பிரதேசத்தில் ஜே.வி.பி. பிரச்சினையும் வடக்கில் விடுதலைப் புலிகளின் பிரச்சினைகளும் காணப்பட்டன. இத் தேர்தலில் இலங்கையின் மொத்த வாக்காளர்களில் 60சத வீதமானவர்கள் மாத்திரமே வாக்களித்தனர். இதில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.

10. இத் தேர்தலில் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் டியு.எல். எப், ஈபி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் போட்டியிட்டன.

11. " முஸ்லிம் மாகாண சபை" என்ற கருத்து ஆரம்பத்தில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி (M.U.L.F) என்ற கட்சியால் முன்வைக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸால் இக்கருத்து மேலும் வலுப்படுத்தப்பட்டு ஒரு அரசியல் கோரிக்கையாக தேசிய இனப்பிரச்சினையில் முன்வைக்கப்பட்டது.

12 M.U.L.F இன் தலைவர் எம்.ஐ. எம். முகைதீன் ஆவார். இவர் அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றுக் கிராமத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆவார். இவர் இதே மாவட்டத்தின் கல்முனை நகரத்தைச் சேர்ந்தவர். மேற்குறிப்பிட்ட இரு கட்சிகளும் வட-கிழக்குப் பிரதேசத்தில் ஏறக்குறைய 40 சதவீதமான முஸ்லிம் வாக்காளர்களை செறிவாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தன.

13 மன்னார் தீவிலும் இக்காலத்தில் யுத்தம் உக்கிரமாக நடைபெற்றது. இராணுவம் தனது நிலைகளில் இருந்து மன்னார் நகரினை நோக்கி தொடர்ச்சியான செல் தாக்குதலில் ஈடுபட்டது. 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏறக்குறைய 20.000 தமிழ் மக்கள் இச்செல் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்க இடம் பெயர்ந்து நகரில் இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*5 மைல் மேற்காகக் காணப்பட்ட எருக்கலம்பிட்டி என்ற முஸ்லிம் கிராமத்தில் தஞ்சம் அடைந்தனர். முஸ்லிம்கள் இக்கிராமத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்படும் வரை இத்தமிழ் அகதிகள் இக்கிராமத்திலேயே முஸ்லிம்களின் பராமரிப்பில் இருந்து வந்தனர். இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முஸ்லிம்கள் உதவிய இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு உதாரணங்கள் வட மாகாணத்தில் பரவலாக அக்காலத்தில் காணப்பட்டது.*

14. *வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை தனிமைப்படுத்தி இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நடவடிக்கை அக்காலக் கட்டப் பத்திரிகைகளில் பாராளுமன்ற பேச்சுக்களில், சர்வதேச சஞ்சிகைகளில் மிகத் தெளிவாகப் பதியப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சி நடந்து ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களாலும் இந்நிகழ்ச்சி விடுதலை புலிகளினால் செய்யப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.*

15. *முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றச் செய்தி மன்னார்த் தீவில் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதியும், மன்னார் மாவட்ட முசலி, மாந்தை பகுதிகளில் 23ஆந் திகதியும், முல்லைத்தீவில் 24 ஆம் திகதியும், யாழ்ப்பாணத்தில் 30ஆம் திகதியும் விடுதலை புலிகளால் அறிவிக்கப்பட்டது.*

16. *1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இலண்டன் பி.பி.சி யின் தமிழோசைக்குக் கொடுத்த பேட்டியில் "யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் சொந்த மண். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இந்த மக்கள் அகதிகள்ாக வேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு வருந்துகின்றோம்" என்று கூறினார். அகதி 1994 (6) : 19. விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த அன்ரன் பாலசிங்கம் Counterpoint கொடுத்த பேட்டியில் "முஸ்லிம்கள் தவிர்க்கப்பட முடியாத காரணத்தினால் வெளியேற்றப்பட்டார்கள்" என்று குறிப்பிட்டார்.*



# 2. முல்லைத்தீவு: புவியியலும், குடிசனமும்

முல்லைத்தீவு என்பது இலங்கையின் வட கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு நகரக் குடியிருப்பைக் குறிக்கின்றது. அதே நேரத்தில் முல்லைத்தீவு நகரக் குடியிருப்பை தலை நகராகக் கொண்ட சூழற்பிரதேசம் நிர்வாக ரீதியாக முல்லைத்தீவு மாவட்டம் என்று அழைக்கப்படுகின்றது (படம்-1). முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வந்தார்கள். இம்மக்கள் தம்மை, தமது வரலாற்றை, பொருளாதாரத்தை, கலாசாரத்தை இப்பிரதேசத்துடன் இரண்டறக் கலந்தவர்களாகக் காணப்பட்டனர். உணர்வால் தாம் வாழ்ந்த பிரதேசத்தைத் தமது தாயகமாகக் கருதி வாழ்ந்து வந்தார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் 1966 சதுர கி.மீ. பரப்பினையும், ஏறக்குறைய ஒரு லட்சம் மக்களையும் கொண்ட மாவட்டமாகும். பரப்பு ரீதியாக இலங்கையின் பெரிய மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு சனச்செறிவு ரீதியாக சதுர கி.மீ.க்கு 33 பேர் என்ற அளவில் அடர்த்தி குறைந்ததாகவே காணப்பட்டது. முல்லைத்தீவு நகரமும் அதன் சூழல் பிரதேசமும் தவிர்ந்த இம்மாவட்டத்தின் எஞ்சிய உள் நாட்டுப் பிரதேசம் இதிலும் குறைவான சன அடர்த்தியை கொண்டதாகும்.

முல்லைத்தீவு மக்களில் ஏறக்குறைய 90 சதவீதத்தினர் கிராமப் புறங்களில் வாழ்கின்றார்கள். விவசாயமும், மீன்பிடியும் கிராம மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாகும். விவசாயம் மிக அதிகமான இடங்களில் பருவகால மழையை நம்பியதாகக் காணப்படுகின்றது. அதே நேரத்தில் வவுனிக் குளம், தண்ணிமுறிப்புக் குளம், முத்தையன் கட்டுக் குளம், முறிப்புக் குளம், மதவாளசிங்கக் குளம், உடையார்கட்டுக் குளம் ஆகிய பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குட்பட்ட விவசாயச் செய்கை நடவடிக்கைகளும் இங்கு காணப்பட்டது.[1] கரையோரப் பிரதேசங்களில் களப்பு, நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.


முல்லைத்தீவு இயற்கை வளம் நிறைந்த பிரதேசமாகும். இங்கு நில வளமும், நீர் வளமும், கடல் வளமும் நிறையக் காணப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 1 : **வடமாகாணமும் அதன் மாவட்டங்களும்**




மூலம்: இலங்கையின் நிருவாக அறிக்கை



முல்லைத்தீவின் இயற்கை வளம் பற்றிக் குறிப்பிடும் போது ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் முல்லைத்தீவின் அரசாங்க அதிபராக இருந்த திரு ஜே. ஆர். ஸ்மைத் என்பவரின் கருத்துக்களே ஞாபகத்துக்கு வருகின்றன. இவர் முல்லைத்தீவின் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் இப்பிரதேசத்தின் வளம் பற்றி எழுதிய ஒரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "முல்லைத்தீவில் இலைமறை காய்களாகக் காணப்படும் குளங்களும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் முறைப்படி அபிவிருத்தி செய்யப்பட்டால், இப்பிரதேசத்தில் பெருகும் சனத்தொகைக்கு இன்னும் ஐம்பது வருடங்களுக்குத் தேவையான விவசாய நிலம் இங்கு காணப்படுகின்றது" (Brohier, 1990). உண்மையில் முல்லைத்தீவின் வளம் பற்றிய இக்கூற்று இன்றைய காலக்கட்டத்திற்கும் பொருந்தக் கூடியதொன்றாகும்[2]

துரதிஷ்டவசமாக சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள்[3] ரீதியாக இம்மாவட்டம் இலங்கையில் மிகப் பின்தங்கிய பிரதேசங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தின் ஒதுக்குப் புறமான இட அமைவும், அரசியல் புறக்கணிப்புக் காரணிகளும், வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்படாமையும் இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார பின்னடைவுக்குக் காரணங்களாகக் கூறக்கூடியன.

இம்மாவட்டத்தின் பெரும்பான்மையினர் தமிழ் மக்களாவர். இவர்கள் மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் 90 சதவீதமாகக் காணப்படுகின்றனர். தமிழ் மக்கள் மாவட்டம் எங்கிலும் பரவலாகவும் முல்லைத்தீவு நகரம் சார்ந்த கரையோரப் பிரதேசங்களிலும், புதுக்குடியிருப்பு பிரதேசம் சார்ந்த உள்நாட்டிலும் செறிவாகவும் வாழ்கின்றனர். தமிழர்களின் வரலாறும், பண்பாடும் செழித்தோங்கிய பிரதேசம் முல்லைத்தீவாகும் (Sitrambalam, 1992). 1885ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தற் செயலாகக் கண்டு பிடிக்கப்பட்ட செப்பேடு ஒன்றில் இருந்து இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மையை மிகத்தெளிவாக அறியக் கூடியதாக இருந்தது. உண்மையில் இச்செப்பேடு முல்லைத்தீவு ஒரு பழைய திராவிடக் குடியிருப்புப் பிரதேசம் என்பதை மிகத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது (Navaratnam, 1960). இப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் மிக நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றார்கள். அத்துடன் இப்பிரதேசத்தை ஆண்டும் இருக்கின்றார்கள் என்று வரலாறு கூறுகின்றது (Sitrambalam, 1993).

முல்லைத்தீவில் சிறுபான்மையினராக முஸ்லிம்களும், சிங்களவர்களும் வாழ்ந்து வந்தனர். இங்கு வாழ்ந்த சிங்கள மக்களில் மிக அதிகமானவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பருவகால மீனவர்களாவர். சிங்கள மீனவர்கள் இலங்கையின் மேற்குக் கரைப் பிரதேசத்தில் இருந்து கொக்கிளாய், நாயாறு ஆகிய மீன்பிடித் துறைகளுக்கு சில பருவங்களில் இடம் பெயர்ந்து வந்து மீன் பிடிக்கும் வழமை மிக நீண்ட காலமாகக் காணப்பட்டது (Lewis, 1993). இவ்வாறு ஒரு பருவகால மீனவர்களாக இருந்த சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் பிற்காலத்தில் முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியேறினர். ஆயினும் 1983ஆம் ஆண்டின் சிங்கள–தமிழ் பிரச்சினையால் இங்கு வாழ்ந்த சிங்கள மக்களில் அதிகமானவர்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறினர். எஞ்சியவர்களில் சிலர் இலங்கை இராணுவ கட்டுப்பாட்டுக் குட்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசங்களில் தொடர்ந்தும் வாழ்ந்து வந்தனர்.

முஸ்லிம்களும் முல்லைத்தீவின் சிறுபான்மையினர். மாவட்ட மட்டத்தில் மொத்த சனத்தொகையில் ஐந்து சதவீதமாக முஸ்லிம்கள் காணப்பட்டனர். இவர்களும் தமிழ் மொழியையே தாய் மொழியாகக்கொண்டு தமிழ் மக்களோடு கலந்து வாழ்ந்தனர். முல்லைத்தீவில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்த நிர்வாகப் பிரிவுகளாக மரிட்டைம் பற்று (Maritimepattu) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குறிப்பாக முல்லைத்தீவு நகரசபையும் தண்ணீரூற்று கிராம சபையும் காணப்பட்டன. முஸ்லிம்கள் தமது மாவட்ட சனத் தொகை விகிதாசாரத்தை விட இந்நிருவாகப் பிரிவு மட்டங்களில் அதிக விகிதாசாரத்தில் காணப்பட்டார்கள். உதாரணமாக முல்லைத்தீவு நகரத்தில் ஏறக்குறைய 10 சதவீதமாகவும், தண்ணீரூற்று கிராம சேவையாளர் மட்டத்தில் ஏறக்குறைய 40 சதவீதமாகவும் முஸ்லிம் மக்கள் காணப்பட்டனர் (அட்டவணை–1 ஐப் பார்க்க).

மேற்குறித்த நிர்வாகப்பிரிவுகளுக்குள் சில குடியிருப்புகள் முஸ்லிம் மக்களை செறிவாகக் கொண்டவையாக காணப்பட்டன. அவை “முஸ்லிம் குடியிருப்புக்கள்” என்று இங்கு அழைக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் மாவட்டம் முழுவதும் முஸ்லிம்கள் வாழும் 13 குடியிருப்புக்களை அடையாளப்படுத்தக் கூடியதாகக் இருக்கின்றது. அவைகளில் மிக முக்கியமானவை முல்லைத்தீவு நகர முஸ்லிம் குடியிருப்புப் பகுதி, நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, ஹிஜ்ராபுரம், முத்தையன்கட்டு, முறிப்பு ஆகியவையாகும். முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த குடியிருப்புக்களை படம்–2 தெளிவாகக் காட்டுகின்றது.



**படம் 2 : முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த குடியிருப்புக்கள்**




மூலம்: வெளிக்கள ஆய்வு, 1996, இலங்கை இடவிளக்கப்படம், 1972.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லைத்தீவில் முஸ்லிம், தமிழ் குடியிருப்புக்கள் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக அமைந்து காணப்பட்டன. தண்ணீரூற்று, முல்லைத்தீவு நகரம், முத்தையன் கட்டு போன்ற குடியிருப்புக்களில் தமிழ்-முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்ந்தார்கள். அங்கெல்லாம் அவ்விரு இன மக்களும் ஒன்றாக ஒற்றுமையாக, வாழ்ந்திருந்தார்கள். முல்லைத்தீவு முஸ்லிம்-தமிழ் உறவு மிகவும் தொன்மையானது. முல்லைத்தீவின் வரலாற்றில் இவ்விரு இனங்களினதும் இணக்க உறவு பொன் ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டியதாகும். முல்லைத்தீவில் முஸ்லிம்-தமிழ் இன ஐக்கியம் என்ற அம்சம் இந்நூலின் அத்தியாயம்-6ல் விளக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் முஸ்லிமகள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்கள் இன்று இம் மக்களற்று வெறிச்சோடிக் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் இக் குடியிருப்புக்களில் இருந்து வெளியேற்றப்பட்டது மிகவும் துரதிஷ்டவசமான வரலாற்று நிகழ்ச்சியாகும். இக்குடியிருப்புக்களில் முஸ்லிம்களை மீண்டும் வாழவைத்து புதுச்சரித்திரம் படைக்க உதவ வேண்டியது சமாதான விரும்பிகள் எல்லோருடையதும் கடமையாகும். இதில் முஸ்லிம்களின் உடன் பிறவா சகோதரர்களாக இருந்து வந்த தமிழ் மக்களினது உதவியை முல்லைத்தீவு முஸ்லிம்கள் கூடுதலாக எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும்.

## குறிப்புகள்

1 *முல்லைத்தீவில் மொத்தமாக 1056 சதுர கி.மீ. நீரேந்து பிரதேசத்தைக் கொண்ட 19 பிரதான நீர்ப்பாசனக் குளங்கள் காணப்படுகின்றன. இவை இம்மாவட்டத்தில் 7325 ஹெக்டர் பரப்பு நிலத்துக்கு நீர்ப்பாசனம் வழங்குகின்றன. (North-East Provincial Council, 1996: 133)*

2 *வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது புள்ளிவிபர ரீதியாக பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நில, நீர், கடல் வளங்ளைக் கொண்ட பிரதேசமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது.*

3 *கல்விக் குறிகாட்டி அடிப்படையில் வடக்குக்-கிழக்கு மாகாணங்களில் உள்ள 9 மாவட்டங்களில் ஆசிரிய-மாணவ விகிதம் ஒரு ஆசிரியருக்கு 26 மாணவரில் இருந்து 64 மாணவர் வரை வேறுபடுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்விகிதம் ஒரு ஆசிரியருக்கு 50 மாணவராக காணப்படுகின்றது.*



# 3. வரலாறும், கலை, கலாசாரமும்

## 3.1 வரலாறு:

முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமக்குள் பெருமைப்படக் கூடிய வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்தார்கள். முல்லைத்தீவில் தனித்துவம் கொண்ட மக்கள் குழுவாக இவர்கள் மற்றவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு மதிக்கப்பட்டார்கள். எண்ணிக்கை ரீதியாக குறைவாகக் காணப்பட்ட இம்மக்களின் வரலாற்றுக்கு பிரதேச (முல்லைத்தீவு), தேசிய (இலங்கை) வரலாறுகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இம்மக்களைப் பற்றிய கிடைக்கக் கூடியதாக இருந்த நம்பத்தகுந்த வரலாற்று ஆதாரங்கள் முல்லைத்தீவில் இம் மக்களின் வரலாற்றுத் தொன்மையையும், தனித்துவத்தையும் அறிவதற்குப் போதுமானதாக இருக்கின்றன. முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறு பின்வரும் ஆதாரங்களைக் கொண்டு இந்நூலில் கட்டி எழுப்பப்படுகின்றது.

ஒரு சமுதாயத்தின் வரலாற்றை பல்வேறு வகைகளில் கட்டியெழுப்பலாம். இதுவரை முறைப்படி தொகுக்கப்படாத முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாற்றை காலக்கட்டங்களாக பின்னோக்கிக் கட்டியெழுப்புவது இம்மக்களின் வரலாற்றை இலகுவில் அறிந்து கொள்ள உதவும். அந்த அடிப்டையில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய அண்மைக்கால வரலாறு பற்றிய ஆதாரங்கள் மிகத்தெளிவாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன.

### 3.1.1. முதல் ஒரு நூற்றாண்டு கால வரலாறு:

கிடைக்கின்ற அண்மைக்கால ஆதாரங்களில் இருந்து ஆகக் குறைந்தது கடந்த ஒரு நூற்றாண்டு காலம் முல்லைத்தீவில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இதனை மிகத்தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டும் ஆதாரங்களில் ஒன்று இலங்கையின் கடந்த ஒரு நூற்றாண்டு கால குடிசனக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணிப்பீடுகளாகும். இலங்கையில் நாடு முழுவதற்குமான நம்பத்தகுந்த குடிசனக் கணிப்பீடுகள் 1871ஆம் ஆண்டிலிருந்து செய்யப்பட்டு வந்திருக்கின்றன. 1871ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பின் படி முல்லைத்தீவில் இன்று போல் அன்றும் முஸ்லிம்கள் தாம் தற்போது வாழும் பிரதேசங்களில் செறிவாக வாழ்ந்திருக்கின்றனர். இன்று முஸ்லிம்கள் செறிந்து வாழும் தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, முல்லைத்தீவு நகரம் அக்காலத்திலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாக காட்டப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி இம்முஸ்லிம் மக்கள் முல்லைத்தீவில் 1871இல் இருந்து இன்றுவரை தங்குதடையற்ற வரலாற்றுத் தொடர்ச்சியினையும் கொண்டிருந்தார்கள். அதாவது முல்லைத்தீவில் முஸ்லிம்கள் இன்றைய விகிதாசாரமளவு 1871ஆம் ஆண்டிற்குப் பிந்திய குடிசனக் கணிபீடுகளான 1881, 1891, 1901, 1911, 1921, 1931, 1946, 1953, 1963, 1971, 1981 களின் கணிப்புக் காலக்கட்டங்களிலும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

அட்டவணை-1 முல்லைத்தீவு மாவட்டத்தின் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையையும் விகிதாசாரத்தையும் வரலாற்று ரீதியாக ஒப்பிட்டுக் காட்டுகின்றது. இவ்வட்டவணையில் முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களாக மரிட்டைம்பற்று, முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறு கடந்த ஒரு நூற்றாண்டு கால தெளிவான வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டிருக்கின்றது. இக்காலத்தில் முஸ்லிம்கள் முல்லைத்தீவில் தம் பிரதேசங்களை தமது தாயகமாகக் கருதி வாழ்ந்திருக்கின்றார்கள். தமது மூதாதையர் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வளம் கண்டதையிட்டு பெருமைப் பட்டிருக்கின்றார்கள். இப்பிரதேசத்தில் தாமும் ஒரு சமமான பங்காளி என்பதை பொறுப்புணர்ச்சியோடு கடைப்பிடித்திருக்கின்றார்கள்.

### 3.1.2. 17ஆம் நூற்றாண்டு வரையான வரலாறு:

முல்லைத்தீவில் முஸ்லிம்களின் வரலாறு ஒரு நூற்றாண்டு காலத்தோடு முடிந்து விடவில்லை. 19ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் முல்லைத்தீவில் முஸ்லிம்கள் வாழ்ந்திருப்பதற்கான ஆதாரங்களும்



## அட்டவணை-1

**1921ம் ஆண்டிலும், 1971ம் ஆண்டிலும் முல்லைத்தீவில் முஸ்லிம்கள்**

| | 1921 | | | 1971 | | |
|---|---|---|---|---|---|---|
| நிர்வாகப் பிரிவு | மொத்தம் | முஸ்லிம் | விகிதம் | மொத்தம் | முஸ்லிம் | விகிதம் |
| மரிட்டைம் பற்று உதவி அரசாங்க பிரிவு | 7396 | 483 | 6.5 | 28634 | 2837 | 9.9 |
| முல்லைத்தீவு நகரம் | 1563 | 118 | 7.5 | 7192 | 710 | 9.9 |
| தண்ணீரூற்று கிராம சேவகர் பிரிவு | 667 | 350 | 52.0 | 4562 | 1702 | 37.4 |

*மூலம்: குடிசனக்கணிப்பீடுகள், 1921 ம் 1971ம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படுகின்றன. உதாரணமாக 19ஆம் நூற்றாண்டின் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களின் குறிப்பேடுகளும், நிர்வாக அறிக்கைகளும் முல்லைத்தீவில் முஸ்லிம்களின் நீண்ட கால வரலாற்றை மேலும் உறுதிப்படுத்தும் வரலாற்று ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. இக்காலக்கட்ட வரலாற்று ஆதாரங்களை மிகக் கவனமாகப் பரிசீலிக்கும்போது அவை முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஆகக் குறைந்தது பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இருந்து அதாவது 1800ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வந்திருப்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

இதில் குறிப்பாக The Manual of Vanni என்ற வரலாற்று நூலை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். இந்நூல் Lewis என்பரால் எழுதப்பட்டது. இந்நூல் 1800ஆம் ஆண்டிலிருந்து 1895ஆம் ஆண்டுவரையான பிரித்தானிய அரசாங்க குறிப்பேடுகள், நிர்வாக அறிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்நூல் முல்லைத்தீவில் முஸ்லிம்களின் 19ஆம் நூற்றாண்டு வரலாற்றை மிகத் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் முல்லைத் தீவு நகரத்திலும் தண்ணீரூற்றுப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்ததை குறிப்பிடுகின்றது. முல்லைத்தீவு நகரத்தில் முஸ்லிம்கள் சிறப்பாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததைக் காட்டுகின்றது. முல்லைத்தீவுடனான மாட்டு வண்டித் தொகுதி முறையிலான வர்த்தக நடவடிக்கைகள் (Tawalam) முஸ்லிம்களினால்தான் நடாத்தப்பட்டது என்பதையும் இந்நூல் கூறுகின்றது. மேற்குறித்த ஆதாரங்கள் 19ஆம் நூற்றாண்டில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் இருப்பையும் இப்பிரதேசத்தில் அவர்களின் சமூக, பொருளாதாரப் பங்களிப்பையும் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

பிரித்தானிய ஆட்சிக் காலத்திற்கு முந்திய காலக் கட்ட வரலாறு பற்றிய எழுத்துருவிலான ஆதாரங்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் வரலாறு பற்றி மட்டுமல்ல இப்பிரதேச தமிழ், சிங்கள இன மக்களின் வரலாற்று ஆதாரங்களைப் பொறுத்தவரையிலும் இதுவே நிலைமையாகும். இவ்வாறான ஆய்வுக்களுக்கு பரம்பரை பரம்பரையாக கூறப்பட்டு வருகின்ற கதைகள், இலக்கியங்கள், சமய ஸ்தலங்களின் வரலாற்று முக்கியத்துவம், தொல்பொருள் ஆய்வு போன்றவை பொதுவாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் பழைய வரலாறு மேற்குறித்த ஆதாரங்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன.



எண்ணிக்கையில் சிறுதொகையினரான முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தை முறைப்படி அறிய முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

முஸ்லிம்களின் பழைய வரலாறு எழுத்துச் சான்றுகள் அன்றி ஏனைய வரலாற்று ஆதாரங்களின் மூலமாகக் கட்டி எழுப்பப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் வாய்மொழி வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளன. அதனால், வாய்மொழி ஆதாரங்களைப் பயன்படுத்தி முல்லைத்தீவு முஸ்லிம்களின் 18ஆம் நூற்றாண்டுக்கு முந்திய வரலாறு பின்வரும் பகுதிகளில் விளக்கப்படுகின்றது.

### 3.1.3 ஆரம்ப வரலாறு:

முல்லைத்தீவில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியிருப்புக்கள் பற்றிய பல வாய்மொழி ஆதாரங்களில் இரண்டு வரலாற்று விளக்கங்கள் முக்கியமானவையாகும். அதில் ஒன்று முல்லைத்தீவு முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் 16ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இருந்து வந்து முல்லைத்தீவு நகரச்சூழலில் குடியேறினார்கள் என்பதாகும். இரண்டாவது விளக்கப்படி முல்லைத்தீவு முஸ்லிம்களில் மற்றும் ஒரு பகுதியினர் முல்லைத்தீவு நகரத்திற்கு ஏறக்குறைய 20 மைல் தொலைவில் தெற்காக காணப்பட்ட கதிர்மீராக்குளம் என்ற முஸ்லிம் கிராமத்தில் இருந்து மிக நீண்ட காலத்திற்கு முன்னர் இன்றைய தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி கிராமங்களுக்கு வந்து குடியேறினார்கள் என்பதாகும்.

#### 3.1.3.1 கதிர்மீராக்குளம் கிராமத்தில் இருந்து தண்ணீரூற்றுக்கு:

முதலில் கதிர்மீராக்குளத்தில் இருந்து எவ்வாறு முஸ்லிம்கள் இடம் பெயர்ந்து தண்ணீரூற்றுப் பகுதிக்கு வந்து குடியேறினார்கள் என்ற வரலாற்றைப் பார்ப்போம்.[1] உள்ளூர் முஸ்லிம்களால் பரம்பரையாக நம்பப்பட்டு வந்த வரலாற்று விளக்கத்தின்படி முல்லைத்தீவு முஸ்லிம்களின் ஆரம்பக் குடியிருப்பு முல்லைத்தீவு நகரத்தில் இருந்து தெற்காக இருபது மைல் தொலைவில் அமைந்திருந்தது. இம்முஸ்லிம் கிராமம் கதிர்மீராக் குடியிருப்பு என்று அழைக்கப்பட்டது. இன்று காடுகளால் மூடப்பட்டுக் காணப்படும் இப்பழைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடியிருப்புப் பகுதியில் தூர்ந்துபோன குளம் ஒன்று காணப்படுகின்றது. இக்குளம் கதிர் மீராக்குளம் என்று உள்ளூர் மக்களால் அழைக்கப்படுகின்றது. இக்குளத்துடன் தொடர்புடைய மற்றும் ஒரு வரலாற்று அம்சம் இக்குளத்தின் அணைக்கட்டில் காணப்படுகின்ற கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் கதிர் லெப்பை மீரான் என்று பொறிக்கப்பட்டிருக்கின்றது. மேற்குறித்த ஆதாரங்களையும், முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் நம்பப்பட்டு வருகின்ற பரம்பரைக் கதைகளையும் தொகுத்து நோக்குகின்ற போது மிகப்பழைய காலத்தில் கதிர் மீராக்குளத்தை அண்டி முஸ்லிம் குடியிருப்புகள் இருந்திருக்கின்றன என்றும் இக்கிராமத்தில் இருந்து ஏதோ ஒரு காரணத்தால் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகின்றது. அவ்வாறு இடம் பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் முல்லைத்தீவு நகரத்திற்கு தெற்கே மூன்றரை மைல் தொலைவில் காணப்பட்ட இறம்பாகம் என்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தில் ஆரம்பத்தில் குடியேறினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து வெளியேறி தற்போதைய தண்ணீரூற்று–கணுக்கேணிப் பகுதியில் அதிலும் குறிப்பாக, இன்றைய நெடுங்கேணிச் சந்தியைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குடியேறினார்கள் என்றும் நம்பப்படுகின்றது.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் இவ்வாறான ஒரு இடப்பெயர்வு 17ஆம் நூற்றாண்டுக்குப் முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும். தற்போதைய தண்ணீரூற்று குடியிருப்புப் பிரதேசங்களில் காணப்பட்ட இயற்கைச் சுனைகள், மண்வளம், சந்தை வியாபாரம் போன்றவை இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் நீடித்து நிலைத்திருக்கக் காரணமாயிற்று. ஆகவே இன்றைய தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் முஸ்லிம்களின் ஆரம்பம் கதிர் மீரா குடியிருப்பில் இருந்து உருவாகி இருக்கலாம் என்பதை மேற்குறித்த ஆதாரங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கதிர் மீராக் குளக்குடியிருப்பு எப்போது ஆரம்பித்தது? எவ்வளவு காலம் அக்குடியிருப்பு நீடித்திருந்தது? என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இப்பழைய குடியிருப்பில் இருந்து வெளியேறிய மற்றொரு பகுதியினர் திருகோணமலை மாவட்ட புல்மோட்டைக்குச் சென்றார்கள் என்பதுவும் வாய்வழிமூலக் கதைகளில் இருந்தும், முல்லைத்தீவு–புல்மோட்டை முஸ்லிம்களின் இரத்த உறவு தொடர்பிலிருந்தும் அறியக் கூடியதாக இருக்கின்றது. இவ்வரலாற்று ஆதாரங்கள் மேலும் ஆழமாக ஆராயப்பட வேண்டியவைகளாகும்.



### 3.1.3.2 யாழ்ப்பபாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு:

முல்லைத்தீவு முஸ்லிம்களின் மூதாதையர்களில் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறினார்கள் என்பது மற்றுமொரு விளக்கமாகும். இது முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் பரம்பரை பரம்பரையாகக் கூறப்பட்டு, நம்பப்பட்டு வந்த வரலாறாகும். உண்மையில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் போத்துக்கேயர் காலத்தில் (1505–1658) யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறி இங்கு வந்து குடியேறி இருக்கின்றார்கள். போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர்கள் தமது ஆட்சிக்காலத்தில் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள் என்பதும் இவ்வாட்சியாளர்களின் துன்புறுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க கரையோரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் உள்நாடு நோக்கியும் பாதுகாப்பான ஏனைய பிரதேசங்களுக்கும் இடம் பெயர்ந்து சென்றார்கள் என்பதுவும் மிகத் தெளிவான வரலாற்று உண்மைகளாகும். (Shukri, 1986, Dewaraja, 1972, )

இதைப்போல யாழ்ப்பாண வர்த்தகக் குடியிருப்புகளிலிருந்து போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் வெளியேறிய முஸ்லிம்களில் ஒரு பகுதியினரும் முல்லைத்தீவு நோக்கி இடம் பெயர்ந்தனர் (Raheem, 1979). வாய்மூல ஆதாரங்களில் இருந்து யாழ்ப்பாண முஸ்லிம்களின் முல்லைத்தீவு நோக்கிய இடப்பெயர்ச்சி பின்வருமாறு நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.[2]

யாழ்ப்பாணத்தை விட்டு இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் கேரதீவு, பூநகரி வழியாக இலங்கையின் கிழக்குக் கரையை அடைந்தார்கள். இவர்கள் முதலில் இன்றைய முல்லைத்தீவு நகரத்திற்கு வடக்காக 25 மைல் தொலைவில் அமைந்திருந்த சுண்டிக்குளம், கரியல் வயல் என்ற இரண்டு குடியிருப்புக்களில் சொற்ப காலம் வாழ்ந்தார்கள். இதில் சுண்டிக்குளம் என்ற இடத்தில் குடியேறிய முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் மீன்பிடியிலும், சமகாலத்தில் கரியல் வயலில் குடியேறியவர்கள் விவசாய நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்தார்கள். முஸ்லிம்கள் இவ்விரு குடியிருப்புகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்பதை இன்று இக்குடியிருப்புக்களில் முஸ்லிம்களுக்கு காணப்படும் சொத்துரிமையும், மீன்பிடி உரிமையும் எடுத்துக்காட்டுகின்றன. எவ்வளவு காலம் மேற்குறிப்பிட்ட இரு குடியிருப்புகளிலும் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள் என்ற விபரங்கள் கிடைக்கக் கூடியதாக இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறித்த இவ்விரண்டு குடியிருப்புக்களும் தமது நிரந்தர வாழ்க்கைக்கு பொருத்தமாக இல்லாத காரணத்தினால் முஸ்லிம்கள் இங்கிருந்து தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து இன்றைய முல்லைத்தீவு நகரச்சூழலில் குடியேறினார்கள். இப்புதிய பிரதேசத்தில் நில வளமும் நீர் வளமும், கரையோர, களப்பு மீன்பிடி வசதிகளும், நகர வர்த்தக நடவடிக்கைகளுக்கான வாய்ப்பும் உள்ளூர் மக்களின் அனுசரணையும் பொருத்தமாகக் காணப்பட்டமையால் இன்றுவரை இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறு முல்லைத்தீவு–நெடுங்கேணி சந்திப்பிரதேசத்தில் உருவாகிய முஸ்லிம் குடியிருப்பு மையத்தில் இருந்து தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், முத்தையன்கட்டு, முறிப்பு போன்ற முஸ்லிம் குடியிருப்புகள் உருவாகின. அது போல முல்லைத்தீவு நகரை அடிப்படையாகக் கொண்டு உருவான மற்றுமொரு குடியிருப்பிலிருந்து கல்விப்பாடும், எனைய பல குடியிருப்புகளும் பிற்காலத்தில் உருவாகின. இக்குடியிருப்புகள் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்து 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் முல்லைத்தீவிலிருந்து வெளியேற்றப்படும் வரை மேலே அடையாளம் காணப்பட்ட முஸ்லிம் குடியிருப்புக்களில் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக தங்குதடையின்றி வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். (படம்–2).

முல்லைத்தீவில் இருந்து முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு வெளியேறியபோது அங்கு வாழ்ந்த மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 1200 ஆகும். முன்னர் குறிப்பிட்டது போல கிராம ரீதியாக, பிரதேச ரீதியாக மேற்குறித்த 1200 முஸ்லிம் குடும்பங்களும் முல்லைத்தீவில் பிரிந்து வாழ்ந்திருந்தாலும் இம்மக்களுக்கிடையில் மிக நெருக்கமான குடும்ப உறவுகள் காணப்பட்டன. தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் மக்கள் ஒரு பிரதேச சூழலில் வாழ்ந்தது மட்டும் அல்லாது ஒரு தாய் மக்களைப் போன்ற உறவுகளையும் கொண்டிருந்தார்கள். திருமணங்கள் இம்மூன்று கிராம மக்களுக்கிடையில் மிகவும் சாதாரணமாக, தாராளமாக நடை பெற்றன. பணக்காரன் ஏழை என்ற வேறுபாடு கூட குறைவாகவே கருத்தில் கொள்ளப்பட்டது. இதே முறையில் மேற்குறிப்பிட்ட தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரப் பிரதேச முஸ்லிம்களுக்கும் முல்லைத்தீவு நகர முஸ்லிம்களுக்கும் இடையிலும் நிறைய குடும்ப உறவுகள் காணப்பட்டன. காலப்போக்கில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவு முறைகளைக் கொண்டவர்களாக மாறினர்.



### குடும்ப வரலாற்றுப் பாரம்பரியம்:

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் முல்லைத்தீவில் முஸ்லிம்களின் ஆரம்பகால குடியேற்றம் பல பிரதேசங்களில் இருந்து வந்த முஸ்லிம்களினால் உருவாகியதாகும். இந்த அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றி மேலும் தெளிவு பெற வாய்ப்புள்ளதா என்று இவ்வாய்வில் முயற்சிக்கப்பட்டது. ''ஒரு சமூகத்தின் அறியப்பட்ட குடும்பப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமாகவும் அச்சமூகத்தின் வரலாறு பற்றி அறிந்து கொள்ள முடியும்'' என்ற அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பங்களின் வரலாற்றுப்பின்னணி பற்றிய விபரம் தேடும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டது.

குடும்ப வரலாற்றுப் பாரம்பரியத்தை முறைப்படி தெரிந்து கொள்ள சில தேர்ந்தெடுக்கப்பட்ட முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பங்களின் வரலாற்றுத் தொடர்ச்சியை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில் குடும்ப வரலாற்றை பல பரம்பரைகளுக்கு பின்னோக்கிச் சொல்லக்கூடிய பிரபல்யமான குடும்பங்கள் பல முல்லைத்தீவில் காணப்பட்டன. அதில் குறிப்பாக லெப்பை குடும்பம், உமர்கண்டு குடும்பம், தம்பிக்கண்டு மரைக்கார் குடும்பம், முகம்மதலி குடும்பம், சேகுகண்டு குடும்பம் போன்றன முல்லைத்தீவில் பல தலைமுறைகளைக் கண்ட குடும்பங்களாகும். அதில் தம்பிக்கண்டு மரைக்கார் குடும்பம், லெப்பை குடும்பம் ஆகிய இரண்டு குடும்பங்களின் வரலாற்றுப் பாரம்பரியம் இந்நூலில் உதாரணமாக விளக்கப்படுகின்றது. இவ்விரு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் வரலாற்றை இந்நூலில் குறிப்பிடுவதன் மூலம் ஏனைய குடும்பங்களின் பாரம்பரியம் முக்கியத்துவம் அற்றவை என்று பொருளாகாது என்பதையும் ஏனைய குடும்பங்களின் குடும்ப பாரம்பரியம் பற்றிய விபரங்களை அறியும் முயற்சி தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டும் என்பதையும் முன்னரே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### 3.1.4.1 தம்பிக்கண்டு மரைக்கார் குடும்பப் பாரம்பரியம்:

முதலில் ''தம்பிக்கண்டு மரைக்கார் குடும்பத்தின்'' பரம்பரையை எடுத்துக் கொள்வோம். முல்லைத்தீவில் தம்பிக்கண்டு மரைக்காரின் குடும்பம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் பிரபல்யமானதாகும். இக்குடும்பத்தின் பல பரம்பரையினர் முல்லைத்தீவில் வாழ்ந்திருக்கின்றார்கள். முஹம்மது மீராலெப்பை மகனான தம்பிக்கண்டு மரைக்கார் சென்ற நூற்றாண்டில் முல்லைத்தீவில் மிகவும் பெரிய பணக்காரராகவும், நிலச்சுவாந்தராகவும் காணப்பட்டார். இவருக்கு முல்லைத்லைத்தீவு நகரிலும், அதன் அயலில் உள்ள பிரதேசங்களிலும் ஏராளமான நிலபுலன்கள் உரிமையாக இருந்தன. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பிறவிச் செல்வந்தராகக் காணப்பட்ட தம்பிக்கண்டு மரைக்கார் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் சமமாகப் பழகும் அந்தஸ்தைக் கொண்டிருந்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. தானதர்மங்களில் பெயர் பெற்றிருந்த இவர் முல்லைத்தீவு நகரத்தின் பள்ளிவாசல் காணியை அன்பளிப்பாகக் கொடுத்ததோடு அக்காணியில் ஜும்மா பள்ளிவாசல் ஒன்றையும், மதுரசா ஒன்றையும் கட்டிக் கொடுத்தார். முல்லைத்தீவின் கரச்சிக் குடியிருப்பில் கோமிலுக்குக் காணி ஒன்று வழங்கி பிற சமயத்தவர் மத்தியிலும் பெருமை பெற்றவராக தம்பிக்கண்டு மரைக்கார் இருந்தார் என்றும் கூறப்படுகின்றது. தம்பிகண்டு மரைக்காருக்குப் பிறகு ஐந்து பரம்பரையினர் முல்லைத்தீவில் வாழ்ந்தனர். இவர்களின் பரம்பரையில் வந்த முகம்மது சரீபு அப்துல் அசீஸ் என்பவர் தற்போது புத்தளம் மாவட்ட கடையாமோட்டையில் வாழ்கின்றார். தம்பிக்கண்டு குடும்பத்தவர்களைப் போல் வேறு பல பிரபல்யமான, தனவந்த முஸ்லிம் குடும்பத்தவர்கள் முல்லைத்தீவை தமது தாயகமாகக் கொண்டு மிக நீண்ட காலம் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதற்குப் பல உதாரணங்கள் காணப்படுகின்றன.

### 3.1.4.2 லெப்பை குடும்பப் பாரம்பரியம்:

முல்லைத்தீவில் பரம்பரை கண்ட மற்றுமொரு குடும்பத்தவர்கள் ''லெப்பை குடும்பம'' ஆகும். முல்லைத்தீவில் இக்குடும்பத்தினரின் ஏழு தலைமுறையினர் பற்றிய விபரம் படம்-3ல் தரப்பட்டுள்ளது. 'லெப்பை' குடும்பப் பரம்பரையைச் சேர்ந்தவரும் தற்போது புத்தளம் மாவட்ட கற்பிட்டியில் வாழ்பவருமான பைக்கீர் அபதுல் ஹமீது என்பரின் தகவலின்படி லெப்பை குடும்பம் பற்றிய வரலாற்றுத் தொடர்ச்சி கட்டியெழுப்பப்



பட்டிருக்கின்றது. இக்குடும்பப் பாரம்பரியம் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஆய்வுக்கு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

காரணம் இக்குடும்பம் வைத்தியத் துறையிலும் சமய ஈடுபாட்டிலும் முல்லைத்தீவில் முக்கியமான குடும்பங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றமையாகும். முல்லைத்தீவில் லெப்பைக் குடும்பத்தின் ஆரமடம் அப்துல்லா லெப்பை என்பவரிலிருந்து ஏற்படுகின்றது. அப்துல்லா லெப்பை இந்தியாவில் முத்துப்பேட்டையைச் சேர்ந்தவர். இவர் ஏறக்குறைய ஏழு தலைமுறைகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வவுனியா மாவட்ட பூனாவை சம்மளகுளம் என்ற ஊருக்கு வந்து குடியேறியதாக அறியமுடிகின்றது. இவரின் இலங்கை வருகைக்கு ஒரு முக்கியமான வரலாற்றுப் பின்னணி எடுத்துக் கூறப்படுகின்றது. அதாவது வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றிருந்த அப்துல்லா லெப்பையை அக்கால வன்னிப்பிரதேச மன்னனான பண்டார வன்னியன் இவரின் வைத்திய சேவையைப் பெறுவதற்காக வன்னிக்கு அழைத்ததாக வாய்மூல ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

அப்துல்லா லெப்பை வைத்தியர் பூனாவையிலிருந்து முல்லைத்தீவு தண்ணீரூற்றுக்கு வந்து குடியேறினார். அப்துல்லா லெப்பைக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். இவ்விரண்டு பிள்ளைகளும் முல்லைத்தீவில் இரண்டு முக்கிய குடும்பப் பாரம்பரியங்கள் ஏற்படுவதற்கு ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கினார்கள். அப்துல்லா லெப்பையின் ஒரு மகனின் பெயர் நெய்னா முகம்மது ஆகும். இவர் தந்தையின் வைத்தியப் பாரம்பரியத்தை பின்பற்றி வைத்திய சேவைகளில் ஈடுபட்டார். நெய்னாமுகம்மது வைத்தியரின் பரம்பரையில் வந்த ஏனையவர்களும் தொடர்ச்சியாக அப்துல்லா லெப்பையின் வைத்திய பாரம்பரியத்தை பின்பற்றி வைத்திய சேவையில் ஈடுபட்டு வந்தார்கள். வரைபடம்-3 நெய்னாமுகம்மது வைத்தியரிலிருந்து இன்று கற்பிட்டியில் வைத்திய சேவையில் ஈடுபட்டிருக்கும் பைக்கீர் அப்துல் ஹமீத் வைத்தியர் வரையிலான ஆறு பரம்பரைகளில் வைத்தியத் துறையில் ஈடுபட்டு வந்தவர்களின் பெயர் விபரங்களைத் தருகின்றது. உதாரணமாக அப்துல் ஹமீத் வைத்தியரின் தந்தையார் பக்கீர் வைத்தியராவார். இவருக்கு 12 பிள்ளைகள் இருந்தனர். அவரின் தந்தையார் அசனா மரைக்கார் வைத்தியருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அவரின் தந்தையார் முகைதீன் தம்பிக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இதற்கு முந்திய




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் -3

## லெப்பை குடும்பப் பாரம்பரியம்




*மூலம் வெளிக்கள ஆய்வு, 1996.*



தலை முறைகளில் வைத்திய சேவையில் ஈடுபட்டிருந்தவர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றதே தவிர அவர்களின் குடும்ப விபரங்கள் பெறக்கூடியதாக இல்லை.

இந்த லெப்பை குடும்பத்தின் மூலவரான அப்துல்லா லெப்பையின் மற்றொரு மகன் அப்துல் காதர் லெப்பை ஆவார். இவர் தந்தையின் 'லெப்பை' என்ற அடை மொழி கொண்டு அழைக்கப்பட்டார். அப்துல்காதர் லெப்பையின் பரம்பரையில் வந்த ஏனையவர்களும் இந்த 'லெப்பை' என்ற அடை மொழி கொண்டு அழைக்கப்படுகின்ற முறை இக் குடும்பத்தில் காணப்பட்டு வந்தது.

லெப்பை என்ற அடை மொழிப் பெயர் இந்தியாவில் ஒரு தனித்துவமான குடும்ப பாரம்பரியத்தைக் குறிப்பதாகும். (Mines, 1979 Miller, 1979) அதிலும் குறிப்பாக இந்த லெப்பை என்ற அடை மொழிப் பெயர் இஸ்லாமிய சமயக் கிரியைகளிலும் போதனைகளிலும் ஈடுபட்டு வருவோர்களைக் குறிக்கும் சொற்பிரயோகமாகவும் காணப்படுகினறது. இவ் உண்மையை அப்துல்காதர் லெப்பை அவர்களின் பரம்பரையில் வந்தவர்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது இந்த லெப்பை பரம்பரையில் வந்தவர்கள் முல்லைத்தீவில் பரம்பரை பரம்பரையாக இஸ்லாமிய மார்க்கக் கடமைகளை நிறைவேற்றும் ஆலிம்களாகவும், குர்ஆன் ஓதிக் கொடுக்கும் ஆசான்களாகவும் இருந்துள்ளனர். இப்பரம்பரை வழிவந்த இன்றைய தலைமுறையினர் சமயக் கடமைகளோடு தொடர்புடைய தொழில்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர். உதாரணமாக லெப்பை பரம்பரையில் வந்த மௌலவி உவைஸ் புத்தளம் மாவட்ட கனமூலை பள்ளிவாயிலில் ஆலிம் (மார்க்க அறிஞர்) ஆகவும் றஸீத் லெப்பை முஅத்தின் (பள்ளி வாயில் பராமரிப்பாளர்) ஆகவும் இன்று காணப்படுகின்றார்கள்.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாற்றை மேலும் அறிந்து கொள்வதற்கு 16ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு இடம் பெயர்ந்து வந்த முஸ்லிம்களின் குடும்பப் பாரம்பரியமும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறான ஓர் ஆய்வு முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறு பற்றி மேலும் தெளிவினை ஏற்படுத்தக் கூடியது. யாழ்ப்பான முஸ்லிம்களுக்கும், முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கும் இடையில் இரத்த உறவு முறை பல தலைமுறைகளாக இருந்து வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போலவே முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பப் பாரம்பரியம் என்ற அடிப்படையில் இதுவரை தெளிவாக விளக்கப்படாத மற்றொரு அம்சம் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கும், புல்மோட்டை முஸ்லிம்களுக்கும் இடையில் காணப்படுகின்ற இரத்த உறவாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போல கதிர்மீரா குடியிருப்பில் இருந்து வெளியேறிய முஸ்லிம்கள் முல்லைத்தீவுக்கும் புல்மோட்டைக்கும் சென்றிருக்க வேண்டும் என்பதை அறிந்தோம். இவ்விரு பிரதேச முஸ்லிம்களுக்குமிடையில் மிக நீண்ட காலமாக தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன. அதில் மிக முக்கியமான தொடர்பு இவ்விரு பிரதேச மக்களுக்குமிடையிலான திருமண உறவுகளாகும். இது மேலும் ஆய்வுகள் மூலம் தெளிவு படுத்தப்படுமானால் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மையை ஆதாரங்களோடு மேலும் நிரூபிக்கக் கூடியதாக இருக்கும்.

அதுபோல, முல்லைத் தீவு முஸ்லிம்களின் வரலாறு முழுமையாகவும் ஆழமாகவும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். இம்முஸ்லிம்களின் வரலாற்றுக்கால வர்த்தக, இராணுவ, இராஜ வைத்திய பங்களிப்புக்களை மேலும் ஆழமாக ஆராய்வதன் மூலம் இன்னும் பல அரிய வரலாற்று உண்மைகளை அறியக்கூடியதாக இருக்கும். அதே நேரத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் கடந்த கால வரலாற்றை புல்மோட்டை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் பிரதேச முஸ்லிம்களின் வரலாற்றோடு இணைந்த முறையில் ஆராயும் போது முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் மேலும் மெருகூட்டப்பட்டதாக அமையும். அவ்வாறான முயற்சி எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

முல்லைத்தீவில் ஒன்றாக, ஒரு குடும்பமாக, ஒரு சமூக அமைப்பைக் கொண்டிருந்த முஸ்லிம்கள் இன்று அகதிகளாக பல இடங்களிலும் சிதறி வாழ்கின்றார்கள். குடும்ப அங்கத்தினர்கள், உற்றார் உறவினர்கள் அகதி முகாம்களுக்கிடையில் பிரிந்து வாழ்கின்றார்கள். காலத்தின் சதியால் தமது மண்ணில் இருந்து இம்மக்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும் பொருத்தமான சூழ்நிலைகள் ஏற்படுகின்ற போது தமது பூர்வீக இடங்களுக்கு மீள்வதையே இம்மக்கள் விரும்புகின்றார்கள்.

## 3.2 கலையும் கலாசாரமும்

மக்கள் மத்தியில் வழக்கில் இருக்கும் கலை, கலாசார பழக்கவழக்க அமசங்கள் அம்மக்களின் வரலாற்றையும் அவர்களின் தனித்துவத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கும் போது அச் சமுதாயத்தின் இனத் தனித்துவம் மேலும் சிறப்படைகின்றது.



முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் பல தனித்துவமான கலை, கலாசார அம்சங்கள் மிக நீண்ட காலமாக வழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கவிதைகள், பாடல்கள், நாட்டியங்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பன இக் கலை அம்சங்களில் முக்கியமானவைகளாகும். முல்லைத்தீவு முஸ்லிம்கள் இதில் மிக ஆர்வமாக ஈடுபட்டனர். முல்லைத்தீவில் பல பிரபல்யமான கவிஞர்கள் வாழ்ந்தார்கள். முஸ்லிம் கலைஞர்கள் றபான் இசையுடன் இணைந்து பாடல்கள் பாடி மக்களை களிப்பூட்டச் செய்வதில் வல்லவர்கள். அது மட்டுமன்றி பிரபல்யமான நாடக கலைஞர்களும் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்டனர். அவற்றினை சற்று விபரமாக நோக்குவோம்.

### 3.2.1 கோலாட்டம்

கோலாட்டம் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் வழக்கத்தில் இருந்து வரும் கலை அம்சங்களில் ஒன்றாகும். இது ஒரு நாட்டியக் கலையாகும். இக்கலை அம்சம் எப்பொழுது, எங்கிருந்து முல்லைத்தீவு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்ற விபரங்கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. ஆனால் இக்கலை அம்சம் முல்லைத்தீவில் முஸ்லிம்கள் மத்தியில் மட்டும்தான் வழக்கில் காணப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கோலாட்டம்[3] முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் திருமணம் போன்ற மங்களகரமான நிகழ்வுகளின் போதும் பெருநாள் காலங்களிலும் ஆடப்பட்டு வந்த ஒரு நாட்டியக் கலையாகும். இக்கோலாட்ட நிகழ்ச்சியில் சம வயதுடைய ஆண்கள் பங்குபற்றுவார்கள். பாடலும் ஆடலும் கொண்டது இக் கலைநிகழ்ச்சி. இஸ்லாமியப் பாரம்பரிய வழிமுறையில் வந்த பழக்கமாகவும் இது இருந்தது.

கோலாட்ட நிகழ்ச்சியில் 6 சோடி ஆண்கள் அதாவது 12 பேர் பங்கு பற்றுவர். இரண்டு சிறு கம்புகளைக் கொண்டு ஒன்றோடு ஒன்று தட்டி சத்தம் எழுப்பி இவர்கள் நடனத்தினை ஆடுவார்கள். இந்த நடனமுறை பல கட்டங்களாக நிகழ்த்திக் காட்டப்படும். ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு முறைகளில் இக்கலை நிகழ்த்தப்படும். கோலாட்ட நடனத்திற்குப் பொருத்தமான பாடலும் பாடப்படும். இப்பாடலை நடனக் குழுவினரும், மற்றவர்களும் இசைப்பார்கள். இப்பாடல் நடனக் குழுவின் தலைவரால் ஆரம்பிக்கப்பட்டு பாடப்படும். மற்றவர்கள் அதனைத் தொடர்ந்து பாடுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லைத்திவில் கோலாட்டத்தில் பிரபல்யமான அண்ணாவியார்களாக அப்துல் சமது என்பவரும் யூசுப், நாகூர்பிச்சை போன்றவர்களும் இருந்திருக்கின்றார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கோலாட்டப் பாடல்கள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். இதில் முதலாம் பகுதி கோலாட்டம் ஆரம்பிக்கும் போது சபையோருக்கு சலாம் கூறும் பகுதியாகும். இந்த சலாம் கூறும் பாடல் பகுதி அண்ணாவியார் என்றழைக்கப்படும் கோலாட்டக் குழுவின் தலைவரால் இசைக்கப்படும். அவரைத்தொடர்ந்து மற்றவர்கள் அதனை இசைப்பார்கள். இந்தப் பாடல் பகுதி உதாரணமாக பின்வருமாறு ஆரம்பிக்கப்படும்.

*சபையோர்களே ஸலாம்*
*தந்தை மகிழ்விலே தங்கை தங்கும்*
*இங்கு நற்குணப் பெரியோரே (மூன்று முறை–பிரதான பாடகர்)*

*நபிமார் அவ்லியாக்களோடு*
*அன்னை பிதாவுக்கும்*
*நற்குணம் குடியிருந்த*
*சற்குருவுக்கும்*
*புவியிலுள்ள நாதருக்கும்*
*புர்கான் எனும் வேதத்திற்கும்*
*கவிகளோதும் புலவரான*
*கல்விமான்கள் யாவருக்கும் (ஒரு முறை –பிரதான பாடகர்)*

*சபையோர்களே................ (மூன்று முறை–எல்லோரும்)*
*கற்றறிந்திலேன் நான்*
*கல்வி தெரிந்திலேன்*
*சித்தறிந்த மெய்த்தவங்கள்*
*புரிந்திலேன்*
*திரு நாளிமா நகர்*
*ஷாபியின் இஸ்லாம்*
*அன்புடனே எந்தனை*
*இரட்சித் தாளுவீர் (ஒரு முறை – பிரதான பாடகர்)*
*சபையோர்களே................(மூன்று முறை – எல்லோரும்)*

இரண்டாவது கட்டத்தில் பாடலுடன் கோலாட்டம் ஆடப்படும். இந்தப்பாடல் பின்வருமாறு பாடப்படும்.



*தன்னன்ன னன்னன்ன தன்னானே – தன*
*தான னன்னன தன்னானே (மூன்று முறை – பிரதான பாடகர்)*

*அன்னத்தைப் போல் நடையாளருளி*
*மின்னல் கொடிபோல் இடையாளருளி*
*மின்னும் இலங்கைப் புகையிரதம் ஒன்று*
*மல்லாந்த செய்திகள் பெண்ணரசே ( பிரதான பாடகர்)*

*தன்னன்ன ..........(மூன்று முறை – எல்லோரும்)*
*ஆடு கோழி சமைத்தாராம் பெண்கள்*
*ஆரதக்கறி தான் சமைத்தார்*
*சோடி சோடியாக சாப்பிட்டு மிச்சத்தை*

*சொந்தமாய் பட்டனம் கட்டினாராம் (பிரதான பாடகர்)*

*தன்னன்ன........... (மூன்று முறை – எல்லோரும்)*
*ரயில் அடிக்குதே போகவேண்டும் என்று*
*இத்தர வீச்சிலே ஆண்களும் பெண்களும்*
*காய்கறி சாதம் கரியல் பொரியல்*
*கடுகச் சமைச்சு உண்டாராம்*

*தன்னன்ன........... (மூன்று முறை – எல்லோரும்)*
*காங்கேசன் துறையில் நின்று புகைவண்டி*
*கண்டி கொழும்புக்கு போற வண்டி*
*பாங்காய் விரித்தமை கூவிச் சத்தம் பண்ணி*
*வல்லோர் அறியப் புறப்பட்டதாம்*

*தன்னன்ன....... (மூன்று முறை – எல்லோரும்)*

மேலே குறிப்பிடப்பட்ட கோலாட்டப் பாடல்கள் இம்மக்கள் மத்தியில் பிரபல்யமான கவிஞராக இருந்த மிஸ்கீன் அப்பா என்று செல்லமாக அழைக்கப்படும் மிஸ்கீன் என்பவரால் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இயற்றப்பட்டதாகும். இது போன்று பல கோலாட்டப் பாடல்களை மிஸ்கீன் அப்பா இயற்றியுள்ளார். கோலாட்டத்திற்கு கோலாட்டம் பாடல்கள் வேறுபடுவதுண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிஸ்கீன் புலவர் ஒரு பிறவிக் கவிஞராவார். இவர் 1886ஆம் ஆண்டு தண்ணீரூற்றுக் கிராமத்தில் பிறந்தார். தமது வாழ்நாளில் பல பிரபல்யமான கவிதைகளை இவர் பாடி இருக்கின்றார். இவருடைய கலியுகம், காலக் குளப்படி, சூறாவளிக் கொத்து, நீராவிப்பிட்டியின் நீரூற்று, அரிவிவெட்டுப்பாடல்கள் ஆகிய பாடல் தொகுதிகள் முக்கியமானவைகளாகும். மிஸ்கீன் புலவருடைய பாடல்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்வு, வரலாறு, பிரதேச தனித்துவத்தை கருப்பொருளாகக் கொண்டிருப்பது இவரின் பாடலின் சிறப்புத் தன்மைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும். மிஸ்கீன் புலவர் 1983ஆம் ஆண்டு காலமானார். மிஸ்கீன் புலவருடைய பாடல்கள் பல இன்று எழுத்துருவற்ற நிலையில் காணப்படுகின்றன.

### 3.2.2 சீனடி-சிலம்படி:

முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யமான மற்றுமொரு கலை விளையாட்டு சிலம்படியாகும். கோலாட்டத்தைப் போலவே சிலம்படியும் முல்லைத்தீவில் முஸ்லிம்களால் மாத்திரம் நிகழ்த்தப்பட்டு வந்த ஒரு கலை விளையாட்டு.

சிலம்படி என்ற கலை விளையாட்டு சீனடி – சிலம்படி என்றும் அழைக்கப்படும். இது ஏறக்குறைய ஆறு அடி நீளமான தடியொன்றைக் கொண்டு நிகழ்த்தப்படும் விளையாட்டாகும். இதில் நீளக் கம்பு விளையாட்டு என்றும், கட்டைக்கம்பு விளையாட்டு என்றும் (இது கொடிவரிசை என்று அழைக்கப்படும்) இரண்டு பிரிவுகள் உண்டு. கம்புகளைச் சுழற்றி இவ்விளையாட்டு நிகழ்த்தப்படும். இவ்விளையாட்டு தனி ஒருவராலும், பலர் கூட்டாகச் சேர்ந்தும் விளையாடப்படுவதுண்டு. இது ஒரு பலப்பரீட்சை அடிப்படையிலான விளையாட்டாகும்.

சிலம்படியைப் போலவே வாள் விளையாட்டு, மான் கொம்புகளைக் கொண்டு ஆடும் மஞு விளையாட்டு, கத்திக் குத்து விளையாட்டு, மல்யுத்தம், தீப்பந்தம் வீசுதல், புலிவிளையாட்டு ஆகிய ஏனைய பலப் பரீட்சை விளையாட்டுக்களும் முல்லைத்தீவில் முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரம் நடைமுறையில் இருந்த, இருந்து வரும் கலை விளையாட்டுக்களாகும்.

இக் கலை விளையாட்டுக்கள் மங்களகரமான நிகழ்வுகளின் போது நிகழ்த்திக் காட்டப்படும். மாப்பிள்ளை வரவேற்பு, மீலாத்விழா, கொடி கொண்டு செல்லல், முக்கியஸ்தர்களின் வரவேற்பு ஆகிய முஸ்லிம்களின் சமூக



நிகழ்வுகளின் போதும், ஊர்வலங்களின் போதும் இவ்விளையாட்டு நிகழ்த்தப்படும். முஸ்லிம் அல்லாதவர்களின் மங்களகரமான நிகழ்வுகளுக்கும் மேற்குறித்த முஸ்லிம் கலை விளையாட்டு விற்பன்னர்கள் அழைக்கப்பட்டு இந்நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுவதுமுண்டு.

சிலம்படியுடன் தொடர்புடைய கலை விளையாட்டுக்கள் இப்பிரதேச மக்கள் மத்தியில் நீண்ட காலமாகக் காணப்பட்டன. இந்திய வம்சாவழியினரான நெளதா அப்பா என்பவரால் பிற்காலத்தில் இக்கலைக்கு மேலும் புத்துயிர் அளிக்கப்பட்டது. நெளதா அப்பா, பையன்னா அப்பா, கட்டையர் அப்பா, கதிர் லெப்பை போன்றவர்கள் முல்லைத்தீவில் சீனடி சிலம்படியில் வல்லவர்களாக இருந்திருக்கின்றார்கள். இவர்கள் தற்போது உயிரோடு இல்லை. இன்று உயிர் வாழும் சீனடி சிலம்படி விளையாட்டு வீரர்களாக காசிம்தம்பி சாகுல் ஹமீது, அலித்தம்பி, அகமது லெவ்வை–லெவ்வைத்தம்பி ஆகியோர் காணப்படுகின்றார்கள். இவர்களிடம் கற்ற வேறு பலர் இவ்விளையாட்டிற்கு இன்றும் உயிரூட்டி வருகின்றார்கள். இம்முல்லைதீவு முஸ்லிம்களின் விளையாட்டுக் கலை அம்சம் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

### 3.2.3. பாரம்பரியங்களும் பழக்கவழக்கங்களும்:

முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் தனித்துவமான பல பாரம்பரியங்களையும் பழக்கவழக்கங்களையும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றன. இதில் முஸ்லிம்களின் மொழித் தனித்துவமும் ஒன்றாகும். முஸ்லிம்கள் தமிழ் மொழியை தமது வீட்டு, கல்வி மொழியாகக் கொண்டிருந்தாலும், முஸ்லிம்களின் தமிழ் மொழிப் பிரயோகங்களில் பல தனித்துவமான பதங்களும், சொற்றொடர்களும் காணப்படுகின்றன. இத்தனித்துவ மொழிப் பிரயோகத்திற்கு முஸ்லிம்களின் அரபு மொழிப் பரீட்சயமும், அரபுத்தமிழ் பாண்டித்தியமும் இஸ்லாமிய சமயக் கிரியை முறையிலான பழக்கங்களும் முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் அரபு மொழியை வாசிக்கவும், எழுதவும் தெரிந்தவர்களாக இருந்தார்கள். சமயக் கிரியைகளுக்கு இது அத்தியவசிமானதாகக் காணப்பட்டது. அரபு கற்பிக்கும் கலாசாலைகள் இம் மொழிப் பாண்டித்தியத்தை முஸ்லிம்களுக்கு சிறு பராயத்திலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊட்டுவதற்கு உதவின. பலர் அரபு மொழியில் மேலும் பாண்டித்தியம் பெற இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் காணப்பட்ட அரபு உயர் கல்விச்சாலைகளுக்கு சென்று கற்று வந்தார்கள். வேறு பலர் வெளிநாடுகள் சென்றும் கற்றனர். முல்லைத்தீவைச் சேர்ந்த முகம்மது உசன் ஆலிம் இந்தியா சென்று அரபுத் தேர்ச்சியும் இஸ்லாமிய சட்டக் கலைகளும் கற்று மார்க்க அறிஞரானார். இவரதும் ஏனைய சமய பாண்டித்தியம் பெற்றவர்களினதும் தொண்டினால் இஸ்லாமும், இஸ்லாமிய சமய வழி வந்த பாரம்பரியமும், பழக்க வழக்கங்களும் முல்லைத்தீவு முஸ்லிம்களின் மத்தியில் மேலும் வளர்ச்சியும், உறுதியும் பெற்றன.

இது போல முஸ்லிம்களின் மத்தியில் நடைமுறையில் இருக்கும் திருமணம், பிறப்பு, இறப்பு சடங்குகளில் பின்பற்றப்பட்ட கலாசார நிகழ்வுகள் ஏனைய தமிழ் மக்களின் நடைமுறையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன. அதுமட்டுமன்றி முஸ்லிம் ஆண், பெண், சிறார்களின் உடைகள், உணவு வகைகள், உண்ணும் முறைகள் விருந்தோம்பல் முறைகள் போன்றனவற்றிலும் முஸ்லிம்களுக்கே உரிய தனித்துவத்தை இம்மக்கள் மத்தியில் காணமுடிந்தது. இது இப் பிரதேச முஸ்லிம்களுக்கு ஒரு இன-கலாசார குழுவிற்கான தனித்துவத்தை தருபவையாக இருக்கின்றன. மேற்குறித்த காரணங்களால் தமிழ் மொழியைப் பேசும் முஸ்லிம்கள் முல்லைத்தீவில் தனித்துவமான குழுவாக ஏனைய மக்களால் அடையாளப்படுத்தப்பட்டு, கௌரவப்படுத்தப்பட்டார்கள்.

முஸ்லிம்கள் மத்தியில் சமய வழிமுறை வந்த இனத் தனித்துவம் வேறு நாடுகளில் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக Weekes (1978) என்ற ஆய்வாளர் சமய-இன தனித்துவத்தை நைஜீரிய முஸ்லிம்கள் மத்தியிலும், Isracli (1978) என்ற அறிஞர் சீன முஸ்லிம்கள் மத்தியிலும், Miller (1976) என்ற ஆய்வாளர் தென்னிந்திய மாப்பிள்ளை, லெப்பை இன முஸ்லிம்கள் மத்தியிலும், Provencter (1978) என்ற ஆய்வாளர் பிலிப்பைன்ஸ் முஸ்லிம்கள் மத்தியிலும் அவதானித்துள்ளனர். முல்லைத்தீவு முஸ்லிம்களும் மேற்குறிப்பிட்ட சமய-இன தனித்தவம் கொண்ட மக்களுக்கு சமமாக கொள்ளப்படவேண்டியவர்களாவர்.

### 3.2.4 சமூக அடிப்படைகள்:

முல்லைத்தீவு மாவட்டத்தின் பொதுவான சமூக அபிவிருத்திப் போக்கினை இப்பிரதேச முஸ்லிம்கள் மத்தியிலும் அவதானிக்கக் கூடியதாக



இருக்கின்றது. இந்த அடிப்படைகளில் முஸ்லிம்களின், கல்வி வளர்ச்சிப்போக்கை முதலில் நோக்குவோம். முல்லைத்தீவில் மூன்று பிரதான முஸ்லிம் பாடசாலைகள் காணப்பட்டன. இவை இப்பிரதேச முஸ்லிம்களின் கிராம மட்டத்திலான கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. இதில் தண்ணீரூற்று குடியிருப்பில் அமைந்திருந்த முஸ்லிம் மகா வித்தியாலயம், இப்பிரதேச முஸ்லிம்களின் கல்வி விருத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்திருக்கின்றது. இப்பாடசாலை 1934ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆரம்பக்காலக்கட்டங்களில் உழைத்தவர்கள் பலர். அதில் லெவ்வாமா அப்பா ஹபீப் முகம்மது என்பவரதும், மனேஜர் என்று அழைக்கப்படும் அகமது லெப்பை என்பவரதும் பணிகள் இன்று நினைவு கூரத்தக்கவையாகும். இது போல் தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த வேறு பல பிரமுகர்கள், தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தொண்டாற்றி இருக்கின்றார்கள். முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் 8 பெரிய கட்டடங்களையும், 40 ஆசிரியர்களையும், ஏறக்குறைய 900 மாணவர்களையும் கொண்டிருந்தது. இப்பிரதேசத்தில் கல்வி மேலும் வளர்ந்து ஓங்கக் கூடிய எல்லாச் சூழ்நிலைகளும் அன்று அங்கு காணப்பட்டன.

இது போல முல்லைத்தீவு நகரத்திலும், முத்தையன்கட்டுக் குடியிருப்பிலும் முஸ்லிம் பாடசாலைகள் இருந்தன. அதே நேரத்தில் முஸ்லிம் மாணவர்கள் உயர் கல்விக்காக தமது சுற்றாடலில் இருந்த தமிழ்ப் பாடசாலைகளுக்கும் சென்று கற்கின்ற வழமையும் முல்லைத்தீவில் காணப்பட்டது. இந்த அடிப்படையில் முள்ளியவளை வித்தியானந்த பாடசாலையிலும், முல்லைத்தீவு நகர தமிழ் மகா வித்தியாலயத்திலும் குறிப்பாக உயர் வகுப்புக்களில் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

இலங்கையில் கல்வி ரீதியாக பின்தங்கிய மாவட்டமாக முல்லைத்தீவு கருதப்படுகின்றது. அதற்கு முக்கியமான காரணம் இலங்கையின் ஏனைய பல பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது பாடசாலை வசதிகள் தகுதியான ஆசிரியர்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை முல்லைத்தீவு மாவட்ட கல்வி வசதிகள் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமையாகும். கிடைத்த கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி முல்லைத்தீவு தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டவணை-2

1990ம் ஆண்டில் முல்லைத்தீவு முஸ்லிம் கல்வியாளர்களும், சமூக சேவையாளர்களும்

| கல்வி நிலை | எண்ணிக்கை |
|---|---|
| அதிபர் | 04 |
| ஆசிரியர் | 56 |
| கிராம சேவையாளர் | 02 |
| எழுதுவினைஞர் | 02 |
| சிற்றூழியர்கள் | 07 |
| கூட்டுத்தாபன ஊழியர்கள் | 13 |
| ஏனைய அரச உத்தியோகத்தர்கள் | 06 |
| உலமாக்கள் | 15 |
| பட்டதாரிகள் | 04 |
| பல்கலைக்கழக மாணவர்கள் | 02 |
| சமூக சேவையாளர்கள் | 40 |

*மூலம் : வெளிக்கள ஆய்வு, 1996*



தமது கல்வி ஆற்றலைப் பெருக்கி வந்தார்கள். குறிப்பாக முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமக்குக் கிடைத்த மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புக்களை, முறைப்படி பயன் படுத்தி கல்வி ரீதியாக உயர் தேர்ச்சியினைப் பெற்றிருந்தார்கள்.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் ஒப்பீட்டு ரீதியான கல்வித் தேர்ச்சியை பல கல்விக் குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக 1981ஆம் ஆண்டின் குடிசனக் கணிப்பீட்டு விபரப்படி முல்லைத்தீவு முஸ்லிம்களின் எழுத்தறிவு தேசிய எழுத்தறிவை விடவும், முல்லைத்தீவு மாவட்ட எழுத்தறிவை விடவும் உயர்வாகக் காணப்படடது.

அது போல முல்லைத்தீவில் இடைநிலை, உயர் நிலைக் கல்வியைப் பூரணப்படுத்தியவர்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டு ரீதியாக முஸ்லிம்கள் மத்தியில் உயர்வாகக் காணப்பட்டது. முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் உலமாக்கள், அரசாங்க ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஏனைய கல்வியாளர்கள் சமூக சேவை மனப்பாங்கு கொண்டவர்கள் பரவலாகக் காணப்பட்டனர். இதனை அட்டவணை–2 தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வட்டவணையில் 1990இல் முல்லைத்தீவு முஸ்லிம்களின் கல்வித் தேர்ச்சி நிலை காட்டப்பட்டுள்ளது. இவ் அட்டவணைப்படி 1990ஆம் ஆண்டில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் 56 ஆசிரியர்கள், 4 அதிபர்கள், 15 உலமாக்கள், 30 அரசாங்க உத்தியோகத்தர்கள், 4 பட்டதாரிகள் அத்துடன் 40 சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களும் அன்று காணப்பட்டார்கள். இதைவிட இங்கு குறிப்பிடப்படாத வேறு பல துறைகள் சார்ந்த கற்றவர்கள், சமூகப் பெரியார்கள், சேவையாளர்களும் அன்று முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் வாழ்ந்து வந்தார்கள்.

### 3.2.5. சமய, கலாசார அடிப்படைகள்:

இஸ்லாம் முல்லைத்தீவு முஸ்லிம்களின் நம்பிக்கையில் அதாவது ஈமானில் என்றும் மிக உறுதியாக இருந்து வந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவில் தவளம் (மாட்டுவண்டிமூலம்) முறையில் வர்த்தகம் செய்து வந்த ஆரம்பகால முஸ்லிம்களில் இருந்து இனப்பிரச்சினையின் கோரப்பிடியில் அகப்பட்டு அல்லல் பட்ட இன்றைய முஸ்லிம்கன் வரை இம்மக்களின் இதயத்தைத் தொட்ட அம்சமாகக் காணப்பட்டது இஸ்லாமிய நம்பிக்கையும், அதன் வழிமுறைகளுமாகும் ''முல்லைத்தீவு முஸ்லிம்கள்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


என்ற தனித்துவம் இம்மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் மிகத்தெளிவாகக் காணப்பட்டமைக்கு இம்மக்களின் சமய வழி முறையில் வந்த வாழ்க்கை முறையே காரணமாக அமைந்தது. காலா காலமாக இம்மக்களின் சமய பாரம்பரியத்தை கட்டிக் காப்பதற்கு உள்ளூர் மார்க்க அறிஞர்களும், பிற பிரதேசங்களில் இருந்து மார்க்கப் பிரச்சாரத்திற்கு வந்த மார்க்க மேதைகளும், தொண்டர்களும் காரணமாக இருந்திருக்கின்றார்கள்.

முல்லைத்தீவின் மிக அண்மைக்கால வராற்றை எடுத்துப் பார்க்கும் போது முல்லைத்தீவு முஸ்லிம்களின் அண்மைக்கால சமய விளிப்புணர்ச்சிக்கு உலமாக்களும், கற்றவர்களும் அதே நேரத்தில் தப்லீக் ஜமாஅத் போன்ற தார்மீக அமைப்புக்களும் தொண்டாற்றி வந்திருக்கின்றனர். இந்த அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் இஸ்லாமிய சூழலைப் பற்றி சற்று விபரமாக நோக்குவோம்.

முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார மையம் பள்ளிவாயில் ஆகும். முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசம் எங்கிலும் பள்ளிவாயில்கள் காணப்பட்டன. இப்பள்ளிவாயில்கள் முஸ்லிம்களின் ஐந்து நேரக் கூட்டுத் தொழுகைக்குரிய இடமாகக் காணப்பட்டன. ஒரு குறிப்பிட்ட கிராம அல்லது நகரச் சூழலில் வாழ்ந்த முஸ்லிம்கள் குறிப்பாக ஆண்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து முறை தொழுகைக்காகப் பள்ளிவாயிலில் கூடிப் பிரிந்தார்கள். இச்சந்திப்பு தமது சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ள இவர்களுக்கு வாய்ப்பாகவும் அமைந்தது. அது மட்டுமன்றி முஸ்லிம்களை சமய, சமூக, கலாசார ரீதியாக இணைத்து வைக்கும் ஸ்தலமாகவும் பள்ளிவாயில் காணப்பட்டது. பள்ளிவாயில் முஸ்லிம் இன ஐக்கியத்தை வளர்த்தது. ''முஸ்லிம்;'' என்ற இனத் தனித்துவத்தையும் இது வலுவடையச் செய்யக் காரணமாயிற்று. படம்-4 முஸ்லிம்களால் முல்லைத்தீவில் பயன்படுத்தப்பட்ட சமய, கல்வி நிலையங்களின் பெயர்களையும், இட அமைவினையும் தருகின்றது.

முல்லைத்தீவில் தண்ணீரூற்று முஸ்லிம் கிராமச் சூழலில் பல பள்ளிவாயில்கள் காணப்பட்டன. கணுக்கேணி சந்தியில் காணப்பட்ட பழைய பள்ளிவயில் ஒன்றின் சிதைவுகள் முஸ்லிம்களின் ஆரம்பகால வணக்க ஈடுபாடுகளையும், அக்கால சமய பின்னணியையும் எடுத்துக்காட்டுகின்றன. பலவந்த வெளியேற்றத்தின் போது தண்ணீரூற்றுப் பள்ளிவாயிலில் 400 பேர் நின்று தொழக்கூடிய வசதிகள் காணப்பட்டன. இப்பள்ளிவாயில் 80 அடி





படம் 4 : முல்லைத்தீவு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்ட சமய, கல்வி நிலையங்கள்

மூலம்: வெளிக்கள ஆய்வு. 1996. இலங்கை இடவிளக்கப்படம். 1972.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீளமும், 30 அடி அகலமும் கொண்ட கட்டடமாகும். இது போல நீராவிப்பிட்டியில் காணப்பட்ட மஸ்ஜிதுன் நூரானியா ஜும்மாப்பள்ளி, ஹிஜ்ராபுரத்தில் அமைந்துள்ள முகைதீன் ஜும்மாப்பள்ளி என்பன இப்பிரதேச முஸ்லிம்களின் நாளாந்த பயன்பாட்டில் இருந்துவந்த வணக்க ஸ்தலங்களாகும் (படம்-4). மஸ்ஜிதுன் நூரானியா ஜும்மாப்பள்ளியில் 500 பேரும், முகைதீன் ஜும்மாப்பள்ளியில் 350 பேரும் ஒரெ நேரத்தில் நின்று தொழக்கூடிய வசதி அப்போது காணப்பட்டது.

முல்லைத்தீவு நகரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள், நகரில் அமைந்திருந்த சுப்ஹானி மஃரூப் ஜும்ஆப் பள்ளியை மையமாகக் கொண்ட சமூகமாக வாழ்ந்தார்கள். முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறைவாக வாழ்ந்த கல்விப்பாடு, முறிப்பு, முத்தையன்கட்டு போன்ற பிரதேசங்களிலும் "தக்கியா" என்று அழைக்கப்படும் சிறிய பள்ளிவாயில்களும் அமைந்திருந்தன. முஸ்லிம் குடியிருப்பு தோறும் முஸ்லிம்களின் அரபு மொழித் தேர்ச்சிக்காக, மதுரசா என்று அழைக்கப்படும் சிறார்களுக்கான அரபு கற்பிக்கும் பாடசாலைகளும் காணப்பட்டன. முல்லைத்தீவு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்ட பள்ளிவாயில்கள், பாடசாலைகள், அரபு கற்பிக்கும் கல்விக் கூடங்கள் என்பன படம்-4 இல் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

மிக ஆரம்ப காலத்தில் இருந்து முல்லைத்தீவு முஸ்லிம்கள் சமய, சமூக ரீதியாக இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடனும், இந்தியாவுடனும், மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுடனும் தொடர்புடையவர்களாக இருந்திருக்கின்றார்கள். முல்லைத்தீவில் லெப்பை குடுப்பத்தினர் எவ்வாறு முல்லைத்தீவு முஸ்லிம்களின் சமய வளர்ச்சிக்கு இந்தியாவில் இருந்து வந்து உதவினார்கள் என்பதை முன்னர் அறிந்தோம்.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் சமய எழுச்சியில் தப்லீக் பிரச்சார அமைப்பின் பங்கினையும் இங்கு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகும். தப்லீக் ஒரு சமயப்பிரச்சார அமைப்பாகும். 1960ஆம் ஆண்டுகளில் தப்லீக் பிரச்சார இயக்கம் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது அரசியல் நோக்குக் கொண்டதல்ல என்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும். இப்பகுதியில் தப்லீக் ஜமாஅத்தினர் 1960இல் இருந்து சமயப் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வந்தனர். தப்லீக் ஜமாஅத்தினர் முஸ்லிம்களை சமய, சமூக, கலாசார ரீதியாக இஸ்லாமிய நெறிப்படுத்த பாடுபட்டு வந்தனர். தப்லீக் ஜமாஅத்தினரின் செயற்பாட்டால்



முல்லைத்தீவு முஸ்லிம்களினது சமய அறிவும், இஸ்லாமிய கலாசார நடவடிக்கைகளும் அதிகரித்தன. தப்லீக் ஜமாஅத் இம்மக்கள் மத்தியில் ஒரு சாதகமான சமய, சமூக மாற்றத்திற்கு உதவியது என்பதில் ஐயம் இல்லை. தப்லீக் ஜமாஅத்தினரின் முல்லைத்தீவுப் பிரதேச செயற்பாட்டு மையமாக நீராவிப்பிட்டியின் மஸ்ஜிதுன் நூரானியா பள்ளிவாசல் காணப்பட்டது.

### 3.2.6. சமூக சேவையாளர்கள்:

முல்லைத்தீவு முஸ்லிம்களின் சமய, சமூக, கல்வி, கலாசாரத்துடன் பொருளாதார விளிப்புணர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் முஸ்லிம் பெரியார்கள் பலர் பாடுபட்டனர். இவர்களில் சிலரை இங்கு நினைவுபடுத்த வேண்டியது அவசியமாகும். இவர்களில் கல்வி வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர்களின் வரிசையில் நீராவிப்பிட்டியைச் சேர்ந்த சமூகப் பிரமுகர் ஜனாப் மீரான்கண்டு-ஹபீப் முகம்மது அவர்களும், அது போல தண்ணீரூற்றைச் சேர்ந்த அஹமத் லெப்பை அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். அதே போல சமய அடிப்படையில் தொண்டாற்றியவர்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது ஆலிம் பட்டம் பெற்றவரும் பல் மொழி விற்பன்னருமான மௌலவி முகம்மது உசன் ஆலிம் என்பவரும் அது போல லெப்பைப் பரம்பரையில் வந்த காதர் மொஹிதீன் லெப்பை அவர்களும் அவர்களின் புதல்வர் அப்துல்லா லெப்பை அவர்களும் நினைவில் நிற்க வேண்டியவர்களாவர். முல்லைத்தீவு நகரைச் சேர்ந்த கொடைவள்ளல் தம்பிக்கண்டு தனது கொடையால் முஸ்லிம்கள் மத்தியிலும், முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்த ஒரு பெரியாராவர். இந்த வரிசையில் புலமைத்துவமும் மருத்துவ ஆற்றலும் கொண்டிருந்த மிஸ்கீன் புலவரும் முல்லைத்தீவு முஸ்லிம்களின் மனதில் என்றும் வாழ்பவராவர்.

முல்லைத்தீவில் முஸ்லிம்களால் இன, சமய, வரை முறைகளுக்கு அப்பால் செய்யப்பட்ட சமூக சேவை மருத்துவ சேவையாகும். இம்மருத்துவ சேவையின் மூலமாக முஸ்லிம் வைத்தியர்கள் முஸ்லிம்-தமிழ் உறவிற்குப் பாலமாகக் காணப்பட்டனர். இந்த அடிப்படையில் வைத்திய ரீதியாக முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் தொண்டாற்றிய சில முஸ்லிம் பெரியார்களை இங்கு நாம் நினைவு கூர வேண்டியது அவசியமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் வரலாற்றுக்காலத்தில் இருந்து தமது வைத்திய சேவையை செய்து வருகின்றனர். முஸ்லிம்கள் ராஜ வைத்தியர்களாக மன்னனுக்கும், மக்களுக்கும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். இதனை நாம் இந்நூலின் வரலாற்றுப் பகுதியில் நோக்கினோம்.

இந்த வைத்திய வழி முறைகளில் வரும் ஒருவர்தான் லெப்பை நெய்னா முகைதீன் சாகிபு எனப்படும் பிரபல்யம் பெற்ற விசக்கடி வைத்தியராவர். முகைதீன் சாகிபு வைத்தியர் 1914ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி நீராவிப்பிட்டிக் கிராமத்தில் பிறந்தார். இவர் தமது இளமைக் காலத்தில் இருந்து வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார். நச்சுப்பாம்பு, ஏனைய விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்தியம் செய்து அவர்களின் நோயைக் குணப்படுத்துவதில் இவர் வல்லவராவார். இவரின் விஷக்கடி வைத்திய தேர்ச்சியை உணர்ந்த உள்ளூர் அரசாங்க உத்தியோகத்தர்கள் இவரின் வைத்திய சேவை மற்றவர்களுக்கும் கிடைப்பதற்கு வழி செய்தனர். 1975ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதி இவரது சேவையை கௌரவித்து அனுமதி பெற்ற வைத்தியராக சேவை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் முல்லைத்தீவு அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது.

முகைதீன் சாஹிபு வைத்தியர் விசக்கடி வைத்தியத்தோடு, ஆயுர்வேத வைத்தியத்தையும் செய்து வந்தார். முல்லைத்தீவின் பல பகுதிகளிலிருந்தும் இவரிடம் வைத்தியம் பார்ப்பதற்கு மக்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருப்பர். நீராவிப்பிட்டியில் அமைந்திருந்த இவரது வைத்தியசாலையில் இரண்டு வாட்டுக்களில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற்றார்கள். அதில் ஒன்று ஆண்களுக்கும், மற்றயது பெண்களுக்குமாக ஒதுக்கப்பட்டிருந்தது. முகைதீன் சாகிபு வைத்தியர் தனது வைத்திய சேவைக்கு பணப்பிரதிபலனை எதிர் பார்ப்பதில்லை.

நீராவிப்பிட்டி முகைதீன் சாஹிபு வைத்தியரைப் போல பிரபல்யம் பெற்ற மற்றும் ஒரு முஸ்லிம் வைத்தியர் சுலைமான் லெப்பை வைத்தியர் ஆவார். சுலைமான் லெப்பையின் தந்தையார் பெயர் மீரா லெப்பையாகும். சுலைமான் லெப்பை முல்லைத்தீவில் பிறந்தார். ஆயுர் வேதத்திலும், விஷக்கடி வைத்தியத்திலும் இவர் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார்.

முகைதீன் சாஹிபு வைத்தியர் அவர்கள் அகதி மக்கள் மத்தியில் தமது வைத்தியப்பணிகளைச் செய்து வருகின்றார். பக்கீர் அப்துல் கமீது



என்பவர் வைத்தியப்பரம்பரையில் வந்தவர். அப்துல் காதர் வகாப் வைத்தியர், மீஸ்கீன் புலவரின் பேரரான இவர் பரம்பரையான வைத்தியராக வைத்தியம் பணியாற்றுகின்றார். இவர் தற்போது நுரைச்சோலையில் கல்முனைக்குடியில் வசிக்கின்றார்.

## 3.3 அரசியல்:

முஸ்லிம்களின் அரசியல் ஈடுபாட்டிலும், நடவடிக்கையிலும் பல தனித்துவ அம்சங்களை முல்லைத்தீவில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றன. அதில் முக்கியமானது முஸ்லிம்கள் தாம் வாழ்ந்து வந்த பிரதேசத்தின் அரசியல் பாரம்பரியத்துடன் தமது அரசியல் அபிலாசைகளை இணைத்துக் கொண்டிருந்தமையாகும். சுதந்திர காலக்கட்டத்தில் இப்பகுதியில் பிரபல்யம் பெற்றிருந்த சீ. சுந்தரலிங்கத்தின் அடங்காத் தமிழர் கட்சியை முல்லைத்தீவு முஸ்லிம்கள் ஆதரித்தார்கள். 1960ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தண்ணீரூற்றைச் சேர்ந்த டீ.சிவசிதம்பரம் சுயேட்சையாகப் போட்டியிட்ட போது அவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்ற பிரதேசப் பற்றுடன் அவரை முஸ்லிம்கள் ஆதரித்தனர். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, முல்லைத்தீவில் திரு செல்லத்தம்பு அவர்களின் தலைமையில் முனைப்பாகப் போட்டியிட்ட சந்தர்ப்பத்திலும், சுயேட்சையாகப் போட்டியிட்ட உள்ளூரைச் சேர்ந்த விக்னராஜா ஆசிரியரையும், பொன் சந்திரசேகரி அவர்களையும் முஸ்லிம்கள் ஆதரித்தனர்.

இவ்வாறான முல்லைத்தீவின் உள்ளூர் அரசியல் போக்கிற்கேற்ப தமது அரசியல் பாரம்பரியத்தையும் முஸ்லிம்கள் அமைத்துக் கொண்டிருந்த தன்மையை மாவட்ட அபிவிருத்தித் தேர்தல்களிலும், அதேபோல முல்லைத்தீவு பட்டின சபை, முள்ளியவளை கிராம சபைத் தேர்தல்களிலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பட்டின சபை, கிராம சபை மட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த வட்டாரங்களுக்கு முஸ்லிம் அங்கத்தவர்கள் போட்டியிடும் வழமை முல்லைத்தீவில் கபணப்பட்டது. இந்த வகையில் முல்லைத்தீவு பட்டின சபைக்கு டி.எம். இபுராகிம் என்பவர் பல முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். இதே போல 1958–1970ஆம் ஆண்டுக் கலகட்டத்தில் முள்ளியாவளை கிராமசபை வட்டாரத் தேர்தல்களில் கே. அகமது லெப்பை, எம். எம். சரீப்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம். ஆப்தீன், கே.எம். சரீப், எம்.எம். அபூபக்கர், எஸ்.ஏ.காதர், சி.எம். முகிதீன் சாகிபு ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இது போல முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்கச் சபைக்கு 1970–89 ஆண்டுகளுக்கிடையில் எம்.எம்.சரீப், எம்.எஸ். பரீத், கே.எம்.கௌது ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

பட்டின, கிராம சபைத்தேர்தல்களிலும் கூட்டுறவுச் சங்கம், மாவட்டப் பிரஜைகள் குழு போன்றவைகளிலும் முஸ்லிம் அங்கத்தவர்கள் போட்டியிடுகின்ற போது தமிழ் மக்கள் பெரும் தன்மையோடு முஸ்லிம்களை தெரிந்தெடுக்கும் வழமை முல்லைத்தீவில் இருந்து வந்தது. அதுமட்டுமன்றி எல்லா மட்டத்திலுமான தமிழ் அரசியல்வாதிகள் தமது பதவிக்காலங்களில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் நலன்களை கருத்தில் கொண்டு சிரத்தையோடு அவற்றை நிறைவேற்றி வந்திருக்கின்ற வழமையும் முல்லைத்தீவில் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கின்றது. இதற்குச் சான்றாக சி. சுந்தர லிங்கம் அவர்களால் தண்ணிமுறிப்பு குடியேற்றத்திட்டத்தில் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்ட விவசாயக் காணிகளும், டி. சிவசிதம்பரம் அவர்களால் 1962 ஆம் ஆண்டில் இன்றைய ஹிஜ்ராபுரம் என்ற இடத்தில் வி.சி.புரம் என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட குடியேற்றத்திட்டமும், 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரால் முஸ்லிம்களை வெளியேற்றப்பட்டு மீண்டும் குடியேற்றப்பட்ட போது முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவினரால்[4] முஸ்லிம்களுக்கு செய்யப்பட்ட பாரிய உதவிகளும் இவற்றுக்கு சில உதாரணங்களாகும். இந்நிலை 1989 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் முஸ்லிம்களின் ஈடுபாட்டில் சிறிய வேறுபாடு காணப்படுகின்றது. இத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களில் அரைவாசிப்பகுதியினர் அகதிகளாக புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தனர். இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்டது. முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக முல்லைத்தீவைச் சேர்ந்த கே.டி. அப்துல் றகீம், எஸ். எச். முகம்மது ராஜா ஆகிய இருவரும் வன்னித் தேர்தல் தொகுதிக்குப் போட்டியிட்டனர். பொதுத்தேர்தல் ஒன்றில் முல்லைத்தீவு முஸ்லிம்களும் போட்டியிட்டது இதுவே முதல் தடவையாகும். இத்தேர்தலில் முல்லைத்தீவு முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் முஸ்லிம் காங்கிரசில் போட்டியிட்ட தமது ஊரவரும், உறவினருமான இவ்விரு வேட்பாட்பாளர்களையும் ஆதரித்தனர். 1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும்



முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட கே.டி. அப்துல் றகீம் அவர்களை முஸ்லிம்கள் ஆதரித்தனர்.

## குறிப்புகள்

*1* *இக்கருத்து முல்லைத்தீவின் நீராவிப்பிட்டியைச் சேர்ந்தவரும், தற்போது புத்தளம் பூலாச்சேனையில் வசிப்பவருமான லெப்பை நெய்னா முகைதீன் சாஹிப் என்பவரால் தரப்பட்ட வாய்மூல ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது.*

*2.* *இக்கருத்து முல்லைத்தீவைச் சேர்ந்த மீராக்கண்டு சம்சுதீன், சுல்தான் அப்துல் காதர், எம். கச்சு முகம்மது என்பவர்களால் தரப்பட்ட வாய்மூல ஆதாரங்களைக் கொண்டது.*

*3.* *கோலாட்டம், களிகம்பு என்றும் அழைக்கப்படும். இலங்கை முஸ்லிம் கிராமங்களில் பரவலாக இக்கலை நிகழ்ச்சி வழக்கில் இருந்து வருகின்றது.*

*4.* *இப்பிரஜைகள் குழுவில் சில பெயர் குறிப்பிடப்பட வேண்டிய தமிழ்ப் பிரமுகர்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் நலனில் மிக அக்கறையோடு உதவி செய்து வந்தார்கள். அதில் சந்திரா மாஸ்டரைத் தலைவராகவும், கே. கதிரவேலு ஆவசிரியர், முத்தையா ஆசிரியர், ஆர். விக்னராஜா ஆசிரியர், கே. தியாகராஜா ஜே.பி., எஸ். முத்து சுப்பிரமனியம், சங்கரப்பிள்ளை ஆசிரியர் ஆகியோர்களை உறுப்பினர்களாக கொண்ட முள்ளியவளைப் பிரஜைகள் குழு குறிப்பிடத்தக்கவர்களாகும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 4. பொருளாதார அடிப்படைகள்

வாழும் சூழல் அதாவது இட அமைவு மக்களின் பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. உறுதியான பொருளாதார அடிப்படையை நோக்கி முல்லைத்தீவு முஸ்லிம்கள் இம்மாவட்டத்திற்குள் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்ததை முன்னர் அவதானித்தோம். இறுதியில் ஒரு பொருத்தமான பொருளாதார பின்னணிப் பிரதேசத்தில் இவர்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். இப்பிரதேசத்தில் கௌரவமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். தமது பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் பலவகையான சொத்துக்களை உடமையாக்கிக் கொண்டார்கள். இவ்வத்தியாயத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு உரித்தாக இருந்த பொருளாதார அடிப்படைகளின் இட அமைவுகளும், பரிணாமங்களும், அவைகளின் பொருளாதார முக்கியத்துவங்களும் நோக்கப்படுகின்றன.


முல்லைத்தீவில் முஸ்லிம்கள் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் ஆகிய பொருளாதாரத் துறைகளில் ஏறக்குறைய சமனான எண்ணிக்கை அளவில் ஈடுபட்டு வந்தனர் என்று சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து அறிய முடிகின்றது. கிராம மற்றும் விவசாய குடியேற்ற சூழலில் வாழ்ந்த முஸ்லிம்கள் நெல், தென்னை, மேட்டுநில விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். முல்லைத்தீவு நகரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல தரப்பட்ட வர்த்தக, கைத்தொழில், சேவைத் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். கடற்கரையோரத்திலும், களப்புச் சூழலிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் மீன்பிடியில் அதிகமாக ஈடுபட்டனர். பிரதான தொழில் அடிப்படையில் முஸ்லைத்தீவு முஸ்லிம்களின் பொருளாதார நடவடிக்கைகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் மேலும் சற்று விரிவாக நோக்குவது பொருத்தமானதாகும். முஸ்லிம்களின் தொழில் நடவடிக்கைகளின் பரம்பல், படம்-5 இல் காட்டப்பட்டுள்ளது.

## 4.1 விவசாயம்:

முல்லைத்தீவின் விவசாய நடவடிக்கைகள் மழைவீழ்ச்சி, குளநீர்ப்பாசனம், நீரூற்றுக்கள் ஆகியவைகளில் இருந்து நீர் கிடைக்கும் தன்மைகளில் வெகுவாகத்



படம் 5: முல்லைத்தீவு முஸ்லிம்களின் தொழில் அமைப்பு, 1990.




மூலம்: அகதி வெளிக்கள ஆய்வு, 1991.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கியுள்ளன. நீர் கிடைக்கும் அளவிற்கேற்ப பயிர்களின் வகைகளும், அவற்றின் பருவ காலச் செய்கை முறைகளும், அறுவடைகளும் இடத்திதுக்கிடம் வேறுபட்டுக் காணப்பட்டன.

முல்லைத்தீவு முஸ்லீம்கள் கடுமையான உழைப்பாளிகளாகவும், விவசாயப் பாரம்பரியத்தைக் கெண்டவர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் பருவ காலங்களைப் பற்றி சிறந்த அறிவுடையவர்களாகவும், நெல், தென்னை, நிலக்கடலை, ஏனைய உப உணவு விவசாய நடவடிக்கைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் காணப்பட்டார்கள், முஸ்லிம் கிராமச் சூழலில் வளமான நிலங்களும், வற்றாத நீர்ச்சுனைகளும், பற்றாக்குறைக்கு குளநீர்ப்பாசன வசதிகளும் காணப்பட்டன. இப்பிரதேசத்தின் வளமான விவசாயப்பின்னணி சிறந்த விவசாயப் பாரம்பரியத்தை முஸ்லிம் மக்கள் இப்பிரதேசத்தில் கொண்டிருக்க காரணமாக இருந்தது.

### 4.1.1. நெற்செய்கை:

முல்லைத்தீவு முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பகுதியினர் விவசாயத்தை முழு நேரத் தொழிலாகச் செய்து வந்தனர். இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் நெல் விவசாயிகள் ஆவர். இவர்களின் நெல் விவசாய நிலங்கள் இம்மாவட்டத்தில் பரவலாகக் காணப்பட்டன. படம்-6 முஸ்லிம்களின் நெல் வயல் நிலங்களின் பிரதேச ரீதியான பரம்பலையும், படம்-8 அவற்றின் உள்ளூர் பெயர்களையும் காட்டுகின்றன.

முதலில் முஸ்லிம்களுக்கு சொந்தமான நெல்வயல் நிலங்களின் பிரதேச ரீதியான பரம்பலை நோக்குவோம். முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நெல் வயல் நிலங்களின் ஒரு பகுதி முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதிக்கு வடக்காகவும், மறுபகுதி இப்பிரதான வீதிக்கு தெற்காகவும் காணப்பட்டது.

முல்லைத்தீவு-மாங்குளம் வீதிக்கு வடக்காக முஸ்லிம்களுக்கு சொந்தமான இரண்டு முக்கிய நெற்காணிப்பிரதேசங்கள் காணப்பட்டன. இவ்விரு காணிப்பரப்பையும் வற்றாப்பளை வீதி பிரித்து நிற்கின்றது (பார்க்க படம்-6). இதில் வற்றாப்பளை வீதிக்குக் கிழக்காகக் காணப்பட்ட நெல்வயல் "வடக்கு வெளி வயல்;" என்றும் மேற்காகக் காணப்பட்ட நெல் வயல் "காரையடி



வயல்;" என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட நெல் வயல் பரப்புகளை படம்-6 தெளிவாகக் காட்டுகின்றது. அதில் வடக்கு வெளி வயல் பிரதேசத்தில் மொத்தமாக 57 ஏக்கர் நெல் வயல் நிலம் காணப்பட்டது. இவ்வடக்கு வெளி வயல் பிரதேசத்தில் கள்ளஉரல், புதுத்தரை, மெயிந்திமோட்டை என்ற பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும் காணித்துண்டுகளும் காணப்பட்டன (அட்டவணை 3உம் படம்-8உம்).

முதலில், வடக்குவெளி வயல் பிரதேசத்தின் விவசாய முறைகள் பற்றியும், நீர்ப்பாசன வசதிகள் பற்றியும் நோக்குவோம். இப்பிரதேசத்தில் உள்ள கள்ளஉரல், புதுத்தரை பகுதி வயல்களுக்கு கால போகத்தில் அதாவது பெரும்போகத்தில் மழை நீரும் அத்துடன் முறிப்புக்குள நீர்ப்பாசனமும் பயன்படுத்தப்பட்டன (படம்-6). மழை வீழ்ச்சி கூடிய காலங்களில் முறிப்புக்குள நீர்த்தேக்கத்திலிருந்து சுழற்சி முறையில் இப்பிரதேச சிறு போகச் செய்கைக்கு நீர் வழங்கப்பட்டது. இவ்வாறு இப்பிரதேச சிறுபோகத்திற்கு முறிப்புக்குள நீர்த்தேக்கத்தின் அளவைப் பொறுத்து நீர் வழங்கப்படும். முறிப்புக்குளத்தில் இருந்து சிறு போகச் செய்கைக்கு நீர்ப்பாசன நீர் கிடைக்காதபோது மெயிந்திமோட்டைப் பகுதி நிலங்கள் நீர்ச்சுனையில் இருந்து வரும் நீரைக் கொண்டு இப்பிரதேசத்தில் சிறு போகம் செய்கை பண்ணப்பட்டது.

அடுத்து, வற்றாப்பளை வீதிக்கு மேற்காகக் காணப்படும் காரையடி வயல் பிரதேசத்தை நாம் நோக்குவோம். இவ்வயல் பிரதேசம் நீராவியூற்று அணைக்கட்டிலிருந்து ஆரம்பித்து கிழக்காக பதிந்து காணப்பட்டது (படம்-6, படம்-8 ஐப் பார்க்க) காரையடி வயல் பிரதேசம் 51 ஏக்கர் பரப்பினைக் கெண்டது. காரையடி வயல் பிரதேசத்தில் காரையடி, போண்டா, பள்ளவெளி, அழகன் என்ற காணித்துண்டுகள் காணப்பட்டன. இயற்கையின் கொடையால் பிரதேசங்களில் காணப்பட்ட வயல் நிலங்கள் நிராவி நீரூற்றிலிருந்து நீர்ப்பாசன நீரைப் பெற்று வந்தன. இதைவிட இப்பிரதேசத்தின் புதறியுடா, வெற்றிலைக்கேணி, குஞ்சுக்குளம் போன்ற ஏனைய வற்றாத நீர்ச் சுனைகளும் காணப்பட்டன. இந்நீர்ச் சுனைகளும், இந்நீர்ச் சுனைகளில் இருந்து நீர்ப்பாசனம் பெறும் வயல் நிலங்களும் படம்-6 இலும், படம்-8 இலும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

காரையடி வயல் பிரதேசத்தில் உள்ள சற்று உயர்ந்த பகுதிகளில் பெரும்போகம், சிறுபோகம், இடைப்போகம் ஆகிய மூன்று பருவங்களிலும் நெற்செய்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அதே வேளையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர்ச்சுனைக்கு அண்மையில் அமைந்திருந்த தாழ் நில பரப்புக்களில் சிறு போகம் மாத்திரம் செய்கை பண்ணப்பட்டது. காரணம் மழை காலத்தில் இத்தாழ் நிலப் பகுதியில் நீர் தேங்கி நிற்பதாகும். இவ்வாறு நீர்ச்சுனையால் போதிய நீர் பெறும் காரையடி வயல் பிரதேச நெற்செய்கை கடுமையான வரட்சியின் போதும் பாதிக்கப்படுவதில்லை. நீர்ச் சுனைகளால் இடையூறின்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு இப்பிரதேச விவசாய நிலங்களுக்குக் கிடைத்தது. இக்காரணங்களால் இப்பிரதேசத்தின் சராசரி நெல் விளைச்சல் ஏனைய இடங்களை விட அதிகமாகக் காணப்பட்டது. இங்கு வழமையாக சிறு போகத்தில் மூன்று தொடக்கம் மூன்றரை மாத நெல்லினங்கள் பயிர் செய்யப்படுவதுண்டு. அட்டவணை-3 இவ்வயல் பிரதேசங்களின் நெற்பரப்பைக் காட்டுகின்றது. படம் 6உம், 8உம் இவ்வயல்கள் நீர் பெறும் இயற்கை அருவிகளையும், நீர்ப்பாசனக் கால்வாய்களையும் காட்டுகின்றன.

முல்லைத்தீவு-மாங்குள பிரதான வீதிக்குத் தெற்காக காணப்படும் வயல் நிலங்களை அடுத்து பார்ப்போம். முல்லைத்தீவு-மாங்குள பிரதான வீதிக்குத் தெற்காக வீராங்கயராயன்வெளி, விராலிவெளி, நல்லிமுறிப்பு, தண்ணிமுறிப்பு ஆகிய வயல் பிரதேசங்கள் காணப்பட்டன. இவ்வயல் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களின் மொத்தப்பரப்பு 835 ஏக்கராகும். அட்டவணை-3ல் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற தனிப்பட்ட வயல்களும், அவ்வயல் நிலங்களுக்கு உட்பட்ட காணிப்பரப்பின் அளவுகளையும் தரப்பட்டிருக்கின்றன. இதில் வீராங்கராயன் வெளி வயல் பிரதேசத்தில் இரம்பாகம், மடத்து வயல், கறுத்தாமடு, நாவலடி, புலியரசன் குளம், கழிமிறக்கம் ஆகிய தனிப்பட்ட வயல் நிலங்கள் காணப்பட்டன. படம்-6 வீராங்கராயன் வெளி பிரதேசத்தையும், பாலைக்கட்டுவான், விராலி வயல் நிலங்களையும் காட்டுகின்றது. இவ்வயல் நிலங்கள் குறிப்பாக முறிப்புக் குளத்தில் இருந்து வரும் வாய்க்கால்கள் மூலமும், பாலைக்கட்டுவான் குளத்தில் இருந்தும் நீர்ப்பாசன நீரைப் பெற்றன. குள மற்றும் நீரூற்று நீர்ப்பாசன முறைகளும் இப்பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்டன. கால போகத்தில் இங்கு எல்லா வயல் நிலங்களும் நீரைப் பெறக் கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டன. ஆனால் சிறு போகத்தில் நீர் கிடைப்புத் தன்மையை பொறுத்து நீர்ப்பாசன நீர் அவசியமாக இருக்கின்றது.

மேலே குறிப்பிட்ட வயல் நிலங்களை விட முத்தையன் கட்டு விவசாயக் குடியிருப்பிலும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நெற்காணிகள் காணப்பட்டன. இங்கு ஏறக்குறைய 396 ஏக்கர் நெற்காணி முஸ்லிம்களுக்குச் சொந்தமாக



இருந்தது (அட்டவணை-3). குள நீர்ப்பாசனம் மேற்குறித்த நெல் விவசாய செய்கைக்கு அடிப்படையாகக் காணப்பட்டது. முத்தையன்கட்டு விவசாயக்குடியிருப்பு பற்றி பின்னர் தெளிவாக விளக்கப்படும்.

### 4.1.2 தென்னை:

முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்கு தென்னைச் செய்கை பகுதிநேரத் தொழிலாகக் காணப்பட்டது. இங்கு சிறு தோட்டச் செய்கையாவும், அதே நேரத்தில் வீட்டுத் தோட்டச்செய்கையாகவும் தென்னை செய்கை பண்ணப்பட்டது. முஸ்லிம்களுக்கு சொந்தமான செய்கைக்குட்பட்ட தென்னை நிலக்காணி ஏறக்குறைய 190 ஏக்கராகும். தென்னை முல்லைத்தீவில் சில குறிப்பிட்ட பிரதேசங்களிலேயே செய்கை பண்ணப்பட்டது. பரப்பு ரீதியாக குமாரபுரத்தில் 35 ஏக்கரும், பாலைக்கட்டுவானில் 30 ஏக்கரும், கொக்கிளாய் பிரதான வீதியில் 25 ஏக்கரும், சிலாவத்தையில் 50 ஏக்கரும், முறிப்பில் 50 ஏக்கரும் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்தன. படம்-6 முல்லைத்தீவு-கொக்கிளாய் பிரதான வீதிக்கு இரு மருங்கிலும் காணப்படும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பிரதான தென்னந் தோட்டங்களைக் காட்டுகின்றது.

### 4.1.3. மேட்டுநிலச் செய்கை:

முல்லைத்தீவின் வரண்ட வலயத்துக்குரிய மழைவீழ்ச்சிப் பரப்புற் தன்மை மேட்டுநிலச் செய்கைக்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது. கிராமச் சூழலிலும், குடியேற்றத்திட்டங்களிலும், மேட்டுநிலப் பயிர்கள் பரவலாக செய்கை பண்ணப்பட்டன. முல்லைத்தீவில் ஏறக்குறைய 1000 ஏக்கர் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்ததென்று மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இதில் நான்கில் மூன்று பகுதியளவான மேட்டு நிலச் செய்கை நிலம் அதாவது 750 ஏக்கர் நிலம் முறிப்பு குளத்திற்கு தெற்காக உள்ள பிரதேசங்களில் காணப்படுகின்றது (படம்-6). இம் மேட்டுநிலப்பயிர் மாரியில் மழையையும், கோடையில் கிணற்று நீர்ப்பாசனத்தையும் பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்டது. இங்கு நிலக்கடலை, சோளம், கடலை, வெங்காயம், வாழை, மரவள்ளி, உழுந்து, பயறு ஆகிய மேட்டு நிலப் பயிர்கள் முஸ்லிம்களால் செய்கை பண்ணப்பட்டன. முல்லைத்தீவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை-3


1990ம் ஆண்டில் முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த விவசாயக் காணிகள்.

| பயிரும் இடமும் | மொத்த நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|
| **நெற்செய்கை** | |
| காரையடி | |
| போண்டா | 15 |
| பள்ளவெளி | 6 |
| ஏனையன | 30 |
| வடக்குவெளி | |
| கள்ளஉரல் | 10 |
| புதுத்தரை | 12 |
| மெயின்திமோட்டை | 15 |
| ஏனையன | 20 |
| வீரங்கராயன் வெளி | |
| இரம்பகம் | 20 |
| மடத்துவயல் | 13 |
| மருதமடு | 15 |
| நாவலடி | 8 |
| புளியரசன் குளம் | 15 |
| காளியிறக்கம் | 10 |
| ஏனையன | 20 |
| விராலி | 65 |
| நெல்லிமுறிப்பு (வவுனியா வீதியில்) | 66 |
| தண்ணீர் முறிப்பு | 600 |
| முத்தையன்கட்டு | 396 |
| **மொத்தம் (நெல்வயல்)** | **1336** |
| **தென்னைச்செய்கை** | |
| குமாரபுரம் | 35 |
| பாலைக்கட்டுவான் | 30 |
| 4ம் 5ம் கட்டை (கொக்கிளாய் வீதி) | 25 |
| சிலாவத்தை | 50 |
| முறிப்பு (மேட்டு நிலப்பயிரோடு கலப்பாக) | 50 |
| **மொத்தம் (தென்னை)** | **190** |
| **மேட்டுநிலப்பயிர்ச் செய்கை** | |
| முறிப்பு | 750 |
| ஏனையன | 250 |
| **மொத்தம் (மேட்டுநிலச் செய்கை)** | **[illegible]** |
| **மொத்தம் (எல்லாப் பயிர்ச் செய்கைகளும்)** | **[illegible]** |

*மூலம் : வெளிக்கள ஆய்வு, 1996.*



**படம் 6 : முல்லைத்தீவு முஸ்லிம்களால் பயன் படுத்தப்பட்ட விவசாய நிலங்கள், 1990**




*மூலம்: வெளிக்கள ஆய்வு, 1996. இலங்கை இடவிளக்கப்படம், 1972.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேட்டு நிலப்பயிர்ச் செய்கை வெற்றிகரமான விவசாய முறையாகக் காணப்பட்டது. முஸ்லிம் விவசாயிகள் இதனால் மிகவும் பயன் பெற்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதே நேரத்தில் தமது வாழ்க்கைச் சூழலில் காணப்பட்ட தரிசுநிலங்களில் மாடு, ஆடு வளர்ப்பிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்தனர்.

## 4.2 மீன்பிடி:

ஏறக்குறைய 12 சதவீதமான முஸ்லிம்கள் முல்லைத்தீவில் மீன்பிடித் தொழிலில் முழுநேரம் ஈடுபட்டு வந்தார்கள். மீன்பிடித் தொழில் என்னும்போது அது கரையோர, உவர்நீர் (களப்பு), நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளைக் குறிக்கின்றது. முல்லைத்தீவு நகரத்திற்கு தெற்காக இரண்டு மைல் தொலைவில் கரையோரமாகக் காணப்பட்ட கல்விப்பாடு என்ற கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் கரையோர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். இம்மீனவக் குடும்பங்கள் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து இக்கிராமத்திற்கு இடம் பெயர்ந்து வந்தார்கள் என்பதை முன்னர் நாம் கண்டோம்.

முஸ்லிம்களின் மீன்பிடி நடவடிக்கையின் மற்றுமொரு முக்கிய பிரதேசம் நந்திக் கடல் என்று அழைக்கப்படும் களப்புப் பிரதேசமாகும். நந்திக் கடல் 25 சதுர மைல் பரப்பினையுடைய ஆழமற்ற உள்நாட்டு கடற் பிரதேசமாகும் (படம் 6). இக்களப்பில் இறால், நண்டு, மீன் ஆகியன அதிகமாகக் காணப்பட்டன. நந்திக் கடலின் கடல் வளத்தை முழுநேரத் தொழிலாகப் பயன்படுத்தும் வாய்ப்பு ஹிஜ்ராபுர முஸ்லிம் கிராமத்தவர்களுக்கு கிடைத்திருந்தது. காரணம் ஹிஜ்ராபுரக் கிராமம் நந்திக் கடலுக்கு தென்–மேற்குப் புறமாக அமைவுற்றிருந்தமையாகும். நந்திக் கடல் மீன்பிடியில் ஹிஜ்ராபுர முஸ்லிம்கள் மாத்திரமல்லாமல் நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று கிராம முஸ்லிம்களும் ஈடுபட்டு வந்திருந்தார்கள். இம் மூன்று முஸ்லிம் கிராமத்தையும் சேர்ந்த ஏறக் குறைய 200 குடும்பங்களினது முழு நேரத் தொழிலாக நந்திக் கடல் மீன்பிடி காணப்பட்டது. அதே நேரத்தில் இக்கிராமங்களில் வேறு பல குடும்பங்களின் பகுதி நேரத் தொழில் வாய்ப்பினையும் நந்திக் கடல் மீன் வளம் அளித்தது.

முல்லைத்தீவில் நாயாறு, கொக்கிளாய், குமுளமுனைக்கடல், சுண்டிக்குளம் ஆகிய உவர் நீர் பகுதிகளிலும், தண்ணிமுறிப்புக் குளம், முறிப்புக்குளம், பாலைக்கட்டுவான்குளம், முத்தையன் கட்டுக்குளம், மதவளசிங்கன் குளம் ஆகிய நன்னீர் நிலைகளிலும் முஸ்லிம்கள் பருவகால மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். முல்லைத்தீவு முஸ்லிம் மீனவர்களுக்கு படகுகள், வலைகள், மீன்பிடி உபகரணங்கள் உரிமையாக இருந்தன.



## 4.3 வர்த்தகம்:

வர்த்தக நடவடிக்கைகளிலும் முஸ்லிம்களின் ஈடுபாடு கூடுதலாக காணப்பட்டது. முஸ்லிம்களின் வரலாற்று ரீதியான வர்த்தக பாரம்பரியம் இதற்கு ஒரு காரணமாகும். நீண்ட காலமாக முல்லைத்தீவுக்கும் பிற பிரதேசங்களுக்குமிடையிலான வர்த்தகத்திலும், முல்லைத்தீவின் உள்ளூர் சில்லறை வர்த்தகத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்தனர்.

1990ஆம் ஆண்டு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது ஏறக் குறைய 20 சதவீதமான முல்லைத்தீவு முஸ்லிம்கள் விவசாயம் சாராத பொருளாதாரத் துறைகளில் ஈடுபட்டு வந்தனர். அதாவது மேற்குறிப்பிட்ட விகிதாசார மக்களின் முழு நேரத் தொழிலாக வர்த்தகம், கைத்தொழில், சேவை சார்ந்த தொழில்கள் காணப்பட்டன.

1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் செய்யப்பட்ட ஆய்வில் கிடைக்கப்பெற்ற விபரங்கள் பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னர் இம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள உதவியாக இருந்தது. விவசாயம் சாராத நடவடிக்கைகளில் இம்மக்களுக்கு உரிமையாக இருந்த ஸ்தாபனங்கள் பற்றிய விபரங்களும் அப்போது பெறப்பட்டன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற விபரப்படி முல்லைத்தீவில் மொத்தமாக 132 பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையங்கள் முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்தன. இதில் பொருள் விற்பனையில் ஈடுபடும் கடைகள், சிறிய, இடைநிலை கைத்தொழில் நிலையங்கள், பலவகையான சேவை நிலையங்கள் என்பன அடங்கும். இவ்வாறு 1991ஆம் ஆண்டு ஆய்வில் கிடைக்கப் பெறாத பொருளாதார நிலையங்களின் விபரங்கள் பற்றி 1996ஆம் ஆண்டு மேலும் விபரங்கள் திரட்டப்பட்டன. அவ்வாறு புதிதாக கிடைத்த பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையுதம் சேர்த்து நோக்குகின்ற போது முல்லைத்தீவு முஸ்லிம்கள் வர்த்தக, கைத்தொழில் அத்துடன் சேவைத்துறைகளிலான ஈடுபாடுகள் பற்றி மேலும் விபரமாக அறியக்கூடியதாக இருந்தது. அவ்வாறு கிடைக்கப்பெற்ற விவசாயம் சாராத பொருளாதார நடவடிக்கைகள் கீழே விளக்கப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றுள் குறிப்பாக, முல்லைத்தீவு நகர், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் ஆகிய குடியிருப்புகளில் முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள் பற்றி சற்று விபரமாக நோக்குவோம். இவ் விளக்கத்திற்கு உதவியாக அட்டவணைகள் 4உம், 5உம் அத்துடன் படம்–11உம் பயன்படுத்தப்படுகின்றன. படம்–11 ஹிஜ்ராபுரம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி ஆகிய மூன்று கிராமங்களிலும் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களின் பரம்பலை காட்டுகின்றது. அட்டவணை 4உம், 5உம் மேற்குறித்த தொழில் நிலையங்கள் என்ன வகையானது? யாருக்குச் சொந்தமாக இருந்தன? என்ற விடயங்களைத் தெளிவாகத் தருகின்றன.

முதலில் ஹிஜ்ராபுரத்தை எடுத்துக்கொண்டால் இது ஏனைய முஸ்லிம் கிராமங்களுடன் ஒப்பிடும் போது ஒரு புதிய கிராமமாகும். இங்கு சிறியதும் பெரியதுமான பத்து நிலையங்களே காணப்பட்டன. இவற்றில் அதிகமானவை நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரக் கிராம எல்லையில் அமைந்திருந்தன. இக்கிராம மக்களின் உடனடி நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பலசரக்குக் கடைகள் மேற்குறித்த பத்து நிலையங்களில் முக்கியமானவையாகும். இது தவிர ஹிஜ்ராபுர முஸ்லிம்கள் பன்பாய்க் கைத்தொழிலிலும் ஈடுபட்டு வந்தமையையும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து நீராவிப்பிட்டிக் கிராமத்தில் 32 பலவகையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையங்கள் அமைவுற்றிருந்தன. இவற்றுள் அதிகமானவை நீராவிப்பிட்டியின் ஹிஜ்ராபுர வீதியின் இரு புறங்களிலும் காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட வீதி இப்பிரதேச முஸ்லிம்களால் அடிக்கடி பயன்படுத்தப்படும் வீதியாகக் காணப்பட்டது. அத்துடன் நீராவிப்பிட்டிக் கிராமத்தின் சனச்செறிவு இப்பிரதேசத்திலேயே கூடுதலாகவும் காணப்பட்டது. இக்காரணங்களால் ஹிஜ்ராபுர வீதியின் இரு புறத்திலும் வர்த்தக கைத்தொழில் நிலையங்களின் செறிவும் அதிகமாகக் காணப்பட்டது. அதே நேரத்தில் இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் மாங்குளம்–முல்லைத்தீவு வீதியின் இரு மருங்கிலும் புதிய வர்த்தக கைத்தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் முஸ்லிம்கள் அக்கறை கொண்டு வந்த காலத்திலேயே முல்லைத்தீவை விட்டு அவர்கள் பலவந்தமாக வெளியேற வேண்டிய சூழ் நிலைக்கு உள்ளானார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.



தண்ணீரூற்றுக் கிராமத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 30 வர்த்தக, கைத்தொழில் சார்ந்த நிலையங்கள் காணப்பட்டன. இவை முல்லைத்தீவு–மாங்குள பிரதான வீதியின் இரு மருங்கிலும் காணப்பட்டன. இப்பிரதேசம் ஒரு சனச் செறிவு மிக்க பிரதேசமாகும். அட்டவணையில் நாம் காண்பது போல் மாங்குள வீதியில் அமைந்துள்ள நிலையங்கள் ஏலவே காட்டப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை விட வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. இதற்குக்காரணம் இப்பிரதேச மக்களின் தேவைகள் பல்துறைப்பட்டதாகக் காணப்பட்டமையாகும். இதனால் இப்பிரதேச மக்களின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு வர்த்தக, சேவை, கைத்தொழில் நடவடிக்கைகள் இப்பிரதேசத்தில் வளர்ச்சியடைய ஆரம்பித்தன. முஸ்லிம்களும் சமமாக அதில் பங்கெடுத்தார்கள்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களில் பல முல்லைத்தீவு நகரிலும் அமைந்திருந்தன. இங்கு மொத்தமாக 24 நிலையங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்தன. இது பற்றிய விபரத்தை அட்டவணை–5 காட்டுகின்றது.

முல்லைத்தீவு பசாரின் வர்த்தக சேவை நிலையங்கள் முல்லைத்தீவு நகரின் பிரதான வீதி–கஸ்டம்ஸ் ரோட் சந்திக்கும், சிலாவத்தை சந்திக்கும் இடையிலான வீதியின் இரு புறத்திலும் காணப்பட்டன. இதே போல மார்க்கட் வீதியின் இரு புறத்திலும் அத்துடன் இவ்வீதியின் அருகே அமைந்திருந்த முல்லைத்தீவு சந்தையிலும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் காணப்பட்டன. முல்லைத்தீவு பசாரில் தேநீர்க் கடைகள், புடவைக்கடைகள், சில்லறைக் கடைகள், வாகனங்கள் திருத்தும் இடங்கள், படமாளிகைகள் என்பன முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்ததோடு, அவை முஸ்லிம்களால் நிர்வகிக்கப்பட்டும் வந்தன.

முல்லைத்தீவில் பிரபல்யமான தையல்காரர்கள் முஸ்லிம்களாவர். தையல் தொழில், முஸ்லிம்களின் பாரம்பரிய தொழிலாக முல்லைத்தீவில் செய்யப்பட்டு வந்தது. பலவந்த வெளியேற்றத்தின் போது 5 சதவீதமான முஸ்லிம்கள் தையல் தொழிலை தமது முழு நேரத்தொழிலாக செய்து வந்திருக்கின்றார்கள். தையல் தொழில் ஒரு கைத்தொழிலாகக் காணப்பட்டதோடு பல ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய உபகரணங்களையும், மூலப் பொருட்களையும் கொண்டதாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டவணை-4

1990ம் ஆண்டு ''மூன்று கிராமப்பிரதேசத்தில்'' முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள்.

**ஹிஜ்ராபுரம்**

| | | |
|---|---|---|
| 1. | முஸ்தபா முகம்மது காசிம் | பலசரக்கு |
| 2. | இராசமுகம்மது | பலசரக்கு |
| 3. | அசனாலெப்பை | பலசரக்கு |
| 4. | நாகூர்பிச்சை | பலசரக்கு |
| 5. | கச்சுமுகம்மது அப்துல் ரஹீம் | பலசரக்கு |
| 6. | வரக்காத் | பலசரக்கு |
| 7. | யாஸீன்-யூனூஸ் | பேக்கரி |
| 8. | இப்ராகிம்-அப்துல் கரீம் | பண்ணைத்தொழில் |
| 9. | அப்துல் ஹமீது அலி | பண்ணைத்தொழில் |
| 10. | சேகுத்தம்பி அகமது லெப்பை | பண்ணைத்தொழில் |

**நீராவிப்பிட்டி**

| | | |
|---|---|---|
| 11. | அப்துல் காதர் | மரக்கறி |
| 12. | இப்ராகிம் வெள்ளையா | சைக்கில் றிப்பாரிங் |
| 13. | இப்ராகிம் யுனைட் | ஹோட்டல் |
| 14. | இப்ராகிம் றஜப் | பலசரக்கு |
| 15. | கச்சுமுகம்மது மஜீத் | சைக்கில் றிப்பாரிங் |
| 16. | முகம்மது சுல்தான்-பரீத் | பற்பொடிக்கம்பெனி |
| 17. | லெப்பைத்தம்பி-சீனிமுகம்மது | பலசரக்கு |
| 18. | சம்சுதீன் | பலசரக்கு |
| 19. | சம்சுதீன் இராசமுத்து | பலசரக்கு |
| 20. | அமினியாப்பிள்ளை-அபூபக்கர் | பலசரக்கு |
| 21. | கச்சுமுகம்மது சமூன் | ஹோட்டல் |
| 22. | அப்துல்லா லெப்பை-அன்வர் | பலசரக்கு |
| 23. | முகம்மது சரீபு | பலசரக்கு |
| 24. | லெப்பை | ஹோட்டல் |
| 25. | அல்லாபிச்சை -கச்சுமுகம்மது | பலசரக்கு |
| 26. | நாகூர்பிச்சை-அப்துல் றகீம் | பலசரக்கு |
| 27. | அபூபக்கர் - முகம்மது ராஜா | பலசரக்கு |
| 28. | சுல்தான் அப்துல் றஹ்மான் | பலசரக்கு |
| 29. | நாகூர்பிச்சை -மஜீத் | பலசரக்கு |
| 30. | அப்துல் அஸீஸ்-கிளி | பலசரக்கு |
| 31. | காசின்தம்பி-சாகுல் ஹமீது | பலசரக்கு |
| 32. | கச்சுமுகம்மது-பக்கீர்த்தம்பி | தையல் |
| 33. | கச்சுமுகம்மது சமது | பலசரக்கு |
| 34. | சுல்தான் அப்துல் ஹமீது | பலசரக்கு |
| 36. | அபூபக்கர் - முத்து முகம்மது | பலசரக்கு |
| 37. | முகம்மது சரீபு கலாம் | நெல்குற்றும் ஆலை |
| 38. | முகம்மது ராஜா-முகைதீன் | பலசரக்கு |
| 39. | கட்டையன் | ஹோட்டல் |
| 40. | அடிமையப்பா | பலசரக்கு |
| 41. | செய்யது முகம்மது- அப்துல் சமது | ஹோட்டல் பலசரக்கு |
| 42. | அப்துல் மஜீது | ஹோட்டல், ரெயிலரிங் |

**தண்ணீரூற்று**

| | | |
|---|---|---|
| 43. | நெயினா முகம்மது-முகம்மது சரிபு | பலசரக்கு, கூ.ச.கடை |
| 44. | முகைதீன்-சலீம் | ஹோட்டல் |
| 45. | சாகுல் ஹமீது-இப்ராகிம் சாகிபு | சைக்கிள் றிப்பாரிங் |
| 46. | அப்துல் காதர்-நஜ்முதீன் | டீசல் |
| 47. | முகம்மது சுல்தான்- றசீனா | வெற்றிலைக் கடை |
| 48. | செய்யது முகம்மது-சித்தீக் | ஹோட்டல் |
| 49. | முகைதின்-அப்துல் றசீம் | டீசல் |
| 50. | நாகூர்பிச்சை-அப்துல் றகிம் | பலசரக்கு |
| 51. | திருமதி. மீராசாகிபு | ஹோட்டல் |
| 52. | அப்துல் அஸீஸ்-பாயிஸ் | தையல் |
| 53. | மீராமுகைதீன்-சித்தீக் | வீடியோ,ஓடியோ சென்ரர் |
| 54. | புகாரி அப்துல் காதர் | பலசரக்கு |
| 55. | ஹமீது-பக்கீர் | ஹோட்டல் |
| 56. | கச்சுமுகம்மது-ஜமால்தீன் | ஹோட்டல் |
| 57. | செய்யது முகம்மது ஹம்சா | ஓட்டுவேலைக்கடை |
| 58. | செய்யது முகம்மத கரீம் | ஹோட்டல் |
| 59. | அகமது லெப்பை -முஸ்தபா | தையல் |
| 60. | பாவா-சம்சுலெப்பை | டீசல் |
| 61. | இலாமுத்தீன-ஜவாஹிர் | பலசரக்கு |
| 62. | பொன்னுத்தம்பி | ஆயுர்வேத மருந்துக்கடை |
| 63. | முகைதீன் அப்துல் றசாக் | தையல் |
| 64. | மஹ்பூர் | பலசரக்கு |
| 65. | அகமது லெப்பை-முஸ்தபா | விளக்குமாறு கட்டும் தொழில் |
| 66. | முகம்மது முஹ்தார்-றஜப்தீன் | தும்புக் கைத்தொழில் |
| 67. | முகம்மது ஹனிபா | பிரம்புக் கைத்தொழில் |
| 68. | அப்துல் அஸீஸ் | தையல் |
| 69. | இப்ராகிம் சகீத் | ஆட்டிறைச்சிக்கடை |
| 70. | அபூபக்கர்-றாசிக் | மாட்டிறைச்சிக்கடை |
| 71. | முகைதீன் தம்பி | தையல் |
| 72. | இப்ராகிம் றஜப் | இறைச்சிக்கடை |

*மூலம்: வெளிக்கள ஆய்வு 1996.*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட் [illegible]

1990ம் ஆண்ட [illegible] முஸ்லிம்களுக்கு சொந்தமான
இருந் [illegible] ள்.

| | | கடையின் பெயர் | கைத்தொழில் விளக்கம் |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ஜெமீராஸ் | பன்ஸி கூட்ஸ் |
| 2. | [illegible] | – | மணிக்கடை |
| 3. | [illegible] | ஜெசி சினிமா | படமாளிகை |
| 4. | இ[illegible] | சியானாஸ் | தையல் |
| 5. | வகாப[illegible] | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 6. | ஜமால்தீன் | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 7. | அல்லாபிச்சை | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 8. | சுலை ான் | – | தையல் |
| 9. | ஹகீம் | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 10. | செய்னுதீன் றமீஸ் | – | தையல் |
| 11. | மஜீத் | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 12. | இப்ராஹிம்(சின்னத்தம்பி) | கூல் ஸ்பொட் | குளிர்பானக் கடை |
| 13. | அனஸ் | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 14. | பதுருதீன் | றோசானா மினி | வீடியோ படமாளிகை |
| 15. | நஜீப் | – | ஹோட்டல் |
| 16. | அஸ்மி | – | பைசிக்கிள் திருத்துதல் |
| 17. | நஸார் | – | பலசரக்குக் கடை |
| 18. | ஹ.ஊ.டு. அப்துல் றகீம் | – | பேக்கரி, ஹோட்டல் |
| 19. | ரு.வு. அஸீஸ் | – | றேடியோ திருத்துதல் |
| 20. | மீராசாகிபு | – | மணிக்கூடு திருத்துதல் |
| 21. | கபீர் | கபீர் ஸ்டோர்ஸ் | பலசரக்குக் கடை |
| 22. | ஹனிபா | – | சட்டி பானைக்கடை |
| 23. | முஸம்மில் | – | மோட்டார் சைக்கிள் |
| 24. | அனஸ், ராஸீக் | – | சைக்கிள் உபகரணம் |
| 25. | யூசுப் | – | தையல் |
| 26. | மாலிக்கீன் | – | தையல் |
| 27. | மக்பூல் | – | மணிக்கூடு திருத்துதல் |
| 28. | காமித் | – | ஹோட்டல் |
| 29. | காதர் | – | ஹோட்டல் |
| 30. | முத்து | – | அவுட் மோட்டர் இயந்திரம் |
| 31. | ஜமால் | – | குளிர்பானம் |

*மூலம் : வெளிக்கள ஆய்வு 1996.*



உள் நாட்டு யுத்தத்தின் போது பல கட்டங்களில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமக்கு உரிமையாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களின் பொருட்களையும், உபகரணங்களையும், அதில் ஈடுபடுத்திய முதலீட்டையும் இழந்தார்கள். 1989ஆம் ஆண்டு இந்தியப்படை ஹிஜ்ராபுரத்தை தமது இராணுவ ஸ்தலமாகப் பயன்படுத்திய காலக்கட்டத்தில் ஹிஜ்ராபுர முஸ்லிம்கள் முற்றாக இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளானார்கள். அதனால் இக்கிராமத்தில் காணப்பட்ட வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள் முற்றாகக் கைவிடப்பட்டன. பின்னர் 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கப் படைகள் முல்லைத்தீவு நகரை கைப்பற்றிய போது நகரில் வாழ்ந்த முஸ்லிம் பாதுகாப்பிற்காக வெளியேற வேண்டிய நிலை உருவானது. இதனால் நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில் நிலையங்கள் கைவிடப்பட்டன. இறுதியில் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு முல்லைத்தீவில் எஞ்சியிருந்த வர்த்தக நிலையங்களும் பறிபோயின.

மேற்குறித்த பலவந்த வெளியேற்றத்தினால் முஸ்லிம்களின் வர்த்தக, கைத்தொழில், பொருளாதார அடிப்படைகளுக்கு ஏற்பட்ட தாக்கமானது மிக நீண்ட பின் விளைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. முதலாவதாக, கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வர்த்தக, பொருளாதார உபகரணங்களின் இழப்பிற்கு இது உடனடிக் காரணமாக இருந்தது. இரண்டாவதாக கடந்த ஆறு வருடங்களில் தமது வர்த்தக, கைத்தொழில் நிலையங்களை மீளப் பெறவோ, புதுப்பிக்கவோ, அதன் மூலமாக புதுவாழ்க்கையை ஆரம்பிக்கவோ அதன் உரிமையாளர்களுக்கு முடியாது போயிற்று. வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்குச் சமமான முக்கியத்துவம் முஸ்லிம் விவசாயிகளுக்கும் அவர்களின் விவசாயக் காணிகளுக்கும் ஏற்பட்டது என்பதை பின்னர் விளக்க இருக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை-5

1990 ம் ஆண்டு முல்லைத்தீவு நகரில் முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்ததக, கைத்தொழில், சேவை நிலையங்கள்.

| இல | உரிமையாளர் பெயர் | கடையின் பெயர் | கைத்தொழில் விளக்கம் |
|---|---|---|---|
| 1. | சதுக்கீன்+மஃபூப்+றிபாயிஸ் | ஜெமீராஸ் | பன்ஸி கூட்ஸ் |
| 2. | பதுறுதீன் | – | மணிக்கடை |
| 3. | ஹனீபா | ஜெசி சினிமா | படமாளிகை |
| 4. | இல்யாஸ் | சியானாஸ் | தையல் |
| 5. | வகாப் | – | சைக்கிள் திருத்துதல் |
| 6. | ஜமால்தீன் | – | சைக்கிள் திருத்துதல் |
| 7. | அல்லாபிச்சை | – | சைக்கிள் திருத்துதல் |
| 8. | கலை ரான் | – | தையல் |
| 9. | ஹகீம் | – | சைக்கிள் திருத்துதல் |
| 10. | செய்னுதீன் றமீஸ் | – | தையல் |
| 11. | மஜீத் | – | சைக்கிள் திருத்துதல் |
| 12. | இப்ராஹிம்(சின்னத்தம்பி) | கூல் ஸ்பொட் | குளிர்பானக் கடை |
| 13. | அனஸ் | – | சைக்கிள் திருத்துதல் |
| 14. | பதுருதீன் | றோசானா மினி | வீடியோ பட மாளிகை |
| 15. | நஜீப் | – | ஹோட்டல் |
| 16. | அஸ்மி | – | சைக்கிள் திருத்துதல் |
| 17. | நஸார் | – | பலசரக்குக் கடை |
| 18. | ஹ.ஊ.டு. அப்துல் றகீம் | – | பேக்கரி, ஹோட்டல் |
| 19. | ரு.வு. அஸீஸ் | – | றேடியோ திருத்துதல் |
| 20. | மீராசாகிபு | – | மணிக்கூடு திருத்துதல் |
| 21. | கபீர் | கபீர் ஸ்டோர்ஸ் | பலசரக்குக் கடை |
| 22. | ஹனிபா | – | சட்டி பானைக்கடை |
| 23. | முஸம்மில் | – | மோட்டார் சைக்கிள் |
| 24. | அனஸ், ராஸீக் | – | சைக்கிள் உபகரணம் |
| 25. | யூசுப் | – | தையல் |
| 26. | மாலிக்கீன் | – | தையல் |
| 27. | மக்பூல் | – | மணிக்கூடு திருத்துதல் |
| 28. | காமித் | – | ஹோட்டல் |
| 29. | காதர் | – | ஹோட்டல் |
| 30. | முத்து | – | அவுட் மோட்டர் இயந்திரம் |
| 31. | ஜமால் | – | குளிர்பானம் |

*மூலம் : வெளிக்கள ஆய்வு 1996.*



உள் நாட்டு யுத்தத்தின் போது பல கட்டங்களில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமக்கு உரிமையாக இருந்த வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களின் பொருட்களையும், உபகரணங்களையும், அதில் ஈடுபடுத்திய முதலீட்டையும் இழந்தார்கள். 1989ஆம் ஆண்டு இந்தியப்படை ஹிஜ்ராபுரத்தை தமது இராணுவ ஸ்தலமாகப் பயன்படுத்திய காலக்கட்டத்தில் ஹிஜ்ராபுர முஸ்லிம்கள் முற்றாக இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளானார்கள். அதனால் இக்கிராமத்தில் காணப்பட்ட வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள் முற்றாகக் கைவிடப்பட்டன. பின்னர் 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கப் படைகள் முல்லைத்தீவு நகரை கைப்பற்றிய போது நகரில் வாழ்ந்த முஸ்லிம் பாதுகாப்பிற்காக வெளியேற வேண்டிய நிலை உருவானது. இதனால் நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக, கைத்தொழில் நிலையங்கள் கைவிடப்பட்டன. இறுதியில் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு முல்லைத்தீவில் எஞ்சியிருந்த வர்த்தக நிலையங்களும் பறிபோயின.

மேற்குறித்த பலவந்த வெளியேற்றத்தினால் முஸ்லிம்களின் வர்த்தக, கைத்தொழில், பொருளாதார அடிப்படைகளுக்கு ஏற்பட்ட தாக்கமானது மிக நீண்ட பின் விளைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. முதலாவதாக, கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வர்த்தக, பொருளாதார உபகரணங்களின் இழப்பிற்கு இது உடனடிக் காரணமாக இருந்தது. இரண்டாவதாக கடந்த ஆறு வருடங்களில் தமது வர்த்தக, கைத்தொழில் நிலையங்களை மீளப் பெறவோ, புதுப்பிக்கவோ, அதன் மூலமாக புதுவாழ்க்கையை ஆரம்பிக்கவோ அதன் உரிமையாளர்களுக்கு முடியாது போயிற்று. வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்குச் சமமான முக்கியத்துவம் முஸ்லிம் விவசாயிகளுக்கும் அவர்களின் விவசாயக் காணிகளுக்கும் ஏற்பட்டது என்பதை பின்னர் விளக்க இருக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5. முஸ்லிம் குடியிருப்புகள்

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்கள் 'முஸ்லிம் குடியிருப்புகள்' என்று இந்நூலில் அழைக்கப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிதும், சிறிதுமாக 13 முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. அவற்றில் முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் ஆகியவை முக்கியமானவைகளாகும். படம்-2 முல்லைத்தீவு முஸ்லிம் குடியிருப்புகளின் பிரதேச ரீதியான பரம்பலைக் காட்டுகின்றது. இக்குடியிருப்புக்களின் பொருளாதா, சமூக, கலாசார சிறப்பம்சங்களை பின்வரும் பகுதியில் நோக்குவோம்.

## 5.1 முல்லைத்தீவு முஸ்லிம்களின் 'மூன்று கிராமங்கள்'.

பெற்றதாயும், பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தது என்பர். பலவந்த வெளியேற்றத்தால் தமது சொந்த இடங்களைப் பிரிந்த முல்லைத்தீவு முஸ்லிம்கள்மத்தியில் இவ்வுணர்வு பன்மடங்கு அதிகரித்திருப்பது ஆச்சரியத்துக்குரிய தொன்றல்ல. மாற்றாந்தாய் பிள்ளைகளைப்போல் முகாம்களில் அகதிகளாக இம்மக்கள் படுகின்ற கஷ்டங்களோடு ஒப்பிடும் போது முல்லைத்தீவில் எல்லா வகையிலும் வளம் மிக்க தமது சொந்த இடத்தில் வசதிகளோடு வாழ்ந்த தமது வாழ்க்கை இம்மக்களின் மனதைவிட்டு நீங்காத நினைவாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது மாவட்டத்தை "முல்லையூர்" என்றும், முல்லைத்தீவு நகரத்தை "முல்லை நகர்" என்றும் செல்லமாக அழைத்தனர். பிறந்து, வாழ்ந்த பிரதேசத்தின்மீது அவர்களுக்கிருந்த வாஞ்சையை இது வெளிப்படுத்துகின்றது.

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் பதின் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் செறிந்து வாழ்ந்தார்கள். இவற்றில் சில குடியிருப்புக்கள் அல்லது பிரதேசங்கள் முஸ்லிம் மக்களின் வரலாற்று, கலாசார, பொருளாதார அடிப்படையில் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. அவ்வாறான பிரதேசங்களில் ஒன்றுதான் முல்லைத்தீவு நகரத்திற்கு மேற்காக ஏறக்குறைய ஐந்து மைல் தொலைவில் முல்லைத்தீவு-மாங்குளம் வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் குடியிருப்புத் தொடராகும். இக்குடியிருப்புத் தொடரில் மூன்று முக்கிய முஸ்லிம் கிராமங்கள் காணப்பட்டன. இக்கிராமங்கள் வரலாற்று, கலாசார, பொருளாதார ரீதியாகப் பல பொதுத்தன்மைகளைக் கொண்டிருந்தன. அதே நேரத்தில் ஒவ்வொரு கிராமத்தினரும் தனித்துவத்தையும் கொண்டிருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு "மூன்று கிராமங்கள" என்ற பொதுத்தலைப்பில் இப்பிரதேச முஸ்லிம்களின் வரலாறு இந்நூலில் விளக்கப்படுன்றது.

இம்மூன்று கிராமங்களின் தனிப்பட்ட பெயர்கள் தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் என்பனவாகும். இம்மூன்று கிராமங்களின் வாழ்க்கைச் சூழல் படம்-7 இலும், விவசாயப் பொருளாதார அடிப்படைகள் படம்-8இலும், பொதுக்கட்டடங்கள் படம்-9இலும், வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களின் பரம்பல் படம்-11 இலும் காட்டப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அட்டவணைகள் 2, 3, 4, 5 என்பன இப்பிரதேச முஸ்லிம்கள் பற்றிய புள்ளிவிபர ரீதியான தகவல்களைத் தருகின்றன. மேற்குறித்த படங்களிலும் அட்டவணைகளிலும் தரப்பட்டுள்ள விபரங்களையும், இங்கு தரப்படாத ஏனைய விபரங்களையும் அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்தின் சிறப்புப் பண்புகள் பின்வரும் பகுதியில் விளக்கப்படுகின்றன.

இம்முஸ்லிம் செறிவுத்தொடரில் ஏறக்குறைய 850 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தார்கள். இது முல்லைத்தீவு முஸ்லிம்களின் மொத்தத் தொகையில் ஏறக்குறைய 60 சதவீதமாகும். முல்லைத்தீவில் மிக முக்கியமான சனச் செறிவுப் பிரதேசமாகக் காணப்படும் இப்பிரதேசம், வரலாற்று ரீதியாக இம்மாவட்ட முஸ்லிம்களின் ஆரம்பக் குடியிருப்புப் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

முன்னர் குறிப்பிட்டுள்ளதைப் போல் இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 300 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருப்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. முல்லைத்தீவில் பின்னர் உருவான முஸ்லிம் குடியிருப்புக்களான முறிப்பு, முத்தையன்கட்டு போன்ற விவசாயக் குடியிருப்புக்களும் இம்முஸ்லிம் கிராமச்செறிவில் இருந்தே உருவாகின. இம்மூன்று கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான சமய, கல்வி, கலாசார அபிவிருத்திகள் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் இஸ்லாமிய தனித்துவத்திற்கும், கலாசார பாரம்பரியத்திற்கும் ஒரு அறிவு ரீதியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடித்தளத்தை ஏற்படுத்தியது. அத்துடன் இப்பிரதேசம் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் மையப் பிரதேசமாகவும் கருதப்பட்டது.

முல்லைத்தீவு முஸ்லிம்களைப் பொறுத்தவரை வரலாற்றுப் புகழ் மிக்க இப்பிரதேசம் பொருளாதார வளத்தினையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் கொண்டிருந்தது. பொருளாதார ரீதியாக வற்றாத இயற்கைச் சுனைகள் நிறைந்த இப்பிரதேசம் வளமான விவசாய நிலங்களையும் கொண்டிருந்தது. முல்லைத்தீவு நகருக்கு மேற்கில் முக்கியமான சனச் செறிவுப் பிரதேசச் சூழலில் காணப்படும் இப்பிரதேசம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை வர்த்தக, கைத்தொழில் ரீதியாகவும் முக்கியமானதாக அமைந்தது.

இப்பிரதேச முஸ்லிம்களின் மற்றுமொரு சிறப்புப் பண்பு இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்களோடு இவர்கள் இன ஐக்கியத்தோடு வாழ்ந்தமையாகும். இப்பிரதேச முஸ்லிம் குடியிருப்புத் தொடர்ச்சிக்குத் தெற்காகவும், மேற்காகவும் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் காணப்பட்டன. ஒரே பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்-தமிழ் மக்களுக்கிடையில் பல வகையான தொடர்புகள் காணப்பட்டன. முஸ்லிம்-தமிழ் மக்களுக்கிடையில் பொருளாதார கொடுக்கல் வாங்கல்களும் ஏனைய கலாசார தொடர்புகளும் மிகவும் கௌரவமாக இடம் பெற்றிருந்தன. படம்-7 காட்டுவது போல் முஸ்லிம் பள்ளிவாயில், இந்துக்கோயில், கிறிஸ்தவ தேவாலயம் ஆகிய வணக்கஸ்தலங்கள் இப்பிரதேசத்தில் ஒன்றின் அண்மையாக மற்றது அமைவுற்றிருக்கின்ற தன்மை இப்பிரதேசத்தின் நீண்ட இன ஐக்கியத்திற்கு மற்றுமொரு சான்றாகும்.

இத்தகைய பெருமை கொண்ட பிரதேசம் ஒன்றின் தோற்றம் பற்றியும் அத்துடன் இப்பிரதேசத்தின் புவியியல் பின்னணி, பொருளாதார, கலாசார வளத்தினைப்பற்றியும் சற்று விரிவாக நோக்குவோம். தனிப்பட்ட கிராம அடிப்படையில் இதனை நோக்குகையில் இப்பிரதேசம் பற்றிய அம்சங்கள் மேலும் தெளிவாகும்.

முதலில் இப் பிரதேசத்தின் மேற்காக அமைவுற்றிருந்த வரலாற்று புகழ்மிக்க தண்ணீரூற்று கிராமத்தையும், அதற்கு வட-கிழக்காக அமைவுற்றிருந்த, இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான, ஹிஜ்ராபுரக் கிராமத்தையும், மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு பழைய புதிய முஸ்லிம் கிராமங்களுக்கு இடையில் அமைந்திருந்த, சனத்தொகை ரீதியாக மிகப்பெரிய கிராமமான நீராவிப்பிட்டி கிராமத்ததையும் பற்றி இங்கு தனித்தனியாக நோக்கலாம்.



### 5.1.1 தண்ணீரூற்று கிராமம்:

இப்பிரதேச முஸ்லிம்களின் மிகப் பழைய குடியிருப்பு தண்ணீரூற்றாகும். இங்கு 1990இல் ஏறக்குறைய 160 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. தண்ணீரூற்றுக் கிராமத்தின் கிழக்குப் புறமாக முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தனர். முல்லைத்தீவின் மிகச் செழிப்பான பிரதேசத்தில் இக்கிராமம் அமைந்திருந்தது. இப்பிரதேசத்தின் செழிப்பைப் பற்றி Chitty (1834) என்பவர் "18ஆம் நூற்றாண்டிலே முல்லைத்தீவில் நிலவளமும் சனத்தொகையும் செறிவுமிக்க கொண்ட பிரதேசமாக இப்பிரதேசம் காணப்பட்டது" என்று குறிப்பிட்டிருக்கின்றார். Lewis (1993) இன்படி, பழைய காலத்தில் இக்கிராமத்தில் பிரபல்யமான சந்தை ஒன்று அமைவுற்றிருந்தது என்றும் அதனால் வர்த்தக ரீதியாக முல்லைத்தீவின் பல்வேறு பிரதேச மக்களுடன் தொடர்புடைய குடியிருப்பாக தண்ணீரூற்று அக்காலத்தில் காணப்பட்டது என்று குறிப்பிடுகின்றார். இச்சந்தை வர்த்தகத்தில் முஸ்லிம்களும் ஈடுபட்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதியில் இயற்கை நீர்ச்சுனை ஒன்று காணப்படுகின்றது. இந்நீர்ச்சுனை "நீராவி" என்று அழைக்கப்படுகின்றது. "நீராவி" என்ற பதம் பொங்கிப் பெருக்கெடுப்பது என்னும் பொருளைக் குறிக்கின்றது. "நீராவி" நீர்ச்சுனை ஏறக்குறைய ஒரு சதுர மைல் பரப்பு பிரதேசத்தை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. இந் நீர்ச்சுனையில் இருந்து உற்பத்தியாகும் இயற்கை அருவி இப்பிரதேசத்தில் வட கிழக்குப் புறமாக ஏறக்குறைய 3 மைல்கள் பாய்ந்து மக்களுக்கும், பயிர்களுக்கும் நன்மை தருகின்றது. இந் நீர்ச்சுனை பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீரை வழங்குவதோடு இப்பிரதேச மக்களின் குடித்தல், குளித்தல், உடை கழுவுதல் போன்ற ஏனைய நீர்த் தேவைகளையும் நிவர்த்தி செய்தது.


விவசாய வளத்தினையும், வர்த்தகச் செழிப்பையும் கொண்ட இப்பிரதேசத்தில் பொருளாதார வளர்ச்சியும், குடிசனப் பெருக்கமும் கடந்த காலத்தில் இயற்கையாக ஏற்பட்டு வந்தது. 1921ஆம் ஆண்டு 350 பேராகக் காணப்பட்ட இப்பிரதேசத்தில் முஸ்லிம் சனத்தொகை 1971ஆம் ஆண்டு 1701 ஆக வளர்ச்சி பெற்றது. (அட்டவணை 1) இப்பிரதேசத்தின் சனத்தொகை வளர்ச்சி காரணமாக காலப் போக்கில் உருவான கிராமங்களே அயலிலுள்ள நீராவிப்பிட்டியும், ஹிஜ்ராபுரமும் ஆகும். அதனால்தான் இம்மூன்று கிராமத்தவர்களும் மிக நெருங்கிய உறவினர்களாகக் காணப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 7 : முல்லைத்தீவு முஸ்லிம்களின் "மூன்று கிராமங்கள்"






தண்ணீரூற்று கிராமம் முஸ்லிம்களின் பழைய வரலாற்றுச் சின்னங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக இக்கிராமத்தின் மேற்குப்புறமாக ஊத்தங்கரை வீதியில் அமைந்துள்ள பெரியபள்ளி என்றழைக்கப்படும் இக்கிராமத்தின் ஜூம்மாப்பள்ளிவாயில் (படம்–7ஐப் பார்க்க) ஏறக்குறைய 200 வருடங்கள் பழமையானது என்று நம்பப்படுகின்றது. இப்பள்ளியின் பழைமைத் தன்மையை இப்பள்ளியின் அகலமான தூண்களைக் கொண்ட கட்டடக்கலை மூலமாகவும், இதனைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ள சுண்ணக்கல் போன்ற மூலப் பொருட்கள் மூலமாகவும் அறியக் கூடியதாக இருக்கின்றது. இப்பள்ளி இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை நிரூபிக்கும் வாய்மொழி ஆதாரங்கள் இருக்கின்றன. இப்பள்ளிவாயில் முஸ்லிம்கள் பலவந்தமாக இப்பிரதேசத்தை விட்டு வெளியேறும் வரை தொழுகைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதைவிட பெரிய பள்ளிக்கு முன்னர் கட்டப்பட்ட மற்றுமொரு பள்ளிவாயிலின் சிதைவுகள் தண்ணீரூற்று சந்தைக்கு அருகாமையில் அதாவது மாங்குள பிரதான வீதியில் இன்றும் காணப்படுகின்றது. (படம்–7ஐப் பார்க்க). இப்பழைய பள்ளிவாயிலின் சிதைவை அண்டியே இப்பிரதேச முஸ்லிம்களின் ஆரம்பக் குடியிருப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். பின்னர் வடகிழக்காக இயற்கையான "நீராவி" நீர்ச்சுனையை நோக்கி முஸ்லிம்கள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும் என்று கருதக் கூடியதாக இருக்கின்றது. இப்பள்ளிவாயில் சிதைவுக்கு கிழக்காக பக்கீர் அப்பா என்ற முஸ்லிம் பெரியார் ஒருவரின் சியாரம் அதாவது அடக்கஸ்தலம் காணப்படுகின்றது (படம்–7ஐப் பார்க்க).

தண்ணீரூற்றுக் கிராமத்தில் தமிழ் மக்களும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இக்கிராமத்தின் மேற்குப் புறமாக வசித்தார்கள். இக்கிராமத்தில் தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக்காட்டும் "ஊத்தங்கரைப் பிள்ளையார் கோவில்;" இப்பிரதேசத்திலேயே அமைவுற்றிருந்தது. இணக்கமான இன உறவு நெடுங்காலம் முஸ்லிம்–தமிழ் மக்களுக்கிடையில் இப்பிரதேசத்தில் நீடித்திருந்தது.

### 5.1.2 நீராவிப்பிட்டி:


தண்ணீரூற்றுச் சூழலில் தம்மை ஸ்திரப்படுத்தி தொடர்ச்சியாக வளர்ச்சியுற்ற முஸ்லிம்கள் இப்பிரதேசத்தின் வட கிழக்காக தமது வாழ்விடத்தை அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு வட கிழக்காக தமது குடியிருப்புக்களை முஸ்லிம்கள் அமைத்துக் கொள்ள இப்பிரதேசத்தினூடாக ஊற்றெடுத்துச் சென்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம்-8 : "மூன்று கிராமங்களின்" விவசாயப் பொருளாதார அடிப்படை




இய்றகை நீரூற்று காரணமாக இருந்தது. இவ்வியற்கை நீரூற்றிற்குத் தெற்காகக் காணப்பட்ட உயர்நிலம் பெருகிய சனத்தொகையின் குடியிருப்பு வசதிகளுக்கும், வடக்காகக் காணப்பட்ட தாழ்நிலம் இம்மக்களின் நெல் விவசாய நடவடிக்கைகளுக்கும் பொருத்தமாக இருந்தது.

"நீராவி" என்ற நீரூற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய புதிய முஸ்லிம் கிராமம் "நீராவிப்பிட்டி" என்று அழைக்கப்பட்டது. நீராவிப்பிட்டியின், இடது புறத்தில் தண்ணீரூற்று முஸ்லிம் குடியிருப்புப் பகுதியும், வலப்புறத்தில் ஹிஜ்ராபுரம் முஸ்லிம் கிராமமும் அமைந்து காணப்பட்டன. உண்மையில் இம்மூன்று கிராமங்களும் சமூக, பொருளாதார, வரலாற்று, கலாசார பொதுத்தன்மையையும், புவியியல் தொடர்ச்சியினையும் கொண்ட குடியிருப்புத் தொடர்ச்சியாகும்.

முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது நிராவிப்பிட்டியில் 400 குடும்பங்கள் வாழ்ந்தன. தண்ணீரூற்று முல்லத்தீவு முஸ்லிம்களின் பழைமைக்குச் சான்றாகக் காணப்படுவது போல் நீராவிப்பிட்டி இந்நூற்றாண்டின் சமூக, கலாசார மையமாகக் காணப்பட்டது. இக்கிராமத்தில் கால மாற்றத்திற்கேற்ப புதிய சமூக, கலாசார சின்னங்கள் உருவாயின. அதில் மிக முக்கியமானது, நீராவிப்பிட்டி கிராமத்தில் 1934ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட முஸ்லிம் பாடசாலை, 1948ஆம் ஆண்டில் புதுப்பித்துக் கட்டப்பட்ட ஜும்ஆ பள்ளிவாயில், சம காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அரபு கற்பிக்கும் மதுரசா (படம்-7) ஆகியவைகளாகும். இவை இந்நூற்றாண்டில் இப்பிரதேச முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார வளர்ச்சிப் போக்கை எடுத்துக்காட்டுகின்றன.

இப்பிரதேச முஸ்லிம்களோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக வற்றாத நீர்ச்சுனையான"நீராவி"காணப்படுகின்றது. முன்னர் குறிப்பிட்டது போல் தண்ணீரூற்று-நீராவிப்பிட்டி கிராமங்களுக்கிடையில் ஊற்றெடுக்கும்"நீராவி" என்ற நீரூற்று இப்பிரதேச முஸ்லிம்களின் இதய ஊற்றாகும். இந்நீரூற்று எக்காலத்திலும் வற்றுவதில்லை. முஸ்லிம்களின் ஆரம்ப கால குடியிருப்புக்கு இந்நீரூற்று காரணமாக இருந்தது. பின்னர் இது இப்பிரதேச மக்களின் விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் தடாகமாகவும் பயன்பட்டது. இப்பிரதேச மக்களின் காரையடி, போண்டா போன்ற நெல் வயல் நிலங்கள் இந்நீர் சுனையில் இருந்து நீரைப் பெறுகின்றன. அது மட்டுமன்றி இப்பிரதேச முஸ்லிம்களின் நாளாந்த தேவைகளுக்கும் இந்நீர் பயன் படுத்தப்படுகின்றது. இப்பிரதேசத்தின் நாளாந்த வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த நீராவியூற்று





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பற்றி மிஸ்கீன் அப்பா அவர்களின் பாடலில் ஒரு பகுதி இங்கு நினைவு கூரத்தக்கதாகும். அவருடைய காலத்தில் ஏற்பட்ட நீண்ட வரட்சியில் நீராவியூற்று சற்று வழமைக்கு மாறாக குறைய ஊறியதால், இப்பிரதேசத்திலுள்ள பயிர்கள் பாதிக்கப்பட்டன. நீர் பற்றாக்குறையால் மக்கள் கஷ்டப்பட்டார்கள்.

இந்நிலையில் அவர் பாடிய உருக்கமான பாடலின் சில அடிகள் பின்வருமாறு:

*"இயற்கையின் வரனே*
*இமயத்தின் ஊற்றே – நீராவி*
*நீவற்றிப் பொருக்கெழ*
*நேர்ந்த பயிர் முகம் சாகுதம்மா"*

இத்தனை சிறப்பு மிக்க "நீராவி" இன்று முல்லைத்தீவு முஸ்லிம்களின் கற்பனைச் சுனையாகக் காணப்படுகின்றது. நீராவியூற்றின் நீரினைப் பருக இம்மக்கள் காணும் கனவு நனவாகுவது எப்போது? மீண்டும் இம்மக்கள் தமது வாழ்க்கையை தமது பிரதேசத்தில் ஆரம்பிப்பது எப்போது? இது வெறும் கற்பனைக் கனவு மாத்திரம்தானா? இம்மக்களின் அபிலாசைகளை நனவாக்க வேண்டியது நல் நோக்கம் கொண்டவர்களின் கடமையல்லவா?


### 5.1.3 ஹிஜ்ராபுரம்:

வரலாறும் வளமும் மிக்க முஸ்லிம்களின் இதய பூமியில் பெருகும் சனத்தொகைக்கு ஏற்ற வசதிகள் தண்ணீரூற்று–நீராவிப்பிட்டி சூழலில் இல்லாததன் விளைவு ஹிஜ்ராபுரம் என்ற புதிய கிராமத்தின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தது. ஹிஜ்ராபுரம் நீராவிப்பிட்டிக் கிராமத்தின் தொடர்ச்சியாகும். இப்புதிய கிராமம் தோன்றுவதற்கு முன்னர் இருந்தே இப்பிரதேசத்தில் காணப்பட்ட நந்திக்கடல் மீன்வளமும், கள்ளஉரல் பிரதேச விவசாய நிலங்களும் தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி கிராம மக்களை நீண்ட காலமாக கவர்ந்து வந்திருந்தன. இப்பழைய கிராங்களிலிருந்து பலர் பருவ காலத்திலும், சிலர் நிரந்தரமாகவும் இன்றைய ஹிஜ்ராபுரச் சூழலில் குடியேறி வாழ்ந்து வந்தார்கள்.

என்றாலும், ஹிஜ்ராபுரம் 1955ஆம் ஆண்டிலேயே ஒரு கிராமமாக உருவாகியது. அக்காலத்தில் இக்கிராமச் சூழலில் காணப்பட்ட தரிசு நிலங்கள் அரசாங்கத்தால் காணியற்றவர்களுக்கு குடியிருப்பிற்காக வழங்கப்பட்டன.



படம்-9 : "மூன்று கிராமங்களில்" வீதிகளும் பொதுக்கட்டிடங்களும்




ஆதாரம்: களவிக்கள ஆய்வு, 1996, இலங்கை இடவிளக்கப்படம், 1972.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்காணிகளை தண்ணீரூற்று, நீராவிப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த நிலமற்ற முஸ்லிம் மக்கள் குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு முன் வந்தார்கள். இம்மக்களின் வருகையோடு ஏலவே பருவ கால குடிகளாக இப்பிரதேச சூழலில் வாழ்ந்த முஸ்லிம்களும் இப்பிரதேசத்தில் நிரந்தரக்குடிகளாக மாறினர். இக்காணிகள் தண்ணீரூற்றுக் கிராம சபையின் (Village Council) சிபாரிசில் வழங்கப்பட்டமையினால் அக்காலத்தில் இக்குடியிருப்பு "வி. சி. கிராமம்" என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது.

இதன் பிறகு, 1970ஆம் ஆண்டு தண்ணீரூற்று முஸ்லிம் பாடசாலை விரிவாக்கப்பட்டது. இப்பாடசாலைச் சூழலில் வாழ்ந்த மக்களுக்கு "வி. சி. கிராமம்" என்ற கிராமத்தின் ஒரு பகுதியில் வீடுகள் அமைக்க காணிகள் கொடுக்கப்பட்டன. இப்புதிய வீடமைப்புத் திட்டத்தோடு வி. சி. கிராமம் அன்று ஒரு தனித்துவமான குடியிருப்பாகியது. இக்கிராமம் 1972ஆம் ஆண்டில் "ஹிஜ்ராபுரம்" என்று பெயர் சூட்டப்பட்டது. இது இலங்கையில் முஸ்லிம் ஹிஜ்ரி 1400ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட காலமாகும். அதனால் இக் குடியேற்றத் திட்டத்திற்கும் ஹிஜ்ராபுரம் என்ற பெயர் வழங்கப்பட்டது.

ஹிஜ்ராபுர சூழலில் காணப்பட்ட நந்திக்கடல் மீன்வளம், தென்னைச் செய்கை, ஏனைய நெல் போன்ற விவசாய நடவடிக்கைகள் இக்கிராமத்தின் பொருளாதார அடிப்படையாகியது. காலப் போக்கில் புதிய சமய, கலாசார, சமூக நிறுவனங்களும் இக்கிராமத்தில் தோன்றின. இவை யாவும் இக்கிராமத்தை தனிக் கிராமமாக மாற்றின. படம்–9 ஹிஜ்ராபுர கிராமத்தின் வீதிகளையும், பொதுக் கட்டடங்களையும் காட்டுகின்றது. பலவந்த வெளியேற்றத்தின் போது ஹிஜ்ராபுரத்தில் ஏறக்குறைய 300 முஸ்லிம் குடும்பத்தினர் வாழ்ந்தார்கள்.

வளமும், வனப்பும் மிக்க தமது தாயகத்தில் இருந்து தொலைதூரத்தில் அகதி முகாம்களில் வாழ்கின்ற முல்லைத்தீவு முஸ்லிம்களால் தமது கிராமங்களின் சிறப்பம்சங்களை இன்றும் மறக்க முடியவில்லை. பலவந்த வெளியேற்றத்தின் பின் ஆறு வருடங்களாகியும் மக்கள் மனதில் முல்லைத்தீவு பற்றிய நினைவுகள் பசுமையாகக் காணப்படுகின்றன. முல்லைத்தீவில் இம்மக்களின் வாழ்க்கை மிகவும் உறுதியாக வேரூன்றிய ஒன்று என்பதை இது மிகத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

## 5.2 முல்லைத்தீவு நகர முஸ்லிம் குடியிருப்பு:

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மற்றும் ஒரு முக்கியமான பிரதேசம் முல்லைத்தீவு நகரமாகும். 1990ஆம் ஆண்டு



நகர சபையின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமாக முஸ்லிம்கள் காணப்பட்டனர். தண்ணீரூற்று முஸ்லிம் கிராமத்தைப் போல் முல்லைத்தீவு முஸ்லிம் நகரச் செறிவும் வரலாற்றுப் பழைமைமிக்கது. பிரித்தானியர் காலத்தில் இந் நகரம் ஒரு துறைமுக மற்றும் நிர்வாக நகரமாக மாறிய காலத்திற்கு முன்பிருந்து முஸ்லிம்கள் இந்த நகரச் சூழலில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. ஆரம்ப காலங்களில் இந்நகரில் முஸ்லிம் வர்த்தகர்களும், முஸ்லிம் மலாய படை வீரர்களும் வாழ்ந்திருந்தார்கள். பிற்காலத்தில் மலாய முஸ்லிம் மக்களின் தொடர்ச்சி இந்நகரத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. ஆனால், அதே நேரத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் இந்நகரை தமது தாயகமாகக் கொண்டு மிக நீண்ட காலமாக வாழ்ந்து வந்திருகின்றனர்.

Lewis (1895) என்ற வரலாற்று ஆசிரியர் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவு நகர முஸ்லிம்களின் வர்த்தகச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றார். "அக்காலத்தில் முல்லைத்தீவு பசார், நகரின் மிக முக்கியமான ஒரு பகுதியாகக் காணப்பட்டது. அந்த பசாரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல பெரிய வர்த்தக நிலையங்கள் காணப்பட்டன. இந்நிலையங்கள் ஒப்பீட்டு ரீதியாக சிறந்த கட்டட அமைப்பைக் கொண்டிருந்தன. அது மட்டுமன்றி நகர முஸ்லிம்கள் வர்த்தகத்தில் பலரும் போற்றும் சிறப்புப் பண்புகளைக் கொண்டிருந்தார்கள்" என்பது போன்ற இம்மக்கள் பற்றிய பல சிறப்பு அம்சங்களை Lewis என்ற பிரித்தானியர் விதந்து கூறுகின்றார்.


பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து இன்றுவரை முல்லைத்தீவு நகரில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருப்பதற்கான தெளிவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது இந்நகரில் ஏறக்குறைய 220 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். இம்முஸ்லிம்கள் நகரின் மத்தியிலும் தெற்குப் புறமாகவும் பிரதான வீதியின் இருமருங்கிலும் செறிவாக வாழ்ந்தார்கள் (பார்க்க படம்–10). நகரில் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளும், குடியிருப்புக்குரிய இடங்களும் கலந்து காணப்பட்டன. இங்கு முஸ்லிம்களின் வீடுகள் விசாலமானதாகவும் சுண்ணக்கற்களால் அமைக்கப்பட்ட அகலமான சுவர்களைக் கொண்டதாகவும் காணப்பட்டன. சில வீடுகள் மாடி வீடுகளாகவும், இம்மாடி வீடுகள் பிரித்தானியர் காலக் கட்டடக்கலை அம்சங்களைப் பிரதிபலிப்பதாகவும் காணப்பட்டன. இவை நகரில் முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக் காட்டும் மற்றுமொரு சான்றாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம்-10 : முல்லைத்தீவுப் பட்டினத்தில் முஸ்லிம்கள்






பிரதான வீதியும் மார்கட் வீதியும் சந்திக்கும் இடத்தில் சுப்ஹானி ம.ஃபூப் ஜும்மாப் பள்ளிவாயில் அமைந்திருந்தது. இதற்கு எதிர்ப்புறமாக பிரதான வீதியின் மறுபுறத்தில் அரபிக் கலாசாலை கட்டப்பட்டிருந்தது. நகரின் தெற்குப் புறமாக முஸ்லிம் பாடசாலை ஒன்று காணப்பட்டது (படம்-10). இவை யாவும், இது போன்ற ஏனைய சமய, சமூக, கலாச்சார சின்னங்களும் இந்நகரில் முஸ்லிம்களின் தனித்துவத்தை வெளிப்படையாகக் காட்டி நின்றன. சுப்ஹானி ம.ஃபூப் ஜும்ஆப்பள்ளிவாயில் சுண்ணாம்புக் கற்களால் அமைக்கப்பட்ட அகலச் சுவரையும் பெரிய உருளை வடிவ தூண்களையும் கொண்ட கட்டடமாகும். இப்பள்ளிவாயிலும், தண்ணீரூற்றுப் பெரிய பள்ளியும் கட்டட அமைப்பு ரீதியாக ஒத்த தன்மை கொண்டிருந்தன எனக் கூறப்படுகின்றது. இப்பள்ளிவாயில் நகரின் மையத்தில் அமைவுற்றிருப்பதோடு, நகரில் வருமானம் தரக் கூடிய கட்டடங்களையும், நகரத்திற்கு வெளியே தென்னந் தோட்டங்களையும், வயல் காணிகளையும் சொந்தமாகக் கொண்டிருந்தது.

ஒப்பீட்டு அடிப்படையில் பொருளாதார ரீதியாக நகர முஸ்லிம்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்கள் காணப்பட்டன. நகர முஸ்லிம்கள் நகரம் சார்ந்த ஹோட்டல், சில்லறைச் சாமான் கடை ஆகிய வர்த்தக நடவடிக்கைகளிலும், வவுனியா-முல்லைத்தீவு நகருக்கிடையிலான வர்த்தகப் பொருட்களை கொண்டுவருதல், கொண்டு செல்லலுடன் தொடர்புடைய போக்குவரத்து நடவடிக்கைகளிலும் முன்னணி வகித்தார்கள். அத்துடன் முஸ்லிம்களுக்குச் சொந்தமான தையல் நிலையங்கள், வாகனம் திருத்தும் நிலையங்கள் நகரில் பரவலாகக் காணப்பட்டன.

முல்லைத்தீவு நகர முஸ்லிம்கள் நகரம் சார்ந்த வர்த்தக, கைத்தொழில், சேவை தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளில் மாத்திரம் அன்றி விவசாயம், மீன்பிடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். முல்லைத்தீவு நகரைச் சூழக் காணப்பட்ட நெல் வயல் நிலங்கள் (படம்-6), நகரத்திற்குத் தெற்காக கொக்கிளாய் வீதியில் காணப்பட்ட தென்னந் தோட்டங்கள், உப உணவுப் பயிர்ச் செய்கை நிலங்கள் நகர முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்ததோடு இப் பொருளாதார நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டும் வந்தார்கள்.

முல்லைத் தீவு நகரின் குடிசன வளர்ச்சி இம்மக்களை புதிய பிரதேசங்களை நோக்கிய குடிப் பெயர்விற்கு தூண்டியது. இந்த அடிப்படையில் நகர முஸ்லிம்களின் இடப் பெயர்வால் உருவான ஒரு மீனவ குடியிருப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்விப்பாடு கிராமத்தில் அமைந்திருந்தது. இதேபோல பல சிறிய முஸ்லிம் குடியிருப்புகள் முல்லைத்தீவு–கொக்கிளாய் பிரதான வீதியிலும் நகர முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதில் உடுப்புக்குளம், உப்புமாவெளி, 5ஆம் கட்டை ஆகிய சிறிய முஸ்லிம் குடியிருப்புகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

## 5.3 விவசாய குடியேற்றத் திட்டங்கள்:

இலங்கை அரசாங்கம் 1950ஆம் ஆண்டிலிருந்து வரண்ட வலயத்தில் விவசாயக் குடியேற்றங்களை அபிவிருத்தி செய்து வந்துள்ளது. இக்குடியேற்றத் திட்டங்கள் தூர்ந்து போன குளங்களை திருத்தி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் உருவாக்கப்பட்டன. நிலமற்ற விவசாயிகளுக்கு குடியிருப்பதற்கும் பயிர் செய்வதற்கும் குடியேற்றத் திட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டன.

இந்த அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல விவசாய குடியேற்றத்திட்டங்கள் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்டன. இதில் முத்தையன் கட்டு, முறிப்பு, தண்ணிமுறிப்பு ஆகிய விவசாயக் குடியேற்றத்திட்டங்களில் முஸ்லிம்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டன. சனச்செறிவு மிக்க முல்லைத்தீவின் முஸ்லிம் கிராமங்களில் வாழ்ந்த நிலமற்ற விவசாயிகள் இக்குடியேற்றத் திட்டத்தில் காணி பெற்று நன்மையடைந்தார்கள்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் முறிப்பும் ஒன்றாகும். இது ஒரு பெரிய விவசாய குடியேற்றத்திட்டமாகும். முறிப்புக் குடியேற்றத்திட்டத்தில் மூன்று பகுதிகளில் முஸ்லிம்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. அவற்றில் ஒன்று "கொத்தியாகும்பம்" என்றும், மற்றயது "சேனைக்குடியிருப்பு" என்றும், மூன்றாவது "நாலாம் கட்டை" என்றும் அழைக்கப்பட்டன.

முறிப்பின் கொத்தியாகும்பப் பகுதியில் மொத்தமாக 56 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. ஒரு குடும்பத்திற்கு 3 ஏக்கர் காணி மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்டது. இங்கு தென்னை, நிலக்கடலை, கடலை, மரக்கறி ஆகிய விவசாய நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் ஈடுபட்டார்கள். இக் கிராமத்தில் ஜும்மாப் பள்ளி ஒன்றும் காணப்பட்டது. சேனைக் குடியிருப்பு (எள்ளுச் சேனை) முறிப்பு குள அணைக்கட்டின் தென்புறமாக அமைந்திருந்தது. இங்கு மொத்தமாக 20 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. இங்கு ஒரு தைக்காப்பள்ளிவாயிலும் காணப்பட்டது.



4ஆம் கட்டை விவசாயக் குடியிருப்பு குமுளமுனை வீதியின் நான்காவது மைலில் அமைவுற்றிருந்தது. இது 1985ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இங்கு மொத்தமாக 72 முஸ்லிம் குடுமபங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. ஒரு குடும்பத்திற்கு அரை ஏக்கர் காணி குடியிருப்பிற்கும், மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்காகவும் வழங்கப்பட்டது. இங்கு முஸ்லிம் குடியிருப்புக்குத் தேவையான பள்ளிவாயில், மையவாடி போன்றவற்றிற்கும் அப்போது காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. துரதிஷ்டவசமாக இப்பிரதேசத்தின் யுத்த நடவடிக்கைகளால் இங்கு வாழ்ந்த மக்கள் தொடர்ந்தும் வாழ முடியாது தமது பழைய கிராமத்திற்குத் திரும்பி விட்டனர்.

முல்லைத்தீவில் மற்றுமொரு விவசாயக் குடியிருப்பு தண்ணிமுறிப்பாகும் (படம்–4). இக்குடியேற்றத்திட்டம்[1] முல்லைத்தீவு நகருக்குத் தெற்கே 16 மைல் தொலைவில் காணப்பட்டது. 1955ஆம் ஆண்டு அப்போதைய முல்லைத்தீவு பாராளுமன்ற அங்கத்தவர் கௌரவ சி. சுந்தரலிங்கம் அவர்களின் சிபாரிசின் பேரில் தண்ணிமுறிப்பில் முஸ்லிம்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. இங்கு ஏறக்குறைய 150 முஸ்லிம் குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கான காணிகள் வழங்கப்பட்டிருந்தன. ஒரு குடும்பத்திற்கு 3 ஏக்கர் என்ற அடிப்படையில் விவசாயக் காணி இம்மக்களுக்கு வழங்கப்பட்டது. பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது மொத்தமாக 600 ஏக்கர் நிலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்தது. இப்பிரதேசம் முல்லைத்தீவில் நெல் விவசாயத்திற்குப் பிரபல்யமானதொன்றாகும். பருவகால மழையும், தண்ணிமுறிப்புக்குள நீர்ப்பாசன வசதியும், இரண்டு பருவ நெல் விவசாயத்திற்கு இங்கு வாய்ப்பளித்தன. பாரிய நீர்ப்பாசனத் திட்டக் குளமான தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் நெற்செய்கைக் காணி வழங்கப்பட்ட சகலருக்கும், மேட்டுநிலப் பகுதியில் குடியேற்றத்திற்காக காணிகளும் ஒதுக்கப்பட்டிருந்தன. இதில் முஸ்லிம்களுக்கும் குடியேற்றக் காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் யுத்த சூழ்நிலையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இறுதியாக முத்தையன்கட்டு[2] விவசாயக் குடியிருப்பைக் குறிப்பிடலாம். இது முல்லைத்தீவு நகரத்தில் இருந்து மேற்காக 16 மைல் தொலைவில் அமைந்துள்ளது. முத்தையன் கட்டு குளத்தை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றத் திட்டம் ஒன்று 1957இல் அமைக்கப்பட்டது. இக்குடியேற்றத்திட்டம் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டி.சிதம்பரம் அவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதாகும். ஆரம்பத்தில் இங்கு 110 முஸ்லிம் குடும்பங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

330 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. முத்தையன் கட்டில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட விவசாயக் காணிகள் இந்நீர்ப்பாசனத் திட்டத்தில் பிரதான நீர்ப்பாசனக் கால்வாயின் இடது புறமாகக் காணப்பட்டன. இங்கு நெல்லும், மேட்டு நிலப்பயிர்களும் செய்கை பண்ணப் பட்டன. இங்கு ஒரு ஜும்மாப் பள்ளிவாயிலும், முஸ்லிம் பாடசாலை ஒன்றும் காணப்பட்டது. முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் வரை இவை முஸ்லிம்களின் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன.

மேற்குறித்த பெரிய முஸ்லிம் குடியிருப்புகளை விட விஷ்வமடுவில் 6 முஸ்லிம் குடும்பங்களும், கனுக்கேணியில் 10 குடும்பங்களும், குமாரபுரத்தில் 10 குடும்பங்களும், வற்றாப்பளையில் 2 குடும்பங்களும் உடுப்புக்குளத்தில் 5 குடும்பங்களும் வாழ்ந்தார்கள். இக்குடியிருப்புகளின் இட அமைவை படம்–2 காட்டுகின்றது.

## குறிப்புகள்

1. *தண்ணிமுறிப்புக்குளம் 131 சதுர கிமீ பரப்பினைக் கொண்டது. இது ஏறக்குறைய 935 ஹெக்டர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் அளிக்கின்றது.*

2. *முத்தையன் கட்டுக் குளம் 170 சதுர கிமீ பரப்பினைக் கொண்டது. இது ஏறக்குறைய 166 ஹெக்டர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் அளிக்கின்றது.*



# 6. இனப்பிரச்சினையும் முல்லைத்தீவு முஸ்லிம்களும்

## 6.1 முஸ்லிம்-தமிழ் உறவு

இன ஐக்கியத்திற்கு முல்லைத்தீவின் முஸ்லிம்–தமிழ் உறவு[1] ஒரு உதாரணமாகக் கொள்ளக்கூடிய அளவு சிறப்பாகக் காணப்பட்டது. இம்மாவட்டத்தில் முஸ்லிம்களும், தமிழர்களும் ஒருவரது இனத் தனித்துவத்தை மற்றவர்கள் மதித்து வாழ்ந்து வந்தார்கள். முஸ்லிம் சிறுபான்மையினர் தமிழ் பெரும்மான்மையினரால் புறக்கணிப்பிற்குட்படவில்லை. மிக அண்மைக் காலம் வரை முல்லைத்தீவின் தமிழ் அரசியலில் ஒரு அங்கமாக முஸ்லிம்கள் காணப்பட்டனர். பொருளாதார ரீதியாக ஒருவருக் கொருவர் போட்டியிட்டு வாழும் சமூகங்களாக இவ்விரு சமூகமும் முல்லைத்தீவில் வாழவில்லை.

இவ்விரு மக்களையும் இணைக்கும் பாலமாக தமிழ் மொழி அமைந்தது. தமிழ் மொழிப் பாடசாலைகளில்[2] முஸ்லிம்–தமிழ் மாணவர்கள் இணைந்து கற்றனர். இவ்வாறு இவ்விரு இன மாணவர்களும் இணைந்து கற்ற பாடசாலைகளில் முக்கியமானவைகளாக வித்தியானந்தா கல்லூரி, தண்ணீரூற்று சீ. சீ பாடசாலை, முல்லைத்தீவு நகர தமிழ் மகாவித்தியாலயம் ஆகியன காணப்பட்டன. சிறுபான்மை முஸ்லிம்கள் தமிழ் மொழித் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டனர். தமது தமிழ் எழுத்தாற்றலாலும், கவித்திறனாலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் பங்காற்றினார்கள். முஸ்லிம்களின் சமய, கலை, கலாசாரங்கள், தமிழ் மக்களால் மதிக்கப்பட்டன. முஸ்லிம்களின் கலை அம்சங்களான களிகம்பு, சிலம்படி ஆகியவற்றை தமது மங்களகரமான நிகழ்ச்சிகளில் அரங்கேற்றி, முஸ்லிம்களை தமிழ் மக்கள் கௌரவித்தார்கள். இனங்களுக்கிடையிலான இவ்வாறான கலாசாரப் பரிமாற்றங்கள் பரஸ்பர இனப் புரிந்துணர்வும், மரியாதையும் மேலும் வளரக் காரணங்களாக இருந்தன.

முல்லைத்தீவில் முஸ்லிம்–தமிழ் உறவின் ஆழத்தை பல உள்ளூர் உதாரணங்களைக் கொண்டு விளக்கலாம். முஸ்லிம்களும் தமிழர்களும் பொருளாதார ரீதியாக விவசாய, வர்த்தக நடவடிக்கைகளில் பங்காளிகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்ததற்கு இப்பிரதேசத்தில் பல உதாரணங்கள் உள்ளன. முல்லைத்தீவில் பல இடங்களில் தமிழ் மக்களினதும், முஸ்லிம்களினதும் விவசாய நிலங்கள் அருகருகே காணப்பட்டன. விவசாய நடவடிக்கைகளுக்காக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றாகச் சேர்ந்து செல்வதும் ஒருவரின் விவசாய வேலைகளில் மற்றவர் உதவுவதும் நாளாந்த நடவடிக்கைகளாக இப்பிரதேசத்தில் காணப்பட்டன. அது மட்டுமன்றி முல்லைத்தீவில் முஸ்லிம் குடியிருப்புக்கள் தமிழ் குடியிருப்புக்களை அண்மிய சூழலில் காணப்பட்டன. உதாரணமாக தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரப் பிரதேசத்தில், முல்லைத்தீவு நகரில் தமிழ் மக்களுடன் இணைந்து முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். அதனால் இவ்விரு இன மக்களும் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திக்கவும், சுகம் விசாரிக்கவும், நல்லது கெட்டதுகளில் பங்குபற்றவும் அதிக வாய்ப்புக்கள் இருந்தன. முல்லைத்தீவில் தமிழ்–முஸ்லிம் உறவின் இரகசியம் இந்தக் கூட்டு வாழ்க்கையில்தான் மறைந்திருந்தது.

கலாசார ரீதியாக முஸ்லிம்களின் நோன்பு, ஹஜ் பெருநாள் தினங்களில் தமிழ் நண்பர்கள் விசேஷடமாக அழைக்கப்பட்டு விருந்துபசாரம் செய்யப்படும் வழமை இங்கு காணப்பட்டது. அது போன்று திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளிலும், மரணம் போன்ற துக்க நிகழ்ச்சிகளிலும் இரு சாராரும் பரஸ்பரம் கலந்து கொள்வர். அதே போல தமிழ் மக்களின் சித்திரை வருடம், தைப்பொங்கல் பண்டிகைகளில் முஸ்லிம்கள் பாரபட்சமின்றி கலந்து கொள்வார்கள். குறிப்பாக சித்திரை வருட கொண்டாட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளில் முஸ்லிம்கள் மிக ஆர்வமாக கலந்து கொண்டு தமிழ் மக்களின் இவ்விழாவை சிறப்பிப்பதுண்டு. இவ்விழாக்களில் முஸ்லிம்கள் சைக்கிள் ஓட்டம், வண்டில் சவாரி போன்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடுவது இப்பிரதேசத்தில் வழமையாகக் காணப்பட்டது.

முல்லைத்தீவில் வைகாசி மாதத்தில் நடைபெறும் வற்றாப்பாளை அம்மன் கோவில் திருவிழாப் பொங்கலில் முஸ்லிம்கள் வர்த்தகர்களாக, பார்வையாளர்களாக கலந்து கொள்வார்கள். அது போல முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்ததின விழா, கொடியெடுத்தல் நிகழ்ச்சிகளில் நடைபெறும் சீனடி, சிலம்படி போன்ற கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்காக தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வருவதுண்டு. அது போல காட்டு



விநாயகர் கோவில், ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவில், வற்றாப்பாளை கண்ணகியம்மன் கோயில் திருவிழாக்களில் நடைபெறும் நாட்டுக்கூத்து, இசைக் கச்சேரி, நாடகம் போன்றவற்றை ரசிப்பதற்கு முஸ்லிம்கள் செல்வதுண்டு. இவ்விரு இனங்களுக்கிடையில் மேற்குறித்தவாறான கலாசார அம்சங்களிலான பரஸ்பர ஈடுபாட்டிற்கு இவ்விரு மக்களினதும் இனப் புரிந்துணர்வுப் பண்புகள் காரணமாக இருந்தன. இவ்வினப் புரிந்துணர்வு இவ்விரு இன மக்களும் ஒரே பிரதேசத்தில் இரண்டறக் கலந்து வாழ்ந்தமையால் ஏற்பட்டதாகும்.

தமிழ் மக்கள் இனப் பிரச்சினையால் துன்பமடைந்த போது முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கு உதவுவதன் மூலம் அத்துன்பத்தை பகிர்ந்து கொண்டார்கள். மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளில் முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கு பல்வேறு வழிகளில் உதவினார்கள். உதாரணமாக இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்கு முஸ்லிம் கிராமங்களில் அடைக்கலம் கொடுக்கப்பட்டது. இதற்குப் பிரதியுபகாரமாக யுத்த காலத்திலும் மற்ற நேரங்களிலும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டபோது தமிழ் மக்கள் முன்வந்து உதவி செய்தார்கள்.

## 6.2 இனப்பிரச்சினையும், முஸ்லிம்களும்:

இனப்பிரச்சினையின் பிரதிபலிப்பான உள்நாட்டு யுத்தத்தால்[3] மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் முல்லைத்தீவும் ஒன்றாகும். அதிலும் குறிப்பாக முல்லைத்தீவில் முல்லைத்தீவு நகரமும், நகரம் சாந்த பிரதேசமும் யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. காரணம் மிக நீண்ட காலமாக மேற்குறித்த பிரதேசம் இராணுவத்தினரின் கேந்திர ஸ்தானமாக இருந்து வந்தமையாகும். அதாவது இலங்கை இராணுவத்திற்கு (இந்திய இராணுவமும்[4] கூட) கடல் மார்க்கமாக முல்லைத்தீவை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முல்லைத்தீவு நகரம் சார்ந்த துறைமுக பிரதேசம் வசதியாக இருந்தது. அதனால் இவர்கள் நகரத்தையும், அதன் சூழற் பிரதேசத்தையும் இராணுவ வலயமாக பிரகடனப்படுத்தி தமது பாதுகாப்பை மேலும் பலப்படுத்தி வந்தனர்.

அதே நேரத்தில் ஆயுதக் குழுக்கள் முல்லைத்தீவின் காட்டுப்பகுதியில் தமது கெரில்லாப் பதுங்கு தளங்களை அமைத்து தம்மைப் பலப்படுத்தி இருந்தனர். கெரில்லா இயக்கத்தினர் முல்லைத்தீவு நகர இராணுவ தளத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெரில்லாப் போர் முறையால் அடிக்கடி தாக்கி இராணுவத்திற்கு சவால் விட்டு வந்தனர்.

முல்லைத்தீவின் கரையோரத்தில் இருந்து இராணுவத்தினர் தமது இராணுவ செல்வாக்கை உள்நாடு நோக்கி விஸ்தரிக்க முற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தமிழ் ஆயுதக் குழுக்களால் கண்ணிவெடிகள் மூலமாகவும், கெரில்லா யுத்த முறை மூலமாகவும் இராணுவத்தினர் தாக்கப்பட்டனர். இதற்குப் பதிலடியாக இராணுவத்தினர் தமது இராணுவ நிலைகளில் இருந்து கொண்டு மோட்டார் செல், பீரங்கித் தாக்குதல்கள் மூலமாக உள்நாட்டுப் பிரதேச கெரில்லா நிலைகளைத் தாக்கி வந்தனர். சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் பெருமளவு எண்ணிக்கையில் உள் நாடு நோக்கி கால்நடையாகவும், வாகனங்கள் மூலமாகவும் சென்று தமிழ் ஆயுதக் குழுக்களைத் தாக்கி அழிக்கவும் முற்பட்டு வந்தனர்.

இந்த இராணுவ-தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதப் போராட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்டது முல்லைத்தீவு நகர எல்லைகளில் வசித்த அப்பாவி மக்களாவர். இராணுவத்தின் செல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் இக்கிராமங்களைக் குறியிட்டே நிகழ்ந்தன. ஆயுதக் குழுக்களை தேடி அழிக்கும் இராணுவத்தின் முயற்சியும் இவ்வெல்லைக் கிராமங்களையே இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டன. இதற்குக் காரணம், இவ்வெல்லையோரக் கிராமங்களில் ஒழித்திருந்தே தமிழ் ஆயுதக் குழுக்கள் இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமையாகும். ஆனால் உண்மையில், இராணுவத்தின் செல் தாக்குதல்களாலும், மற்றும் இராணுவ நடவடிக்கைகளினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி தமிழ்-முஸ்லிம் மக்களாவர். அதிலும் குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கும் அவர்களின் கிராமங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் சொல்லில் அடங்காதவையாகும். காரணம் முல்லைத்தீவு நகரில் இருந்து உள்நாடு நோக்கி வருகின்ற பிரதான பாதையில் காணப்படுகின்ற முதலாவது கிராமம் ஹிஜ்ராபுரம் என்ற முஸ்லிம் கிராமமாகும். அதற்கு அடுத்தது நீராவிப்பிட்டி என்ற முஸ்லிம் கிராமம். மூன்றாவதாகக் காணப்பட்டது தண்ணீரூற்றின் முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதியாகும்.

அதிலும் குறிப்பாக ஹிஜ்ராபுர முஸ்லிம் கிராமத்தை எடுத்துக் கொண்டால் இக்கிராமத்திற்கும் முல்லைத்தீவு நகரத்தில் இருந்த இராணுவ முகாமிற்கும் இடையில் ஒரு பெரும் திறந்த வெளி காணப்பட்டது.



இராணுவத்தினர் இவ்வெளியினூடாக உள் நாடு நோக்கி படையெடுத்து வந்தால் அதனை ஹிஜ்ராபுரத்தில் இருந்து மிகத்தெளிவாக அவதானிக்கலாம். அவ்வாறு வருகின்ற இராணுவ வாகனங்களை அல்லது கால் நடையாக வருகின்ற படை வீரர்களை தமிழ் ஆயுதக் குழுக்கள் ஹிஜ்ராபுரத்தில் இருந்து தாக்குவார்கள். இத்தாக்குதலுக்கு பதிலடியாக இராணுவத்தினர் தமது இராணுவ நிலைகளில் இருந்து மோட்டார் செல் தாக்குதல்களை நடத்துவார்கள்.

இராணுவ-தமிழ் ஆயுதக் குழுக்களுக்கிடையிலான ஆயுத போராட்டத்தில் இம் முஸ்லிம் கிராமத்தவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள். உயிர் இழப்பும், பொருள் சேதமும் இக் கிராம மக்களுக்கு அடிக்கடி ஏற்பட்டன. பல அப்பாவி முஸ்லிம்கள் உயிர்களை இழந்தார்கள். வேறு பலர் காயப்பட்டார்கள். யுத்த நடவடிக்கைகளினால் பல லட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது. காரணமாக இறந்த முல்லைத்தீவு முஸ்லிம்களின் பெயர் விபரங்கள் பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன. இப்பின்னிணைப்பு அட்டவணையிலிருந்து 1984இல் இருந்து 1990 வரையில் மொத்தமாக 23 பேர் உயிரிழந்ததை அறியக் கூடியதாக இருக்கின்றது. இதில் சேர்க்கப்படாத இறந்த வேறுபலரும் இருக்கலாம். இவ்வாறு உயிரிழந்தவர்களில் மிக அதிமானவர்கள் இலங்கை, இந்திய இராணுவங்களினது பாராமுகமான தாக்குதல்களினால் உயிரிழந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்யுத்த நடவடிக்கையில் அதிகமாகப் பாதிக்கப்பட்டது ஹிஜ்ராபுரமாகும். ஹிஜ்ராபுரம் இராணுவ முகாம்களுக்கு அண்மையிலும், இராணுவ முகாமை எதிர்நோக்கிய திசையிலும் அமைந்திருந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். இக் கிராம மக்களுக்கு ஏற்பட்ட உயிர், பொருள் இழப்புக்களோடு இக்கிராம மக்களின் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளும் இதனால் பாதிக்கப்பட்டன. குறிப்பாக இக்கிராமத்தின் நந்திக்கடல் மீன்பிடி, வடக்குவெளிவயல் வேலைகள் இதனால் முற்றாகத் தடைப்பட்டன. ஹிஜ்ராபுரத்தைப் போல அதன் அயல் முஸ்லிம் கிராமமான நீராவிப்பிட்டி, தண்ணீரூற்றுக் கிராமங்களும் இவ் யுத்த நடவடிக்கைகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. 1987ஆம் ஆண்டு நவம்பர் மாத காலத்தில் இந்திய இராணுவத்தின் கடுமையான செல் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்றைச் சேர்ந்த கணிசமான முஸ்லிம்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறி நெடுங்கேணி, வவுனியா ஊடாக புத்தளம் வந்து அகதியானார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இரு வாரங்களில் இந்திய இராணுவத்தினர் ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, வற்றாப்பளை முள்ளியாவளை, மாமூலை, கணுக்கேணி, குமாரபுரம் போன்ற தமிழ்–முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி இப்பகுதியில் எஞ்சியிருந்த முஸ்லிம், தமிழ் மக்களை பலவந்தமாக இவர்களின் வீடுகளைவிட்டு வெளியேற்றினார்கள். யாரும் இப்பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் புத்தளம், அநுராதபுர மாவட்டங்களுக்குச் சென்று அகதிகளாக சில காலம் வாழ்ந்தார்கள்.

ஹிஜ்ராபுரத்தை விட்டு முஸ்லிம்கள் வெளியேறிய உடன் இந்திய இராணுவம் இக்கிராமத்திற்குள் நுழைந்து முகாம் ஒன்றை அமைத்துக் கொண்டது. இக்காலத்தில் ஹிஜ்ராபுர ஜும்மாப் பள்ளிவாசல் இந்தியப்படையினரின் தலைமை முகாமாகவும், இக்கிராம மதுரசா படையினரின் சமையலறையாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்தியப்படையினர் இலங்கையை விட்டு வெளியேறும் வரை முஸ்லிம்களின் மேற்குறிப்பிட்ட வணக்கஸ்தலங்கள் இராணுவ முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

## 6.3 இரண்டாவது ஈழ யுத்தமும் முல்லைத்தீவு முஸ்லிம்களும்:

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி வடக்குக்–கிழக்கில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான "முழு அளவிலான"[5] யுத்தம் ஆரம்பமாகியது. இவ் யுத்தம் முல்லைத்தீவு நகரிலும், அதன் சூழல் பிரதேசங்களிலும் மிக உக்கிரமமாக நடைபெற்றது. இவ் யுத்தால் இப்பிரதேசத்தில் உணவு, அத்துடன் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கு பற்றாக்குறையும், தட்டுப்பாடும் ஏற்பட்டது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்–முஸ்லிம் மக்கள் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினையாலும், பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் இப்பிரதேசத்தை விட்டு இடம் பெயர்ந்து தற்காலிகமாக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ் நிலைக்குள்ளானார்கள். தமிழ் மக்கள் யுத்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி உள்நாடு நோக்கி தமிழ் கிராமங்களுக்கு அபயம் தேடிச் சென்றார்கள்.[6]



யுத்த பிரதேச சூழலில் வாழ்ந்த முஸ்லிம்களும் மேற்குறித்த காரணங்களால் இடம் பெயரத் தீர்மானித்தார்கள். 1990 ஜூலை 6ஆம் திகதி முல்லைத்தீவு முஸ்லிம்களில் ஒரு குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தினர் கால்நடையாக பல நாட்கள் பிரயாணம் செய்து பாதுகாப்பான இடங்களை அடைந்தார்கள். முல்லைத்தீவு முஸ்லிம்களின் ஜூலை இடப் பெயர்ச்சி இந்நூலின் 8.1 பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. *இலங்கையில் முஸ்லிம் தமிழ் உறவு பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. உதாரணமாக Sivathamby (1987); McGilvery (1974 ); Saleem (1990) ஆகிய கட்டுரைகள் முஸ்லிம்–தமிழ் உறவு பிணக்கற்றதொன்றாகவும், ஒற்றுமை கொண்டதாகவும் காணப்பட்டன என்பதை தெளிவுபடுத்துகின்றன.*

2. *இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என இன அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பாடசாலைகளில் மிகப் பெரும்பான்மையானவை தமிழ் மொழிப் பாடசாலைகளாகும்.*

3. *இலங்கையின் வட–கிழக்குப் பிரதேசத்தில் 1986ஆம் ஆண்டில் இருந்து ஒரு உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகின்றது. இலங்கை இராணுவத்திற்கும், தமிழ் கெரில்லாக்களுக்கும் இடையில் இவ்யுத்தம் நடை பெறுகின்றது.*

4. *இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி இந்திய இராணுவம் இலங்கை வந்தது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் நோக்கில் இப்படை இலங்கைக்கு வந்தமையால் இந்திய சமாதானப் படை (I.P.K.F) என்று அழைக்கப்பட்டது. இப்படை இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் படி 1989 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கையில் இருந்து வெளியேறியது.*

5. *இதற்கு முன்னர் இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைபுலிகள் களுக்கும் இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே யுத்தம் நடந்தது. 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ந் திகதியில் இருந்து இவ்விர சாராருக்குமிடையிலான யுத்தம் வடக்குக் கிழக்கில் அதே காலத்தில் பரவலாக நடை பெற்றது.*

6. *1990 ம் ஆண்டு ஜூலை மாதத்தில் முல்லைத்தீவின் கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் எண்ணிக்கை 10,000 என அரசாங்கப் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 7. முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றமும் பொருளாதார இழப்பும்

## 7.1 பலவந்த வெளியேற்றம்:

முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழக்கையை திசை திருப்பி சின்னாபின்னமாக்கிய தினம் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதியாகும். அன்றுதான் முல்லைத்தீவில் எஞ்சியிருந்த முஸ்லிம்கள் அனைவரும் இம்மாவட்டத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் உத்தரவிட்டனர். முல்லைத்தீவில் இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த ஆரம்ப காலத்தில் இருந்தே இப்பிரதேசத்தின் யுத்த நடவடிக்கைகளினால் முஸ்லிம்கள் பல துன்பங்களை அனுபவித்தனர். அவ்வாறான சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் மனந்தளர்ந்து போகவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளின் இப்பலவந்த வெளியேற்ற உத்தரவு முஸ்லிம்களை நிலைகுலையச் செய்தது. இவ்வெளியேற்ற உத்தரவின் தாக்கம் இம்மக்களின் வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கி இன்று வரையில் இம்மக்களுக்கு உரிய பரிகாரமற்ற நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆகவே இவ்வெளியேற்ற உத்தரவுடன் தொடர்புடைய நிகழ்வுகள் பற்றி தெளிவாக அறிய வேண்டியது அவசியமாகும்.

முல்லைத்தீவில் முஸ்லிம்களின் வெளியேற்ற உத்தரவு நீராவிப்பிட்டிக் கிராமத்திலேயே முதலில் அறிவிக்கப்பட்டது. ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் நீராவிப் பிட்டிக் கிராமத்துக்கு விடுதலைப் புலிகளான ஆயுதக் குழுவினர் வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் தமது "அஸர்" அதாவது மாலை நேரத் தொழுகையை நீராவிப்பிட்டிக் கிராம மஸ்ஜிதுன் நூறானியா ஜும்மாப் பள்ளியில் நிறைவேற்றத் தயாராகிக் கொண்டிந்தார்கள். விடுதலைப் புலிகளின் ஆயுதக் குழுவில் முஸ்லிம்களுக்கு நன்கு பரீட்சயமான மனோ, பிரசாத் ஆகிய இரு உறுப்பினர்களும் இருந்தனர். அங்கே தொழுகைக்குத் தயாராகிக் கொண்டிருந்த ஏறக்குறைய 30 முஸ்லிம் ஆண்களை விடுதலைப் புலிளின் உறுப்பினர்கள் அழைத்து பின்வரும்



உத்தரவைப் பிறப்பித்தார்கள். "முஸ்லிம்கள் 48 மணித்தியாலத்திற்குள் முல்லைத்தீவை விட்டு வெளியேறி விட வேண்டும். வெளியேறும்போது பணம், நகை, அது போன்ற பெறுமதியான பொருட்கள் எதையும் தம்மோடு எடுத்துச் செல்லக் கூடாது. அச்சொத்துக்கள் தமிழ் ஈழத்துக்குச் சொந்தமானவை". அத்துடன் அவர்கள் மேலும் கூறியதாவது "இவ்வெளியேற்ற உத்தரவு விடுதலைப் புலிகளின் உயர் பீடத்திலிருந்து அறிவிக்கப் பட்டிருக்கின்றது. இவ்வுத்தரவை மீறுபவர்கள் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும்". இவ்வாறு குறிப்பிட்டதோடு மேற்குறித்த விடுதலைப் புலிகளின் அறிவித்தலை இங்கு கூடியிருப்பவர்கள் ஏனைய முஸ்லிம்களுக்குச் சொல்லி அவர்களையும் வெளியேற்றத்துக்குத் தயார் பண்ணும்படி சொல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் இந்த வெளியேற்ற அறிவித்தலை முஸ்லிம்களால் நம்ப முடியவில்லை. கடந்த காலங்களில் முஸ்லிம்களின் நன்மையில் அக்கறையாக இருந்த இவ்வியக்கத்தினர் இவ்வாறு திடீரென நிர்க்கதியான நிலையில் தம்மை எவ்வாறு சொந்த இடங்களில் இருந்து வெளியேறும்படி கேட்க முடியும் என்று முஸ்லிம்கள் நினைத்தார்கள்.

வெளியேற்ற உத்தரவை அறிவித்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் முஸ்லிம்களுக்கு பரிச்சயமானவர்களாக இருந்தமையால், தமது வெளியேற்ற உத்தரவோடு தமக்கிருந்த வினாக்களை, சந்தேகங்களை தைரியமாக அங்கிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் கேட்டார்கள். இதற்கு பல திருப்தியற்ற நியாயங்களை அவ்வுறுப்பினர்கள் முஸ்லிம்களுக்குக் கூறினர். அத்துடன் விடுதலைப் புலி உறுப்பினர்கள் முஸ்லிம்கள் வெளியேறியே ஆக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தனர். தமது அச்சம் நிதரிசனமாக்கப்படப் போகின்றது என்று அஞ்சிய முஸ்லிம்கள் தமது வெளியேற்ற உத்தரவை மீள் ஆய்வு செய்யும்படி விடுதலைப் புலிகளிடம் மன்றாடினார்கள். விடுதலைப் புலி யினர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக "உத்தரவு மேலிடத்தில் இருந்து வந்துள்ளது அதனை நடைமுறைப் படுத்துவதைவிட வேறுவழி தமக்கில்லை" என்று கூறி விட்டு சென்றுவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் முல்லைத்தீவை விட்டு வெளியேறுவதற்குப் பலவந்தப் படுத்தப்பட்டார்கள் என்ற உண்மையை வெளியேற்ற உத்தரவு அறிவிக்கப்பட்ட பள்ளிவாயில் கூட்டத்தில் பங்குபற்றிய பலரும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். நீராவிப்பிட்டியில் நடைபெற்றதைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்று முத்தையன்கட்டு முஸ்லிம் குடியிருப்பிலும் அதே தினம் வெளியேற்றம் பற்றிய உத்தரவு விடுதலைப் புலி உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டது.

பலவந்த வெளியேற்றம் பற்றிய எழுத்து மூல ஆதாரங்கள் வட மாகாண முஸ்லிம் அகதிகள் (1991) பற்றிய வெளிக்கள ஆய்வில் பயன்படுத்திய வினாக் கொத்தில் சம்மந்தப் பட்டவர்களால் தமது கைப்பட எழுதித் தரப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பூரணப்படுத்தப்பட்ட வினாக் கொத்துக்கள் யாவும் கிராம அடிப்படையிலும், பெயர் அகர வரிசைப்படியிலும் தொகுக்கப்பட்டு Refugee Family Information Vo.1.,1-35 (வெளியேற்றப்பட்ட அகதிகளின் குடும்ப விபரம், தொகுதி 1-35) என்ற தலையங்கத்தைக் கொண்ட அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்விபரத் தொகுப்பிலிருந்து பலவந்த வெளியேற்றம் பற்றிய வேறுபல உதாரணங்களையும் இங்கு குறிப்பிடுவது இவ் வெளியேற்றத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை மேலும் தெளிவுபடுத்த உதவும் அவ்வகையில் பின்வரும் வாக்கு மூலங்கள் தரப்படுகின்றன.

நீராவிப்பிட்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரின் வெளியேற்ற வாக்குமூலம் Refugee Family Information என்ற தொகுப்பின் 34ம் தொகுதியில் 66 ம் பக்கத்தில் பின்வருமாறு பதியப்பட்டுள்ளது.

*"1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ஆம் திகதி காலை 6 மணிக்கு இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து C.C. பாடசாலையில் கூட்டம் உடன் வாருங்கள் என்று அறிவித்தார். நாங்கள் சுமார் காலை 8 மணியளவில் கூடினோம். அங்கு சில இயக்கப் பிரமுகர்கள் வந்தார்கள். கூட்டத்தின் நோக்கம் பற்றிக் கூறினார்கள். கூட்டத்தில் கூறியதாவது வட மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் 25ஆம் திகதி 12 மணிக்கு முன் இம் மாவட்டத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்றார்கள். இதைக் கேட்ட நாங்கள் சில குறுக்குக் கேள்விகள் கேட்டோம். இது மேலிடத்து உத்தரவு என்று கூறினார்கள்.*

*நாங்கள் திகைப்புற்றதிலிருந்து ஒருவாறு தெளிந்து அவரவர்கள் வீட்டுக்குப் போனோம். நான் வீட்டுக்குப் போன போது எனது மனைவியும் பிள்ளைகளும் கூட்டத்தைப்பற்றி விசாரித்தார்கள். விடை சொல்லத் தெரியாமல் நின்ற நான் அக்கம் பக்கம் திரும்பிய போது எனது மில்லில் உள்ள அரிசிக் குவியலும் நெல் மூடைகளும் கண்ணுக்கு முன் வந்தன. மறு பக்கத்தில் மாடுகள் நின்று கொண்டிருந்தன. இவற்றைப் பார்த்ததும் அழுகை வந்து விட்டது. அழுதே விட்டேன். பின் மனைவி ஒருவாறு தேற்றி என்ன நடந்தது என்று கேட்டார். கூட்டத்தில் இயக்கம் கூறியதை மனைவியிடம் கூறினேன். இவை எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போவது என்று முடிவு கட்டி இரவு 9.30 க்கு தொழுது விட்டு கால்நடையாக அயல் குடும்பங்களுடன் நடந்து மூன்று நாட்களின் பின் வவுனியாவுக்கு வந்து அடைந்தோம். அதன் பின் வவுனியாவில் இருந்து நல்லாந்தழுவை முகாமுக்கு வந்து சேர்ந்தோம். இன்னும் அங்கேயே இருக்கின்றோம். அரசின் நிவாரணங்களும் சில தனியார் உதவிகளும் கிடைத்தன. இப்போது எதுவும் இல்லை. அரசின் நிவாரணம் நாங்கள் வீட்டில் சாப்பிட்டது போல் சாப்பிடக் காணாது. ஆகையால் அரை குறையாக காலம் கடக்கின்றது. எனது பிள்ளைகள் முன்பைப் போல சாப்பிட நினைக்கின்றார்கள். அதை நிறைவேற்ற இப்போது என்னால் முடியவில்லை. இப்போதைய அதி முக்கிமான கஷ்டம் தொழிலில்லை. வேலை வாய்ப்பும் இல்லை."*

ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த 45 வயதுடைய முஸ்லிம் ஒருவரின் அனுபவம் பின்வருமாறு காணப்படுகின்றது.

*"25-10-1990 (ஹிஜ்ராபுர) மதுரசா ஒன்றில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு நீங்கள் அனைவரும் இரண்டு நாளைக்குள் வவுனியாவுக்கு அப்பால் சென்று விட வேண்டும் என பயங்கரவாதிகள் கட்டளையிட்டனர். அன்றே அவர்கள் வாகனம் ஒன்றில் எங்களை ஏற்றி வந்து விட்டார்கள். அங்கிருந்து வவுனியா முகாமில் இருந்து வாகனம் ஒன்றில் இக்கிரிக்கொல்லாவை வந்து அடைந்தோம். அரசாங்க வாகனம் ஒன்றில் கொடிப்பள்ளி அகதி முகாம் முஸ்லிம் நிவாரம் ஒன்றால் அமைக்கப்பட்ட குடிசை ஒன்றில் வாழ்ந்து வருகின்றோம்" (Refugee Family Information, Vol 34:6).*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லைத்தீவு முஸ்லிம்களைத் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறும் படி விடுதலைப் புலிகள் அறிவித்த அதே தினம் ஏறக்குறைய அதற்குச் சமமான நிகழ்வுகள் வட மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்த ஏனைய பல பிரதேசங்களிலும் நிகழ்ந்தன. உதாரணமாக ஒக்டோபர் 22ஆம் திகதி மன்னார் தீவு முஸ்லிம்கள் இரு நாள் அவகாசத்தில் வெளியேறும்படி விடுதலைப் புலியால் கேட்கப்பட்டார்கள். மன்னார், முசலி முஸ்லிம் மக்கள் இதே தினம் மாலை இரு நாள் அவகாசத்தில் வெளியேறும் படியும் இவர்களால் உத்தரவு இடப்பட்டார்கள். மன்னார் மாந்தை முஸ்லிம்கள் மத்தியில் ஒக்டோபர் 23ஆம் திகதி இவ்வெளியேற்ற அறிவித்தல் அறிவிக்கப்பட்டது. வட மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாண நகரில்[1] மட்டும்தான் இவ்வெளியேற்ற உத்தரவு எட்டு நாளின் பின்பு அதாவது ஒக்டோபர் 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. ஆனால் வடக்கில் ஏனைய பிரதேசங்களைப் போல் அல்லாமல் யாழ்ப்பாண நகர முஸ்லிம்கள் வெளியேறுவதற்கு ஆக இரண்டு மணித்தியாலங்களே அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தன.

இவ்வெளியேற்ற அறிவித்தலில் உள்ள மற்றுமொரு முக்கிய அம்சம் வட மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்த எல்லாப் பிரதேசங்களிலும், வெளியேற்றச் செய்தியின் சாரம்சமும், வெளியேற்றுவதற்குப் பின்பற்றிய முறையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தமையாகும். மேற் குறித்த வெளியேற்றத்துடன் தொடர்பான தொடர்ச்சியான நிகழ்வுகளை ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றும் விடுதலைப் புலிகளினது நடவடிக்கையானது மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் செய்யப்பட்டது என்பது புலனாகின்றது.

1990ஆம் ஆண்டு வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட் காலத்தில் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக வடமாகாணத்தில் ''சக்திவாய்ந்த இயக்கமாக''[2] காணப்பட்டது. விடுதலைப் புலியின் உத்தரவுகளை நிராயுதபாணியான பொது மக்களால் மீறி இருக்க முடியாது. அவ்வாறு மீறியவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் பற்றியும் முஸ்லிம் மக்கள் நன்கு அறிவார்கள். இக்காரணங்களால் விடுதலைப் புலிகளின் கட்டளைக்கு அடிபணிந்து தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறுவதைவிட முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு வேறு மார்க்கம் அப்போது இருந்திருக்கவில்லை.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் மிகுந்த மனத்துயரத்துடன் தமது சொத்து சுகங்களை இழந்த நிலையில் ஒக்டோபர் 25ஆம் திகதி முல்லைத்தீவை



விட்டு வெளியேறினார்கள். விடுதலைப் புலிகள் தமது வாகனங்களில் முஸ்லிம்களை ஏற்றி முல்லைத்தீவில் இருந்து 60 மைல்களுக்கு அப்பால் வவுனியா நகருக்கு அருகாமையில் உள்ள தாண்டிக் குளம் என்னும் இடத்தில் இறக்கிவிட்டுச் சென்றார்கள்.

முல்லைத்தீவுடன் இரண்டறக் கலந்த சமூகமாக முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். அவ்வாறிருந்தும் சமய ரீதியாக இம்மக்கள் தனிமைப்படுத்தப்பட்டு இவர்களின் சொந்த இடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இவ்வெளியேற்றம் பலம் வாய்ந்த ஒரு ஆயுதக் குழுவின் தன்னிச்சையான நடவடிக்கை என்ற ஒன்றாக மட்டும் இருக்குமானால் இதுபற்றி அதிக கவலைப் படத் தேவையில்லை. மாறாக இது வடக்கு, தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை உறுதியாக நம்பும் ஒரு இயக்கத்தின் செயற்பாடாகும்.

இவ்வியக்கம் முஸ்லிம்கள் முல்லைத்தீவில் சம பங்காளிகள் என்பதையும், முஸ்லிம் மக்கள் தாம் வாழ்ந்த பிரதேசத்தை தமது பூர்வீக பிரதேசமாகக் கொள்வதற்கு நியாயம் இருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொள்ளும் போது தான், முஸ்லிம்கள் பன்னெடுங்காலமாக தமிழ் மக்களோடு உடன் பிறவா சகோதரர்களாக வாழ்ந்ததன் பெறு பேற்றைப் பெற்றவர்களாக ஆவார்கள். இது முல்லைத்தீவு முஸ்லிம்களின் அன்பான அத்துடன் உறுதியான வேண்டுகோளாகவும் காணப்படுகின்றது. முல்லைத்தீவு முஸ்லிம்களால் இந்நூலுக்கு தரப்பட்ட அணிந்துரையில் இது தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முல்லைத்தீவு முஸ்லிம்களின் இவ்வேண்டுகோளுக்கு மிகவும் சாதகமான சூழ்நிலைகள் இன்று விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்தில் காணப்படுவதை முல்லைத்தீவு முஸ்லிம்களால் உணர முடிகின்றது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

## 7.2 பலவந்த வெளியேற்றமும், பொருளாதார இழப்பும்:

''வெளியேற்ற உத்தரவு'' முஸ்லிம்களை நிலைகுலையச் செய்தது. தாம் வாழ்ந்து பழகிய பிரதேசத்தை முற்றாக மறந்து வெளியேறும்படி முஸ்லிம்கள் வற்புறுத்தப்பட்டார்கள். வெளியேற்றத்தின் போது தமது உடமைகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இப்பலவந்த வெளியேற்றம் பல்வேறு வகைகளில் முஸ்லிம்களைப் பாதித்தது. இப்பாதிப்புக்களை சமூக, கலாசார, பொருளாதார உளவியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணோட்டங்களில் வகைப்படுத்தி நோக்க முடியும். இவ்வாய்வில் பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட பொருளாதார தாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

சொத்து இழப்பு பொருளாதார தாக்கத்தில் முக்கியமானதாகும். ஒரு குடும்பத்திற்கு சொந்தமான உடமைகளை அசையும், அசையா சொத்துக்கள் என இருவகைப்படுத்தலாம். புவியியல் ரீதியாக இடம் மாற்றக் கூடிய பணம், ஆபரணங்கள், பொருட்கள், வாகனஙகள, மிருகங்கள் ஆகியன "அசையும் சொத்துக்கள" (Movable Assets) எனப்படும். புவியியல் ரீதியாக மாற்றம் செய்ய முடியாத வீடு, காணி, வர்த்தக கைத்தொழில் சேவை நிலையங்கள் "அசையாச் சொத்துக்கள்" (Immovable Assets) எனப்படும்.

முல்லைத்தீவு முஸ்லிம்களின் பொருளாதார அடிப்படைகள் இந் நூலில் இதற்கு முன்னர் வெவ்வேறு இடங்களில் அடையாளப்படுத்தப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவற்றினைத் திரும்பவும் சற்று நினைவு படுத்தலாம். இம்மக்களின் விவசாயப் பொருளாதார அடிப்படைகள் பற்றிய மிகத் தெளிவான விபரங்கள் படம்-6இலும், படம்-8 இலும் அடையாளம் இடப்பட்டு விளக்கப்பட்டுள்ளன (அத்தியாயம்-4). இப்பொருளாதார அடிப்படையில் விவசாயக் காணிகளின் பரிமாணமும் இக்காணிகள் அமைவுற்றிருந்த இட அமைவும் அட்டவணை-3 ல் தரப்பட்டுள்ளன. இது போலவே இம்மக்களுக்குச் சொந்தமான வர்த்தக, கைத்தொழில், சேவை, பொருளாதார அடிப்படைகள் பற்றி அத்தியாயம் 4 இன் 4.3 பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. படம்-6உம், படம்-8உம், அட்டவணை 4ம், 5ம் மேற்குறித்த பொருளாதார அடிப்படைகள் பற்றிய ஆதாரங்களைத் தருகின்றன.

மேற்குறித்த முஸ்லிம்களின் பொருளாதார அடிப்படைகள் பற்றிய விபரங்கள் கவனமாக விசாரித்து உண்மை நிலை அறிந்து சேகரிக்கப்பட்டதாகும். இவை நம்பத்தகுந்த ஆதார பூர்வமான விபரங்களாகும். இது போல இந்நூலில் முல்லைத்தீவு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்ட சமய, கல்வி நிலையங்கள் பற்றிய விபரங்களும் (படம்-4) விவசாயப் பொருளதார அடிப்படைகளான நீரூற்று, நீர்ப்பாசனக் கால்வாய்களும், மீன்பிடிப் பொருளாதார அடிப்படையான நந்திக்கடல் மீன்பிடிப் பிரதேசமும் (படம்-6) அவற்றின் பொருளாதார முக்கியத்துவங்களும் தெட்டத்தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றினைத் தொகுத்து நோக்கும் போது முல்லைத்தீவு முஸ்லிம்கள்



உறுதியான பொருளாதார அடிப்படைகளைக் கொண்ட மக்களாக தமது பூர்வீக இடங்களில் வாழ்ந்து வந்தார்கள் என்ற உண்மை நன்கு புலனாகின்றது.

துரதிஷ்டவசமாக இம்மக்களுக்கு உரித்தான அத்துடன் மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த மேற்குறித்த பொருளாதார அடிப்படைகள் யாவும் இம்மக்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயனற்ற நிலையில் இன்று காணப்படுகின்றன. அசையும் சொத்துக்கள் இம்மக்களால் மீளப் பெற முடியாதவைகளாகி விட்டன. அசையாத சொத்துக்ளைப் பொறுத்தவரை முல்லைத்தீவுக்கு இம்மக்கள் மீள செல்லும் போது உடனடிப் பயன்பாடு அடிப்படையில் எந்த நிலையில் இச் சொத்துக்கள் இருக்கும் என்பது ஒரு பெரிய வினாவாகும். ஒன்றில் இச் சொத்துக்கள் கடுமையான பாதிப்புக்கு உட்பட்டதாக அல்லது முற்றாக அழிந்த நிலையில் இருப்பதற்கு நிறைய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் மீளச் செல்லும்போது இப் பொருளாதார இழப்புகளுக்கு நியாயமான நிவாரணம் கிடைக்கச் செய்வது இம்மக்களின் வாழ்க்கையை புதிதாக ஆரம்பிக்கும் நேரத்தில் மிகவும் அவசியம் ஆகும்.

இதுவரை பலவந்த வெளியேற்றத்தினால் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் பொதுமைப்படுத்தப்பட்ட முறையில் விளக்கப்பட்டன. இச் சந்தர்ப்பத்தில் மற்றும் ஒரு கண்ணோட்டத்திலும் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களை நோக்க வேண்டியது அவசியமாகும். அதாவது பலவந்த வெளியேற்றத்தின் போது ஏறக்குறைய 1200 முஸ்லிம் குடும்பங்களும் தத்தமது பொருளாதார தரத்துக்கு ஏற்ப பல அசையும், அசையாச் சொத்துக்களை உடமையாக வைத்திருந்தார்கள் என்பதை நாம் மறக்கலாகாது. அந்த அடிப்படையில் பலவந்த வெளியேற்றத்தால் தனிப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் முறைப்படி தொகுக்கப் பட்டு காட்டப்பட வேண்டியது பாதிக்கப்பட்ட இம்மக்களின் எதிர்கால பொருளாதார நன்மை கருதி மிகவும் அவசியமானதாகும்.

அதிஷ்டவசமாக குடும்ப மட்டத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்த அசையும், அசையா சொத்துக்களை ஆய்வு பூர்வமாக தொகுத்து நூலாக்குவதற்கான வாய்ப்பு இந்நூலாசிரியருக்கு கிடைத்திருந்தது என்பதை இந்நூலின் அறிமுகத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம். இக் குடும்ப இழப்பு பற்றிய விபரம் 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நூலாசிரியரின் தலைமையில் செய்யப்பட்ட வட மாகாண முஸ்லிம் அகதிகளின் பிரச்சினை என்ற தலையங்கத்திலான வெளிக்கள ஆய்வில் இருந்து பெறப்பட்டன.

இவ்வாய்வில் இருந்து பலவந்த வெளியேற்றத்தால் முல்லைத்தீவு முஸ்லிம்களின் அசையும், அசையா சொத்துக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாய்வின் மூலமாகவே வெளியேற்றத்தின் போது முல்லைத்தீவில் மொத்தமாக 1200 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்திருந்தார்கள் என்று மதிப்பிடப்பட்டது. இவர்களில் 821 குடும்பங்களின் சொத்து இழப்பு விபரங்கள் இவ்வாய்வில் திரட்டப்பட்டிருக்கின்றன. பொருளாதார ரீதியாக பல தரத்தினைக் கொண்டவர்களாக இம் மக்கள் காணப்பட்டார்கள். இவர்களுக்குப் பலவகையான அசையும், அசையாச்சொத்துக்கள் உடமையாக இருந்தன. வீடுகள், தளபாடங்கள், காணிகள், மிருகங்கள், வர்த்தக கைத்தொழில் நிலையங்கள், வாகனங்கள், விவசாய மீன்பிடி மின்சார உபகரணங்கள் பற்றிய விவரங்கள் இவ்வாய்வில் திரட்டப்பட்டன.

மொத்தமாக 821 முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பங்களின் இழப்பு விபரங்கள் இம்மக்கள் வாழ்ந்த குடியிருப்பு அடிப்படையிலும், குடியிருப்புக்குள் குடும்பத் தலைவர்களின் பெயர்கள் அகர வரிசை அடிப்படையில் தொகுக்கப் பட்டு தனிப்பட்ட பொருளாதார இழப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் A Report on the Loss of Movable and Immovable Assets of People Ousted from the Northern Provinvce (வட மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் அசையும் அசையாச் சொத்துக்களின் இழப்புப் பற்றிய அறிக்கை பாகம் 1–5) என்ற தலைப்பினைக் கொண்டுள்ளது. மேலே குறிப்பிட்ட அறிக்கையில் பொருளாதார இழப்புக்கள் தனிப்பட்ட குடும்ப மட்டத்தில் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றமையினால், எமது இந்த நூலில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் குடும்ப இழப்புக்களின் மொத்த மதிப்பீட்டையும் அதன் பொருளாதார முக்கியத்துவத்தையும் மட்டும் சுருக்கமாக விளக்குவோம்.

குடும்ப இழப்பு அறிக்கையில் மொத்தமாக 821 முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பத்தினரின் விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களின் மொத்த சனத் தொகை 3869 பேராகும். கிடைக்கப் பெற்ற விபரப்படி பலவந்த வெளியேற்றத்தின் போது சராசரி ஒரு குடும்பத்திற்கு 3 சவரின் ஆபரணமும், 3.8 ஏக்கர் நிலமும் உரிமையாக இருந்தன. ஆய்விற்குட்பட்ட 821



குடும்பத்தினருக்கு மொத்தமாக 3109 மாடுகளும், 2081 ஆடுகளும், 8242 கோழிகளும், 422 வாகனங்களும், 138 மின்சார உபகரனங்களும் உரிமையாக இருந்தன. இது போல இம்மக்களின் ஏனைய இழப்புக்களும் இழப்பு அறிக்கையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. குடும்ப இழப்புக்களின் சாராம்சத்தைத் தருகின்ற இவ்வாய்வில் ஏறக் குறைய 400 முல்லைத்தீவு முஸ்லிம் குடும்பங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் அவர்களின் இழப்புக்கள் இங்கு காட்டப்படவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பலவந்த வெளியேற்றம் முல்லைத்தீவு முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார நிறுவனங்களினதும் அவற்றிற்கு உரிமையாக இருந்த காணிகள் கட்டடங்கள் ஆகியவைகளின் இழப்பிற்கும் காரணமாக இருந்தது. இந்த அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தின் பொதுச் சொத்துக்களின் இழப்புக்களும் சரியாக மதிப்பிடப்பட வேண்டியது அவசியமாகும். முல்லைத் தீவில் மொத்தமாக 7 பள்ளிவாயில்கள் காணப்பட்டன. இப்பள்ளிவாயில்களின் நிர்வாகத்திற்காக பல கட்டடங்கள், தென்னங்காணிகள் உரிமையாக இருந்தன. அரபு கற்பிக்கும் பாடசாலைகளும், சமய ரீதியான ஏனைய பொதுச் சொத்துக்களும் காணப்பட்டன. அத்துடன் முல்லைத்தீவில் மூன்று முஸ்லிம் பாடசாலைகள் காணப்பட்டன. ஆகவே ஒரு சமூகத்தின் சொத்து இழப்பு என்ற அடிப்படையில் இவைகளும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியவைகளாகும்.

இழப்புக்களின் எண்ணிக்கை, இட அமைவு, பொருளாதார முக்கியத்துவம் ஆகியவற்றை அறிகின்ற அதே நேரத்தில் அதன் பண ரீதியான பெறுமதியின் முக்கியத்துவத்தையும் அறிய வேண்டியது அவசியமாகும். சொத்துக்களின் வகை, அளவு அதன் சந்தைப் பணப் பெறுமதி ஆகியவை சொத்துக்களைப் பணப் பெறுமதிப்படுத்துவதில் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும்.

பொருளாதார இழப்புக்கள் பணப் பெறுமதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இந்த அடிப்படையில் குடும்ப இழப்பு அறிக்கைத் தொகுப்பின் முதலாம் பாகத்தில் (முதலாம் பாகம்: அறிமுகம்) தனிப்பட்ட குடும்பங்களுக்கு உரிமையாக இருந்த சொத்துக்கள் தரப்படுத்தப்பட்டு பெறுமதி இடப்பட்டது. இதில் வீடு, தளபாடம், நிலம், நிகர் விவசாய வருமானம், மீன்பிடி உபகரணம், ஆபரணங்கள், மிருகங்கள், வாகனங்கள் வர்த்தக நிலையங்களின் வருமானங்கள், விவசாய உபகரணங்கள், தானியங்கள், மின்சார உபகரணங்கள், மாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை-6

குடும்ப அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் பொருளாதார இழப்பு விபரம் பற்றிய சுருக்க அட்டவணை, 1990.

| | எண்ணிக்கை |
|---|---|
| குடும்பம் அங்கத்தவர்கள் | 821 |
| மொத்தக் குடிசனம் | 3869 |
| ஆபரணம் (குடும்பத்திற்கு சராசரி) | 3.0 சவரின் |
| நிலம் (குடும்பத்திற்கு சராசரி) | 3.8 ஏக்கர் |
| மொத்த மாடுகள் | 3109 |
| மொத்த ஆடுகள் | 2081 |
| கோழிகள் | 8247 |
| மொத்த தளபாடங்கள் | 133124 ரூபாய் |
| எல்லா வகையான மொத்த வாகனங்கள் | 422 |
| மொத்த மின்சார உபகரணங்கள் | 138 |
| மீன்பிடி உபகரணங்கள் | 252 |

*மூலம் : அகதி வெளிக்கள ஆய்வு 1991.*



ஆகியவை பணப் பெறுமதிப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெறுமதியில் இருந்து சராசரி ஒரு குடும்பத்திற்கு பலவந்த வெளியேற்றத்தால் ஏற்பட்ட மொத்த இழப்பு மதிப்பிடப்பட்டது. இது போல வர்த்தக ஸ்தானங்களுக்கும், விவசாய நிலங்களுக்கும், சமய, சமூக ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்ட இழப்புகளுக்கான பணப்பெறுமதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதனால் இந்நூல் முல்லைத்தீவு முஸ்லிம்களின் மொத்த இழப்புகளை மட்டும் சுருக்கமாக விளக்குகின்றது.

இந்த அடிப்படையில் பலவந்த வெளியேற்றத்தினால் முல்லைத்தீவு முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு 100 கோடி ரூபாயாகும். இதில் குடும்ப மட்டத்தில் 1200 முஸ்லிம் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்பின் மதிப்பு 60 கோடி ரூபாயாகும். அது போல இம்முஸ்லிம்களின் வர்த்தக, கைத்தொழில், சேவை நிலையங்களுக்கும் அந்நிலையங்களில் இருந்த சொத்துக்கள், உபகரணங்களுக்கும் ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய 20 கோடி ரூபாயாகும். அதே நேரத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் சமய, சமூக ஸ்தாபனங்களுக்கும் அவற்றிற்கு உரிமையாக இருந்த சொத்துக்களுக்கும் ஏற்பட்ட இழப்பு 20 கோடி ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நிச்சயமாக பலவந்த வெளியேற்றம் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திய சமூக, கலாசார உளவியல் தாக்கத்தை, பண ரீதியாக பெறுமதிப் படுத்த முடியாது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

முல்லைத்தீவு முஸ்லிம்ளுக்கான நியாயமான ஒரு அரசியல் தீர்வில், பலவந்த வெளியேற்றத்தினால் இம்மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் பற்றியும் அத்துடன் இம்மக்களுக்கு ஏற்பட்ட ஏனைய சமூக, கலாசார, கல்வி பாதிப்புகள் பற்றியும் கவனத்திற்கு எடுக்கப்பட்டு பொருத்தமான பரிகாரம் தேடப்பட வேண்டும்.

இக்கட்டத்தில் பலவந்த வெளியேற்றத்தினால் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பின் தாக்கம் இதே போன்ற இனப் பிரச்சினையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களின் இழப்போடு ஒப்பிடும் போது வித்தியாசமானது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஒப்பீட்டு ரீதியாக பலவந்த வெளியெற்றத்தினால் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை பின்வருமாறு விளக்கலாம்.

இலங்கையின் இனப் பிரச்சினையால் பல இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்திருக்கின்றார்கள். தற்போதும் இடம் பெயர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொண்டிருக்கின்றார்கள். முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு பாதுகாப்பிற்காக வெளியேற வேண்டிய பல சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கின்றன. நிச்சயமாக இம்மக்கள் தற்காலிகமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டதால் இம்மக்களின் வீட்டு உடமைகள் இழக்கப்பட்டன. வயல்கள் விதைக்கப்படாது கைவிடப்பட்டன. வர்த்தக ஸ்தாபனங்களின் வருமானங்கள் இழக்கப்பட்டன. நிச்சயமாக இவைகள் இம்மக்களுக்கு ஏற்பட்ட பாரதூரமான பொருளாதார இழப்புக்களாகும். இவற்றிற்குப் பொருத்தமான நஷ்டஈடும், புனர் நிர்மாணமும் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

அதே நேரத்தில்,மேற்குறித்த பொருளாதார இழப்பிற்கும், பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்ட முல்லைத்தீவு முஸ்லிம்களின் பொருளாதார இழப்பிற்கும் இடையில் அடிப்படையில் பல ஒற்றுமைகள் காணப்பட்டாலும், பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பலவந்த வெளியேற்றத்தால் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை நாம் சற்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி உடுத்திய உடையோடு, வெறுங்கையோடு இம்முஸ்லிம்கள் தமது இல்லிடங்களை விட்டு வெளியேற வேண்டும் என வற்புறுத்தப் பட்டார்கள். வெளியேற்றியவர்கள் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியும் காட்டினார்கள் பலவந்த வெளியேற்றத்தின் போது இம்மக்களின் எல்லா வகையான அசையும், அசையாச் சொத்துக்களும் முற்று முழுதாக கைவிடப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் வெளியேறினார்கள். வீட்டு உடமைகளை மற்றவர்களிடம் கொடுத்துப் பாதுகாக்கக் கூடிய வாய்ப்பு முஸ்லிம்களுக்கு இருக்கவில்லை. அறுவடைக்குத் தயாராக இருந்த வயல் நிலங்களை நண்பர்களிடம் கவனித்துக் கொள்ளும்படி சொல்வதற்கோ, குத்தகை முறையில் ஒரு தொடர்ச்சியான வருமான ஒழுங்குகளை மேற்கொள்ளவோ இவர்களுக்கு அவகாசம் இருக்கவில்லை. அவ்வாறு செய்வதற்கு வெளியேற்றியவர்களின் அனுமதியும் இருக்கவில்லை. அச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் அவ்வாறான வேண்டுகோளை ஏற்றுக் கொண்டும் இருக்கமாட்டார்கள். முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக ஸ்தாபனங்களினதும், கைத்தொழில் நிலையங்களினதும், அங்கிருந்த சொத்துக்களினதும் நிலைமையும் மேற்கூறியவாறே காணப்பட்டன. படம் 11



படம் 11 : முஸ்லிம்களின் (மூன்று கிராமங்கள்) வர்த்தக கைத்தொழில் நிலையங்கள்




ஆதாரம்: வெளிக்கள ஆய்வு, 1996, இலங்கை இடவிளக்கப்படம், 1972.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லைதீவின் மூன்று கிராம பிரதேசத்தில் முஸ்லிம்களால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் வர்த்தக, கைத்தொழில் நிலையங்களில் இட அமைவை காட்டுகின்றது. அதே போல பள்ளிவாசல்கள், மதுரசாக்கள், பாடசாலைகள் போன்ற முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்ட பொதுச் சொத்துக்களும் பலவந்த வெளியேற்றத்தின் போது முற்றுமுழுதாகக் கைவிடப்பட்டன.

கடந்த ஆறு வருடங்களாக முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது பிரதேசத்துடன் தொடர்பற்ற நிலையில் காணப்படுகின்றார்கள். இவர்களின் வீடுகளுக்கு, அதில் இருந்த சொத்துக்களுக்கு, இவர்களின் வயல்களுக்கு, அதில் கதிர்விட்டுக் குலுங்கிக் கொண்டிருந்த நெல்லுக்கு, வர்த்தக ஸ்தாபனங்களுக்கு, அதிலிருந்த இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியான வர்த்தக பொருட்கள், கைத்தொழில் உபகரணங்களுக்கு, அதே போல் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் பாங்கொலி கேட்கும் பள்ளிவாயில்களுக்கு கடந்த ஆறு வருடங்களில் என்ன நடந்தது என்பது இம்முஸ்லிம்களுக்குத் தெரியாது. காரணம் இம்முஸ்லிம்கள் மீளத் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி தமது பொருளாதார நலன்களை, சமய, புனித ஸ்தலங்களைக் கவனிக்க அனுமதிக்கப்படவில்லை. இந்நாட்டில் ஒரு சமூகமாக தமது சொந்த இடங்களுக்கு சுயமாகத் திரும்பிச் செல்வதற்கு வாய்ப்பில்லாத அப்பாவி மக்கள் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் மட்டுமேயாவர். அதில் முல்லைத்தீவு முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றனர்.

இக்கண்ணோட்டத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு என்பது முன்னய சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் வேறுபட்ட ஒன்றாக இருக்கின்றது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த அடிப்படையில் இவர்களுக்குச் சொந்தமான அசையும், அசையாச் சொத்துக்கள் முழுமையாக இழக்கப்பட்டவை எனக் கொள்ள வேண்டியிருக்கின்றது. நியாயமான ஒரு அரசியல் தீர்வில் இம்மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு பொருத்மான பரிகாரங்கள் காணப்பட வேண்டியது மனிதாபிமான அடிப்படையிலும், அடிப்படை மனித உரிமை ரீதியாகவும் அவசியமானதாகும்.

அந்த அடிப்படையில் முதலில் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்த தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களை இம்மக்களுக்கு மீளப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். அடுத்து



இம்மக்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் பொருத்தமான நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில் சமாதான சூழ்நிலையில் முல்லைத்தீவில் மீள் குடியேற்றம் ஒன்று ஏற்படும் போது இம்மக்களின் குடியிருப்புக்கள், பாதைகள், பாடசாலைகள், பள்ளிவாயில்கள், நீர்ப்பாசக் கால்வாய்கள் போன்ற பொதுச் சொத்துக்களும் விஷேட கவனம் செலுத்தப்பட்ட அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

## குறிப்புகள்

1. *1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறுவதற்கு ஆக இரண்டு மணித்தியால அவகாசமே கொடுக்கப்பட்டிருந்தது. (பார்க்க Refugee Family Information, 1996)*

2. *அக்காலத்தில் விடுதலைப் புலிகள் வட மாகாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாகள். இவர்கள் தமது தீர்மானங்களை ஆயுத பலம் மூலம் சாதிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார்கள். த.ச.வி.பு களின் ஆயுத பலத்தையும் நினைத்ததை சாதிக்கும் ஆற்றலையும் இப்பிரதேச மக்கள் நன்கறிந்தவர்களாக இருந்தார்கள். இவ்வாயுதக் குழுவின் தலைமைத்துவத்தின் கட்டளையை எவ்வித ஆட்சேபனையும் இல்லாமல் நிறைவேற்றும் மனப் போக்கைக் கொண்ட ஆயுதம் தாங்கிய உறுப்பினர்களை இவ்வியக்கம் கொண்டிருந்தது. இதனால் இப்பிரதேச மக்கள் ஆயுத ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் இவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டார்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 8. முல்லைத்தீவை விட்டு முஸ்லிம்கள் வெளியேற்றம்

முஸ்லிம்கள் முல்லைத்தீவை விட்டுப் பிரிந்து ஆறு வருடங்களாகின்றன. தமது சொந்த இடங்களுக்கு விரும்பிய நேரம் திரும்பி வர முடியாத நிலையில் இன்று இம்மக்கள் உள்ளனர். இம்மக்கள் அன்று தமது சொந்த இடங்களில் ஸ்திரமான வாழ்க்கை முறையில் இருந்து பலவந்தமாக பிரிக்கப்பட்டார்கள். பலவந்தமாக அகதியாக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை இம்மக்கள் நிலையற்ற நாடோடிகளாக இடத்துக்கிடம் அலைந்து திரிகின்றனர். இவ்வாறான மக்களின் "அகதி"[1] வரலாற்றை பின்வரும் பகுதி விபரிக்கின்றது.

## 8.1 ஜூலை அகதிகள்:

1990ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்வில் ஒரு துக்க கரமான நாளாகும். முல்லைத்தீவு முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் தாம் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் ஏற்பட்ட யுத்த உக்கிரமத்தின் காரணமாக பாதுகாப்பான வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்த நாளாகும்.

முன்னர் குறிப்பிட்டது போல், இக்காலப் பகுதியில் முல்லைத்தீவில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் மிகக் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பாவி மக்கள் இவ் யுத்தத்தால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப் பட்டார்கள். பாதுகாப்புப் பிரச்சினை ஒரு புறமும், உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினை மறு புறமுமாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்-முஸ்லிம் மக்கள் மிகவும் கஷ்டத்திற் குள்ளானார்கள். முல்லைத்தீவு முஸ்லிம்கள் வாழ்ந்த ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, முல்லைத்தீவு நகர் சூழலில் யுத்தமும் பிரச்சினைகளும் மிகக் கடுமையாகக் காணப்பட்டமையால் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் இப்பிரதேசத்தை விட்டு தற்காலிகமாக வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

முஸ்லிம்கள் வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலியினர் முஸ்லிம்களை வெளியேற வேண்டாமென்று கேட்டார்கள். முஸ்லிம்களில்



பலர் இவ்வேண்டுகோளை மீறியும் வெளியேறத் தீர்மானித்தபோது முஸ்லிம்கள் வாகனங்களில் செல்ல விடுதலைப் புலிகள் தடை விதித்தார்கள். இதனால் இம்மக்கள் கால்நடையாகவே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வெளியேற்றம் பற்றி முல்லைத்தீவு நீராவிப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பாடசாலை ஆசிரியரின் தினகுறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

*"அன்று பாடசாலைக்கு நான் சென்றபோது எனக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. எமது மாணவர்களில் இருபது பேரே அன்று பாடசாலைக்கு சமூகம் தந்திருந்தனர். ஜும்மாவுடைய தினமாக இருந்தபடியால் மூன்று கிராமத்து மக்களும் பள்ளியில் சேர்ந்தனர். பெரும்பாலானோர் நாளை இன்சாஅல்லாஹ் பயணம் செய்வோம் என்றனர். மற்றும் சிலர் பிரச்சினை நடந்தால் மட்டும் வெளியேறும் எண்ணத்தில் இருந்தனர். ஒரு சிலர் வெளியேறுவதில்லை என்றனர். மற்றையோர் பிரச்சினை நடந்தால் எங்காவது அருகில் உள்ள இடத்திற்குச் சென்று பின் திரும்புவதாகக் கூறினர்.*

*எமது குடும்பத்தில் ஏற்பட்ட இணக்கம் காரணமாக ஒரு லொறியை வாடகைக்கு அமர்த்தி அதன் மூலம்செல்லுவோம் என்ற முடிவுக்கு வந்தோம். ஆனால் தீவிரவாதிகள் வாகனத்தில் செல்வதை அனுமதிக்கவில்லை. பொருட்களை கட்டிவைத்து விட்டு நண்பர்களைக் கண்டு விபரம் சொல்லி கடன்வாங்கி முடிப்பதற்கு அன்று நள்ளிரவாகி விட்டது. பிறந்ததிலிருந்து வளர்ந்து பெரியவனாக்கிய ஊர், சொத்துக்கள், சொந்தங்கள், உரிமைகள், எல்லாம் தாராளமாகிய இடம் எத்தனையோ? பந்தங்கள், பாசங்கள் ஏற்படக் காரணமாகிய சந்திகள், ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு கதை கூறும் வீதிகள், படித்து பதவிபெறக் காரணமாகிய பாடசாலை, மனிதன் என்ற நிலைக்கு வரவைத்த பள்ளிவாசல், படிப்பினைப் பெற்றுத்தந்த மதுரசா, சிறு சிறு செய்திகள் சொன்ன கடை வீதி, நிதமும் குளித்து*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*வளர்ந்த பீலி, உணவுக்கு உதவி புரிந்த வயல், காணிகள், மேட்டு நிலம், நிதமும் நீர்பாய்ச்சி வளர்ந்த பயிரினங்கள், சிறுகச் சிறுகச் சேர்த்த பொருட்கள், புத்தகங்கள், கொப்பிகள், எம்மில் பலரை வைத்திருக்கும் கபுரடி, உற்சாகமளித்த விளையாட்டு மைதானம், வாசிகசாலை ஆகிய அனைத்தையும் இழந்து செல்வதென்பதால் ஏற்பட்ட மனவருத்தம் தூக்கத்தைக் கலைத்தது.*

*தூங்கியது பாதி விழித்தது பாதியாக இருக்க அந்தப் பொல்லாத நாளாம், 07.07.90 சனிக்கிழமை விடிந்தது. கையில் சிறுசிறு பொட்டலங்களுடன் எம் சின்னஞ் சிறார்கள், வயோதிபர்கள் நடக்க வயதுக்கு ஏற்ற வகையில் பொருட்களைத் தூக்கிக் கொண்டு விடிபொழுதில் விடியாத வாழ்வுக்காய் பயணமானோம். இனி நாங்களும் அகதிகள். சுப்ஃ நேரந் தொடக்கம் நெடுங்கேணி ரோட் மௌனமாய் அழுதது. அதுகூட எம்நிலை கண்டு இரங்கியது என்றே மக்கள் எண்ணினர். வீதியெங்கும் நீர்த்துளிகள். அது மக்கள் கண்களிலிருந்துதான் ஏற்பட்டது என்பது எங்கே மற்றவர்களுக்குப் புரியப் போகிறது.*

*95 வயது தாத்தா முதல் 9 நாள் குழந்தை வரை நெடுங்கேணி வீதி எங்கும் எம்மவர் கூட்டம் எல்லை காணமுடியாத நீளம். எம்மை வழியனுப்ப சிலரும் வேடிக்கை பார்க்க பலருமாக வீதியோரங்களிலும் மனிதத் தலைகள், இளைஞர்களின் முகங்களில் மட்டும் இடையிடையே புன்னகை அரும்பியது"*

இவ்வாறு இடம் பெயர்ந்த முல்லைத்தீவு முஸ்லிம்கள் எங்கு செல்வது, எவ்வாறு செல்வது என்ற நிச்சயமற்ற நிலையில் அன்று காணப்பட்டார்கள். தமது பாதுகாப்பை அக்கால சூழ்நிலையில் உறுதிப்படுத்தக்கூடிய மற்றுமொரு இடம் ஒரு முஸ்லிம் கிராமமாக இருக்க வேண்டும் என்று அம்மக்கள் அன்று விரும்பினார்கள். அவ்வாறான ஒரு பொருத்தமான இடமோ முல்லைத்தீவில் இருந்து மிக நீண்ட தொலைவில் காணப்பட்டது. அதாவது



முல்லைத்தீவில் இருந்து மற்றுமொரு முஸ்லிம் கிராமத்திற்கு வவுனியா மாவட்டத்திற்கு இம்மக்கள் வரவேண்டும். என்றாலும் தமது அப்போதைய அவ்வாறான தேவை கருதி இந் நீண்ட பயணத்தை முல்லைத்தீவு முஸ்லிம்கள் மேற்கொண்டார்கள்.

அக்காலத்தில் வவுனியா மாவட்டத்தில் நகரம் சார்ந்த தெற்குப் பிரதேசம் யுத்தப் பிரதேசமாகக் காணப்பட்டது. அதே போல, வவுனியாவில் பிரதான பாதையை அண்டிக் காணப்பட்ட முஸ்லிம் கிராமங்களும் யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருந்தன. அதனால் முல்லைத்தீவு முஸ்லிம்கள் வவுனியா மாவட்டத்தில் பிரதான பாதைகளில் இருந்து ஒதுங்கிக் காணப்பட்ட காக்கையன் குளம் என்ற முஸ்லிம் கிராமத்தில் தற்காலிக அடைக்கலம் பெறத் தீர்மானித்தார்கள். சிலர் நேராக வவுனியா வழியாக மாவட்டத்தை விட்டு வெளியேறினார்கள். இக்கிராமம் முல்லைத்தீவில் இருந்து 70 மைல் தொலைவில் அமைந்திருந்தது. முல்லைத்தீவு முஸ்லிம்கள் இரு நாட்கள் கால்நடையாக நடந்து ஜூலை 8ஆம் திகதி காக்கையன் குளக் கிராமத்தை வந்தடைந்தனர்.

இரு நாட்கள் இக்கிராமத்தில் தங்கினார்கள். அன்றைய யுத்த சூழலில் காக்கையன் குளம் கிராமமும் தமக்கு பாதுகாப்பைத் தராது என்று இம் முஸ்லிம் அகதிகள் கருதியதால் இக்கிராமத்தை விட்டு ஜூலை 10ஆம் திகதி வெளியேறி காக்கையன் குளத்திற்குத் தெற்காக 10 மைல் தொலைவில் காணப்பட்ட பாவற்குளம் என்ற முஸ்லிம் கிராமத்திற்கு காட்டு வழியாக நடந்து வந்தார்கள். வவுனியா பாவற் குளத்திலும் அக்காலத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படவில்லை. அதனால் ஜூலை 12ஆம் திகதி வவுனியா மாவட்டத்தை விட்டே வெளியேற வேண்டிய இக்கட்டான நிலைக்கு இவ்வகதிகள் உட்பட்டார்கள்.

இங்கிருந்து எங்கு செல்வது என்பது இம்மக்களுக்கு பெரும் தடுமாற்றமாக இருந்தது. யுத்த சூழ்நிலையில் வட மாகாணத்திற்குள் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்தக் கூடிய மற்றுமொரு இடம் இல்லை என்று இம்முஸ்லிம் அகதிகள் கருதியதால் வட மாகாணத்தை விட்டு தற்காலிகமாக வெளியேறி பிற பிரதேசங்களில் அபயம் தேட எண்ணினார்கள். இச்சந்தர்ப்பத்தில் இம்மக்களின் மனதில் உதித்த முஸ்லிம் கிராமம் இக்கிரிக்கொல்லாவையாகும். இக்கிரிகொல்லாவை, வட மத்திய மாகாணத்தில் மதவாச்சிக்கு அண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளது. இக்கிராமத்திற்கும் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கும் இடையில் நட்பு ரீதியான உறவுகள் மிக நீண்ட காலமாக இருந்து வந்தன. அந்தத் தைரியத்தில் ஏறக் குறைய 2000 பேரைக் கொண்ட முல்லைத்தீவு முஸ்லிம் அகதிக்குழு ஒன்று ஜூலை 17ந் திகதி பூனாவை வழியாக (படம்-12) இக்கிரிக்கொல்லாவை என்ற முஸ்லிம் கிராமத்தை அடைந்தது. அவ்வூர் மக்களால் இவ்வகதிகள் வரவேற்கப்பட்டார்கள்.

இவ்வாறு இக்கிரிக்கொல்லாவை வந்தவர்களில் சிலர் இக்கிராமத்தில் தமது நண்பர்களின், வீடுகளிலும், ஏனையவர்கள் அகதி முகாம்களிலும் அபயம் பெற்றார்கள். இவ்வாறு வந்தவர்களில் ஏனையவர்கள் நேராக புத்தளம் மாவட்டம் சென்று அங்கு அபயம் தேட விரும்பினார்கள். புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலை என்ற முஸ்லிம் கிராமத்திற்கு செல்வதென முடிவெடுத்து அங்கு சென்றார்கள். அக்காலத்தில் நுரைச்சோலைக் கிராமத்தில் அரசாங்கத் தென்னந்தோட்டம் ஒன்று காணப்பட்டது. அதனை ''லங்காராணி'' என்று அழைப்பர். நுரைச்சோலை வந்த முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் ''லங்காராணி'' தென்னந்தோட்டத்தில் தமது தற்காலிக வாழ்க்கையை அமைக்க எண்ணம் கொண்டு அவ்வாறும் செய்தனர். ஆரம்ப நாட்களில் இத்தென்னந்தோட்ட மர நிழல்களில் முஸ்லிம் அகதிகள் வாழ்ந்தார்கள். அவ்வாறு வாழ்ந்த அகதிகளுக்கு அக்காலத்தில் எவ்வித அரச நிவாரண உதவிகளும் வழங்கப்பட வில்லை. என்றாலும் அப்போது முஸ்லிம் அகதிகள் நுரைச் சோலை உள்ளூர் முஸ்லிம்களால் மிகவும் நல்ல முறையில் உணவும் ஏனைய வசதிகளும் அளித்துப் பராமரிக்கப்பட்டார்கள்.

முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் அரசாங்கத் தென்னந் தோட்டத்தில் தொடர்ந்து வாழ்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அதற்கு அரசாங்க தென்னந் தோட்டத்தை முஸ்லிம் அகதிகள் தமது நிரந்தரக் குடியிருப்பாக அமைத்து விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக இருந்திருக்கலாம். 1990 ஜூலை பிற்பகுதியில் உதவி அரசாங்க அதிபரின் சிபாரிசின்பேரில் பொலீசார் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளை லங்காராணி தோட்டத்தை விட்டு பலவந்தமாக வெளியேற்றினார்கள். இவ்வனுபவத்தை ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த முல்லைத்தீவு முஸ்லிம் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்.

*"அல்லல் பட்டு இடம் பெயர்ந்து வந்த நாம் பல நாட்கள் பட்டினி கிடந்து வந்து நுரைச்சோலையில் சற்று ஆறுதல் அடைந்த போது லங்காராணி தோட்டத்தில் பொலீசாரால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டமை சமைத்த உணவைக் கையில் தூக்கியவண்ணம் ஆலங்குடா முகாம் வந்தோம்".* (*Refugee Family Information*, vol. 35: 05)



லங்காராணி தென்னந் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களை எங்கு தங்க வைப்பது என்பது அரசினதும், அரசசார்பற்ற நிறுவன அமைப்பினதும் கவலையாக காணப்பட்டது. இறுதியில் இத்தோட்டத்துக்கு அருகாமையில் காணப்பட்ட ஆலங்குடா என்ற முஸ்லிம் கிராமத்தில் மணற் பாங்கான பிரதேசமொன்றில் இவ்வகதிகள் தற்காலிகமாக குடியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ் ஏற்பாட்டில் அதிருப்தி கொண்ட முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளில் ஒரு பகுதியினர் புத்தள மாவட்ட முந்தல் பிரதேசத்தில் உள்ள சமீரகம, பெருக்குவட்டான், கடையாமோட்டை, விருதோடை, நல்லாந்தழுவை, கனமூலை போன்ற முஸ்லிம் பகுதிகளுக்கு அபயம் தேடிச் சென்றார்கள். இம் முந்தல் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்கனவே பரிச்சயமான பகுதிகளாகும். 1987ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இந்திய இராணுவத்தின் கெடுபிடியால் தமது பிரதேசத்தை விட்டு வெளியேறிய முஸ்லிம்களில் சிலர் இப்பிரதேசத்தில் தற்காலிகமாக அகதிகளாக சில காலம் வாழ்ந்து வந்த அனுபவம் இம்மக்களுக்கு இருந்தது. அதனால் முந்தல் பிரதேசத்திற்கு அகதிகளாக மீண்டும் செல்வதென இம்மக்கள் முடிவெடுத்து அங்கு சென்றார்கள்.

அதே நேரத்தில் இக்கிரிக்கொல்லாவ அகதி முகாமில் ஏற்பட்ட இட நெருக்கடியால் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளில் ஒரு பகுதியினர் அங்கிருந்து வெளியேறி அனுராதபுர மாவட்டத்திலுள்ள நாச்சியாதீவு முஸ்லிம் கிராமத்திற்கு அகதிகளாகச் செல்ல, மற்றவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட புத்தள மாவட்டத்தின் நுரைச்சோலை, ஆலங்குடா, கடையாமோட்டை, சமீரகம, நல்லாந்தழுவை, விருதோடை, பெருக்குவட்டான் ஆகிய முஸ்லிம் கிராமங்களில் வாழ்ந்த முல்லைத்தீவு அகதிகளுடன் இணைந்தார்கள்.


வடக்கின் இன யுத்தத்தில் உடனடித் தீர்வுகள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அக்காலத்தில் இருக்கவில்லை. இதனால் முல்லைத்தீவை விட்டு வெளியேறிய ஜூலை அகதிகளில் பலர் தொடர்ந்தும் வெளி மாவட்டங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**படம் 12 : முல்லைத்தீவு முஸ்லிம்களின் வெளியேற்றப் பாதை, 1990.**




மூலம்: வெளிக்கள ஆய்வு, 1996, இலங்கை வீதிப்படம் 1994.



வாழ்ந்தார்கள். என்றாலும் இவர்களில் பலர் இடையிடையே முல்லைத்தீவில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று தமது பொருளாதார மற்றும் ஏனைய நலன்களை கவனித்து வரக் கூடிய சூழ்நிலை அன்று காணப்பட்டது. அவ்வாறு சென்று வருவதில் எவ்வித பிரச்சினைகளும் அன்று இருக்கவில்லை.

## 8.2 ஒக்டோபர் அகதிகள்:

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முல்லைத்தீவில் எஞ்சி இருந்த ஏறக்குறைய 60 சதவீதமான முஸ்லிம்களும் விடுதலைப் புலியால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டர்கள். விடுதலைப் புலிகள் முஸ்லிம்களின் 100 சதவீத வெளியேற்றத்தை விரும்பினர். இவ்வெளியேற்றம் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படவும் விடுதலைப் புலிகளால் திட்டமிடப் பட்டிருந்தது. முல்லைத்தீவை விட்டு முஸ்லிம்கள் ஒப்டோபர் 25ஆம் திகதி விடுதலைப் புலிகள் அவர்களின் வாகனங்களில் அவசர அவசரமாக ஏற்றப்பட்டு வடமாகாணத்தின் எல்லையில் அதாவது வவுனியா நகருக்கு அருகில் இறக்கி விடப்பட்டனர். இவ்வாறு முஸ்லிம்களை தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றதன் மூலம் போக்குவரத்துக்கு முஸ்லிம்களுக்கு உதவி செய்கின்ற அதே நேரத்தில் வடக்கை விட்டு முஸ்லிம்களின் வெளியேற்றத்தை உறுதிப்படுத்திக் கொள்ள விடுதலைப் புலிகள் விரும்பினர் என்று கருதத் தோன்றுகின்றது.

முஸ்லிம்களின் 1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் விருப்பத்துடனான வெளியேற்றத்திற்கும், முஸ்லிம்களின் அதே வருட ஒக்டோபர் மாத விருப்பத்திற்கு முரணான பலவந்த வெளியேற்றத்திற்கும் இடையில் அடிப்டையில் அதிக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஜுலையில் வெளியேறிய போது திரும்பவும் தமது சொந்த இடங்களுக்கு வருவோம் என்ற உணர்வோடு முஸ்லிம்கள் வெளியேறினார்கள். ஒக்டோபரின் போது முஸ்லிம்கள் திரும்பவும் தமது சொந்த இடம் மீள முடியுமோ என்ற சந்தேகத்தில் வெளியேறினார்கள்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபரில் முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களைவிட்டு அகதியாக வெளியேறி வந்த போது அதே வருடம் ஜுலையில் ஏற்கனவே அகதியாக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு முஸ்லிம்கள் தாம் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்த அநுராதபுரத்தின் நாச்சதுவ முஸ்லிம் கிராமத்திற்கும் புத்தளத்தின் ஆலங்குடா, முந்தல் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று இப்புதிய அகதிகளுக்கு உடனடியாக புகலிடம் கிடைக்க ஒழுங்குகள் செய்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் அகதி வாழ்க்கை மிக நீளமானது. இம்மக்களின் அகதி வரலாற்றுடன் சம்மந்தப்பட்ட அம்சம் பற்றியும் நாம் இங்கு சற்றுக் கலந்துரையாட வேண்டும். அதாவது ஹிஜ்ராபுர சூழலில் வாழ்ந்த முஸ்லிம்கள் முதலில் 1987இலும் பின்பு 1990 ஜூலையிலும் அகதியானார்கள். நீராவிப்பிட்டி, தண்ணீரூற்றுக் கிராமங்களில் வாழ்ந்த பலர் 1987ஆம் ஆண்டிலும், வேறு பலர் 1990இலும் அகதியானார்கள். முல்லைத்தீவு நகரத்தைச் சேர்ந்த மிகப்பெரும்பான்மையினர் 1990 ஜூலையில் அகதியானார்கள்.

1987இல் இருந்து 1990க்கு இடையில் பல காலக் கட்டங்களில் முல்லைத்தீவு முஸ்லிம்களில் அநேகர் அகதியாக்கப்பட்டிருந்தாலும், இவர்களில் பலர் இனப் பிரச்சினையால் பல முறை அகதியாக்கப் பட்டுள்ளார்கள். இவ்வாறு, பலமுறை அகதியாக்கப் பட்டவர்களின் அனுபவங்கள் சிலவற்றை நோக்குவோம். அதில் ஹிஜ்ராபுரம் முஸ்லிம் குடியிருப்பைச் சேர்ந்தவர்களின் அனுபவம் பின்வருமாறு காணப்படுகின்றது.

*"எமது வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான சில அனுபவங்களை இங்கு தருகின்றோம். கடந்த 87-11-4ஆம் திகதி அன்று இந்திய இராணுவத்தினரின் கண்மூடித்தனமான செல் தாக்குதலினாலும், விமானத்தாக்குதலினாலும் அல்லோலகல்லோலப்பட்டு எமது குடும்பத்தாருடன் கால்நடையாக வந்து கொண்டிருந்த வேளையிலும் விமானத்தாக்குதலில் அகப்பட்டு எமது கிராமத்தவர்கள் நான்கு ஐந்து பேர் இரத்த வெள்ளத்தில் மூழ்கி இறந்தார்கள். பின்பு காடுகளில் சிதறுண்டு ஒருவர் ஒருவராக வவுனியாப்பள்ளியை வந்தடைந்தோம். முஸ்லிம் பெரியார்களின் உதவியுடன் புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளி அகதிமுகாமில் இரண்டரை வருட காலங்கள் தங்கியிருந்தோம். பின்பு 90-1-11ஆம் திகதி எமது கிராமத்திற்குப் போய் சேர்ந்தோம். ஹிஜ்ராபுரக் கிராமத்தில் இந்திய இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்ததால் வீடுகள் ஒன்றும் இல்லாமல் எமது கிராமம் மைதானமாகக் காட்சியளித்தது. குடிசை அமைத்து சுமார் 6 மாதங்கள் வாழ்ந்தோம். பின்பு விடுதலைப்புலி பயங்கரவாதிகள் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அரக்கத்தனமான கொடுமைகள் தாங்க முடியாமல் மீண்டும் வாகன வசதிகள் இல்லாமையால் பசி பட்டடினியுடன் பல மைல்கள் நடந்து*



*புத்தள மாவட்டத்தை வந்தடைந்தோம். பின்னர் அகதி முகாமில் காலத்தைக் கழித்து கொண்டிருக்கின்றோம். இப்படியான கசப்பான சம்பவங்கள் எமது முஸ்லிம் சமுதாயத்துக்கு ஏற்படக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்". (Refugee Family Information, vol -34:51)*

நீராவிப்பிட்டியைச் சேர்ந்த மற்றுமொருவரின் அனுபவம் பின்வருமாறு காணப்படுகின்றது.

*"1987-11-1இல் இந்திய இராணுவ நடவடிக்கையால் நாம் வீடு உடமைகளை இழந்து அகதிகளாக வெளியேறினோம். 1987-11-1ஐத் தொடர்ந்து 1990-1-10 வரை அகதிகளாகவே வாழ்ந்தோம். மீண்டும் 1990-1-11இல் அங்கு குடியேறி சிறு குடிசைகள் அமைத்து வாழ்ந்தோம். யுத்த நிலைமையால் 1990-7-7இல் மீண்டும் அகதிகளானோம். இன்னமும் பெரும் அவல நிலையில் உள்ளோம்". (Refugee Family Information, vol -34:44)*

இவ்வாறு முல்லைத்தீவின் கிராம குடியிருப்பைச் சேர்ந்த முஸ்லிம்களும் நகர குடியிருப்பைச் சேர்ந்த முஸ்லிம்களும் முல்லைத்தீவை விட்டு வெளியேற ஏற்பட்ட சூழ்நிலை, காலக்கட்டம் என்பன வேறுபட்டுக் காணப்பட்டன. அவ்வாறு வெவ்வேறு காலக்கட்டங்களில் வெளியேறியமையால் வெவ்வேறு பிரதேசங்களில் அகதிகளாக அபயம் தேட வேண்டிய சூழ்நிலையும் உருவானது. எவ்வாறு எச்சூழ்நிலையில் முல்லைத்தீவின் வெவ்வேறு குடியிருப்பு முஸ்லிம்கள் அகதியாக்கப்பட்டார்கள் என்பதை சற்று விபரமாக அறிந்தோம். அதே போல, இவ்வாறு வெவ்வேறு காலக்கட்டங்களில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வாழ்கின்ற பிரதேசப் பரம்பலையும் சற்று விபரமாக நோக்குவோம். முல்லைத்தீவு முஸ்லிம்களை நகர, முஸ்லிம்கள் என்றும், கிராம முஸ்லிம்கள் என்றும் பிரித்து இப்பரம்பல் தன்மையை விபரிப்பது இவ்வகதி வெளியேற்றம் பற்றி மேலும் தெளிவை ஏற்படுத்த உதவும்.

அகதிகளான முல்லைத்தீவு நகர முஸ்லிம்களில் ஏறக்குறைய 35 சதவீதமானவர்கள் புத்தளம் நகரத்திலும், 40 சதவீதமானவர்கள் கற்பிட்டியிலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

15 சதவீதமானவர்கள் நாச்சியா தீவிலும் ஏனைய 10 சதவீதமானவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு போன்ற நகரங்களிலும் இன்று அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

அதே நேரத்தில் அகதிகளான முல்லைத்தீவின் கிராமப்புற முஸ்லிம்களில் ஏறக்குறைய 20 சதவீதமனவர்கள் அநுராதபுர மாவட்ட இக்கிரிக்கொல்லாவையிலும் நாச்சியாதீவிலும் ஏனையவர்களில் 80 சதவீதமானவர்கள் ஏற்கனவே முல்லைத்தீவு கிராம முஸ்லிம் அகதிகள் வாழ்ந்த ஆலங்குடா, நுரைச்சோலை, நல்லாந்தழுவை, கடையாமோட்டை, விருதோடை, கனமூலை, சமீரகம, பெருக்குவட்டான் ஆகிய பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் பரம்பல் தன்மை படம்–13இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. மேற்குறித்த இடங்களில் காணப்படும் அகதி முகாம்களில் கடந்த ஆறு வருடங்களைக் கழித்த முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் வாழ்விட அமைவில் பல முக்கியமான மாற்றங்கள் அண்மைக் காலங்களில் இடம் பெற்று வருகின்றன. அகதி வாழ்க்கையின் அண்மைக்கால மாற்றங்கள் அத்தியாயம் 10இன் 10.1.5 பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. *இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களை தமிழில் அகதிகள் என்று அழைப்பதுண்டு. இதே போல உள்நாட்டு பிரச்சினைகளுக்காகவும், அரசியல் காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இதே பதம் கொண்டு அழைக்கப்படுகின்றா். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணப்படி அரசியல் காரணங்களுக்காக இடம் பெயர்ந்து உள் நாட்டில் வாழும் மக்களை உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் (Internally Displaced) என்றும் வெளிநாடு சென்றவர்களை (Refugees) அகதிகள் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வரைவிலக்கண வேறுபாடுகளுக்கு இணங்க பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான நிவாரணங்களும் பாதுகாப்பும் வேறுபட்டுக் காணப்படுகின்றது.*



# 9. முல்லைத்தீவு முஸ்லிம்களின் அகதி வாழ்க்கை:

வடக்கு முஸ்லிம்களில் முதலில் அகதியாக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு முஸ்லிம்களாவர். முதலில் 1987ஆம் ஆண்டு இந்தியப்படைகள் முல்லைத்தீவை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த போது இம்மக்கள் அகதியானார்கள். பின்னர் 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை இராணுவத்தின் கெடுபிடியினால் இவர்கள் மீண்டும் அகதியானார்கள். இறுதியாக, 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளின் பலவந்த வெளியேற்றத்தோடு முற்றுமுழுதாக தமது பூர்வீக பிரதேசத்தில் இருந்து முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகற்றப்பட்டு அகதியானார்கள். ஆனால் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு தமது சொந்த இடங்களுடன் எவ்விதத் தொடர்பும் அற்ற நிலையில் இதுவரையில் இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

## 9.1 அகதிகளின் பரம்பல்:

முல்லைத்தீவில் சில பிரதேசங்களில் செறிந்து அங்கே ஒரு கூட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் இன்று புத்தளம், அநுராதபுரம், குருநாகல், கொழும்பு போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ள ஏறக்குறைய 25க்கும் மேற்பட்ட அகதி முகாம்களில் சிதறி வாழ்ந்து வருகிள்றார்கள்.


முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்று புத்தளம் மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில் ஏறக்குறைய 75 சதவீதமானவர்கள் வாழ்கின்றார்கள். படம்–13 முல்லைத்தீவு முஸ்லிம்களில் இன்றைய பரம்பலைக் காட்டுகின்றது. இம்மக்கள் செறிந்து வாழும் புத்தளம் மாவட்டத்தில் இவ்வகதிகளின் பரம்பல் இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இம் மாவட்டத்தின் வட மேற்குப் பகுதிகளில் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் பரம்பல் செறிவாகக் காணப்டுகின்றது. அதிலும் குறிப்பாக கற்பிட்டி, புத்தளம், முந்தல் ஆகிய மூன்று செயலாளர் பிரிவுகளில் அகதிகளில் பெரும்பான்மையினர் வாழ்கின்றனர். மேலே குறிப்பிடப்பட்ட மூன்று செயலாளர் பிரிவுகளும் நில ரீதியாக ஒன்றோடு ஒன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 13: முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் வாழும் முகாம்களின் பரம்பல், 1995.




மூலம்: வெளிக்கள ஆய்வு, 1996, இலங்கை விதிப்படம் 1994.



தொடர்புடையவைகளாகும். அத்துடன் இது பரம்பரையாக முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாகும்.[1] இங்குதான் ஏனைய வட மாகாண முஸ்லிம் அகதிகளும் வாழ்கின்றார்கள்.[2] இப்பிரதேசத்தில் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் காணப்படும் முகாம்களிலும், சொந்தக்காணி குடியேற்றங்களிலும், வாடகை வீடுகளிலும் பரவலாக வாழ்கின்றனர். இம்மக்கள் வாழும் இடங்களின் பெயர்களும், இது பற்றிய ஏனைய விபரங்களும் அட்டவணை-7இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

உண்மையில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகதியாக்கப்பட்ட காலத்தில் இருந்து மிக அண்மைக்காலம் வரை அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வந்தார்கள். இவ்வாழ்க்கை முறையில் அண்மையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனினும் இந்நூல் எழுதிக் கொண்டிருக்கின்ற காலக்கட்டத்தில் ஏறக்குறைய 50 சதவீதமான முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

## 9.2 ஆலங்குடா முல்லைத்தீவு அகதி முகாம்:

அகதி வாழ்க்கை முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு புதியதொன்றல்ல. ஆயினும் ஆறு வருடங்களுக்கு மேலாக நீடித்த அகதி வாழ்க்கை இம்மக்களின் வாழ்க்கையில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்விளைவுகளை இம் மக்கள் மத்தியில் மிக வெளிப்படையாகக் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. ஆறு வருடங்களுக்கு மேலாக முல்லைத்தீவு முஸ்லிம்கள் அனுபவித்து வரும் அகதி வாழ்க்கை வரலாற்றை விளங்கிக் கொள்வதற்கு முல்லைத்தீவு முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற அகதி முகாம்களில் ஒன்றான ஆலங்குடா முகாமில் இவர்களின் கடந்த 6 வருட கால அகதி வாழ்க்கை வரலாற்றை சற்று விளக்கமாக நோக்குவோம்.

ஆலங்குடா அகதி முகாம் புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளில் குறிப்பிடத்தக்க சதவீதத்தினர் தற்போது அகதிகளாக ஆலங்குடா முகாமிலும் அதன் சூழலிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் முஸ்லிம் மக்கள் பெருமளவில் அகதிகளாக முல்லைத்தீவை விட்டு வெளியேறி வந்த போது இம்மக்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபயமளித்த இடங்களில் ஒன்று ஆலங்குடா முஸ்லிம் கிராமமாகும். பெருந்தன்மையும், பரோபகாரமும் கொண்ட ஆலங்குடா முஸ்லிம்கள் தமது கிராமச் சூழலில் முஸ்லிம் அகதிகளுக்கு முகாம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியதோடு அகதிகளின் நிவாரண வேலைகளிலும் நேரடியாக ஈடுபட்டு உதவி செய்தார்கள்.

1990ஆம் ஆண்டு ஜூலையில் இருந்து ஒக்டோபர் கடைசிப் பகுதிவரை முல்லைத்தீவைச் சேர்ந்த முஸ்லிம்கள் மாத்திரமே இப்பிரதேசத்தில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர். அதே வருடம் ஒக்டோபர் இறுதிப் பகுதியில் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளின் எண்ணிக்கை பெரிதும் அதிகரிக்கத் தொடங்கியது. இக்காலத்தில் ஆயிரக்கணக்கான வட மாகாண முஸ்லிம்கள் அகதிகளாகப் புத்தளம் மாவட்டத்திற்கு அபயம் தேடி வந்தார்கள். இவர்களில் பலர் வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் இருந்து கடல் வழியாக கற்பிட்டிக்கும், மற்றவர்கள் தரை வழியாக புத்தளம் மாவட்டத்தின் கரைத்தீவு, புத்தள நகரம், புத்தளத்தின் தெற்குப் பிரதேசங்களுக்கும் வரத் தொடங்கினர்.

புத்தளம் நோக்கி வந்த அகதி வெள்ளத்தினால் இப்பிரதேசம் நிலை குலைந்தது.[3] ஆயிரக்கணக்கில் வந்த அகதிகளுக்கு அபயம் கொடுப்பதற்காக பாடசாலைகள் மூடப்பட்டன. பள்ளிவாயில் வளவுகளில், மதுரசாக் கட்டடங்களில் அகதிகளுக்கு தற்காலிக அபயம் கொடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. மேற்குறித்த கட்டடங்கள் அகதிகளின் உறைவிட வசதிக்குப் போதாமல் போனபோது தனியார் வீடுகளும் ஏனைய பொதுக்கட்டடங்களும் இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இவ்வாறு புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த புத்தளம், கற்பிட்டி, முந்தல், வணாத்திவில்லு உதவி அரசாங்கப் பிரிவுகளின் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், பொதுக்கட்டடங்கள், தனியார் வீடுகள் முழுமையாக முஸ்லிம் அகதிகளைப் பரிபாலிப்பனவாக மாற்றியமைக்கப்பட்டன.

இவ்வாறு புத்தளம் வந்த அகதிகளில் பலர் கற்பிட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலங்குடா முஸ்லிம் கிராமத்திற்கும் அபயம் தேடி வந்தார்கள். இவ்வாறு வந்தவர்களில் வட மாகாணத்தின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் உள்ளடங்குவர். இதில் முல்லைத்தீவு முஸ்லிம்களும் மன்னார் மாவட்டத்தின் முசலிப்பிரதேச முஸ்லிம்களும் எண்ணிக்கை ரீதியாக அதிகமாகக் காணப்பட்டார்கள். 1990ஆம் ஆண்டு ஜனவரியில் ஏறக்குறைய 5000 முஸ்லிம் அகதிகள் அபயம் தேடி ஆலங்குடா முஸ்லிம் கிராமத்திற்கு வந்திருந்தார்கள்.



இவ்வதிகரித்த அகதிகளின் எண்ணிக்கையினால், ஆலங்குடாவில் அகதிகளுக்கான வாழ்விடத் தேவைகள் அதிகரித்தன. பெரிய பல அகதி முகாம்கள் அமைக்கப்பட வேண்டிய தேவையும் இங்கு அக்காலத்தில் ஏற்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக, ஆலங்குடாச் சூழலில் வாழ்விட வசதிக்குப் பொருத்தமான பிரதேசங்கள் அப்போது இருக்கவில்லை. இக்கிராமத்தில் குடியிருப்புக்கு பொருத்தமான இடங்களில் உள்ளூர் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இக்கிராமத்தின் எஞ்சிய பிரதேசம் தென்னந் தோட்டமாகவும், மணற்திடர்களாகவும் காணப்பட்டன (படம்-14).

இக்கிராமத்தின் மணற்றிடர்களை உள்ளடக்கிய பிரதேசத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் காணப்பட்டதால், இப்பிரதேசத்தில் அகதிகளுக்கென முகாம்கள் அமைப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களால் முடிவு எடுக்கப்பட்டது.

ஆலங்குடாவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மணற்பாங்கான பகுதி மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று பெரிய முகாம்கள் அமைக்கப்பட்டன. அதில் ஒன்று ஏற்கனவே ஆலங்குடாவிற்கு வந்திருந்த முல்லைத்தீவு அகதிகளுக்கும் ஏனைய இரண்டும் வட மாகாணத்தின் ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் அகதிகளுக்குமாக ஒதுக்கப்பட்டன. முல்லைத்தீவு மக்களுக்காக அமைக்கப்பட்ட முகாம் ''ஆலங்குடா முல்லைத்தீவு முகாம்'' என்று அழைக்கப்பட, ஏனைய இரண்டும் ''வேப்பங்குள முகாம்'' ''மன்னார் முகாம்'' என்று அகதிகளின் சொந்த கிராமப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டன. மேற்குறித்த முகாம்களில் உள்ளடக்கப்பட முடியாத, உள்ளடக்கப்பட விரும்பாத வட மாகாணத்தின் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த அகதிகள் ஆலங்குடாச் சூழலில் காணப்பட்ட சிறுசிறு தனியார் காணிகளிலும். தோட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டார்கள் (படம்-14). இச்சிறிய முகாம்கள் ஆலங்குடா ஏ, பி, சீ என்று அழைக்கப்படலாயிற்று.

படம்-14, 1995ஆம் ஆண்டில் ஆலங்குடா கிராமச் சூழலில் காணப்பட்ட அகதி முகாம்களின் பரம்பலைக் காட்டுகின்றது. அக்காலத்தில் ஆலங்குடா சூழலில் மொத்தமாக பத்து பெரிய, சிறிய அகதி முகாம்கள் காணப்பட்டன. இம்முகாம்களில், மொத்தமாக ஏறக்குறைய 800 அகதிக் குடும்பங்களைச் சேர்ந்த 4500 வட மாகாண முஸ்லிம் அகதிகள் வாழ்ந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதில் இப்படத்தின் (படம்-14) மேற்காகக் காணப்படுவது வேப்பங்குள முகாமாகும். இம்முகாமும் அதன் சூழலில் அமைந்திருந்த ஏனைய முகாம்களும் மணற்பரப்பில் அமைந்திருந்தன. வேப்பங்குள முகாமிற்குக் கிழக்காக முல்லைத்தீவு முகாம் அமைந்திருந்தது. இவ்விரு முகாம்களுக்கும் இடையில் உயரமான மணற்திடற் தொடர்ச்சி ஒன்று காணப்பட்டது. இவ்விரண்டு முகாமிற்கும் தெற்குப் பகுதி வயது முதிர்ந்த தென்னங்கன்றுகளைக் கொண்ட ஒரு தோட்டமாகும். இப்பிரதேசத்திற்கு கிழக்காக ஆலங்குடா கிராமம் காணப்பட்டது. 1995ஆம் ஆண்டில் ஆலங்குடா சூழலில் ஏறக்குறைய 200 உள்ளூர் முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தார்கள்.

ஆலங்குடாவில் முகாமிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சிறு குடிசைகள் அமைக்கப்பட்டு அகதிக் குடும்பங்களுக்கு உறைவிடம் வழங்கப்பட்டதுடன் பொது நீர், மலசலகூட வசதிகள் அமைக்கப்பட்டு அகதிகள் பயன்படுத்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. உணவு நிவாரணம் வழங்கி அகதிகளின் பசியைப் போக்கினார்கள். இந்த அடிப்படையில் அகதிகளின் உடனடிப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தாலும், அரசசார்பற்ற நிறுவனங்களாலும் ஓரளவு தீர்வு காண முயற்சிக்கப்பட்டது.

இம்முகாம்களில் இட வசதியின்மையினால் குடிசைகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குடிசை 12 அடி நீளத்தையும், 10 அடி அகலத்தையும் கொண்டதாகக் கட்டப்பட்டிருந்தது. தென்னை ஓலையால் பக்கச்சுவர்களும் கூரையும் அமைக்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவு முகாமில் மாத்திரம் மொத்தமாக 232 அகதிக் குடும்பங்கள் இருந்தன. ஆனால் இவர்களின் குடிசைகள் அமைவுற்றிருந்த இடம் ஏறக்குறைய 5 ஏக்கர் பரப்பினைக் கொண்டிருந்தது. சனச் செறிவு மிக்கதாக இம் முகாம் காணப்பட்டது. இப்பரப்பிற்குள் தான் இவர்களுக்கு நீர் பெறுவதற்கு ஒரு கிணறும், மலசலங் கழிப்பதற்கு இரண்டு மலசல கூடங்களும் அப்போது அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. இதே ஒழுங்கில் படத்தில் காட்டப்பட்டுள்ள ஆலங்குடாவின் ஏனைய முகாம்களிலும் மட்டுப் படுத்தப்பட்ட வாழ்க்கை வசதிகள் அகதிகளுக்கு அக்காலத்தில் வழங்கப்பட்டிருந்தன.

ஆரோக்கியமான, கௌரவமான வாழ்க்கையொன்றை வாழ்வதற்கு, குடும்பத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு, கல்வி கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அகதிகளுக்கு முகாம் வாழ்க்கை ஒரு சவாலாக





படம் 14 : ஆலங்குடா அகதி முகாம்கள், 1994



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்பட்டது. ஆலங்குடா முகாம்களில் அகதி மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் சொல்லில் அடங்காதவை. முகாமில் மட்டுப்படுத்தப்பட்ட நீர், அத்துடன் மலசலகூட வசதிகள், நெருக்கமான குடிசை அமைப்புக்கள், வெப்பத்தை உறுஞ்சி அனல் கக்கும் மணற்பாங்கான அமைவிடம் ஆகியவற்றால் இம்மக்களுக்கு பல்வேறு வாழ்விட பிரச்சினைகளை, சரும நோய்களை, வாந்திபேதி ஏற்பட்டு இம்மக்கள் வருத்தினர்.

உதாரணமாக 1991ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆலங்குடா முகாம் ஒன்றில் ஆரம்பித்த தொற்று நோய் சூழற் பிரதேசங்களிலும் பரவி பாரிய உடல்நலப் பிரச்சினையை ஏற்படுத்தியது. இதனால் ஆலங்குடா முகாம்களில் வாழந்த அகதிகள் பலர் இறந்தனர். வேறுபலர் கடுமையாகச் சுகயீனமுற்றுப் பாதிக்கப்பட்டார்கள். கிடைக்கப்பெற்ற விபரங்களின்படி மொத்தமாக 20 அகதிகள் இத் தொற்று நோயினால் இறந்தார்கள். வேறு பலர் மிகவும் கடுமையாக சுகயீனமுற்றார்கள். ஆலங்குடா முகாமில் இருந்து அகதிகள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால் ஏறக்குறை 17 மைல்கள் வடக்கே கற்பிட்டிக்கு அல்லது 15 மைல்கள் தெற்கே புத்தளத்திற்குச் செல்ல வேண்டும். முகாமிலிருந்து பிரதான பாதைக்குச் செல்ல ஏறக்குறைய இரண்டு மைல்கள் நடந்து வந்தே மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டும். அன்றில் இருந்து இன்று வரை இப்பிரதேசத்தில் வாழும் அகதிகள் இந்நிலையிலேயே உள்ளனர்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி ஆலங்குடா, வேப்பங்குள முகாம் முற்றாக நெருப்பில் எரிந்து சாம்பலாகியது. இதனால் 100க்கும் அதிகமான அகதிகள் தமது குடிசைகளை இழந்து நிர்க்கதியாகினர். தற்செயலாக ஏற்பட்டதாகக் காணப்பட்டாலும் நெருப்பு இலகுவில் பரவக் கூடிய தென்னை ஓலைகளைப் பயன் படுத்தி குடிசைகள் அமைக்கப் பட்டிருந்தமையும், குடிசைகள் மிக நெருக்கமாக அமைவுற்றிருந்தமையுமே இவ்வளவு பெருந்தொகையாக குடிசைகள் எரிந்து சாம்பலாக் காரணமாக இருந்தனவெனலாம். இந்நூல் ஆசிரியர் நேரடியாக சென்று அச்சம்பவம் நிகழ்ந்த இடத்தைப் பார்த்தபோது, நெருப்பினால் எரிந்து தரைமட்டமாகிய குடிசைகளையும், அதைவிட மோசமாக தம்மிடம் எஞ்சி இருந்த உடமைகளையும் இழந்து பரிதவித்த 100க்கும் அதிகமான அகதிக் குடும்பங்களையும் கண்டார். இவ்வாறாக நெருப்பினால் அகதி முகாம்கள் எரிந்தது இதுவே முதற்தடவையல்ல. அநுராதபுர நாச்சடுவ அகதி முகாமில்



வாழ்ந்த முல்லைத்தீவு மக்களினது முகாமானது 1995ஆம் ஆண்டிலும், இது போல கற்பிட்டியில், மன்னார் வீதியிலும் இவ்வாறு பல இடங்களில் தீ விபத்தினால் அகதிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.[4]

ஆலங்குடாப் பிரதேச முஸ்லிம் அகதிகள் எதிர் நோக்கிய மற்றுமொரு பிரச்சினை கல்விப் பிரச்சினையாகும். அகதிகள் வருவதற்கு முன்னர் ஆலங்குடாவில் அமைவுற்றிருந்த உள்ளூர் பாடசாலை 175 மாணவர்களுக்காக ஒரு கட்டடத்தையும், 5 ஆசிரியர்களையும் கொண்டு காணப்பட்டது. அகதிகளின் வருகையோடு மாணவர்களின் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்தது. அகதி மாணவர்களுக்காக மாலை நேர வகுப்புகள்5 இப் பாடசாலையில் ஏற்படுத்தி அகதிகளின் கல்விப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களான றெட்பானாவும், இத்தாலியியன் கோப்பரேசனும் முயற்சித்தன. உண்மையில் மேற்குறிப்பிட்ட நிவாரண ஸ்தாபனங்கள் ஆலங்குடா அகதிகளின் கல்விக்குச் செய்த சேவைகள் போற்றத்தக்கவை. ஆனால் அவை மட்டுப்படுத்தப்பட்ட நன்மைகளையே அகதிகளுக்கு அளித்தது என்பதை பின்வரும் உதாரணம் மூலமாக அறியக் கூடியதாக இருந்தது. அதாவது அகதிகள் இப்பிரதேசத்துக்கு வந்து இரண்டு வருடங்களாகியும் 200 அகதி மாணவர்கள் முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட முடியாத நிலையில் ஆலங்குடா பாடசாலையில் இட நெருக்கடி காணப்பட்டது. அதுமட்டுமன்றி ஆலங்குடா பாடசாலையில் 6ஆம் ஆண்டு வரையான வகுப்புக்களுக்கான கல்வி வசதிகளே அப்போது காணப்பட்டன. இதனால் அகதி மாணவர்களின் இடைநிலை, உயர்தர வகுப்பு கல்வியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஆலங்குடா அகதிகள் எதிர் நோக்கிய ஏனைய கல்விப் பிரச்சினைகள் மிக விளக்கமாக ''அகதிகளின் கல்விப் பிரச்சினை'' என்ற ஆய்வில் நூலாசிரியரால (பார்க்க உசாதுணை நூல்) எழுதப்பட்டுள்ளது.

ஆலங்குடாவில் அகதிகள் எதிர் நோக்கிய மற்றொரு பிரச்சினை உள்ளூர் மக்களுக்கும், அகதி மக்களுக்கும் இடையில் பிற்காலத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளாகும். அகதிகளின் வருகையோடு ஆலங்குடா முஸ்லிம் கிராமத்தின் சனத்தொகை விகிதாசாரத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. உள்ளூர் மக்களின் விகிதாசாரம் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒன்றிற்கும் குறைவான நிலைக்குத் தள்ளப்பட்டது. தொழில்வாய்ப்பு மற்றும், பொருளாதார நடவடிக்கைகளில் உள்ளூர்–அகதி மக்களுக்கிடையில் போட்டியும் பிணக்குகளும் ஏற்படத் தொடங்கின. ஆனால் இவ்வாறிருந்தும் கூட இவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளூர்–அகதிப் பிணக்குகள் எந்தக்கட்டத்திலும் ஒரு வரம்பைத் தாண்டிச் செல்லவில்லை என்பது மிகவும் ஆச்சரியமானதொரு விடயமாகும். இதற்குக் காரணம் ஆரம்பத்தில் இருந்து அகதிகளை ஆதரித்து உபசரித்த உள்ளூர் மக்களின் பெருந்தன்மையும், ஊரடிப்படையில் அகதி மக்கள் மத்தியில் ஏற்பட்ட கட்டுப்பாடும், இவ்விரு மக்கள் குழுக்களையும் இணைக்கும் பாலமாகக் காணப்பட்ட இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுத்தன்மையும் ஆகும். இவை இம்மக்களை இது வரை காலமும் ஒன்றாக ஒற்றுமையாக வாழ வைத்திருக்கின்றது. எதிர் காலத்திலும் இவ் ஒற்றுமை தொடரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## 9.3. ஏனைய பிரதேசங்களில் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள்

ஆலங்குடா அகதிப் பிரச்சினைகளுக்கு ஒப்பான அனுபவங்களை புத்தளம் மாவட்டத்தில் கடையாமோட்டை, சமீரகம, நல்லாந்தழுவ, நாச்சியாதீவு, மற்றும் ஏனைய அகதி முகாம்களில் வாழ்ந்த முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளும் அனுபவித்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் தம்மை அகதி வாழ்க்கையோடு தொடர்பு படுத்திப் பார்க்கும் போது இம்மக்கள் மனதில் முதலில் வருவது அகதிகளை ஆதரித்து உபசரித்த உள்ளூர் மக்களின் பரோபகாரம்தான். உதாரணமாக முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளை 1987ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஆதரித்து உதவி வருகின்ற முந்தல் பிரதேச உள்ளூர் முஸ்லிம் தனவந்தர்களினதும் மக்களினதும் ஆதரவு இங்கு நினைவு கூரத்க்கதாகும். அதாவது 1987இல் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் முந்தல் பகுதிக்கு வந்த போது சில வாரங்கள் அரசாங்க நிவாரண உதவிகள் கிடைக்கும் வரை அகதிகளுக்கு உணவும், உறைவிடமும் அளித்தவர்கள் முந்தல் பிரதேச முஸ்லிம் தனவந்தர்களும், பொது மக்களுமேயாவர். இதே முறைமிலான உதவிகள் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளுக்கு நாச்சடுவையிலும், இக்கிரிக்கொல்லவையிலும் உள்ளூர் மக்களால் அளிக்கப்பட்டன.

இது போல, 1987ஆம் ஆண்டு முல்லைத்தீவு முஸ்லிம்கள் பலர் கண்டிப் பிரதேசத்திற்கு அகதிகளாக வந்தபோது கண்டிப் பிரதேச முஸ்லிம்களால்



ஆதரிக்கப்பட்டார்கள். குறிப்பாக அக்குறணைச் சந்தையில் இம் முஸ்லிம்களுக்கென ஒரு முகாம் அமைத்து இம்முஸ்லிம் அகதிகளின் நலன்களை அக்குறணை முஸ்லிம்கள் மிக அக்கறையோடு கவனித்தார்கள் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

## 9.4 அகதிகளின் அனுபவங்கள் சில:

அகதிகளான முல்லைத்தீவு முஸ்லிம்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. இம்மக்கள் தாங்கள் அகதியாக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தாம் பட்ட துன்பம் பற்றி 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாத அகதிகள் பற்றிய ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமாகும்.

ஆலங்குடா முகாமிற்கு ஆரம்ப காலத்தில் வந்த முல்லைத்தீவு முஸ்லிம் அகதி ஒருவர் பின்வருமாறு தனது அனுபவத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

> *"இவ்விடத்தில் (ஆலங்குடா) வீட்டில் அனைவரையும் காய்ச்சல் வாட்டியது. சரியான மருத்துவ வசதி இல்லமையால் திரும்பத்திரும்ப வருத்தம் வருவதால் மனம் சோர்வுற்று கை கால்கள் சோர்வுற்று குடிகாரன் போல் நடக்க வேண்டிய நிலை. பிள்ளைகளோ துள்ளி விளையாட வேண்டிய பருவத்தில் பாய்களில் படுக்க வேண்டிய நிலை. இத்தனைக்கும் மத்தியில் ரேசன் சாமான்களைப் பெற்று பல மைல்கள் தூரத்தில் இருந்து தலையில் சுமந்து வர வேண்டிய நிலை". (Refugee Family Information, vol -35:36)*

நீராவிப்பிட்டியைச் சேர்ந்த மற்றுமொருவர் தனது எதிர்காலத்தைப் பற்றி பின்வருமாறு கவலைப்படுகின்றார்.

> *"நாங்கள் சென்ற 11-6-90 தொடக்கம் பெரும் இன்னல்களை தினமும் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது கலாசாரம் முதற்கொண்டு அன்றாட வாழ்க்கையில் கூட மிகவும் கஷ்டமான காரியத்தில் சிக்கித் தவிக்கின்றோம். பிள்ளைகளின்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*எதிர்காலம் எப்படி அமையுமோ என்பதை நினைக்க மிகவும் கவலையாக உள்ளது. காரணம் பிள்ளைகளின் உடல் நலம் மிக மோசம் அடைந்துள்ளது. நாம் சொந்த ஊரில் இருந்து தற்போது உள்ள இடத்திற்கு வந்து சேரும் வரையில் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இடைவழியில் குழந்தைகள் பசி, தாகம் என்று கத்தும் போது அவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்கு என்னிடம் பணம் இன்றி மன வேதனை கொண்டு வாழ்க்கையை வெறுக்கும் அளவுக்குச் சென்றிருந்தேன்" (Refugee Family Information, vol -34:10)*

ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் அனுபவம் இவ்வாறு அமைந்துள்ளது.

*"பயங்கரவாத நெருக்கடி காரணமாக வயோதிபமான எனக்கு மனநிலை பாதிக்கப்பட்டு 6 மாதங்களாக ஒரு கையும் காலும் விளங்கவில்லை. கணவன் இறந்த 3 வருடங்கள் குடும்பப் பொறுப்பைப் பார்க்க வேண்டிய நான் இன்று படுக்கையில். குடும்ப நிலை என்ன? மருந்துகள் வாங்குவதற்கு பண வசதிகள், இருப்பிட வசதிகள் இன்மை, இடத்துக்கிடம் மாறுவதனால் சூழல் காரணத்தினால் உடல் நிலை பாதிப்பு, கணவரும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டு அநுராதபுர சாகிராக் கல்லூரியில் காலமாகி 3 வருடமாகிவிட்டது. எங்களுக்கு எந்த ஆதரவும் இல்லை". (Refugee Family Information, vol -34:33)*

## 9.5 நிவாரண அமைப்புக்கள்:

இச்சந்தர்ப்பத்தில் கடந்த ஆறு வருடங்களாக முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளோடு சம்மந்தப்பட்ட அகதி நிவாரண அமைப்புக்களையும், அவைகளின் சேவைகளையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கான "உணவு நிவாரணம்"[6] புத்தளம் மாவட்டத்தில் உலக உணவு ஸ்தாபனத்தாலும், (World Food Program) அநுராதபுர மாவட்டத்தில் இலங்கை அரசாங்கத்தாலும் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு முஸ்லிம்கள்



செறிவாக வாழ்ந்த புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேசத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான போரூட், (Forut) செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம் ஆகிய நிறுவனங்கள்[7] பல்வேறுபட்ட நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. இதில் குறிப்பாக போரூட் அமைப்பு இப்பிரதேச அகதிகளின் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும், பாலர் பாடசாலைகளை நிர்வகிப்பதிலும், முகாம்களில் குடிசைகளை புனரமைப்பதிலும் உதவிகள் செய்தது. ஒக்ஸ்பாம் (Oxfam) அமைப்பானது வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்குவதில் உதவியது. செஞ்சிலுவைச் சங்கம் (Red cross) மருந்துவ சேவைகளை முகாம் மட்டத்தில் நடத்தி வந்தது.

மேற்குறித்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அகதிகளுக்கான சேவைகள் உள்ளூரில் தோன்றிய அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் செய்யப்படுகின்ற ஒழுங்குகள் அப்போது நடைமுறையில் இருந்தன. அந்த வகையில் முந்தல் பிரதேசத்தை குறிப்பாக நோக்குகின்ற போது முல்லைத்தீவு, மன்னார் முஸ்லிம் அகதிகளால் குறிப்பாகத் தமது பிரதேச அகதிகளுக்கு சேவை செய்வதற்காக தோற்றுவிக்கப்பட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் ODMNP[8] என்று அழைக்கப்படும் வட மாகாண இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் அமைப்பு என்ற நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம் அகதி முகாம் மட்டத்தில் அகதிகளோடு அகதிகளாக அகதி மக்களுக்கான சேவையை செய்து வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அகதி நிவாரண வேலைகளில் அகதிகளின் ஈடுபாட்டை விருத்தி செய்வதற்கு போரூட் போன்ற சர்வதேச நிறுவனங்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதே நேரத்தில் அகதி மக்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கிராம அபிவிருத்தி சங்கமும் (Rural Development Foundation) கல்வி ரீதியாகவும், சுய தொழில் வாய்ப்பு ரீதியாகவும் பல உதவிகளை முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு செய்துள்ளது.

ஆலங்குடாப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பல தேசிய, சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் இத்தாலி நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் "இத்தாலியன் கோப்பரேசன" என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் கல்வித்துறை சார்ந்த, முகாம் சீர்திருத்தம் சார்ந்த நிவாரண நடவடிக்கைகளும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். அதே நேரத்தில் பல இஸ்லாமிய அரசசார்பற்ற நிறுவனங்களும் உதாரணமாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, அன்சாரி சுன்னத்துல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகம்மதியா ஜமாஅத்தினரும், அல்–ஆஜில் போன்ற மற்றும் முஸ்லிம் தனவந்தர்களும் கொழும்பு பள்ளிவாசல் பெடரேசன் நம்பிக்கையாளர் சபையும் பல பங்களிப்புக்களைச் செய்தன.

## 9.6 நிவாரண உதவிகளின் தாக்கம்:

முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் நலனுக்காகப் பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, அவை இம்மக்களின் அகதி வாழ்க்கையில் ஒரு திருப்தியான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது, அகதி மக்களின் உடல் ஆரோக்கியமும், உள உறுதியும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து சென்றுள்ளன. இதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கிடைக்கக் கூடியதாக உள்ள விபரப்படி அகதி மக்களில் நோயுறுபவர்களின் எண்ணிக்கை விகிதாசார ரீதியாக அதிகரித்து வந்தது. இறப்பு வீதமும் குறிப்பாக சிசு மரணமும் இம்மக்கள் மத்தியில் வழமைக்கு முரணான விகிதத்தில் உயர்வாகக் காணப்பட்டதை பதிவாளர் நாயகத்தின் வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள் (Vital statistics) காட்டுகின்றன. அதே போல நூலாசிரியரின் வெளிக்கள ஆய்விலிருந்து பாடசாலை விட்டு வெளியேறும் சிறார்களில் குறிப்பாக சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது போல குற்றச் செயல்கள் இம்மக்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதாயும் பொலிஸ் அலுவலக புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. கூட்டு மொத்தத்தில், அகதிகளின் கல்வி, ஒழுக்கம், கலாசாரம் என்பன முகாம் மட்டத்தில் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன. அதே நேரத்தில் அகதிகளின் சுய முயற்சிகள் ஊக்குவிக்கப் படவில்லை.

அதே நேரத்தில் துரதிஷ்டவசமாக இதனால் இம்மக்கள் அகதிகளாக்கப் பட்டு ஆறு வருடங்களுக்குப் பின்பும் வாழ்க்கையின் அத்தியவசிய தேவைகளுக்கும் பிறரை நம்பி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அகதிகளுக்கு நிவாரண உதவிகள் இடையூறின்றி தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்தன. அவ்வாறான நிலையிலும் ஏன் இவ்வாறான நிலை இம்மக்களுக்கு ஏற்பட்டது என்பது மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த வகையில், அகதி நிவாரண திட்டமிடுதலிலும் நடைமுறைப்படுத்தலிலும் பல அடிப்படைக் குறைபாடுகள் காணப்பட்டதை



அறியக் கூடியதாக இருக்கின்றது. இதனைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் அறியலாம். குறிப்பாக அகதிகளுக்கான உணவு நிவாரண உதவியை எடுத்துக் கொண்டு இவ்வாறான உதவியின் தாத்பரியத்தைப் பார்ப்போம்.

உணவு நிவாரண உதவிகளில் அகதிகளின் வாழ்க்கைக்கு அத்தியவசியமாக தேவைப்படும் எல்லா பொருட்களும் அடக்கப்படவில்லை.[10] உதாரணமாக குழந்தைகட்கான பால்மா உணவுகள், கற்பிணிகளுக்கான, முதியவர்களுக்கான போசாக்கு உணவுகள் வழங்கப்படவில்லை. அகதிகளின் முகாம் மட்டத்தில் நோயாளிகளைப் பராமரிக்க ஒழுங்குகள் இருக்கவில்லை. அரசாங்க வைத்தியசாலைகளும் முகாம் சூழலில் இருந்து தொலை தூரத்தில் காணப்பட்டன. அவ்வாறு கிடைக்கக் கூடியதாக உள்ள மருத்துவசாலைகளில் இடநெருக்கடியும், மருத்துவ வசதிப் பற்றாக்குறையும் காணப்பட்டது. உதாரணமாக கற்பிட்டிப் பிரதேச முகாம் ஒன்றின் கடுமையாக நோய்வாய்ப்படக் கூடிய ஒருவருக்கு உடனடிச் சிகிச்சைக்காக ஏறக்குறைய 50 மைல்களுக்கு அப்பாலுள்ள சிலாபம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. அகதிகள் தமது முகாம் சூழலில் தொழில் வாய்ப்புக்கள் இன்மையால், முழுமையாக அகதி நிவாரண உதவிகளையே நம்பியவர்களாகக் காணப்பட்டனர். மருத்துவத்திற்கு, உடைகளுக்கு ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கு அவர்களிடம் பண வசதி இருக்கவில்லை. அவ்வாறான தேவைகள் ஏற்படும் காலக்கட்டங்களில் தமக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட உணவு நிவாரணங்களை விற்று காசாக்கி தமது ஏனைய மருத்துவ, உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர்.

அது மட்டுமன்றி, வழங்கப்பட்ட உணவு நிவாரணங்களும், ஒரு சராசரி குடும்பத்திற்குப் போதாத அளவில் காணப்பட்டன. அத்துடன் உணவு நிவாரணம் பல இடங்களில் பல அகதிப் பிரதேசங்களில் உரிய காலத்தில் வழங்கப்படவும் இல்லை. நிர்வாக ரீதியான தேவையற்ற தாமதங்கள் அகதிகளை அடிப்படை உணவு நிவாரணங்ளைப் பெறவும் பல மாதங்கள் காத்திருக்க வைத்தன. உணவு நிவாரண உதவிகளில் கொடுக்கப்பட்ட பொருட்கள் பல இடங்களில் தரம் குறைவானதாகக் காணப்பட்டன.

அகதியாக்கப்பட்ட போது இம்மக்கள் இருந்த நிலையைவிட மோசமான நிலைக்கு கடந்த ஆறு வருட அகதி வாழ்க்கை இவர்களை இறுதியில் கொண்டு சென்றுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறிப்புகள்

1. புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளாக கற்பிட்டி, புத்தளம், முந்தல் செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. 1981ம் ஆண்டு குடிசனக் கணிப்பின் படி இம்மூன்று பிரதேசத்திலும் வாழ்ந்த முஸ்லிம்கள் இப்பிரதேச மொத்த சனத் தொகையில் 35 சத வீதமாகக் காணப்பட்டனர். பல நூற்றாண்டுகளாக இப்பிரதேசம் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசம் ஆகும்.

2. 1996ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்தில் மொத்தமாக 60,000 வடமாகாண முஸ்லிம் அகதிகள் வாழ்ந்தார்கள். இவ்வகதிகளில 45சத வீதமானவர்கள் கற்பிட்டி செயலாளர் பிரிவிலும், 30சத வீதமானவர்கள் புத்தளம் செயலாளர் பிரிவிலும், 25சதவீதமானவர்கள் முந்தல் செயலாளர் பிரிவிலும் காணப்பட்டார்கள்.

3. 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வடமாகாண முஸ்லிம் அகதிகளின் வருகையோடு புத்தளம் மாவட்ட சனத் தொகை 12 வீதத்தால் அதிகரித்தது. அதில் குறிப்பாக புத்தளம் மாவட்ட முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களான கற்பிட்டி, புத்தளம், முந்தல் செயலாளர் பிரிவுகளின் மொத்த சனத் தொகை 65சதவீதத்தால் அதிகரித்தது.

4. 1994 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ந் திகதி புத்தள நகருக்கண்மையில் உள்ள சோல்டான் 2 என அழைக்கப்படுகின்ற அகதி முகாம் எரிந்து சாம்பலாகியது. இதே முகாமில் மீளத் திருத்தப்பட்ட நிலையில் 1995ம் ஆண்டு ஜூலை மாத நடுப்பகுதியில் மீண்டும் தீப்பற்றி 185 குடிசைகள் எரிந்து சாம்பலாகின. 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தகதி கண்டக்குடாவில் 90 ஏக்கர் என அழைக்கப்படும் அகதி முகாம் எரிந்து சாம்பலாகியது. இங்கு 249 குடிசைகள் எரிந்தன. 1995ஆம் ஆண்டு ஜூன் மாதம் அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவுக் கிராமத்தில் தோட்டம் சியாரத்து வௌியில் காணப்பட்ட அகதி முகாம் எரிந்து சாம்பலாகியது. 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் தகதி கற்பிட்டி யானை வாசல் அகதி முகாமில் 95 குடிசைகள், 9 கடைகள் எரிந்து சாம்பலாகியது.

5. இலங்கையில் வழமையாக காலை 7.30இல் இருந்து மாலை 1.30 வரை பாடசாலைகளில் மாணவர்களுக்கான கற்பித்தல் நடைபெறுவதுண்டு. புத்தளம் மாவட்டத்தில் உள்ளூர் பாடசாலைகளில் மாணவர்களின் இடநெருக்கடியால் அகதி மாணவர்கள் வழமையாக கல்வி கற்கும் நேரத்தில் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. இதற்குப் பதிலாக அகதி மாணவர்களுக்கு 2 மணியிலிருந்து 5 மணி வரை மாலை நேர வகுப்புக்களில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தன.



6. ஐந்து அங்கத்தவர்களுக்கும் அதற்குக் கூடிய ஒரு அகதிக் குடும்பத்திற்கு மாதாந்தம் ரூபாய் 1260 பெறுமதியான உலர் உணவு உதவி அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை குறையக் குறைய உலர் உணவு நிவாரண உதவியும் குறையும். உதாரணமாக ஒரு அங்கத்தவரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 334 ரூபாய் பெறுமதியான நிவாரணம் வழங்கப்படுகின்றது (*The Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996:34*).

7. புத்தளம் மாவட்டத்தில் UNHCR, WFP, SCF, IVSO, Forut, Redbarna, Italian Coorparation, Oxfam, Service Civil International ஆகிய சர்வதேச நிவாரண அமைப்புக்களும் SLRCS, SLF ஆகிய தேசிய நிவாரண அமைப்புக்களும் RDF, ODMNP, RRRA, NRRO ஆகிய உள்ளூர் நிவாரண அமைப்புக்களும் அகதி நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

8. இவ்வமைப்பு ஆங்கிலத்தில் Organization for Displaced Muslims of the Northern Province (ODNMP) என்று அழைக்கப்படும். இது 1992 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. குமசரவ நிறுவனம் இவ்வமைப்பின் வளர்ச்சிக்கு உதவியது. 1992–1994 ஆம் ஆண்டு காலங்களில் புத்தளம் மாவட்ட முந்தல் பிரதேசத்தில் இவ்வமைப்பு பரவலாக அகதி நிவாரண வேலைகளில் ஈடுபட்டு வந்தது.

9. இஸ்லாமிய மத சார்புள்ள பல நிறுவனங்களும் அகதி நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. அவற்றுள் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, அன்சாரி சுன்னத்துல் ஜமாஅத், IIRO, YMMA, FAMYS ஆகியவைகள் குறிப்பிடத்தக்கன. நிவாரண பொருட்கள் அடிப்படையிலும் உதவிகள் கொடுக்கப்பட்ட பிரதேச அடிப்படையிலும் மேற்குறித்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகளைக் கொண்டிருந்தன.

10. உலக உணவு திட்டத்தின் கீழ் உலர் உணவு நிவாரணம் பின்வரும் பொருட்களையும் அளவுகளையும் கொண்டிருந்தன. ஒரு அகதி அங்கத்தவருக்கு ஒரு மாதத்திற்கு 1600 கிராம் அரிசியும், 200கிராம் பருப்பும், 80 கிராம் சீனியும், 700 மி.லீ. தேங்காய் எண்ணெய்யும் வழங்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10. கால மாற்றத்தில் அகதிகள்

## 10.1 முகாம் வாழ்க்கைக்கு மாற்று வழி:

முல்லைத்தீவு முஸ்லிம்களின் அகதி வாழ்க்கை ஒரு நாள் இரு நாளாகி, இரு நாள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி இன்று ஆறு வருடத்தையும் தாண்டி விட்டது. இம்மக்கள் அகதியாக்கப்பட்ட போது, இவ்வகதிப் பிரச்சினை ஒரு தற்காலிகமான பிரச்சினை என்று கருதப்பட்டது. அந்த அடிப்படையில் குறுங்காலத்திற்குப் பொருத்தமானது என்று கருதப்பட்ட தற்காலிக நிவாரண உதவிகள் அரசாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்டன. கடந்த ஆறு வருட காலமும் இத் தற்காலிக நிவாரண உதவிகள் வருடா வருடம் புதுப்பிக்கப் பட்டு தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அகதிகள் பற்றிய நீண்டகால கண்ணோக்கில் இந்நிவாரண நடவடிக்கைகள் செய்யப்படவில்லை.

### 10.1.1. தற்காலிக அகதி நிவாரணம்:

அகதிகளுக்கான "தற்காலிக நிவாரண உதவி" எனும் போது அது பின் வரும் கருத்தை பிரதிபலிக்கின்றது. அதாவது வடக்கு முஸ்லிம்கள் குறுகிய ஒரு காலத்திற்கு மட்டுமே அகதிகளாக முகாமில் வாழ்வார்கள். மீண்டும் தமது சொந்த இடங்களில் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியதும் இவர்கள் திரும்பவும் அங்கு சென்று விடுவார்கள். இலங்கையில் கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான ஏனைய அகதிகளுக்கு இவ்வாறு நடந்திருக்கின்றது. அவ்வகையில் முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளுக்கு அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் வரையும் தேவைப்படும் நீர், மலசலகூட, மற்றும் ஏனைய அடிப்படை வாழ்க்கை வசதிகளையும்,[1] உணவு நிவாரணத்தையும் குறுங்கால நோக்கில் வழங்குவது பொருத்தமானது எனக் கருதப்பட்டு கடந்த காலத்தில் அகதி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய அகதி மக்களைப் பொறுத்தவரையில் சில



வாரங்களில் அல்லது மாதங்களில் சொந்த இடம் மீண்டு வழமையான வாழ்க்கையைத் தொடரக் கூடியதாக இருந்த சந்தர்ப்பங்களில், இத் தற்காலிக நிவாரண உதவி ஒரு பொருத்தமான அகதி நிவாரணக் கொள்கையாகக் காணப்பட்டது. ஆனால், பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட இவ்வகதிகளைப் பொறுத்தவரையில் இவ்வாறு குறுங்கால நோக்கில் செய்யப்பட்டு வந்த நிவாரண உதவிகள் ஆறு வருடங்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

அதாவது, மாதங்கள் வருடங்கள் ஆகி, வருடங்கள் பலவாகியும் வடக்கு முஸ்லிம்களின் அகதி நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. இதற்கு என்ன காரணமாக இருக்கலாம் என்ற சிந்தனைக்கு இலங்கை அரசும், நிவாரண ஸ்தாபனங்களும் முன்னுரிமை கொடுக்கவில்லை. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட பற்றாக்குறையான அகதி நிவாரணத்தில் கடந்த ஆறு வருடங்கள் வாழ்ந்ததன் பிரதிபலன்கள் அப்பாவி அகதிகளின் தலைவிதியாகக் கருதப்பட்டது. இதற்கு என்ன காரணம் என்பதை சற்று விபரமாக நோக்குவோம்.

### 10.1.2. அகதிப் பிரச்சினையா? அல்லது அரசியல் பிரச்சினையா?

முதலில் வடக்கு முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினை என்ன என்பதுடன் தொடர்புடைய அம்சங்களை நோக்குவோம். இவ்வம்சம் பற்றி இந்நூல் ஆசிரியரால் பல கட்டுரைகள் முன்னர் எழுதப்பட்டிருக்கின்றன[2]. அதனால் இவ்வம்சம் இந்நூலுக்குப் பொருத்தமான முறையில் பின்வருமாறு சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

இந்த நாட்டின் இனப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. இந்நாட்டில் இனரீதியான ஒரு ஆயுதப் போராட்டம் ஒரு அரசியல் விடுதலைக்கான போராட்டமாக அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. அரசியல் ரீதியாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கும், உள் நாட்டு யுத்தத்திற்கும் தீர்வுகாண வேண்டும் என்று பரவலாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. அது போல முல்லைத்தீவு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம், அடிப்படையில் தமிழ் இன வாதத்தின் பிரதிபலிப்பாகும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு அரசியல் தீர்வு இல்லாத சூழ்நிலையில் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட இவ்வடக்கு முஸ்லிம்கள் தமது பூர்வீக இடங்களுக்கு சுயமாகத் திரும்ப முடியாது என்பது நிதர்சனமானதொன்றாகும். இக்கண்ணோட்டத்தில் இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய பிரச்சினை அடிப்படையில் அரசியல் பிரச்சினையாகும்.

பலவந்த வெளியேற்றமும் அதன் பின்விளைவுகளும் ஒரு அரசியல் பிரச்சினையாக இருக்கின்ற போது, கடந்த ஆறு வருடங்களில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட அரசியல் பேச்சு வார்த்தைகளில் இம்மக்களின் பலவந்த வெளியேற்றப் பிரச்சினை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இங்குதான் வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புடைய பிரச்சினையின் உள்ளார்ந்த அம்சங்கள் தேசிய, சர்வதேச மட்டத்தில் சரியாக உணரப்படாமலே ஆறு வருடங்கள் கடத்தப்பட்டு வந்திருக்கின்றன என்ற உண்மையை உணரக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு உணரப்படாமையினால்தான் இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய பிரச்சினைக்கு அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சிக்கப் படவில்லை. முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் மீண்டும் தமது தாயகம் செல்ல முடியுமா? முடியாதா? என்ற அம்சம் அரசியல் ரீதியாக அணுகப்படவில்லை. இம்மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியுமாக இருந்தால் அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் என்ன என்பது கருத்துக்கெடுக்கப்படவில்லை. இம்மக்கள் தமது சொந்த இடத்திற்கு மீளவும் செல்ல முடியாதவர்கள் என்பது அரசியல் ரீதியாக நிச்சயிக்கப் பட்டிருந்தால், இம்மக்களுக்கான மாற்று வாழ்க்கைத் திட்டம் ஒன்றை அரசியல் ரீதியாக முன்வைப்பதற்கும் பொறுப்பானவர்கள் (அரசும், அரசசார்பற்ற சமாதானத்திற்கான அமைப்புக்களும்) முயற்சிக்கவும் இல்லை. இவ்வாறு, கடந்த காலத்தில் வடக்கு முஸ்லிம்களின் யதார்த்தபூர்வமான பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டு வந்ததை பேராசியர் சிவசேகரம் (1996) இலங்கையின் இனப்பிரச்சினையில் வடக்கு முஸ்லிம்கள் ''ஏறக்குறைய முழுமையாக



மறக்கப்பட்ட மக்கள்'' என்ற தனது கட்டுரையின் மூலம் தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

அதே நேரத்தில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும் முயற்சிகளுக்கு கடந்த காலங்களில் இந்நாட்டில் பஞ்சம் இருக்கவில்லை. உள் நாட்டு மட்டத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையில், அரசாங்க-ஆயுதக் குழுக்களுக்கிடையில், சமய, சமூகத் தலைவர்களுக்கிடையில் இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும், இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருத்தமான நிவாரணம் பற்றியும் ஏராளமான பேச்சுவார்த்தைகள் கடந்த காலத்தில் நடைபெற்றிருக்கின்றன.[3]

வடக்கு முஸ்லிம்களுடைய பிரச்சினை அகதிப் பிரச்சினையாக, அதாவது உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் பிரச்சினையாக மட்டுமே கொள்ளப்பட்டது. அந்த வரைவிலக்கணத்திற்குட்பட்ட அடிப்படையில் இம்மக்களுக்கு தற்காலிக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வந்தன. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தற்காலிக நிவாரணத் தீர்வுத்திட்டம் இறுதியில் முழுமையாகத் தோல்வியடைந்து, இவ்வகதிகளின் வாழ்க்கையைப் பலி கொண்டதையும் நாம் சற்று முன்னர் அவதானித்தோம்.

### 10.1.3 முல்லைத்தீவு முஸ்லிம்களின் அபிலாசைகள்:

கடந்த ஆறு வருடங்களாக முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது சொந்த இடம் மீள்வதில் நம்பிக்கை வைத்திருந்தனர்[4] நீண்ட அகதி வாழ்க்கைக்குப் பின்பும் இம்மக்கள் தாயகம் மீள்வதில் இருந்த நம்பிக்கை உறுதியாக இருந்தமைக்கு என்ன காரணம் என்பதை நாம் இங்கு சற்று விபரமாக நோக்க வேண்டும்.

முல்லைத்தீவு முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமது தற்போதைய அகதி வாழ்க்கைச் சூழல் எதிர்கால முன்னேற்றத்திற்குப் பொருத்தமற்றது என்ற கண்ணோட்டம் பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கு முகாம் சூழலில் அடிப்படை பொருளாதார, சமூக, கல்வி விருத்திக்கான வாய்ப்புக்கள் இல்லாதிருந்தமை ஒரு காரணமாகும். அதே நேரத்தில் முல்லைத்தீவின் பொருள் வளமும், சமூக சூழலும் முகாம் வாழ்க்கைக்குப் பொருத்தமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றீடாக இம்மக்கள் மனதில் நீடித்து நிலைத்திருந்தமை மற்றொரு காரணமாகும்.

இம்மக்கள் தமது பூர்வீக இடங்களுக்குச் செல்வதை ஏனைய மாற்றுச் சிந்தனைகளைவிட உயர்வாகக் கொண்டிருந்தமைக்கான காரணங்களை நாம் கவனமாக பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால், இம்மக்கள் விடுதலைப் புலிகளால் இவர்களின் சொந்த இடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். அதே விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் இம்மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை ஆயுதக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர். இந் நிலையில் முஸ்லிம்கள் எவ்வாறு சொந்த இடத்திற்கு மீள்வது சாத்தியம்? விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் பலமாக இருக்கும்வரை தாயகம் மீளச் செல்வதன் சாத்தியம் பற்றி இம்மக்கள் கருத்தில் கொள்வது யதார்த்தத்திற்கு முரணானது என்ற வினா எழுகின்றது.

இவ்வினாக்கள் தொடர்பான முல்லைத்தீவு முஸ்லிம்களின் கண்ணோட்டம் என்ன என்பதை இப்போது நோக்குவோம். இம்மக்களைப் பொறுத்தவரை முல்லைத்தீவு மிகவும் ஒரு அந்நியோன்யமான பிரதேசமாகும். அதாவது முஸ்லிம்களின் வாழ்வுக்கான பொருளாதார, சமூக, கலாசார அடிப்படைகள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. அத்துடன், இன உறவு ரீதியாக, தமிழ் மக்களோடு மிக இணக்கமாக வாழ்ந்து வந்த பிரதேசமாகவும் முல்லைத்தீவு காணப்படுகின்றது. முல்லைத்தீவில் இருந்து 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சூழ்நிலையை தவிர அதற்கு முந்திய எல்லா சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் தமது கஷ்ட நஷ்டங்களை பகிர்ந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தார்கள். முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றிய உள்ளூரைச் சேர்ந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் கூட, மனப்பூர்வமாக முஸ்லிம்களை வெளியேற்ற விரும்பவில்லை என்று முல்லைத்தீவு முஸ்லிம்கள் நம்புகின்றார்கள். ‘‘வெளியேற்ற உத்தரவு தமது தலைமைப்பீடத்தின் கட்டளை என்பதினால் மாத்திரமே முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றுவதாக’’ அப்பொழுது அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள் என்பதை முல்லைத்தீவு முஸ்லிம்கள் நினைவு கூருகின்றார்கள். வடக்கு முஸ்லிம்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் அண்மைக்கால மன மாற்றம் முஸ்லிம்கள் பற்றிய



இவ் ஆயுதக் குழுவின் எதிர்கால நிலைப்பாடு பற்றிய அச்சத்தையும் இம்மக்கள் மத்தியில் இல்லாமல் செய்து விட்டது. இக்காரணங்களால் முஸ்லிம்கள் தாம் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு செல்லக் கூடிய வாய்ப்புள்ளது என்று நம்புகின்றார்கள்.

இந்த அடிப்படையில் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு சராசரி முஸ்லிம் தான் திரும்பவும் முல்லைத்தீவில் தமிழ் மக்களோடு வாழ்வதில் எவ்வித தடைகளும் இல்லை என்று நம்புகின்றான். அந்த முஸ்லிம் அகதிக்கு தேவைப்படுவதெல்லாம் விடுதலைப் புலிகள் தமது பழைய நிலைப்பாட்டில் இருந்து மாறிவிட்டார்கள் என்பதை வெளிப்படையாக அறியத்தருவதொன்றுதான். அதாவது முல்லைத்தீவு முஸ்லிம்கள் மீண்டும் தமது பூர்வீக இடங்களுக்குத் திரும்பச் சென்று வழமை போல் வாழலாம் என்று விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவித்து தமது நல்லெண்ணத்தை நிதரிசனப்படுத்த வேண்டும் என்பதாகும்.

அதே நேரத்தில் முல்லைத்தீவு முஸ்லிம் சமூகத் தலைவர்கள் இவ்விடயம் பற்றி சற்று வித்தியாசமாக சிந்திக்கின்றார்கள் (அணிந்துரையைப் பார்க்க). இச்சமூகத் தலைவர்களின் தாயக மீளல் என்பதுடன் தொடர்புடைய கருத்தில் பொறுப்புணர்ச்சியும் நீண்ட காலக் கண்ணோக்கும் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இக்கருத்துப்படி முல்லைத்தீவு முஸ்லிம்களின் தாயகம் மீளல், பேச்சுவார்த்தை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இப்பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகளும் பங்குபற்ற வேண்டும். இம்முயற்சி மூலமாக, முல்லைத்தீவு முஸ்லிம்களின் தனித்துவமும், சுய கௌரவமும் எல்லா சாராராலும் மதிக்கப்பட்ட அடிப்படையில் இம்மக்களுக்கான தீர்வு காணப்பட வேண்டும். இம்மக்கள் சுதந்திரமாக தமது நாளாந்த வாழ்க்கையை முல்லைத்தீவின் சொந்த இடங்களில் வாழ்வதற்குத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், அநாதரவான நிலையில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்ட நிகழ்வை கருத்திற்கொண்டு நோக்கும் போது, இம்மக்கள் தமது வாழ்வுரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் தமது தாயகம் மீள்வது என்ற நிலைப்பாடு மிகவும் நியாயமான ஒன்று என்று கருத வேண்டியிருக்கின்றது.

துரதிஷ்டவசமாக, முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் தமக்குரிய பொருத்தமான தீர்வைக் கண்டறிந்து அதனை முன்னெடுத்துச் செல்லும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைரியமான தலைமைத்துவம் இதுவரை ஏற்படவில்லை. வடக்கு முஸ்லிம்களை ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் போது கூட அவ்வாறான கூட்டுத் தலைமைத்துவம் கடந்த காலங்களில் சாத்திமாகவில்லை. அதே நேரத்தில் தேசிய, சர்வதேச சமூகங்களோ ஏற்கனவே அடையாளப் படுத்தப்பட்ட இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய அம்சங்களிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. அதனால், கடந்த ஆறு வருடங்களாக புறக்கணிக்கப்பட்டு வந்த வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய இனப் பிரச்சினை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே சென்று கொண்டிருக்கின்றது.

## 10.2 அண்மைக்கால மாற்றங்கள்:

இச்சூழ்நிலையில், முல்லைத்தீவு முஸ்லிம்களின் அகதி வாழ்க்கையில் புதிய பல மாற்றங்கள் அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவற்றுள் மிக முக்கியமானது தமது உடனடி எதிர் கால வாழ்விடத்தைப் பற்றி இம் மக்கள் இது வரையில் கொண்டிருந்த அபிப்பிராயத்தில் ஏற்பட்டு வரும் மாற்றம் ஆகும். அதாவது மிக அண்மைக்காலம் வரை முல்லைத்தீவில் தாம் மீண்டும் குடியேறுவது சாத்தியம் என இம்மக்கள் கருதி இருந்தார்கள்.

ஆனால், இந்த அபிப்பிராயத்தை 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்வி சிதறடித்தது. இலங்கையின் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய உடனடிச் சாத்தியமற்ற உள்நாட்டு அரசியல் சூழ்நிலை, இம்மக்களின் தாயகம் மீளும் தாகத்தைப் பலவீனப்படுத்தியது. உள்நாட்டு யுத்தம் முடிவு பெறாமல் தமது சொந்த இடம் மீளல் சாத்தியம் இல்லை என்ற மனோபாவம் மேலும் உறுதி பெறத் தொடங்கியது. அதனால், தற்போதைய தமது அகதி முகாம் வாழ்க்கைக்கு பொருத்தமான உடனடி மாற்று வழியைத் தேட அண்மைக் காலத்தில் இம்மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

அகதி முகாம் வாழ்க்கைக்கு மாற்றுத்திட்டம் பற்றி முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் பலதரப்பட்ட சிந்தனைகள் காணப்பட்டன. அரசாங்கத் தொழில் செய்யும், படித்த மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள், தமக்கும், தமது குடும்பத்தவர்களுக்குமாக "சொந்தக் காணிகளை" வாங்கி தமது வசதிக்கேற்ற வாழ்விடத்தை அமைத்துக் கொள்வது பொருத்தமானது என்று கருதினார்கள். சமூகக் கண்ணோக்குக் கொண்ட வேறு பலர் தமது சமூகத்தை எங்கேயாவது ஒன்றாகக் குடியேற்றி ஒரு சமூகமாக வாழச் செய்ய வாய்ப்பிருக்கின்றதா என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள். மேற்குறித்த முயற்சிகள் எல்லாம் முகாம் வாழ்க்கைக்கு மாற்று ஒழுங்கு செய்வதை நோக்காகக் கொண்டிருந்தது. இம் மாற்று வழிகளில் சொந்தக்காணிகளில் தற்காலிகமாக வாழ்க்கையை அமைத்துக் கொள்வது பிறரைத் தொல்லைப் படுத்தாமல் அத்துடன் பிறரின் தொந்தரவில்லாமல் சுயகௌரவத்தோடு வாழக்கூடிய வாழ்க்கையாக அமையும் என்றும், நம்பினார்கள். சொந்தக் காணியில் உற்றார் உறவினர்களுடன் கௌரவமாக வாழமுடியும் என்றும், நம்பினார்கள். முல்லைத்தீவு முஸ்லிம்களில் ஒரு பகுதியினரின் சிந்தனைகள் இவ்வாறிருக்க, எஞ்சிய மிகப் பெரும்பான்மையானவர்கள் தமது முகாம் வாழ்க்கைக்கு ஒரு பொருத்தமான மாற்று வழியினை சிந்திக்கக் கூடிய மனத் தைரியமும், பொருள் வசதியும் அற்றவர்களாக முகாம்களில் முடங்கி வாழ்ந்து வந்தார்கள்.

### 10.2.1. அரசின் மீள்குடியேற்றக் கொள்கை:

இந்நிலையில்தான் அதாவது அகதிகயாக்கப்பட்டு ஆறு வருடங்களுக்குப் பின்னர் முஸ்லிம் அகதிகளின் அகதி வாழ்க்கைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை இன்றைய அரசாங்கம் நடைமுறைப்படுத்த முற்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வட மாகாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை அவர்கள் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசங்களில் நிரந்தரமாகக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு இம்மக்களை நிரந்தரமாகக் குடியேற்றுவதன் மூலம் இம்மக்களின் அகதிப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது அரசாங்கத்தின் நோக்கமாகக் காணப்பட்டது.

பூர்வீகமற்ற பிரதேசங்களில் அகதிகளை மீளக் குடியேற்றுவதோ, அல்லது மீளக் குடியேற்ற வற்புறுத்துவதோ இலங்கையில் இதுவரையில் வழமையில் இருந்து வராததால் இலங்கை அரசு "யுத்த நிலைமை காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத இடம் பெயர்ந்தவர்களை வேறு இடங்களில் குடியமர்த்தல்" (Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996, 23) என்ற புதிய கொள்கை விளக்கத்தோடு பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட அகதி முஸ்லிம்களை அகதிகளாக வாழ்கின்ற இடங்களில் நிரந்தரமாகக் குடியேற்ற நடவடிக்கை எடுத்தது. பூர்வீகமற்ற இப்பிரதேசங்களில் அகதிகளை நிரந்தரமாகக் குடியேற்றுவதற்கான மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் (Resettlement Allowance) நிரந்தரக்குடியிருப்பிற்கான அடிப்படை வசதிகள் (Infrastructure Development) அத்துடன் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கான ஏனைய நலன்களை செய்து கொடுப்பதற்கான ஒழுங்குகள் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசு இப்புதிய திட்டம் மூலம் அகதிகளை அகதியாக வாழும் பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியேற்றுவதுதான் என்ற தனது நோக்கத்தை அரசியற் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முற்படவில்லை. அது மட்டுமல்லாமல், அகதிகளாக வாழும் பிரதேசங்களில் நிரந்தரமாகக் குடியேற விருப்பமா என்ற அகதிகளின் அபிப்பிராயத்தை வெளிப்படையாக அகதிகளிடமிருந்து அறியவும் அரசாங்கம் முற்படவில்லை. மாறாக, அகதிகளின் முகாம் வாழ்க்கைக்கு மாற்று வழி தேடும் ஆர்வத்தைப் பயன்படுத்தி மீள்குடியேற்றத்திட்டக் கொடுப்பனவுகள் மூலமாக தனது இந் நிரந்தரக் குடியேற்றத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முற்பட்டது.

பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களுக்கு இந்நிரந்தரக் குடியேற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஸ்தானிகராலயத்திற்கும், ஜேர்மன் அரசாங்கத்திற்கும், அது போல சர்வதேச நிவாரண அமைப்புக்களுக்கும் அரசு எடுத்துக் கூறி, இந்நிரந்தரக் குடியேற்றத் திட்டத்திற்கான நிதி உதவிகள் மேற்குறித்த நிறுவனங்களிடமிருந்து பெற முயற்சிக்கப்பட்டன. இதன் விளைவாக, இதுவரையில் பூர்வீக வாழ்விடங்களிலேயே மீள்குடியேற்ற உதவிகளைச் செய்து வந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஸ்தானிகராலயம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக வாழும் பிரதேசங்களிலேயே நிரந்தரமாகக் குடியேற்ற உதவிகளைச் செய்து கொடுக்க முன்வந்தன.



இப்புதிய நிரந்தர மீள்குடியேற்றத் திட்டம்[5] அகதிக் குடும்பங்கள் தமக்கெனச் சொந்தக் காணிகளை தனியாக அல்லது கூட்டாக வாங்கக் கூடியதாக இருந்தால், அச் சொந்தக் காணியில் இவ்வகதிகளுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள பண ரீதியான கொடுப்பனவுகளைக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் குடியேற்றக் கொடுப்பனவாக மொத்தமாக 39,000 ரூபாய் வழங்கப்படுகின்றது. இத்தொகை பகுதி பகுதியாக குடியேற்ற முயற்சி விருத்திக்கேற்ப வழங்கப்படுகின்றது. அதாவது முதலில் ஒரு தற்காலிகக் குடிசை அமைப்பதற்கு 7,000 ரூபாயும், அந்த தற்காலிகக் குடிசையை அமைப்பதற்குத் தேவையான உபகரணங்களுக்கும் ஏனைய தேவைகளுக்குமாக 3,000 ரூபாயும், தற்காலிகக் குடிசையை நிரந்தர வசிப்பிடமாக மாற்றுவதற்கு 25,000 ரூபாயும் வழங்கப்பட்டு இறுதியில் இவ்வகதிகளின் சுய தொழில் முயற்சிக்காக 4,000 ரூபாயும் கொடுக்கப்படும்.

குடியேற்றத்திற்கான இப்பணக் கொடுப்பனவுகள் கொடுத்து முடிக்கப்பட்டதிலிருந்து 6 மாதத்தில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும். அதாவது இம்மக்களுக்கு இடப்பெயர்வால் ஏற்பட்ட பிரச்சினைகள் இந்நிரந்தரக் குடியேற்றத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று கருதப்பட்டது.

### 10.2.2. அகதிகளுக்கான மீள்குடியேற்றம் என்றால் என்ன?

மீள் குடியேற்றம் என்றால் என்ன? அது யாருக்கு, எச்சூழ்நிலையில், எவ்வெவ் வசதிகளுடன் செய்யப்பட வேண்டும்? என்ற அடிப்படைத் தத்துவத்தையும், வடமாகாண முஸ்லிம் அகதிகளுக்குப் பொருத்தமான மீள் குடியேற்றம் எவ்வாறு இருக்க வேண்டும் போன்ற அம்சங்கள் பற்றியும் சற்று நோக்க வேண்டும்.[6]

இவ்வம்சத்தை மேலும் தெளிவாக விளங்கிக்கொள்ள அகதிகளின் நலனுக்காக அரசாலும், அரசசார்பற்ற நிறுவனங்களாலும் செய்யப்பட்டு வருகின்ற வாழ்விட ஒழுங்குகளுடன் தொடர்புடைய சொற் பிரயோகங்களின் கருத்தினை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இடம் பெயர்ந்த மக்கள் அகதிகளாகப் பராமரிக்கப்படும் போது அவ்அகதிகள் வாழும் இடத்தினை அகதி முகாம் (Refugee Camp)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது நலன்புரி நிலையம் (Welfare Centre) என்று அழைக்கப்படுகின்றது[7]. அகதி முகாம் ஒன்று மற்றொரு இடத்திற்கு இட மாற்றம் செய்யப்படும் போது ஏற்படுகின்ற அமைவிட மாற்றத்தை இடமாற்றம் (Re-location) என்றும் அழைக்கப்படுகின்றது (Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996).

அகதிகள் மீண்டும் தமது சொந்த இடத்திற்கு திரும்பும் சூழ்நிலை ஏற்படும் போது அவர்களின் சொந்த இடத்தில் மீளக் குடியேற உதவுகின்ற பண ரீதியான, பொருள் ரீதியான, சுயதொழில் பயிற்சி ரீதியான, கிராம, கல்வி, நீர்ப்பாசன வசதிகளைத் திருத்தி, அபிவிருத்தி செய்து கொடுப்பதன் மூலமான உதவிகளை மீள்குடியேற்றம் (Resettlement) என்ற பதம் குறிக்கின்றது (Muthar, 1995 and United Nations, 1994).

மேற்குறித்த பதங்களில் அகதிகளை இம்மக்களின் பூர்வீக இடங்களில் மீளக்குடியேற்றல் என்ற அம்சத்தை எடுத்துக் கொண்டால் இம்மீள்குடியேற்ற முயற்சிக்கு உதவி செய்ய வேண்டியது அரசினதும், சர்வதேச ஸ்தாபனங்களினதும் கடமைப்பாடு என்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் குறிப்பிடுகின்றன (Deng, 1993 and 1995). இந்த அடிப்படையில் அகதிகளின் சொந்த இடத்திலான மீள் குடியேற்றத்திற்கான பணம், பொருள் ஏனைய தொழில் நுட்ப உதவிகளை வளர்ச்சி பெற்ற நாடுகளும், சர்வதேச ஸ்தாபனங்களும் வழங்கி வருகின்றன.

பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட வட மாகாண முஸ்லிம்களை அரசாங்கம் இம்மக்கள் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசங்களில் குடியேற்ற எடுத்து வருகின்ற தற்போதைய முயற்சி <u>அகதி முகாம்</u> என்ற வரைவிலக்கணத்திற்குள்ளோ அல்லது <u>மீளமைவிடம்</u> என்ற வரைவிலக்கணத்திற்குள்ளோ அல்லது <u>மீள் குடியேற்றம்</u> என்ற வரைவிலக்கணத்திற்குள்ளோ உள்ளடக்கப்பட முடியாததொன்று. இம்மக்களுக்கான அரசாங்கத்தின் தற்போதைய குடியேற்ற நடவடிக்கைகளை மிகக் கவனமாகப் பரிசீலிக்கும் போது இது இம்மக்களை நிரந்தரமாக அகதியாக வாழுகின்ற பிரதேசங்களில் குடியேற்ற எடுக்கப்படுகின்ற முயற்சி போல் தோன்றுகின்றது. உண்மையில் அரசாங்கத்தின் தற்போதைய குடியேற்ற முயற்சிகள் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களுக்கான ஒரு இடைக்கால



வாழ்விட ஒழுங்காக இருக்குமானால், அத்துடன் இவ்விடைக்கால வாழ்விட ஒழுங்குத் திட்டம் கொள்கை ரீதியாக அரசால் அங்கீகரிக்கப்படுமானால், பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட இம்மக்களின் பிரச்சினைக்கு ஒரு பொருத்தமானதீர்வாக அமையலாம்.

மேலே குறிப்பிட்டவாறு பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களுக்கு நிரந்தரக் குடியேற்றமா? (Permenant Settlement) அல்லது இடைக்கால வாழ்விட வசதி ஒழுங்கா? (Interim Living Arrangment) என்ற இரு முன்மொழிவுகளும் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவைகளாகும். பின்வரும் பகுதியில் இவ்விரு முன்மொழிவுகளுக்குமான நியாயங்களை நோக்குவோம்.

### 10.2.3 பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்டவர்களுக்கான மீள்குடியேற்றம்:

இந்த அடிப்படையில் "மீள்குடியேற்றம்" என்ற பதம் வட மாகாண முஸ்லிம்களுடன் தொடர்புற்ற வகையில் எவ்வாறு விளக்கப்படுகின்றது என்பதை சற்று நோக்குவோம். அரசாங்கத்தின் மீள் குடியேற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட "சொந்த இடத்திற்குத் திரும்ப முடியாத இடம் பெயர்ந்தவர்கள்" என்ற அம்சமும் "இடம் பெயர்ந்தவர்களை வேறு இடங்களில் குடியேற்றுவது" என்ற அம்சமும், தமது வாழ்விடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அகதி மக்களைப் பொறுத்தமட்டில் எந்த வகையில் பொருத்தமானது என்ற விடயம் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

முஸ்லிம் அகதிகளை ஏன் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியேற்ற முடியாது என்பதற்கு இம்மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்ற யுத்த நிலைமைகளை அரசாங்கக் கொள்கை விளக்கம் காரணமாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் இலங்கையில் பல லட்சக்கணக்கான ஏனைய அகதிகளும் யுத்த நிலைமை காரணமாக தமது சொந்த இடங்களுக்கு மீள முடியாது இருக்கின்றார்கள். முஸ்லிம் அகதிகள் இதற்கு விதிவிலக்கல்ல. அது அவ்வாறிருக்க, முஸ்லிம் அகதிகளுக்கு மாத்திரம் அகதியாக வாழ்கின்ற பிரதேசங்களில் நிரந்தரக் குடியேற்றத் திட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைக்கப்படுவது பற்றி அரசாங்கக் கொள்கை மேலதிக விளக்கம் எதையும் தரவில்லை. ஒரு கண்ணோட்டத்தில் இம்மக்களைப் பலவந்தமாக வெளியேற்றிய ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இம்மக்களின் பாரம்பரியப் பிரதேசம் தொடர்ந்து இருந்து வருகின்றமை இம்மக்களை அப்பிரதேசங்களில் குடியேற்ற முடியாமைக்கு ஒரு மறைமுகமான காரணமாக அரசு கருதுமாக இருந்தால், பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட அகதிகளின் பிரச்சினையானது அவர்களுக்குப் பொருத்தமான வாழ்விட ஒழுங்கு மட்டுமல்ல அதைவிட ஆழமான அரசியல் பிரச்சினையாகும் என்பது பொருளாகும்.

இனப்பிரச்சினை காரணமாக ஒரு மக்கள் குழு தமது சொந்த வாழ்விடங்களில் தமது பொருளாதார, சமூக, கலாசாரச் சூழலோடு வாழ முடியாத தன்மை உயர் மட்ட அரசியல் பேச்சு வார்த்தைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகும். அவ்வாறான பேச்சுவார்தைகளில் இம்மக்களை திரும்பவும் சொந்த இடங்களில் மீள் குடியேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அது சாத்தியப்படாதவிடத்து இம்மக்களை பாதுகாப்பான ஏனைய இடங்களில் நிரந்தரமான குடியிருப்பிற்கான வாழ்க்கை வசதி ஒழுங்கோடு ஏனைய அடிப்படை உரிமைகளும் வழங்கப்படும் முறையிலான தீர்வுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகக் குறைந்தது இம்மக்களுக்கு பலவந்த வெளியேற்றத்தால் ஏற்பட்ட பொருளாதார, சமூக, கலாச்சார இழப்புக்களுக்குப் பொருத்தமான மாற்று ஒழுங்குகள் செய்யப்படுவதற்கான திட்டமாவது முன்வைத்திருக்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்கள் நிரந்தரமாக திரும்பவும் தமது பூர்வீக இடங்களுக்கு மீள முடியாதவர்கள் என்பது நிரூபிக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி இம்மக்களைப் பூர்வீக இடத்தில் குடியேற்றுவதுடன் தொடர்புடைய பொருத்தமான எந்த நடவடிக்கைகளும் அரசாலும் மற்றவர்களாலும் இதுவரை எடுக்கப்படவில்லை. யுத்த வெற்றியின் பின்னர் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களை சொந்த இடத்தில் மீள்குடியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் இறுதியில் தோல்வியில் முடிந்ததற்குப் பல உதாரணங்கள் உள்ளன[8] இந்த நிலையில் ''சொந்த இடத்திற்குத் திரும்ப முடியாத இடம் பெயர்ந்தவர்கள்'' என்ற எடுகோளோடு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட நிரந்தரக் குடியேற்ற முயற்சி பலவந்த



வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களுக்குப் பொருத்தமான ஒரு தீர்வு முயற்சியாகக் காணப்படவில்லை.

அடுத்து ''இடம் பெயர்ந்தவர்களை வேறு இடங்களில் குடியேற்றுவது'' என்ற அரசாங்க அகதிக் கொள்கை விளக்கத்தின் மறுபகுதியை சற்று நோக்குவோம். சொந்த இடத்தில் அகதிகளைக் குடியேற்ற முடியாத சூழ்நிலையில் வேறு இடங்களில் நிரந்தரமாகக் குடியேற்ற அரசாங்கம் முயற்சிப்பதாக இருந்தால் அவ்வாறான முயற்சியொன்று அகதிகளின் எதிர்கால நன்மையைக் கருத்திற் கொண்டு முறைப்படி திட்டமிடப்பட்டதொன்றாக இருக்க வேண்டும். இம்மக்களுக்கு சொந்த இடத்திற்கு ஒப்பான வாழ்க்கை வசதிகளை இப்புதிய நிரந்தரக் குடியேற்றப் பிரதேசத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்காகக் கொள்ளவும் வேண்டும்.

இங்கு ஒரு குடியேற்றத்திட்ட உதாரணத்தைப் பார்ப்போம். இலங்கையில் நிலமற்ற விவசாயிகள், மகாவலிகங்கைப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டார்கள். இக்குடியேற்றத் திட்டத்தில் குடியேற முன்வந்த மக்களுக்கு அடிப்படைப் பொருளாதார, சமூக, கலாசார வசதிகளை பல கோடி ரூபாய் முதலீட்டில் அரசாங்கம் செய்து கொடுத்தது. மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தில் ஒன்றான மகியங்கனைப் பிரதேசத்தில் ஏறக்குறைய 200 சதுர கிலோ மீற்றர் பரப்புப் பிரதேசத்தில் நெல்வயல் நிலங்களும், நீர்ப்பாசனக் கால்வாய்களும், போக்குவரத்து வசதிகளும், பாடசாலைகளும், வைத்தியசாலைகளும், சந்தை வசதிகளும், அதுபோல ஏனைய வாழ்விட வசதிகளும் அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டு நிலமற்ற ஈரவலய விவசாயிகள் குடியேற்றப் பட்டிருக்கின்றார்கள். இக் குடியேற்றத்திட்டத்தின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும் வளர்ச்சிக்குமாக மாபெரும் நீர்ப்பாசனத் திட்டத்தை கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாட்டு உதவியுடன் அரசாங்கம் செய்து கொடுத்தது. இப்பெரிய குடியேற்றத்திட்டத்தின் மூலம் ஒரு விவசாயக் குடும்பம் இலட்சக் கணக்கான ரூபாய்களை தனிப்பட்ட அத்துடன் பொது முதலீடுகளால் நன்மை அடைந்தது.

இம் மகாவலிக் குடியேற்றத்திட்ட உதாரணத்தைப் புத்தளம் மாவட்டத்தில் பலவந்தமாக வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றத்துடன் ஒப்பிடுகின்ற போது, ஒரு அகதிக் குடும்பத்திற்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலா 39,000 ரூபாய் மாத்திரமே குடியேற்றக் கொடுப்பனவாக ஒதுக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட "மீள்குடியேற்றக் கிராமங்களை" (Resettlement Villages) விட ஏனைய நிரந்தரக் குடியேற்றத்திட்டப் பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட பொது வசதிகளையே அரசாங்கம் செய்து கொடுக்க முன்வந்துள்ளது. இதற்கெல்லாம் அப்பால், புத்தளம் மாவட்டத்தில் பெருந் தொகையாகவுள்ள அகதிகளுக்கான நிரந்தரக் குடியேற்றத்திட்டம் ஒன்றின் சாத்தியத் தன்மை பற்றி அப்பிரதேசத்தின் தொழில் வாய்ப்பு, சூழல் நிலைகள், சமூக-இன உறவுத் தன்மைகள் என்ற கண்ணோட்டத்தில் நிரந்தர குடியேற்றச் சாத்தியபாடு பற்றிய மதிப்பீடு செய்யப்படவும் இல்லை. மாறாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்கனவே சனச் செறிவு மிக்க (வட-மேற்குப்) பிரதேசத்தில் பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்ட ஏறக்குறைய 60,000 வடக்கு முஸ்லிம்களை நிரந்தரமாகக் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வட மாகாண முஸ்லிம் அகதிகளுக்கான நிரந்தரக் குடியேற்றத் திட்டத்தின் சில அடிப்படைப் பிரச்சினைகளாகும்.

### 10.2.4. மீள்குடியேற்றம் பற்றிய அகதிகளின் கண்ணோக்கு:

இச்சந்தர்ப்பத்தில் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட அகதிகள் எவ்வகையான மீள்குடியேற்றத்திட்டம் ஒன்றை விரும்புகின்றார்கள் என்ற அம்சமும் நோக்கப்படுவது அவசியமாகும். அந்த அடிப்படையில் 1996ஆம் ஆண்டு ஜனவரி 13, 14ஆம் திகதிகளில் "வடக்கு முஸ்லிம்களுக்கான மீள் குடியேற்றம்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இருநாள் செயல் அமர்வில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றி அதில் பங்கு பற்றிய முல்லைத்தீவு முஸ்லிம் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்ட கருத்து இங்கு பொருத்தமானதாக இருக்கின்றது. அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> *"முல்லைத்தீவு எமது தாயகம். சகல வளங்களுடனும் பாரம்பரியமாக வாழ்ந்த மண். எமது மீள்குடியேற்றம் எமது சொந்தப் பிரதேசமாகிய முல்லைத்தீவு மாவட்டத்திலேயே நடைபெற வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளும் அரசியல் ரீதியாகவும் சமாதான ரீதியாகவும் எடுக்கப்படல் வேண்டும். ஆயுத ரீதியான வெற்றியின் மூலம் முல்லைத்தீவுக்குச் சென்று வாழ வற்புறுத்தக் கூடாது. இன ஐக்கியத்துடன் கூடிய சமாதன சூழ்நிலையிலேயே முல்லைத்தீவு செல்ல விரும்புகின்றோம். சொந்த இடத்துக்குச் செல்லும் வரைக்கும் சனச் செறிவு கூடிய, வசதிகள் குறைந்த முகாமில் தொடர்ந்தும் வாழ்ந்து எமது எதிர்காலத்தை வீணடிக்க முடியாது. சுமார் 25க்கு மேற்பட்ட அகதி முகாம்களிலும், வீடுகளிலும் மக்கள் சிதறி வாழ்கின்றார்கள். குறிப்பாக ஆலங்குடா அகதி முகாமில் சனச் செறிவுக்கேற்ப அடிப்படை வசதிகள் அளிக்கப்படவில்லை. கல்வியில் அம்மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வியின்மையால் சிறார்களின் எதிர்காலம் இருளடைந்த தொன்றாகவே காணப்படுகின்றது. இது போன்று இன்னும் பல இடங்களில் இந்நிலை காணப்படுகின்றது. படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. எனவே எமது சொந்த இடத்தில் மீளக் குடியேறும் வரை எமக்குத் தேவையான வசதிகள் அதிகரித்துத் தரப்பட்டு கௌரவமான வாழ்க்கை வாழ உதவிகள் செய்யப்பட வேண்டும்."*

மீண்டும் முல்லைத்தீவில் தமது சொந்தப் பிரதேசங்களில் குடியேறும் வரை தாம் அகதிகளாக வாழும் பிரதேசத்தில் முகாம் வாழ்க்கைக்கு ஒரு மாற்று வாழ்க்கைத் திட்டத்தையே முல்லைத்தீவு முஸ்லிம்கள் வேண்டி நிற்கின்றார்கள். அவ்வாறான ஒரு திட்டம் முல்லைத்தீவு முஸ்லிம்கள் தொடர்ந்து அகதிகளாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு மாற்று வாழ்விட ஒழுங்காகும். ஆனால், இம்மாற்று வாழ்விட ஒழுங்கு தமது சொந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுடன் தொடர்பான இம்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காது. மாறாக குறுங்காலத்தில் இம்மக்களின் வாழ்க்கை மேலும் சீரழியாமல் பாதுகாக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவலாம். மேற்குறித்த அடிப்படையிலான வாழ்க்கைத் திட்டத்தை ஏற்பதற்கான உளப்பாங்கே முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

## 10.2.5. அண்மைக்கால வாழ்விட இடஅமைவு மாற்றங்கள்:

இச்சந்தர்ப்பத்தில், முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகள் மத்தியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும் குடியிருப்பு இட அமைவு ரீதியான மாற்றங்களை சற்று அவதானிப்போம். இந்நூல் எழுதப்படும் வேளையில் (நவம்பர் 1996ஆம் ஆண்டு) முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க சதவீதத்தினர் சொந்தக் காணிகளை வாங்கி முகாம் வாழ்க்கைக்கு ஒரு மாற்று வழியினைக் காண முற்படுவது அவதானிக்கக் கூடிதாக இருந்தது. முல்லைத்தீவு முஸ்லிம்கள் மத்தியில் சொந்தக் காணி வாங்கும் முயற்சியோடு ஏற்பட்டு வரும் வாழ்க்கை அமைவிட மாற்றங்களை அட்டவணை–7 காட்டுகின்றது. இவ்வட்டவணையில் காட்டப்பட்ட விபரங்களின் படி ஏறக்குறைய 6500 எண்ணிக்கையைக் கொண்ட முல்லைத்தீவு முஸ்லிம்களில், 40 சதவீதமானவர்கள் சொந்தக் காணியிலும், ஏனையவர்களில் ஒரு சிறிய தொகையினர் வாடகை வீடுகளிலும், ஏனையவர்கள் அகதி முகாம்களிலும் வாழ்ந்து வருகின்ற தன்மையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

முகாம்களில் வாழ்பவர்களில் பலர் சொந்தக்காணி வாங்கி குடியேற முயற்சி எடுத்து வருகின்றனர். இதில் குறிப்பாக புத்தளம் மாவட்ட மன்னார் வீதியில் 4ஆம் கட்டைப்பிரதேசத்தில் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கென ஒரு சொந்தக் குடியேற்றத்தை ஏற்படுத்த சில முல்லைத்தீவு முக்கியஸ்தர்கள் முயன்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. வேறு பலர் பொருத்தமான வாழ்விடக்காணிகளை புத்தளம் மாவட்டத்தில் தேடி வருகின்றனர்.

சொந்தக் காணிகளில் ''மீள்குடியேற்றக் கொடுப்பனவுகளைப்'' பெற்று தமக்கென ஒரு சொந்த வாழ்விடத்தினை அமைத்துக் கொண்டவர்களின் தற்போதைய நிலைப்பாட்டை சற்று அறிய வேண்டியது அவசியமாகும். முல்லைத்தீவு முஸ்லிம்களில் அநேகர் புத்தளம் மாவட்ட கற்பிட்டி செயலாளர் பிரிவு பிரதேசத்திலும், புத்தளம் நகரை அண்டிய பிரதேசத்திலும் தமது சொந்தக்



## அட்டவணை-7

1996 ம் ஆண்டு முல்லைத்தீவு முஸ்லிம்கள் அகதிகளாக வாழ்ந்த இடங்கள்.

புத்தளம் மாவட்டம்

| **கற்பிட்டி செயலாளர் பிரிவு** | குடும்பங்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1. ஆலங்குடா முகாம் (முகாம்) | 251 | 1255 |
| 2. கரிசல் " | 28 | 140 |
| 3. முசல்பிட்டி " | 08 | 42 |
| 4. குறிஞ்சிப்பிட்டி " | 10 | 48 |
| 1. அலி ஜின்னாபுரம்(சொந்தக் காணி) | 29 | 145 |
| 2. அல் ஹிஜ்ரா " | 71 | 355 |
| 3. ஜின்னாபுரம் " | 78 | 390 |
| 4. ஆலங்குடா " | 12 | 58 |
| 5. முல்லையூர்(கற்பாளி தோட்டம் ) | 68 | 340 |
| 6. பூலாச்சேனைச்சந்தி " | 12 | 63 |
| 7. குறவன்குடில் " | 07 | 36 |
| 8. நுரைச்சோலை " | 22 | 113 |
| 9. கல்முனைக்குடி " | 27 | 135 |
| 10. கற்பிட்டி " | 33 | 166 |
| 11. உளுக்காப்பள்ளம் " | 06 | 32 |

**புத்தளம் செயலாளர் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. புத்தளம் நகர் (வாடகை வீடு) | 14 | 70 |
| 2. நிந்தனி (சொந்தக்கானி) | 04 | 22 |
| 3. சேனைக்குடியிருப்பு(சொந்தக்காணி) | 20 | 186 |
| 4. ரத்மல்யாய (சொந்தக்காணி) | 35 | 178 |
| 5. தில்லையடி (சொந்தக்காணி) | 08 | 48 |
| 6. தம்பபண்ணி(முகாம்) | 03 | 18 |

[redacted]

**முந்தல் செயலாளர் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. பெருக்குவட்டான் முகாம் ஏ(முகாம்) | 07 | 34 |
| 2. பெருக்குவட்டான் முகாம் பி " | 27 | 112 |
| 3. சமீரகம ஜின்னா முகாம் பி " | 24 | 109 |
| 4. சமீரகம ஏ1 முகாம் " | 24 | 108 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 5. சமீரகம ஏ2 முகாம் " | 24 | 107 |
| 6. கணமூலை தெற்கு " | 08 | 45 |
| 7. கணமூலை வட க்கு முகாம் ஏ" | 05 | 37 |
| 8. கடை யாமோட்டை முகாம் ஏ " | 05 | 26 |
| 9. கடையாமோட்டை முகாம் பி " | 24 | 91 |
| 10. கடையாமோட்டை முகாம் சீ" | 07 | 40 |
| 11. கடையாமோட்டை முகாம் டீ" | 01 | 07 |
| 12. கடையாமோட்டை முகாம் ஈ" | 03 | 15 |
| 13. கடையாமோட்டை முகாம் எப்" | 11 | 51 |
| 14. நல்லாந்தழுவை ஜும்ஆப்பள்ளி (முகாம்) ஏ | 27 | 110 |
| 15. நல்லாந்தழுவை முகாம் எப் " | 13 | 64 |
| 16. நல்லாந்தழுவை முட்டிப்பாலக்குடாமுகாம் | 31 | 149 |
| 17. விருதோடை " | 05 | 22 |
| 18. புளுதிவயல் (உறவினர் வீடு) | 04 | 16 |
| மொத்தம் | 250 | 1[illegible] |
| 19. ரஹ்மத்புரம் (சொந்தக்காணி) | 09 | 46 |
| 20. புளுதிவயல் (சொந்தக்காணி) | 03 | 12 |
| 21. பெருக்குவட்டான் (சொந்தக்காணி) | 04 | 15 |
| 22 புளிச்சாக்குளம் (வாடகை வீடு) | 03 | 16 |
| 23 பத்துளுஓயா (வாடகை வீடு) | 02 | 12 |
| 24 சிலாபம் (வாடகை வீடு) | 02 | 09 |
| [illegible] | | |
| [illegible] | | |

**அநுராதபுரம்**

| | | |
|---|---|---|
| 1. நாச்சியாதீவு (முகாம்) | 47 | 228 |
| 2. இக்கிரிக்கொல்லாவ (முகாம்+வாடகைவீடு) | 07 | 29 |
| 3. கலாவெவ (முகாம்) | 03 | 18 |
| [illegible] | | |

**வவுனியா**

| | | |
|---|---|---|
| 1. பாவற்குளம்(உறவினர்வீடு) | 02 | 12 |
| 2. பூந்தோட்டம் (வாடகைவீடு) | 03 | 16 |
| 3. பட்டக்காடு (உறவினர்) | 01 | 05 |



| | | |
|---|---|---|
| 4. செட்டிகுளம் (உறவினர்) | 03 | 18 |
| 5. புளிதறித்த புளியங்குளம் (உறவினர்) | 04 | 21 |
| மொத்தம் | 13 | 72 |

**குருநாகல் மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 1. கெகுனுகொல்ல (முகாம்) | 01 | 08 |
| 2. கெகுனுகொல்ல (வாடகைவீடு | 07 | 36 |
| மொத்தம் | 08 | [illegible] |

**கொழும்பு-நீர்கொழும்பு மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. கொழும்பு (வாடகைவீடு) | 04 | 27 |
| நீர்கொழும்பு (வாடகைவீடு) | 07 | 36 |
| பசியால(முகாம்) | 06 | 32 |
| [illegible] | | |

**கண்டி மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 1. அக்குரண (வாடகைவீடு) | 01 | 08 |
| 2. இனிகல(உறவினர்) | 02 | 09 |
| 3. மடவள(வாடகைவீடு) | 01 | 06 |
| [illegible] | | |
| அடையாளப்படுத்தப்படாத ஏனையோர் | 175 | 1000 |
| [illegible] | | |

*மூலம் : வெளிக்கள ஆய்வு, 1996*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடியேற்றத்திற்காகக் காணிகளை வாங்கியுள்ளார்கள். அதில், பண வசதி கொண்ட சிலர் வாழ்விடச் சூழல் அடிப்படையில் பொருத்தமான காணிகளை வாங்கியிருக்க ஏனைய பலர் பண வசதி குறைவால் தமது பண வசதிக்கு ஏற்ப கிடைக்கக் கூடியதாக இருந்த காணிகளை வாங்கியிருக்கின்றனர். வாழ்வதற்கு இவ்வாறான விலை குறைந்த காணிகள் மணற்பாங்கான காணிகளாகவும் கல்வி, மருத்துவ வசதிகள் வாழும் சூழலில் கிடைக்கும் வசதியற்ற ஒதுக்குப் புறம்பான காணிகளாகவும் காணப்படுகின்றன9.

## 10.2.6. மீள்குடியிருப்புக் கொடுப்பனவில் ஆர்வம்:

பூர்வீக இடத்தில் மீள்குடியேற்றத்தை விரும்பும் முல்லைத்தீவு முஸ்லிம்கள் அரசாங்கத்தின் "மீள் குடியேற்றக்" கொடுப்பனவுகளில் ஏன் ஆர்வம் செலுத்தி வருகின்றார்கள் என்பதையும் நோக்க வேண்டும்.

முதலில், சொந்தக் காணிக் குடியிருப்பு மூலமாக முகாம் வாழ்க்கைக்கு மாற்று வழியினை மிகத் தீவிரமாகத் தேடி வருகின்ற அகதிகளுக்கு அரசாங்கத்தின் மீள் குடியேற்றக் கொடுப்பனவுகளைத் தவிர வேறு பண ரீதியான வசதிகள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதனால், அரசாங்கக் கொடுப்பனவுகளைப் பெற்று சொந்தக் காணியை விலைக்கு வாங்கி அங்கு கௌரவத்தோடு வாழக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்த அகதிகள் ஆர்வப்படுவது நியாயமானதே. அதே நேரத்தில் இக்கொடுப்பனவுகள் தம்மை நிரந்தரமாக இப்பிரதேசத்திலேயே இருக்கச் செய்து விடும் என்பதையோ, மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் முடிவுற்றதும் தமது அகதி அந்தஸ்து மட்டுமல்ல, அகதிகளுக்கான உணவு மற்றும் ஏனைய நிவாரணங்களும் நிறுத்தப்பட்டு விடும் என்பதையோ, மீள்குடியேற்றத் திட்டம் முற்றுப்பெற்றதும் தமது பூர்வீக இடத்திற்கான அரசியல் உரிமைகளும், தொழில், கல்வி வாய்ப்புகளும் இல்லாமல் போய்விடும் என்பது பற்றியோ, அத்துடன் தமது பூர்வீக இடத்திலான பொருளாதார, சமூக, சமய நலன்கள் காலப்போக்கில் மறக்கப்பட்டதொன்றாக மாறிவிடும் என்பதையோ அறியாதவர்களாக இம்மக்கள் இருக்கின்றார்கள். அகதிகள் மத்தியில் செய்யப்பட்ட ஆய்வுகளின் மூலமாக இவ்வுண்மை அறியக் கூடியதாக இருந்தது.



அதனால், முகாம் வாழ்க்கைக்கு மாற்று ஒழுங்காக, சொந்த வாழ்விடம் ஒன்றை ஏற்படுத்துவதில் இம்மக்களுக்குள்ள ஆர்வத்தை வைத்து இம்மக்கள் தாம் அகதிகளாக வாழும் பிரதேசத்திலேயே நிரந்தரமாகக் குடியேற விரும்புகின்றார்கள் என்று கருத முடியாது. காரணம் முகாம் வாழ்க்கைக்கு அகதி மக்களால் கண்டு பிடிக்கக் கூடிய மாற்றுவழி அகதியாக வாழும் சூழற் பிரதேசத்தில் தமக்கென ஒரு தற்காலிக வாழ்விடத்தை ஏற்படுத்துவதை விட வேறொன்றும் இல்லை என்பது கடந்த 6 வருட கால அகதி வாழ்க்கையில் இம்மக்கள் கண்ட அனுபவமாகும். அதனால், தாங்கள் அகதிகளாக வாழும் சூழலில் சொந்தக் காணிகளை வாங்கி கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான பண ரீதியான உதவிகளை இம் மீள் குடியேற்றக் கொடுப்பனவுகள் வழங்குகின்றன என்று இவர்கள் கருதுகின்றார்கள். இந்த அடிப்படையில் இப்பணக் கொடுப்பனவுகளைப் பெறுவதைத்தவிர மாற்றுவழி இல்லை என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள். உண்மையில் முல்லைத்தீவு முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் இன்றும் கூட தற்போதைய தமது இடைக்கால வாழ்க்கை வசதி ஒழுங்கிற்காக முல்லைத்தீவில் தமது பொருளாதார, அரசியல், கலாசார உரிமைகளை இழக்கத் தயாராக இல்லை என்பதை மிகத் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

## 10.2.7. மீள்குடியேற்றத்தின் பின்விளைவுகள்:

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றத்தின் பின்விளைவுகள் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நூலில் இக்குடியேற்றத்துடன் தொடர்பான மிக உடனடியாக கருத்தில் எடுக்கப்பட வேண்டிய சில அம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

மீள்குடியேற்றம் என்ற அடிப்படையில் ஏற்பட்டு வருகின்ற வாழ்விட மாற்றங்கள் இம்மக்களின் அகதி நிலையில் குறிப்பித்தக்க எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஆறு வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது எவ்வாறு அடிப்படை வாழ்க்கை வசதியற்ற நிலையில் காணப்பட்டார்களோ அதே நிலையில் அல்லது அதை விட மோசமான பொருளதார நிலையில் இம்மக்கள் இன்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படுகின்றார்கள். கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் அகதியாக்கப்பட்ட போது இம்மக்களுக்கு உணவும், ஏனைய நிவாரணங்களும் எந்த அளவு தேவைப்பட்டதோ அதே அடிப்படை வாழ்க்கைத் தேவைகள் இன்றும் தேவைப்படும் பொருளாதார நிலையில் இம்மக்கள் இருக்கின்றார்கள். உணவு மற்றும் ஏனைய அத்தியவசியப் பொருட்களுக்காக இம்மக்கள் அரசாங்கத்திலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் தங்கியிருக்க வேண்டிய இக்கட்டான நிலை இன்னும் சில காலம் இம்மக்கள் மத்தியில் நீடித்திருக்கக் கூடிய சூழ்நிலைகளே காணப்படுகின்றன.

அதே நேரத்தில், சொந்தக் காணிக்குடியிருப்பின் மூலமாக உருவாக்கப்பட்டு வருகின்ற வாழ்க்கைச் சூழலிலும் புதுத்தொழில் வாய்ப்பு மாற்றங்கள் உடனடியாக ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. அதனால், சொந்தக் காணியில் குடியேறியிருக்கின்ற மக்களுக்கு "அகதி அந்தஸ்தும்" அந்த அந்தஸ்துக்குப் பொருத்தமான நிவாரண மற்றும் ஏனைய உதவிகளும் தொடர்ந்தும் தேவைப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. அவ்வாறாயின், மீள்குடியேற்றம் என்ற பதத்தைக் கொடுத்து அகதி அந்தஸ்தில் இருந்து இம்மக்களை அகற்ற அசரசாங்கம் எடுக்கும் இந் நிரந்தரக் குடியேற்ற முயற்சி நிதரிசனத்துக்குப் புறம்பானது எனக் கருதத் தோன்றுகின்றது. அவ்வாறான ஒரு முயற்சி இம்மக்களை எதிர்காலத்தில் கடுமையாகப் பாதிக்கக் கூடியது.

அதுமட்டுமன்றி, முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் நிவாரணம் அல்லாத ஏனைய பிரச்சினைகள் இந்நிரந்தரக் குடியேற்றத் திட்ட முயற்சியால் மேலும் புறக்கணிப்பிற்கு உட்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. காரணம், ஏற்கனவே அடையாளம் கண்டதைப் போல் பலவந்த வெளியேற்றத்தினால் முல்லைத்தீவு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அகதிப் பிரச்சினை அரசியல் பின்னணியைக் கொண்டதாகும். அரசியல் ரீதியாகத்தான் இவ்வகதிகளின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண முடியும். அவ்வாறான தீர்வே இம்மக்களுக்கு நீண்ட காலத்தில் பயன் தரக் கூடியது. அரசியல் பேச்சுவார்த்தை மூலமாகத்தான் இம்மக்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியேற்ற முடியும். அது மட்டுமன்றி சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதன் மூலமாகத்தான் இம்மக்களுக்குச் சொந்தமான அசையும், அசையாச் சொத்துக்களை மீளப்



பெற முடியும். சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நஷ்டயீடு பெறவும் முடியும். இம்மக்களின் தனியார் சொத்துக்களையும், பொதுச் சொத்துக்களையும் புனரமைக்க முடியும். அரசியல் பிரச்சினையாக இது கொள்ளப்படாதவிடத்து, இவ் அகதிகளின் சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் சாத்தியம் அற்றதாக மாறுவதோடு பலவந்த வெளியேற்றத்தால் இம்மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நிவாரணம் ஒருபோதுமே பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்படும். அதனால் அகதி முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து இம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆவன செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

### 10.2.8 மீள்குடியேற்றத்திட்டங்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகள்:

இன்று புத்தளத்தில், சொந்தக்காணிகளை வாங்கிய அநேகர் தற்காலிக குடிசையொன்றைக் கட்டுவதற்காக அரசாங்கத்தின் 10,000 ரூபாய் கொடுப்பனவை எதிர் பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். வேறு பலர் மீள்குடியேற்றக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் குடிசை அமைப்பதற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட 10,000 ரூபாயை காணிகள் வாங்குவதற்காகப் பயன்படுத்தி அதனால் தற்போது குடிசைகள் அமைப்பதற்கு பண வசதியற்ற நிலையிலுள்ளார்கள்.

அரசாங்கத்தின் மீள்குடியேற்றக் கொடுப்பனவுகளை நம்பி சொந்தக் காணிகளை வாங்கி குடியேறிய முல்லைத்தீவு முஸ்லிம்கள் பலர் மேலதிகக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாமையாலும், சொந்தக் குடியிருப்புச் சூழலில் நீர், மலசலகூட அடிப்படை வசதிகள் இது வரை அரசால் அமைத்துக் கொடுக்கப் படாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இது பல வாழ்விட வசதி ரீதியான பிரச்சினைகளையும், ஏனைய கஷ்டங்களையும் இம் மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றது. உதாரணமாக நுரைச்சோலை கொய்யாவாடியில் அதாவது அல்மினா குடியிருப்பில் முல்லைத்தீவு முஸ்லிம்களால் காணிகள் வாங்கி தற்காலிக குடிசைகள் அமைக்கப்பட்ட நிலையில் பல மாதங்களாகக் காணப்படுகின்றது. இது வரை கிணறு, மலசலகூட, பாதை, கல்வி வசதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம்மக்களுக்கு அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்படவில்லை. மேற்குறித்த வசதிகள் அல்மினா சொந்தக் குடியேற்றத்திற்கும், அது போன்ற ஏனைய சொந்தக் குடியேற்றங்களுக்கும் கால தாமதமின்றி செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் புத்தளத்தின் முந்தல் பிரதேச சபைப் பிரிவிலும், அநுராதபுரத்தின் நாச்சடுவையிலும் தொடர்ந்தும் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் நிலை பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும். இம்மக்கள் சொந்தக் காணி வாங்கி சொந்தக் குடியேற்றம் அமைப்பதற்கு பண வசதியில்லாமையினாலும், இவ்வாறான குடியேற்ற முயற்சிகளை முன்னின்று செய்யக் கூடிய தலைமைத்துவம் இன்மையினாலும் தொடர்ந்தும் அகதி முகாம்களில் வாழும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்மக்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு, இம்மக்களுக்குப் பொருத்தமான இடைக்கால மாற்று வாழ்க்கைத் திட்டத்தை செயற்படுத்த முற்பட வேண்டும். இம்மக்களுக்கு ஒன்றில் பொருத்தமான சொந்தக் காணிகள் வாங்குவதற்கு பண உதவிகள் செய்வதன் மூலமாகவோ, அல்லது அரசாங்கக் காணிகளில் கௌரவமான வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாகவோ இம்மக்கள் கௌரவமான ஒரு வாழ்க்கை வாழ உதவ வேண்டும். அதே நேரத்தில், அம்மக்களின் உணவு அத்துடன் ஏனைய அடிப்படை வசதிகளும் தொடர்ந்தும் கொடுக்கப்பட்டு வரவேண்டியது அவசியமாகும்.

## 10.3 எதிர்காலம்:

முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் எதிர் காலம் எவ்வாறு இருக்கும் என்ற எதிர்வு கூறல் இப்பகுதியில் செய்யப்படுகின்றது. அவ்வாறான எதிர்வு கூறலில் இம்மக்களின் இன்றைய, மற்றும் கடந்த கால அகதி வாழ்க்கையுடன் தொடர்புடைய அம்சங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

முதலில், இம்மக்கள் அகதியாக்கப்பட்ட போது இருந்த சூழ்நிலைகளை சற்று பரிசீலிப்போம். முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது சொந்த இடத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதை தடுத்திருக்கக் கூடிய சக்தி



அப்போது அவர்களுக்கு இருக்கவில்லை. முல்லைத்தீவில் எண்ணிக்கையில் மிகச் சிறு தொகையினராக முஸ்லிம் சிறுபான்மையினர் வாழ்ந்தார்கள். தமது வெளியேற்ற உத்தரவை தடுத்து நிறுத்தக் கூடிய அரசியல் ரீதியான பலமோ, தலைமைத்துவமோ இவர்களுக்கு அன்று இருக்கவில்லை. முல்லைத்தீவில் இம்மக்கள் வாழ்ந்த காலத்திலும், வெளியேற்றப்பட்ட போதும் பலம் வாய்ந்த ஆயுதக்குழுக்களின் கட்டளைக்கு அடிபணிவதை விட வேறு மார்க்கம் இம்மக்களுக்கு இருக்கவில்லை.

முல்லைத்தீவில் வாழ்ந்த போது இம்மக்களுக்கிருந்த பலம் எல்லாம் தமிழ் பெரும்பான்மை மக்களோடு கூட்டுறவாக வாழ்ந்து கொண்டிருந்தமையேயாகும். கஷ்ட காலத்தில் தமிழ் சகோதரர்கள் தம்மை பாதுகாப்பார்கள் என்று முல்லைத்தீவு முஸ்லிம்கள் அன்றும் நினைத்தார்கள். இன்றும் நினைக்கின்றார்கள். அன்று முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தை தமிழ் மக்களால் தடுத்து நிறுத்த முடியாமல் போயிற்று. ஆனால், நிச்சயமாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டவிதம் குறித்து தமிழ் மக்கள் அன்று கவலைப்பட்டார்கள். இன்றும் கவலைப்படுகின்றார்கள் என்று முல்லைத்தீவு முஸ்லிம் மக்கள் மிக உறுதியாக நம்புகின்றார்கள். அந்த அடிப்படையில் முல்லைத்தீவில் மீண்டும் ஒரு எதிர்காலம் முஸ்லிம்களுக்கு உருவாக்கப்படுமானால் அது நிச்சயமாக தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டால் அல்ல. இணக்கப்பாட்டால்தான் சாத்தியம் என்பதில் ஐயம் இல்லை.

அடுத்து, இம்மக்களின் அகதியாக வாழ்ந்த காலக்கட்ட வாழ்க்கையை நோக்கினால், கடந்த ஆறு வருட அகதி வாழ்க்கை இம்மக்களுக்கு பல படிப்பினைகளைத் தருவதாக இருக்கின்றது. இவ்வகதிகள் தாம் முல்லைத்தீவில் சொந்தச் சூழலில் வாழ்ந்த வாழ்க்கையை விட வித்தியாசமான நிலையில் இங்கு வாழவேண்டி ஏற்பட்டது. அகதிகளான இம்மக்கள் தமது நாளாந்த வாழ்க்கைக்கு நிதமும் பிறரை நம்பி வாழ்கின்றார்கள். சுயமாகத் தமது வாழ்க்கை நிலையை மதிப்பீடு செய்யவோ, தமது எதிர் காலத்தைப் பற்றித் திட்டமிடவோ, தீர்மானிக்கவோ இம்மக்களுக்கு முடியாதிருந்தது.

முல்லைத்தீவில் ஒன்றாக ஒரு சமூகமாக வாழ்ந்த இம்மக்கள் அகதிகளாக முகாம்கள் எங்கிலும் சிதறி வாழும் நிலைக்கு உள்ளானார்கள். சிதறி வாழும் இம்மக்கள் மத்தியில் தமது எதிர் காலத்தை ஒன்றாக இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்மானிக்கும் வாய்ப்பு இல்லாது போய்விட்டது. முகாம் வாழ்க்கையின் மூலமான கல்வி, கலாசார வீழ்ச்சிகள் இம்மக்களால் தவிர்க்கப்பட முடியாததாகப் போய் விட்டது.

முகாம் வாழ்க்கையோடு ஒப்பிடும்போது தற்போது செய்யப்பட்டு வரும் சொந்தக் குடியேற்றம் நிச்சயமாக பல சாதகமான அம்சங்களை கொண்டவைகள்தான். ஆனால் முல்லைத்தீவு முஸ்லிம்களைப் பொறுத்தவரை சொந்தக்காணிக் குடியேற்றத்துடன் முல்லைத்தீவு முஸ்லிம்கள் என்ற தனித்துவம் இல்லாது போய்விடும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றது. காரணம் இது வரையில் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் சொந்தக் காணிகள் வாங்கி தமது சொந்தக் குடியேற்றத்தை அமைத்து சிதறிய நிலையில் புத்தளத்தில் தமது புதிய அத்தியாயத்தை இம்முல்லைத்தீவு முஸ்லிம்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளின் பிரச்சினைக்கான தீர்வு என்ற அடிப்படையில் ஒத்த குரலில் தமது அபிலாசைகளை எதிர் காலத்தில் எடுத்துச் சொல்லக் கூடிய வாய்ப்பு இச்சிதறிய பரம்பலால் இல்லாது போகலாம். புத்தளத்தில் தமது இடைக்கால வாழ்க்கை நிரந்தரமாக்கப்படுமாக இருந்தால், இம்மக்களின் எதிர்காலக் கல்வி, தொழில் என்ற அடிப்படையிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது இம்மக்கள் வாழும் சொந்தக் குடியிருப்புச் சூழலில் குறைவாகக் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட விளக்கங்கள் அகதியாக வாழ்கின்ற பிரதேசங்களில் இம்மக்களின் வாழ்க்கை நிரந்தரமாக்கப்படுமானால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைக் குறிப்பிடுகின்றது. இப்பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என்றும் சிந்தித்து ஆலோசனை கூற வேண்டியது எமது கடமையாகும்.

அந்த அடிப்படையில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் சொந்தக் குடியேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட பொருத்தமான அபிவிருத்திகள் செய்யப்படுமானால் இம்மக்களின் வாழ்க்கையை குறுங்காலத்தில் வீழ்ச்சியடையச் செய்யாமல் பாதுகாக்கலாம்.

இந்த அடிப்படையில் சொந்த இடைக்காலக் குடியேற்றங்களில் தமது அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெறுவதற்கான வழிமுறைகள் அரசால் கால தாமதம் இன்றி செய்யப்படுவது அவசியமாகும். வாழ்விட வசதிகள், நீர்,



கல்வி, போன்ற ஏனைய வசதிகளும் சொந்தக்குடியேற்ற பிரதேச மட்டத்தில் விருத்தி செய்யப்பட்டால் இம்மக்கள் தமது நலன்களை தாமே சுயமாகக் கவனித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எதிர்காலத்தில் உருவாகும். இதில் மிக முக்கியமாக, குறுங்காலத்தில் இம்மக்களின் உணவு நிவாரணத் தேவைகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்பதை அரசு உத்தரவாதப் படுத்தப்படுவது மிகவும் அவசியமாகும். காரணம், தமது பொருளாதார அடிப்படைகளை இழந்த இம்மக்கள் பொருத்தமான வருமான வழிமுறைகள் அடையாளம் காணும்வரை உணவு மற்றும் ஏனைய நிவாரணங்கள் அத்தியவசியத் தேவையாகும். அதனைப் பெறுவதற்கு சட்ட ரீதியாக இம்மக்கள் தகுதியானவர்களேயாவர். உணவும் ஏனைய நிவாரணங்களும் இவ்வகதிகளின் உரிமையாகும். அதே நேரத்தில் படிப்படியாக இம்மக்களை சுய பொருளதார முயற்சிகளை நோக்கி வழிப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். அதில் சுய தொழில் ஊக்குவிப்பு, தொழில் வாய்ப்பு, கல்வி விருத்தி, பின்னணிப்பிரதேச பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் போன்றன அரசால் அவசியமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளாகும்.

அதே நேரத்தில், அகதிகள் வாழுகின்ற பிரதேசங்களில் இன முரண்பாடுகளைக் குறைத்து இன ஐக்கியத்தைக் கூட்டுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். இதில் குறிப்பாக, புத்தள மாவட்டத்தில் அகதிகள் வாழும் பிரதேசங்களில் அகதி–உள்ளூர் மக்கள், முஸ்லிம்–சிங்கள இன, மற்றும் ஏனைய சமூகக் குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இம்முரண்பாடுகள் மேலும் விரிவடையாமல் தடுத்து நிறுத்தவும், இன ஐக்கியம் இப் பிரதேசத்தில் வாழும் எல்லா மக்கள் குழுக்களிடையில் ஏற்படவும் பயனுள்ள பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதில் மிக முக்கியமாக, அகதி முஸ்லிம்களை நிரந்தரமாக இப்பிரதேசத்தில் குடியேற்ற முயற்சி எடுக்கப்படவில்ல என்பதை இலங்கை அரசாங்கம் உள்ளூர் மக்களுக்கு குறிப்பாக புத்தளம் மாவட்ட சிங்கள மக்களுக்கும் தெட்டத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த வகையில் அகதி முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் (உதாரணமாக வாக்குப்பதிவு), தொழில் வாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதிகள், அகதிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொந்த மாவட்ட அடிப்படையில் வழங்குவற்குரிய நடவடிக்கைகள் அரசு மட்டத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் அகதிகள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களில் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் எடுக்கப்படுவதும் அவசியமாகும். மேற்குறித்த முயற்சிகள் அகதிகள் வாழுகின்ற பிரதேசங்களில் இனப் புரிந்துணர்வை அதிகரிக்கச் செய்யக் கூடியவை என்பதில் ஐயமில்லை.

தற்போது அகதியாக வாழும் சூழலில், வருமான, வாழ்க்கைத்தர நிலைமைகளில் அகதிகள் மத்தியில் எதிர்காலத்தில் சாதகமான மாற்றம் ஏற்பட்டாலும் கூட, இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய அரசியல் பிரச்சினையானது அக்கட்டத்திலும் தீர்க்கப்படாத தொன்றாகவே இருக்கும். மறுவார்த்தையில் சொல்வதானால் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வாழ்வுரிமை சொந்த இடத்தில் அங்கீகரிக்கப்பட்டு சமாதான சூழ்நிலையில் இம்மக்கள் தமது தாயகம் மீளும் வரை பலவந்த வேளியேற்றத்தால் இம்மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை முடிவு காணப்படாத ஒன்றாகவே இருக்கும். இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு முல்லைத்தீவு முஸ்லிம்களின் அடுத்த பரம்பரையினருக்குத்தான் ஏற்படுவது சாத்தியம் என்று கருதினாலும் கூட, அதுவரையும் அம்மக்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய அரசியல் பிரச்சினையும், மனிதாபிமானப் பிரச்சினையும், இனப்பிரச்சினையும் தொடர்ந்து கொண்டே இருக்கும். முல்லைத்தீவு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு ஒப்பான இன, அரசியல் பிரச்சினைகளை பாலஸ்தீனத்தில், பொஸ்னியாவில், பர்மாவில் இன்னும் உலகில் பல்வேறு பிரதேசங்களில் அடையாளம் காணலாம் (Cigar, 1995). அங்கெல்லாம் பாதிக்கப்பட்ட அப்பாவி அகதி மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக முயன்று வருகின்றது. முல்லைத்தீவு முஸ்லிம் அகதிகளுக்கும் அவ்வாறான உதவி அவசியமாகும்.

உண்மையில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது சொந்த இடத்திற்கு மீளச் செல்வதுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேலே குறிப்பிட்ட சர்வதேச உதாரணங்களைப் போன்ற சிக்கலான ஒன்றல்ல. முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது வாழ்வுரிமையை மீண்டும் முல்லைத்தீவில்



நிலை நாட்டிக் கொள்ள முடியாமைக்கு பல அடிப்படைக் காரணங்கள் காணப்படுகின்றன. அதில், இம் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் சரியாக மதிப்பிடப்படாமைமுதன்மையான காரணமாகும். அரசாங்கத்தாலும், சமாதான சக்திகளாலும் இம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றுமொரு முக்கிய காரணமாகும்.

இவ்வுண்மை உணரப்பட்டு எதிர்காலத்தில் இம்மக்களின் பிரச்சினையை முறைப்படி தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை மூலமான முயற்சிகள் எடுக்கப்படுமாக இருந்தால், முல்லைத்தீவு முஸ்லிம்களின் பூர்வீக இடத்திலான மீள் குடியேற்றமும், புனர்வாழ்வும் வெற்றியடையக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அவ்வாறான ஒரு சாதகமான கண்ணோட்டத்தில் எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ற வகையில் பின்வரும் விதந்துரைகள் இங்கு செய்யப்படுகின்றன.

### 10.3.1. விதந்துரைகள்:

முல்லைத்தீவு முஸ்லிம்களுக்காக தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் அரசின் மீள்குடியேற்றத் திட்டத்தில் கொள்கைரீதியான மாற்றங்கள் இன்னும் காலம் தாழ்த்தாமல் உடனடியாகக் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் குடியேற்றத் திட்டம் ஒரு இடைக்கால மாற்று வாழ்க்கைத் திட்டம் மாத்திரமே என்று அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். இவ் விடைக்கால மாற்று வாழ்க்கைத் திட்டம் அகதி மக்களின் தற்போதைய வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, தமது சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய இம்மக்களின் எண்ணத்திலும் மேலும் உறுதியை ஏற்படுத்த உதவும்.

அதே நேரத்தில், முல்லைத்தீவு முஸ்லிம்களை தமது சொந்த இடத்தில் குடியேறுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதில் குறிப்பாக, இனப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகளில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் என்ற அம்சமும் சேர்த்துக் கதைக்கப்படுவது பொருத்தமானதாகும். இப்பேச்சுவார்த்தைகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளும் பங்குபற்றுவது எல்லா சாராருக்கும் பயனுள்ள முடிவுகளைத் தரக்கூடியதாக இருப்பதோடு, முல்லைத்தீவில் மீளக்குடியேறுவது சம்பந்தமாக முல்லைத்தீவு முஸ்லிம்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் ஒரு பொருத்தமான சூழ்நிலையில் முல்லைத்தீவில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படும் வரை இனப்பிரச்சினையால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட "அகதிகளாக" தேசிய, சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கக்கப்பட்டு அம்மக்களின் எதிர்கால நலன்கள் முறைப்படி பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு முஸ்லிம்கள் தமது சொந்தக் கிராமங்களில் குடியேறும்போது அல்லது குடியேறுவதற்கு முன்னர் இம்மக்களின் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள், நீர்பாசனக் கால்வாய்கள், சமய ஸ்தலங்கள், பாடசாலைகள் போன்றன புனரமைக்கப்பட்டு அப்பிரதேசங்களில் மக்கள் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இந்த புனரமைப்பு வேலைகளில் யுத்தத்தால் முழுமையாகப் பாதிப்பிற்கு உட்பட்ட ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, முல்லைத்தீவு நகரம் ஆகிய முஸ்லிம் குடியிருப்புக்களின் புனர் நிர்மாண வேலைகளில் விஷேட கவனம் செலுத்தப்படுவது பொருத்தமானதாகும். இம்மக்களுக்கான புனர் வாழ்வு, புனர் நிர்மாண திட்டமிடுதலில் முல்லைத்தீவு முஸ்லிம்களின் ஆலோசனைகளும், இம்மக்களின் பங்களிப்பும் சேர்க்கப் படுவது இத்திட்டத்தின் வெற்றிக்கு அத்தியவசியமானதாகும்.

பலவந்த வெளியேற்றத்தால் முல்லைத்தீவு முஸ்லிம்களின் அசையும், அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றியும், சேதங்கள் பற்றியும் முறைப்படியான மதிப்பீடுகள் செய்யப்பட்டு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய பொருத்தமான நஷ்ட ஈடுகள் இம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

புதிதாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்பட்டு வரும் பிரதேசங்களுக்கான அதிகாரப் பகிர்வு பற்றிய அரசியல் சீர்திருத்தத்தில், முல்லைத்தீவு முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் பொருத்தமான அரசியல் பிரதிநிதித்துவமும், பாதுகாப்பும் அளிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஒரு அம்சமாக முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உள்ளூராட்சி அமைப்பு மட்டத்திலும், மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்திலான அரசியல் சபைகளிலும் அதிகரிக்கக்கூடியதாக தேர்தல் சீர்திருத்த முறைகளும், மீள் எல்லை நிர்ணயமும் செய்யப்படுவது பொருத்தமானதாகும்.

அதே நேரத்தில் தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், கணுக்கேணி, குமாரபுரம் ஆகிய முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளையும், இம்மக்களுக்குச் சொந்தமான அல்லது பொது பயன்பாட்டிற்குட்பட்ட புவியியல் தொடர்ச்சி கொண்ட விவசாய, மேய்ச்சல் நிலங்கள், கடல் வளங்களையும் உள்ளடக்கக் கூடியதான நிர்வாக அலகு ஒன்று (அதாவது உதவி அரசாங்க பிரிவுக்குச் சமமான) உருவாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் முஸ்லிம்கள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாமும் பங்குகொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தினால் "அதிகாரப் பகிர்வு" என்ற அம்சத்தின் உண்மையான பயனைஅடையக்கூடியதாக இருக்கும்.

முல்லைத்தீவில் முஸ்லிம்–தமிழ் உறவை மேலும் விருத்தி செய்வதற்கு ஏற்ற கல்வி மூலமான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

மேற்குறித்த நடவடிக்கைகள் முல்லைத்தீவு முஸ்லிம்களின் பிரச்சினைக்கான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## குறிப்புகள்

1 *அகதி முகாமில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு குடிசையும் அத்துடன் பொதுவான வகையில் நீர், மலசலகூட வசதிகளும் வழங்கப்பட்டன.*

2. *நூலாசிரியரால் எழுதப்பட்ட பின்வரும் நூல்களை பார்க்க (Hasbullah, 1991, 1993, 1996a & 1996b).*

3 *1990–1996 இடையில் இலங்கையில் இனப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பல சர்வதேச மகாநாடுகள் கூட்டப்பட்டுள்ளன. பல நாடுகள் இப்பிரச்சினைக்கு நடுநிலை வகித்து இனங்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர முயற்சித்தன. உள்நாட்டில் அரசியல் ரீதியாகவும் அரசியல் சார்பற்ற முறையிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4 *வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) 1995ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி வடக்கு முஸ்லிம் அகதிகளின் அபிலாசைகளை அறிய முயற்சித்தது. இதில் முஸ்லிம்கள் இரண்டு விடயங்கள் பற்றி தங்களின் சம்மதத்தைக் கூறும்படி கேட்கப்பட்டார்கள். 1. வடக்கில் வாழும் உரிமை 2. அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு ஆவன செய்தல். வாக்குரிமையையுடைய வட மாகாண முஸ்லிம் அகதிகளில் ஏறக்குறைய 60 சத வீதமானவர்கள் மேற்குறித்த கருத்துக்களுக்குத் தமது சம்மதத்தை கையெழுத்து மூலம் குறிப்பிட்டிருந்தனர் ( அகதி, 1995 (8): 13)*

5. *இம்மீள்குடியேற்றத் திட்டப்படி யுத்த நிலைமை காரணமாக தமது சொந்த இடங்களை மீளக் குடியேற முடியாதவர்கள் அரசாங்க அல்லது நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் குடியேற்றப்படுவார்கள் என்று அரசின் மீள்குடியேற்றக் கொள்கை விளக்கம் குறிப்பிடுகின்றது. ஆனால் நடைமுறையில் அகதிகள் குடியிருப்புக்குச் சொந்தக் காணிகள் வாங்கினால் மாத்திரமே மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் கொடுக்கப்படுகின்ற நடைமுறைகள் காணப்படுகின்றன.*

6. *அரசாங்கத்தின் வடக்கு முஸ்லிம்களுக்கான மீள் குடியேற்றத் திட்டம் என்பதுடன் தொடர்புடைய அம்சங்கள் ஏற்கனவே பல கட்டுரைகளிலும், நூல்களிலும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன வட மாகாண முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம் பற்றி இந்நூலாசிரியரால் நூல்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இது பற்றி மேலதிக விபரங்களுக்கு Refugees Are People (1996), அகதி, ஒக்டோபர் 1996 (10): 26–32.*

7. *இலங்கையில் அகதிகளுக்காக தற்காலிக வாழ்விட ஒழுங்குகள் செய்யப்படுகின்ற இடங்கள் நடைமுறையில் அகதி முகாம் என்று அழைக்கப்படுகின்றது. இவை அரசாங்க ஆவணங்களில் நலன்புரி நிலையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

8. *பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மன்னார்த்தீவு முஸ்லிம்களை சொந்த இடத்தில் குடியேற்றுவதற்கான அரசின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. அதேபோல வவுனியா மாவட்டத்தில் மீளக்குடியேறிய பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட முஸ்லிம்கள் தமது சொந்த இடத்தில் தொடர்ந்து வாழ்வதில் பல பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.*

9. *புத்தளம் நகர சேனைக் குடியிருப்பு வாழ்க்கைச் சூழற் பொருத்தத் தன்மைக்கு ஒரு உதாரணமாகும். அதே நேரத்தில் ஆலங்குடா, நுரைச்சோலை, கொய்யாவாடி மீள்குடியேற்றங்கள் மணற்பாங்கான பூமியில் அமைந்துள்ளன. ஆலங்குடா ஜின்னா குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து ஒதுக்குப் புறமான இடத்தில் அமைந்துள்ளது.*



# விபரம் தந்தவர்கள்

1. காதர் சாகிபு ஆதம் பிள்ளை (வயது 95)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: கொத்தான்தீவு.
2. மீராக்கண்டு சம்சுதீன் (வயது 82)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: நல்லாந்தழுவை, கடையாமோட்டை.
3. சுல்தான் அப்துல் காதர் (வயது 78)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: ஆலங்குடா அகதி முகாம், ஆலங்குடா, புத்தளம்.
4. காதர் சாகிபு ஆதம் பிள்ளை (வயது 95)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: நல்லாந்தழுவை, கடையாமோட்டை.
5. பக்கீர் அப்துல் கமீது (வயது 67)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை
   தற்போது வாழும் இடம்: கற்பிட்டி.
7. அப்துல் காதர் லெப்பை அப்துல் றகீம் (வயது 69)
   பூர்வீக இடம்: முல்லைத்தீவு.
   தற்போது வாழும் இடம்: 5ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
8. ஏ. எல். எம். ஏ. அஸீஸ் (52 வயது)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: பெருக்குவட்டான், முந்தல்.
9. காசிம் தம்பி சாகுல் கமீது (வயது 55)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
   தற்போது வாழும் இடம்: முல்லையூர், நுரைச் சோலை.
10. கே. எம். கௌது (வயது 49)
   பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை
   தற்போது வாழும் இடம்: முல்லையூர், நுரைச்சோலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11. அல்லாபிச்சை கச்சு முகம்மது (வயது 72)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
தற்போது வாழும் இடம்: கல்முனைக்குடி, ஆலங்குடா, புத்தளம்.
12. அப்துல் காதர் வகாப் வைத்தியர் (வயது 40)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
தற்போது வாழும் இடம்: கல்முனைக்குடி, ஆலங்குடா, புத்தளம்.
13. லெப்பை நெய்னா முகைதீன் சாகிப் (வயது 82)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
தற்போது வாழும் இடம்: அகதி முகாம் நுரைச் சோலை.
14. அகமது லெப்பை லெவ்வைத்தம்பி (வயது 65)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
தற்போது வாழும் இடம்: பூலாச்சேனை, நுரைச் சோலை.
15. ஏ. அகுமது. (வயது 70)
பூர்வீக இடம்: தண்ணீரூற்று, முள்ளியாவளை.
தற்போது வாழும் இடம்: கனமூலை, மதுரங்குளி
16. ஏ. அப்துல் சமது சலீம். (வயது 48)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியாவளை.
தற்போது வாழும் இடம்: நல்லாந்தழுவ, மதுரங்குளி.
17. எம். எஸ். மஃரூப். (வயது 33)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியாவளை.
பெருக்குவட்டான், கொத்தான்தீவு.
18. கே. டீ. அப்துல் றஹீம் (வயது 48)
பூர்வீக இடம்: ஹிஜ்ராபுரம், முள்ளியாவளை.
தற்போது வாழும் இடம்: நுரைச்சோலை.
19. எம். எஸ். பரீத் (வயது 45)
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி.
தற்போது வாழும் இடம்:
20. ஏ.எம். வஸீர். (வயது 35)
பூர்வீக இடம்: முறிப்பு, குமுளமுனை.
தற்போது வாழும் இடம்: கல்முனைக்குடி, நுரைச்சோலை.



21. மௌலவி. யூ.எம். சலீம்.
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியாவளை.
தற்போது வாழும் இடம்: சமீரகம.
22. மௌலவி. எம். எச்.எம். இபுராகிம்.
பூர்வீக இடம்: நீராவிப்பிட்டி, முள்ளியவளை.
தற்போது வாழும் இடம்: நீர்கொழும்பு.
23. ஏ.சீ.சீ.ஏ. றகீம். (வயது 72) ஜே.பி. குவாஸி.
பூர்வீக இடம்: முல்லைத்தீவு
தற்போது வாழும் இடம்: புத்தளம்.
24. எம். அலித்தம்பி (வயது 85)
பூர்வீக இடம்: முல்லைத்தீவு.
தற்போது வாழும் இடம்: குறிஞ்சிப்பிட்டி.
25. எம். உசன் தம்பி. (வயது 90)
பூர்வீக இடம்: முல்லைத்தீவு.
தற்போது வாழும் இடம்: கற்பிட்டி.
26. தஸ்தீன். எம்.ஏ
தற்போது பாரும் இம். சமிறகம. கொத்தாள்தீவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உசாத்துணை நூல்கள்

Brohier, R.L., 1934.
Ancient Irrigation Works in Ceylon, Part II. Colombo: Government Press.

Chitty, C.S., 1834.
The Ceylon Gazetteer Colombo: Cotta Church Mission Press.

Cigar, Norman, 1995.
Genocide in Bosnia: The Policy of Ethnic Cleansing College Station: Texas A&M University Press.

Counterpoint, 1993.
"Government Gives People No Choice But to Join Tigers" Vol.1(8):15-19.

The Daily News, Variuos Years.

Deng, Francis, 1993.
"Protecting the Internally Displaced: A Challenge for the United Nations" A Paper Presented at the Conference on Displacement and Democracy on 18th and 19th August 1993 in Colombo.

——, 1995.
Internally Displaced Persons Report of the Representative of the Secretary-General, Mr, Francis Deng Submitted Pursuant to Commission on Human Rights Resolutions, 1993/95.

Department of Census and Statistics, Various Years.
Censuses of Sri Lanka, 1953, 1963, 1971 and 1981 Colombo: Depart ment of Census and Statistics.

Department of Census and Statistics, 1984.
Sri Lanka Census of Population and Housing, 1981. Volume - 1, Part XIII Mullaitivu District Report Colombo: Department of Census and Statistics.



Dewaraja, Lorna S., 1972.
A Study of the Political Administrative and Social Structure of the Kandyan Kingdom of Ceylon 1707-1760 Colombo:Lake House Investment Ltd.

Government of Ceylon, Various Years,
Censuses of Ceylon, 1871, 1881, 1891, 1901, 1911, 1921, 1931 and 1946 Colombo: Government Printers.

Hasbullah, S.H., 1991.
"The Political Future of the Northern Province Muslims of Sri Lanka" A Paper Presented at Colombo Islamic Centre of Sri Lanka on 10th December 1991.

——, 1992.
A Report on the Loss of Movable and Immovable Assets of Muslims Ousted from the Northern Province in 1990 A Report Submitted to the Parliament of Sri Lanka in May 1992. Hansard Vol 79, No. 14.

——, 1993.
"A Preliminary Report on the Conditions of the Muslim Refugees" A Paper Presented at the Conference on Displacement and Democracy Organized by the University of Colombo and —— on 18th and 19th August 1993 in Colombo.

——, 1994.
"Refugee Migration" A Paper Presented at National Geographical Conference held at the Department of Geography, University of Peradeniya, 7-9 August 1992.

——, 1996a.
We Want to Go Home (Presidential Address Delivered at the Public Meeting) Colombo: The Northern Muslims' Rights Organization.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

——, 1996b.
Refugees are People: Proceedings of the Workshop on the Resettlement Program for the Forcibly Evicted Muslims of the Northern Province Colombo: The Northern Muslims' Rights Organization.

——, 1996c.
"Recent Refugee Migration in Sri Lanka" A paper presented at the Seminar on Migration, Organized under UGC/UNFPA Project held at the University of Kelaniya (23-24 August 1996).

——, 1996d.
"Ethnic Conflict and Displacement in Sri Lanka" A paper presented at the International Workshop on Causes of Conflict and Conflict Resolution held in Kandy (15-17 July 1996).

The Island, Variuos Years.

Israel, R.,1978.
Muslims in China: A study in cultural confrontation ( Scandinavian Institute of Asian studies monograph series No.29) Bangkok: Craftsman Press Ltd.

Kalin, Walter, 1991.
"Refugees and Civil Wars: Only A matter of Interpretation?" International Journal of Refugee law 3(3) July:435-451.

Lewis, J.P., 1993.
A Manual of the Vanni District , Ceylon Colombo:
Lake House Book Shop.

McGilvery, D., 1974.
Tamils and Moors: Caste and Matrician Structure in Eastern Sri Lanka Unpublished Ph.D. Thesis. University of Chicago.

Mines, M.,1978. "Lebbai" in Richard v. wees(ed.)
Muslim people: A world Ethnographic survey west part: Greenwood press



Miller, R.E.,1976. Mapila Muslims of Kerala: A study in Islamic Trends Madras: Orient Longman Ltd.

Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996. Performance, Policy, Strategies and Programme Colombo: Ministry.

Muthar, Hari Mohan, 1995.
"Introduction" in Development, Displacement and Resettlement edited by Hari Mohan Muthar with the Collaboration of Michael M. Corea Delhi: Vikas Publishing House.

Navaratnam, C.S., 1960.
Vanni & Vanniyas Jaffna: Eelanadu Limited.

North-East Provincial Council, 1996.
Statistical Information of the North-East Province Tricomalee: NEPC.

Provencher, R., 1998.
"Malayo-polynesian-speaking people" in
Richard V. Weeks(ed). Muslim people.

Raheem, M.S., 1979.
History and Culture of Jaffna Muslims (Tamil) Jaffna: Mamakal Printers.

Refugee Family Information, 1994.
"The Family Information of the Muslim Refugees Ousted from the Northern Province in October, 1990" Volume 1 - 23 (A Compilation of the Refugee Family Information of 9000 Families by S.H. Hasbullah and Others) Colombo: Jama'ath-e-Islami (Colombo).

Richardson, J., 1990.
Sri Lanka Violent Data 1948-1988 Washington, D.C.:School of International Service, The American University.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Saleem, A.R.M., 1990.
The History of Akkaraipattu (Tamil) Colombo: Hira Publication.

Shukri, M.A.M., 1986.
Muslims of Sri Lanka: Avenue to Antiquity Beruwala: Naleemiah Ins.

Sivasegaram, S., 1996.
Tamil Times 15th December 1996

Sitrambalam, S.K., 1992.
Kingdom of Jaffna (Tamil) Thirunelvely: University of Jaffna Publication.

——, 1993.
Jaffna Ancient History (Tamil) Thirunelvely: University of Jaffna Publication.

Sivathamby, K, 1987
" The Sri Lankan Ethnic Crisis and Muslim-Tamil Relationships: A Socio-Political Review" . in Facets of Ethnicity in Sri Lanka edited by C.Abeysekera and N.Gunasinghe. Colombo: Social Scientists Association.

Survey Department, 1936.
Mullaitivu One-Inch Map Colombo:Survey Department

United Nations, 1994.
Internally Displaced Persons (E/CN.4/1994/44) Geneva: UN.

——, (No Date Given).
Human Rights and Refugees Fact Sheet-20 Geneva: UN.

US Committee for Refugees, 1991.
Issue Paper: Sri Lanka, Island of Refugees October, Washington, D.C.: American Council for Nationalities Service.

Weeks,R.V.,"Introduction" in Richard V. Weeks(ed). Muslim people




# பின்னிணைப்பு-1

## இனப்பிரச்சினையால் உயிர் இழந்த முல்லைத்தீவு முஸ்லிம்கள் 1987-1990

| பெயர் | வயது | இடம் | காரணம் | ஆண்டு | யாரால் |
|---|---|---|---|---|---|
| சேருமீராலெப்பை | 68 | தண்ணீயூற்று | வாகனம் மோதி | 1984 | இலங்கை இராணுவம் |
| எஸ்.எச். அப்துல் கபூர் | 32 | நீராவிப்பிட்டி | துப்பாக்கிச் சூடு | 1985 | இலங்கைஇராணுவம் |
| கே. எம். அப்துல் கபூர் | 32 | தண்ணீயூற்று | துப்பாக்கிச் சூடு | 1986 | இடை மோதலில் |
| எஸ்.அப்துல் காதர் | 50 | ஹிஜ்ராபுரம் | செல் தாக்குதல் | 1986 | இலங்கைஇராணுவம் |
| ஏ.எம். அலாவுதீன் | 40 | ஹிஜ்ராபுரம் | துப்பாக்கிச்சூடு | 1986 | இலங்கை இராணுவம் |
| சுல்தான் குசைன் | 19 | நீராவிப்பிட்டி | கொலை | 1986 | E.P.R.L.F |
| யாசீன் மித்தீன் | 21 | ஹிஜ்ராபுரம் | கொலை | 1986 | E.P.R.L.F |
| அபூசாலி நவாஸ் | 18 | நீராவிப்பிட்டி | கொலை | 1986 | விபரம் இல்லை |
| மீரான்கண்டு சம்சுதீன் | 65 | நீராவிப்பிட்டி | ஹெலித்தாக்குதல் | 1987 | இலங்கை இராணுவம் |
| ஏ.எஸ். அப்துல் அபாஸ் | 35 | நீராவிப்பிட்டி | ஹெலித்தாக்குதல் | 1987 | இலங்கை இராணுவம் |
| திருமதி இஸ்மாயில் | 28 | ஜ்ராபுரம் | துப்பாக்கிச்சூடு | 1987 | இடை மோதலில் |
| எம். அசனா லெப்பை | 60 | ஹிஜ்ராபுரம் | செல்தாக்குதல் | 1987 | I.P.K.F |
| ஏ.எல் சாலிஹீன் | 34 | நீராவிப்பிட்டி | ஹெலிதாக்குதல் | 1987 | I.P.K.F |
| எம்.எஸ். அப்துல் றஹீம் | 28 | நீராவிப்பிட்டி | ஹெலிதாக்குதல் | 1987 | I.P.K.F |
| ஏ.சீ.நியாஸ் | 28 | நீராவிப்பிட்டி | ஹெலிதாக்குதல் | 1987 | I.P.K.F |
| அப்துல் | 38 | ஹிஜ்ராபுரம் | துப்பாக்கிச்சூடு | 1988 | I.P.K.F |
| ஏ. கச்சு முகம்மது | 42 | நீராவிப்பிட்டி | துப்பாக்கிச்சூடு | 1988 | I.P.K.F |
| ஜப்பான் மகன் றபீக் | 20 | தண்ணீமுறிப்பு | துப்பாக்கிச்சூடு | 1988 | I.P.K.F |
| எம்.அலாவுதீன் | 29 | நீராவிப்பிட்டி | துப்பாக்கிச்சூடு | 1987 | இடை மோதலில் |
| செய்னுதீன் கலீல் | 30 | முல்லைத்தீவு | ஹெலித்தாக்குதல் | 1987 | இலங்கை இராணுவம் |
| முகைதீன் றசாக | 28 | நீராவிப்பிட்டி | ஹெலித்தாக்குதல் | 1988 | I.P.K.F |
| அப்துல்சமது தௌபீக் | 16 | ஹஜ்ராபுரம் | ஹெலித்தாக்குதல | 1990 | இலங்கை இராணுவம் |
| அலாவுதீன் | 24 | முஸ்லைத்தீவு | கொலை | 1990 | விபரம் இல்லை. |

குறிப்பு: பாதிக்கப்பட்ட எனையவர்களின் விபரங்கள் கிடைக்கவில்லை.

*மூலம் வெளிக்கள ஆய்வு, 1996*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்**

**இப்போதுத்தலைப்பில் வெளிவரவுள்ள நூல் தொகுதிகள்**

**தொகுதி 1:** அறிமுகம்.
**தொகுதி 2:** யாழ்ப்பாண முஸ்லிம்களும் கிளிநொச்சி முஸ்லிம்களும்.
**தொகுதி 3:** முல்லைத்தீவு முஸ்லிம்கள்
**தொகுதி 4:** மன்னார் தீவு முஸ்லிம்கள்
**தொகுதி 5:** முசலி முஸ்லிம்கள்
**தொகுதி 6:** மாந்தை – நானாட்டான் முஸ்லிம்கள்
**தொகுதி 7:** வவுனியா முஸ்லிம்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அகதி முகாம்களில் கைதிகளாய்
காலத்தை நொந்துகொண்டு

நாம் நமது சொந்த மண்ணில்
கால் வைக்கும் காலம் வராதோ

தண்ணிமுறிப்பு, காரையடி வயல்களில்
ஏர் பூட்டி உழுது வளம் சேர்க்கும் நாள் வராதோ
நந்திக்கடலில் இறால் வீசப் போகும் நாள் வராதோ

எமது பள்ளிவாசல்களில்
மீண்டும் பாங்கொலி கேட்கும் காலம் எப்போது

முஸ்லிம்களின் நோன்புப் பெருநாளையும்
ஹஜ்ஜுப் பெருநாளையும்
தமிழ் மக்களின் தைப் பொங்கலையும்
சித்திரை வருடத்தையும்
இரு சாராரும் நட்புடன் பகிர்ந்து கொண்டாடிய
மகிழ்ச்சிகரமான அந்த நாள் மீண்டும் வராதோ

என ஏங்கிக் கொண்டிருக்கும்
எம்மவரின் எண்ணங்கள் ஈடேறும்
புதியதொரு பொழுதின்
விடிவுக்காக காத்திருக்கின்றோம் "

**'முல்லைத்தீவு முஸ்லிம்கள்'**
(அணிந்துரையில் இருந்து)

ISBN 955-9445-03-0

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்